# இயேசுவே வாரும்

ஆமென், கர்த்தராகிய இயேசுவே, வாரும். வெளி.22:20

சகோ. காலேப் யோசுவா
☎: 044 - 26490183

3வது குறுக்குத் தெரு, 11 திருமால் நகர்
பூவிருந்தவல்லி, சென்னை. 600 056

## ஏழாம் முத்திரை - SEVENTH SEAL

**உள்ளே**
**கோவை ராஜாவினுடைய சூதும் வஞ்சிக்கிறதற்கேதுவான தந்திரமுமுள்ள போதகங்களாகிய:**

**அ) பிரதான தூதனுடைய சத்தம் (1 தெச.4:16) - பிரதான தூதனாகிய மிகாவேல் சத்தம் என்பதற்கு ஒரு பிரம்பு அடி**

**ஆ) கர்த்தருடைய இரண்டாம் வருகை வந்துவிட்டது என்பதற்கு ஒரு மிலாறு அடி.**

**இ) தலைக்கல் வந்துவிட்டது என்பதற்கு ஒரு சாட்டை அடி.**

**ஈ) 1963, பிப்ரவரி 28-ல் தோன்றிய அதிசய மேகவளையம் - பலமுள்ள வேறொரு தூதனின் வருகை (வெளி.10:1) என்பதற்கு ஒரு நெற்றி அடி.**

**உ) 1963, பிப்ரவரி 28-ல் தோன்றிய அதிசய மேகவளையம் - அரைமணி நேரம் அமைதல் (வெளி. 8:1) என்பதற்கு ஒரு மரண அடி.**

**மேலும் இத்துடன்**
**புகைகிற இரு கொள்ளிக்கட்டைகளுக்கும் ஆளுக்கொரு சின்னஞ்சிறு சவால்** - பத்திகள் 84 மற்றும் 215

1. நம்முடைய தேவனும் இரட்சகருமாயிருக்கிற இயேசு கிறிஸ்துவினுடைய நீதியில் என்னைப் போல் அருமையான விசுவாசத்தை பெற்றவர்களுக்கு: கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தியடைவதற்காக கர்த்தரால் சுவிசேஷகனாக ஏற்படுத்தப்பட்டவனாகிய காலேப் யோசுவா எழுதுகிறதாவது:
பிதாவாகிய தேவனாலும் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினாலும் கிருபையும் இரக்கமும் சமாதானமும் உண்டாவதாக. நல்மனச்சாட்சியோடே நாம் ஆராதித்து வரும் தேவன் நமக்கு அன்பையும்; சத்தியத்தைவிட்டு, தேவனுடைய வார்த்தையை விட்டு, இக்காலத்துக்குரிய செய்தியை விட்டு விலகி மோசம்போகாதபடிக்கு பகுத்தறியும் ஆவியையும்; தெளிந்த புத்தியுள்ள ஆவியையும் கொடுத்திருப்பதினால் அவரை ஸ்தோத்தரிக்கிறேன்.

*2. கர்த்தாவே உம்முடைய ஊழியக்காரனாய் இருக்கிறபடியால், உம்முடைய வார்த்தையை பிரசங்கித்து, ஜனங்களுக்கு தேவனுடைய வார்த்தையை, இக்காலத்துக்குரிய செய்தியை, சத்தியத்தை சத்தியமாக கூறி; அதை கூட்டியும், குறைக்காமலும் அது உள்ளபடியே எடுத்துக்கூறி, அவர்கள் சரியாக புரிந்து கொண்டு தேவனுடைய வார்த்தையை கேட்டு தங்களை சரிப்படுத்திக்கொள்ளும்படி கூறுகிறபடியினால் சாத்தானே நான் இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் உன்னை கடிந்து கொள்ளுகிறேன். நீ முற்றிலும் பொய்யுரைத்து ஏமாற்றுபவனேயல்லாமல் ஒன்றும் இல்லை. நீ திராட்சை தோட்டங்களை கெடுக்கிற குழிநரியே அல்லாமல் வேறு யாரும் இல்லை. நீ பொய்யன் என்று தேவனுடைய சபை உன்னை அடையாளம் கண்டுக்கொண்டது. நீ உன்னுடையவர்களால் மட்டுமே அறியப்பட்டிருக்கிறாய்.*

*3. கர்த்தாவே, தவறாய் கூறப்படுகிற, தவறாய் பிரசங்கிக்கப்படுகிற, தவறாய் உபதேசிக்கிப்படுகிற, தவறாய் போதிக்கப்படுகிற ஒவ்வொரு காரியத்திற்கும் நான் இங்கு எதிர்த்து நிற்பேனாக. எனக்குள்ளாக இருக்கிற ஏதோ காரியம் அமைதியாய் என்னை இருக்கும்படி விடுவதில்லை. ஆதலால் யார் என்ன கூறினாலும் அது குறித்து நான் கவலைப்படுவதில்லை. ஆதலால் இங்கு என்னுடைய ஊழியப்பாதையிலிருந்து என்னை திசைதிருப்ப முயற்சிக்கும் சாத்தானையும் கடிந்து கொள்ளுகிறேன். அவர் வரும்போது, எனக்கு அளிக்கப்பட்ட உத்தியோகத்தின் ஸ்தானத்தில் நான் காணப்படுவதை தவிர வேறு சிறந்த ஸ்தானம் எதுவும் இல்லை. அவர் வரும்வரை அவர் அளித்த உத்தியோகத்தில் நான் நிலைத்திருத்தல் அவசியம். உங்கள் மத்தியில் உள்ள சபைகள் என்னை அங்கீகரித்தாலும் சரி, அங்கீகரியாமல் போனாலும் சரி, அது குறித்து எனக்கு கவலை இல்லை. ஆனால் ஒரு சபை என்னை அங்கீகரியாமல் போகுமானால் அந்த சபைக்கும், தேவனுடைய சரிரமாகிய சபைக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை என்பதை நீங்கள் அறிந்துகொள்ளவேண்டும்.*

*4. கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு செய்தி தான் முன்னோடி, ஏழாம் சபைக்கால தூதன் அல்ல. செய்தியானது - 1தெச.4:16-ன் ஆரவாரம் . ஆனால் செய்தியை விட்டு மக்களை திசைதிருப்பி, அவர்கள் கிறிஸ்துவின் வருகையின் வேளையில் ஆயத்தமாய் காணப்படக்கூடாதபடி அவர்களை தடுக்க என்னென்ன உபாயங்களை, தந்திரங்களை கையாளமுடியுமோ அவைகளைக் கொண்டு மக்களை வஞ்சிக்கும் சாத்தானே உன்னை மீண்டும் கடிந்து கொள்ளுகிறேன். என் தேவனே, நான் என்னால் முடிந்த எல்லாவற்றையும் இந்த ஜனங்களுக்கு செய்யும்போது நான் நிற்கும்படி நீர் எனக்கு உதவி செய்யும். இயேசுவின் நாமத்தில். ஆமென்.*

5. ***ஆட்டுக்குட்டியானவர் ஏழாம் முத்திரையை உடைத்தபோது, பரலோகத்தில் ஏறக்குறைய அரைமணிநேரமளவும் அமைதல் உண்டாயிற்று. வெளி. 8:1.*** இது குறித்து நாம் தேவனுடைய சத்தத்தைக் கேட்கக்கூடாதபடிக்கு நம்மை திசைதிருப்ப பல்வேறு சத்தங்கள் நம் மத்தியில் உள்ளன. இவைகள் தேவனுடைய சத்தத்திற்கு முரண்பாடாக அமைந்திருப்பதால், தேவனுடைய சத்தம் பேசப்படும்போது அதை நாம் புரிந்துகொள்ளாதபடிக்கு நம்மை குழப்பத்தில் ஆழ்த்த அது நம்முடைய சத்துருவின் சத்தமாயுள்ளது. கோவை ராஜாவின் சத்தம் நம்முடைய சத்துருவினுடையதே! கர்த்தர் தன்னை தம்முடைய சரீரமாகிய சபை பக்திவிருத்தியடைய அப்போஸ்தலனாக, தீர்க்கதரிசியாக, சுவிசேஷகனாக, பாஸ்டராக, போதகனாக ஏற்படுத்தியுள்ளார் என்று கூறுகிறவர்களே, ஏழாம் முத்திரை குறித்து பலவிதமான மாறுபாடான உபதேசங்களை நம் மத்தியில் கொண்டு வந்து, மக்களை குழப்பி வருகிறார்கள். இதிலும் அதிகமாக பாஸ்டர் என தங்களை அழைத்துக் கொள்ளுகிறவர்கள் தங்களுக்கென்று வலது கைக்கும், இடது கைக்கும் வித்தியாசம் தெரியாத மக்களை ஆதாயப்படுத்திக் கொண்டு, அவர்களை திசை திருப்பி, தங்கள் உபதேசங்களுக்கு ஆதரவாக அவர்களை வசப்படுத்திக் கொள்ளுகிறார்கள். ஆனால் ஆவியினால் வழி நடத்தப்படுகிறவர்கள் பாஸ்டர்களோடு இசைந்து செல்லாது தங்களது தனித்தன்மையை காத்துக்கொள்ளுகிறார்கள். ஆனால் அவரை விட்டு தங்களை வேறுபிரித்துக்கொள்ள, மனப்பக்குவம் இல்லாத நிலையில் இருக்கிறார்கள். மாறுபாடான வழியில் செல்லும் பாஸ்டர்களைக் குறித்து இக்காலத்துக்குரிய செய்தி என்ன கூறுகிறது?

6. அவர் சபைக்கு போதகராக, தீர்க்கதரிசியாக, இல்லை, போதகராக இருப்பாரானால் - கர்த்தருடைய வார்த்தையை நன்றாக படித்து, கர்த்தருடைய வார்த்தையை குறித்து, கர்த்தருடைய வார்த்தையில் என்ன எழுதப்பட்டுள்ளது என்பதை உங்களுக்கு எடுத்துரைக்கவேண்டும். அதன் மூலம் நீங்கள் எச்சரிக்கப்படுகிறீர்கள். வார்த்தையில் எழுதியுள்ளதையே போதகர் உங்களுக்கு எடுத்துரைக்கவேண்டும். அதுவே அவரது பணி. இது குறித்து நீங்கள் *சபை ஒழுங்கு*, பத்தி 39, நாள் 28-12-1963 ஐ தியானிக்கலாம். *பாருங்கள் ஒரு பாஸ்டர்,* ***தேவனுடைய வார்த்தையில் எழுதப்பட்டுள்ளதை, இக்காலத்துக்குரிய செய்தியில் எழுதப்பட்டுள்ளதை நன்கு தியானித்து, அது எழுதப்பட்ட விதமாகவே தன் மந்தையில் உள்ள ஜனங்களுக்கு கொடுக்க வேண்டும். அதுவே அவரது பணி. அவர் அதோடு ஒன்றை கூட்டவும் கூடாது, ஒன்றை குறைக்கவும் கூடாது. அதை விட்டுவிட்டு, எனக்கு அந்த வெளிப்பாடு கிடைத்துள்ளது, எனக்கு இந்த வெளிப்பாடு கிடைத்துள்ளது என கூறி தன் சுய கருத்துக்களை, தன் சுய கோட்பாடுகளை, தன் சுய வியாக்கியானத்தை தன் ஜனங்கள் மீது திணிக்கக்கூடாது. அவ்வாறாக நடந்து கொள்ளுகிறவர்கள் கள்ளகபடமுள்ள வேலையாட்கள்.*** நம்முடைய பாஸ்டர்களில் 100க்கு 99 பேர் தவறாக ஆவியின் அபிஷேகம் பெற்றுள்ளவர்களாகவே காணப்படுகிறார்கள் (False annointed ones). நிச்சயமாக, உறுதியாக. இதற்கு எள் அளவு கூட சந்தேகமே கிடையாது.

7. உதாரணமாக சென்னையிலுள்ள மூன்று பாஸ்டர்களுக்கு கிடைத்த வெளிப்பாடு குறித்து இங்கு எழுதுகிறேன். நான் அவர்கள் பெயர்களை எழுதவில்லை. ஆனாலும் நீங்கள் அவர்களை அடையாளம் கண்டுகொள்வீர்கள் என நினைக்கிறேன். இந்த மூவரில் ஒருவருக்கு சமீப நாட்களில் அப்.1:10-ல் கூறப்பட்டுள்ள வெண்மையான வஸ்திரம் தரித்த இரண்டு பேர்கள் குறித்த வெளிப்பாடு கிடைத்திருக்கிறது. ஒருவர் மோசே, மற்றொருவர் எலியா என்பதாகும். பிரியமானவர்களே, இங்கு கூறப்பட்டுள்ள இரண்டு பேர்களின் ஆடைகளே அவர்கள் யார் என்பதை உங்களுக்கு அடையாளம் காட்டுகிறது. அவர்கள் தேவதூதர்கள் தான். மோசேயும் எலியாவும் அவர்கள் ஆடைகளை எப்பொழுதும் மாற்றுவது கிடையாது. அவர்களுடைய பிரத்தியேகமான ஆடைகளில் இருந்தே நாம் அவர்களை அடையாளம் கண்டு கொள்ளலாம். இந்த வெளிப்பாட்டை இவர் தன் பிதாவாகிய பிசாசானவனிடமிருந்தே பெற்றுள்ளார் என்பதை நீங்கள் நூற்றுக்கு நூறு சதவீதம் உறுதிப்படுத்திக் கொள்ளலாம்.

8. பிரியமானவர்களே அப்.1:10ஐ நாம் மத் 28:2, மாற்.16:5, லூக் 24:4 மற்றும் யோ.20:12 உடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது ***அந்த இரண்டு பேர்களும் தேவதூதர்கள் என்று எவ்வித சந்தேகமுமின்றி உறுதிப்படுத்திக் கொள்ளலாம்.***

9. இவரது சபையில் நான் என் கண்களினால் கண்ட அளவில் ஆண்கள் எண்ணிக்கை எட்டுக்குள் தான் உண்டு. ஆனால் இவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு பதவி சபையில் உண்டு. சபையில் ஆண்களில் விசுவாசிகள் கிடையாது. யாவரும் ஊழியக்காரர்களே. ஒரு பாஸ்டர், நான்கு பேர்கள் சுவிசேஷகர்கள், ஒரு போதகர், இரு மூப்பர்கள். அதாவது சுவிசேஷகர்கள், போதகர், மூப்பர்கள் இவர்கள் அனைவரையும் மேய்க்க ஒரு பாஸ்டர். ஐந்து வகை ஊழியத்தைப் பற்றி A.B C D யே அறியாதவர்கள் தங்களை பாஸ்டராகவும், சுவிசேஷகர்களாகவும் ஏற்படுத்திக் கொண்டார்கள். இந்த ஊழியங்களினால் கிறிஸ்துவின் சரீரமாகிய சபைக்கு எந்தவிதத்திலும் பிரயோஜனம் இல்லை. அதை அவர்கள் நன்கு அறிவார்கள். சரி, அது தான் போகட்டும், அவர்கள் தங்களது சபைக்காவது பிரயோஜனமாக இருக்கிறார்களா என்றால் அதுவும் இல்லை. பின் காரியம் என்ன? பாஸ்டர் இவர்கள் அனைவருக்கும் நோட், பேனா மற்றும் பென்சில் கொடுத்து தன்னுடைய செய்தியிலிருந்து குறிப்புகள் எடுத்துக்கொண்டிருக்க ஒரு பணியை கொடுத்திருக்கிறார். அந்த பணியை அவர்கள் செய்து கொண்டிருக்கிறார்கள். இதில் ஒரு சகோதரனை சந்தித்து, விவரம் கேட்டேன். அவர் சகோதரனே, நான் என்றும் என்னை ஐந்து வகை ஊழியத்தில் ஒரு சுவிசேஷகனாக அழைத்துக் கொள்ளவேயில்லை. பாஸ்டர் என்னை கேளாமலே என் பெயரை சுவிசேஷகனாக போட்டுவிட்டார். நான் அப். 2:38-க்கு சாட்சியாக, நான் பெற்ற ஞானஸ்நானத்தை பொது கூட்டங்கள் போட்டு மக்களுக்கு அறிவித்து வருகிறேன் என்றார். மற்றொரு நபர் நான் ஐந்து வகை ஊழியத்தில் சுவிசேஷகன் தான். நான் யாராவது தெரு கூட்டம் போட்டு என்னை அழைத்தால் பிரசங்கிக்க சென்று வருகிறேன். ஆதலால் நான் கிறிஸ்துவின் சரீரமாகிய சபை பக்திவிருத்தியடைய சுவிஷேகனாக கர்த்தரால் ஏற்படுத்தப்பட்டவன் தான் என ஆணித்தரமாக அடித்து பேசிகிறார். ஆனாலும் கர்த்தருடைய இரண்டாம் வருகை வந்து விட்டதா, இல்லையா என்பது குழப்பமாக இருக்கிறது என்கிறாராம். சபை பக்திவிருத்திக்காக அழைக்கப்பட்ட சுவிசேஷகனுக்கே குழப்பம். இவ்வாறாக இருக்கிறது இவர்களது அழைப்புகளும், ஊழியங்களும் 2பேதுரு 1:10.

10. அடுத்த மேய்ப்பனுக்கு கிடைத்த வெளிப்பாட்டை பாருங்கள். இவர் தன்னுடைய ஒரு கையில் பைபிளை வைத்துக் கொண்டார். அடுத்த கையில் இக்காலத்துக்குரிய செய்தி புத்தகம் சிலவற்றை வைத்துக் கொண்டார். பின் தன் சபையாரை பார்த்து பைபிளை சுட்டிக் காட்டி, இது என்ன? பைபிள். இதில் என்ன உள்ளது?

உலகத்தோற்ற முதல் மறைக்கப்பட்டுள்ள மறைபொருட்கள் உள்ளது. அதாவது பைபிளில் தேவஇரகசியங்கள் மறைக்கப்பட்டு வைக்கப்பட்டுள்ளது. அடுத்து, இது என்ன? இது இக்காலத்துக்குரிய செய்தியை கொண்ட புத்தகங்கள். மறைக்கப்பட்டிருந்த தேவஇரகசியங்கள் இதில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. இது வெளிப்படுத்தப்பட்டுள்ள தேவஇரகசியங்களை கொண்ட இக்காலத்துக்குரிய செய்தி புத்தகம். பின் பைபிளை சுட்டிக் காட்டி, இனி இது நமக்கு தேவையில்லை. ஏனென்றால், இதிலுள்ள இரகசியங்கள் வெளிப்படுத்தப்பட்டு அவைகள் இக்காலத்துக்குரிய செய்தி புத்தகங்களில் உள்ளன. பின் இக்காலத்துக்குரிய செய்தி புத்தகங்களை சுட்டிக்காட்டி இதில் வெளிப்படுத்தப்பட்டுள்ள இரகசியங்கள் உள்ளது. ஆதலால் இது ஒன்றே நமக்கு போதும். மேலும் பைபிளை நாம் கடைகளில் ஒரு கிரையம் கொடுத்து வாங்கிவிடலாம், ஆனால் இந்த செய்தி புத்தகங்களை நாம் ஒரு விலை கொடுத்து கடைகளில் வாங்க முடியாது. ஆதலால் இந்த செய்தி புத்தகங்களை பத்திரமாக பேணி காத்துக் கொள்ளுங்கள் என்று உபதேசிக்கிறார். அப்படியானால் இவர் யார்? உலகம் அனைத்தையும் மோசம் போக்குகிற பிசாசு என்றும் சாத்தான் என்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய பெரிய வலுசர்ப்பம் தானே! ஆம் நிச்சயமாக! எனக்கு பிரியமானவர்களே, இந்த சபையை விட்டு வெளியேறுங்கள். இது தேவனுடைய சபையல்ல. மாறாக இது பேய்களுடைய குடியிருப்பும், அசுத்த ஆவிகளையுடைய காவல் வீடுமாயிருக்கிறது. ஆனாலும் இங்கும் மக்கள் கூட்டம் அதிகம்.

*11. **மூன்றாவதாக, கர்த்தர் தம்முடைய வருகையின் வருடம், மாதம், வாரம், நாள், மணி, நிமிடம், நொடி அனைத்தையும் மிகத் துல்லியமாக தனக்கு வெளிப்படுத்தி விட்டார், ஆனாலும் அதை தான் யாரிடமும் கூறகூடாது, தனக்குள்ளே அடக்கி வைத்துக் கொள்ளவேண்டும் என எச்சரித்துள்ளார் என்று மக்களை மடையர்களாக்குகிறார் ஒரு பாஸ்டர். இவர் பின்னாலும் பத்து பேர்கள் உள்ளார்கள். யாராவது அவர் எப்பொழுது வருவார் என்று அறிந்துள்ளதாக உங்களிடம் கூறினால், அவர்கள் ஆரம்பத்திலே தவறு செய்கின்றனர். ஏனெனில் அவர் வருகையின் நாளை யாரும். அறியார். ஆனால் அவர் இப்பொழுதே வந்துவிடலாம் என்று நாம் நினைத்துக்கொண்டு அதற்கேற்ப வாழவேண்டும். (மூன்றாம் முத்திரை, பக்கம். 389, பத்தி 9) இவ்வாறாக நம் மத்தியிலுள்ள பாஸ்டர்களின் ஒவ்வொருவரும் தன்தன் வழியையும், அவனவன் தன்தன் மூலையிலிருந்து தன் தன் பொழிவையும் நோக்கி கொண்டிருக்கிறார்கள்.***

12. இவர்கள் எல்லாரும் யார்? சென்னை வாழ், இக்காலத்துக்குரிய செய்தியிலுள்ள பாஸ்டர்கள் தான். குருடர்களாகிய இவர்கள் குருடர்களுக்கு வழிகாட்டிகொண்டிருக்கிறார்கள். பாருங்கள், இந்த மாய்மாலக்காரர்களை சார்ந்து ஒரு கூட்டம் ஜனங்கள் ஸ்தோத்திரம்! அல்லேலூயா!!. ஓ! என்னே வெளிப்பாடு! என்று ஆர்ப்பரிக்கிறார்கள். இந்த ஜனங்கள் யார்? சாத்தானுக்கு செவி கொடுக்கும் சாத்தானின் ஆடுகளே! ஆனாலும் இவர்கள் தாங்கள் தேவனுடைய மந்தையிலுள்ள ஆடுகள் என தங்களை அழைத்து, தங்களை பெருமை பாராட்டிக்கொள்ளுகிறார்கள், மெச்சிக் கொள்ளுகிறார்கள். ***இது தான் கொடிய வஞ்சிப்பு.*** சத்தியத்தை விசுவாசியாமல் அநீதியில் பிரியப்படுகிற இந்த ஜனங்கள் ஆக்கினைக்குள்ளாக்கப்படும்படிக்கு இவர்கள் பொய்யை விசுவாசிக்கத்தக்கதாக கொடிய வஞ்சகத்தை தேவன் இவர்களுக்குள் அனுப்பியுள்ளார். இதை ஆவிக்குரியவர்கள் அறிவார்கள்.

13. எனக்கு மிக்க நெருக்கமான சகோதரர்களே, நீங்கள் உங்கள் சபைகளை சார்ந்து வைராக்கியம் பாராட்டுகிறீர்கள். சிலர் வலசரவாக்கம் ***கல்வாரி சபை*** குறித்தும், சிலர் பெரவலூர் ***சென்னை சபை*** குறித்தும், சிலர் பல்லாவரம் ***கல்வாரி ஜெபவீடு*** குறித்தும் வைராக்கியம் பாராட்டுகிறீர்கள். **சபைதான் உங்கள் முடிவாக இருக்குமென்றால், மற்றவர்கள் என்ன கூறினாலும் அதை நீங்கள் ஏற்றுக்கொள்ளமாட்டீர்கள். அதுவே உங்களுக்கு முடிவானது. ஓ, தேவனே, இது ஆழமாக பதிய உதவிசெய்வீராக. என்னை பொறுத்தவரையில் அது அனைத்தும் தவறு. தேவனுடைய வார்த்தை மாத்திரமே முடிவானது. வார்த்தை என்ன கூறுகிறதோ அதுவே உண்மை.** *(இதை அறியாமலிருக்கிறாய்.* பக்கம் 36, கடைசி பத்தி, நாள் 15-8-1965) எனக்கு பிரியமானவர்களே, இக்காலத்துக்குரிய செய்தி, செய்தி என்று கூறும் நீங்கள், இக்காலத்துக்குரிய செய்தியைக் கொண்டே உங்களை இங்கு சீர்தூக்கிப்பாருங்கள்.

14. இவ்வாறாக பலவிதமான தந்திரமான, மாயையான உபதேசங்கள் நம் மத்தியில் இருந்தாலும்; ஏழாம் முத்திரையின் அரைமணி நேரமளவும் அமைதல் குறித்து நமது மத்தியில் தீர்க்கதரிசியின் செய்தி ஒலிநாடாக்கள் வடிவிலும், புத்தகங்கள் வடிவிலும் உண்டு. அதுவே நமக்கு மெய்யான உபதேசம், நற்போதகம். நீங்கள் செய்தியாளனை நித்திரைக்குட்படுத்தலாம். ஆனால் செய்தியை நீங்கள் அப்படி செய்ய முடியாது. ***என்றோ ஒரு நாளில் நான் இந்த உலகத்தை விட்டு கடந்து செல்லவேண்டியதாக இருக்கும் ஆனாலும் இந்த செய்தியானது மரிக்காமல் ஜீவனுள்ளதாயிருக்கும். அது உண்மை. (மூவகை விசுவாசிகள்,*** பக்கம் 53, நாள் 24-11-1965). ஆக பிரியமானவர்களே தேவனுடைய வார்த்தை, இக்காலத்துக்குரிய செய்தி மட்டும் தான் நமக்கு எதற்கும் ஆதாரம். இதை விட்டுவிட்டு இந்த பேலியாளின் மக்களாகிய உங்கள் பாஸ்டர்களுடைய சூதும் வஞ்சிக்கிறதற்கு ஏதுவான தந்திரமுமுள்ள போதகமாகிய பலவித காற்றினாலே அலைகளை போல அடிப்பட்டு அலைகிறவர்களாக நீங்கள் இருக்ககூடாது. ***தேவனுடைய செய்தியை கொண்டுவந்த செய்தியாளன் நித்திரை அடைந்து விட்டார். நித்திரை அடைந்த அவரை குறித்து நாம் பேசிக்கொண்டேயிருந்தால் அது மூடத்தனம். வாருங்கள் தேவன் நமக்கு கொடுத்த செய்தியை குறித்து பேசுவோம், செயல்படுவோம், நம்மை கர்த்தருடைய வருகைக்கு ஆயத்தப்படுத்திக்கொள்வோம்.***

15. ஏழாம் முத்திரை திறக்கப்பட்டு, அதன் இரகசியம் வெளிப்படுத்தப்பட்டுவிட்டது. அது இதுதான் என ஒரு சாரார் கூறி தாங்கள் பெற்றுள்ள வெளிப்பாட்டை பிரசங்கிக்கிறார்கள். சவால் விடுகிறார்கள். குறைகுடங்கள் கூத்தாடுகின்றன. தேவபக்தியின் வேஷத்தை தரித்த ஓரிருவர் சூளைமேட்டை தலைமை ஸ்தலமாக கொண்டு இந்நாட்களில் ஒன்று கூடுகிறதை நீங்கள் கவனிக்கிறீர்களா? இவர்கள் நம்முடனே கூட யாத்திரை செய்கிறவர்களாயிருக்கிறார்கள். ஆனால் இவர்கள் நல்ல பயிர்களோடு கூட களைகளை விதைக்கிறவர்களாயிருக்கிறார்கள். நான் அவர்களை கடிந்து கொள்ளும் போது, அவர்கள் என்னை குறித்து, தங்கள் ஜனங்களை எச்சரித்து ***அவனுக்கு செவிக்கொடுக்காதீர்கள்*** என்கிறார்கள். அடுத்து மற்றொரு சாரார் ஏழாம் முத்திரை இன்னும் திறக்கப்படவில்லை என்கிறார்கள். சிலர் எங்களுக்கு ஏழாம் முத்திரை குறித்து குழப்பமாகவே இருக்கிறது என்கிறார்கள். சிலர் தங்களுக்கு ஒன்றுமே தெரியாது என்கிறார்கள்.

16. பல்லாவரத்தில் ஒரு சபை உண்டு அந்த சபையில் ஐந்து வகையான ஊழியத்தில் இருக்கிறேன் என்று தங்களை மிகைப்படுத்திக் கொள்ளும் ஒரு சிலரை கண்டித்தேன். உடனே என்னோடு நன்கு பழகிவந்த பாஸ்டர் சபையின் பிரசங்கபீடத்தில் நின்று கொண்டு என்னை கடிந்து, எனது செய்தித்தொகுப்புகளை படிக்ககூடாது, என்னோடு ஐக்கியம் கொள்ளகூடாது என சபையாரை கேட்டுக்கொண்டார். ஆனால் அவர் ஒரு நாள் என்னை தற்செயலாக பல்லாவரத்தில் சந்திக்க நேர்ந்தது, தன் வீட்டிற்கு அடிக்கடி நான் வராதது குறித்த வினவினர். நானோ, உங்களுக்கு கைத்தொழில் ஒன்று உள்ளது, அதினிமித்தம் நீங்கள் பல இடங்களுக்கு சென்று வருகிறீர்கள். உங்களை வீட்டில் காண்பது மிக கடினமாக உள்ளது. ஆதலால் நான் உங்களை சந்திப்பது அபூர்வமாயிற்று என்றேன். எனக்கு சமயம் ஒதுக்கி தன் வீட்டுக்கு அழைத்தார். அதன்பின் நான் ஒரு நாள் அவர் வீட்டுக்கு காலை 9.30 மணியளவில் சென்று மாலை 4.30 மணிவரை அவரோடிருந்து அநேக ஆவிக்குரிய காரியங்களை, சபைக்கடுத்தக் காரியங்களை பகிர்ந்து கொண்டேன். ஆனால் இவர் தனது சபையில் என்னை குறித்து கூறிய விஷயத்தை இந்த சம்பவத்துக்குப் பின்னே அவருடைய விசுவாசிகள் மூலம் அறிய வந்தேன். பாருங்கள் ஒரு ஊழியக்காரனின் மாய்மாலத்தை. இப்படிப்பட்ட மாய்மாலக்காரரையும் நம்பி ஒரு கூட்டம் ஜனங்கள் மோசம் போகிறார்கள். ஏனென்றால் இந்த ஜனங்களுக்கு தெளிந்த புத்தி கிடையாது. ஆதலால் தங்களை வஞ்சித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய காலங்கள், பணம் (காணிக்கை மற்றும் தசமபாகம்) அனைத்தும் வீணாகிறதை அறியாதிருக்கிறார்கள். அவர்கள் இன்னும் வேறு பிரித்தலுக்குள் கடந்து செல்ல முடியவில்லை.

*17. இவ்வாறாக ஒவ்வொரு மனிதனும் இக்காலத்துக்குரிய செய்திக்கு தன்தன் சொந்த வியாக்கியானத்தை கொண்டுள்ளதை நாம் இந்நாட்களில் காண்கிறோம். இதனால் தான் செய்தியில் எங்கும் குழப்பம் நிலவி வருகிறது. ஆனால் நாம் தனிப்பட்ட விதத்தில் அப்படி வியாக்கியானம் செய்யகூடாது. செய்திக்கு வியாக்கியானம் தேவையில்லை. அது ஏற்கனவே வியாக்கியானம் செய்யப்பட்டுள்ளது. வியாக்கியானம் செய்யப்பட்டுள்ள ஒன்றுக்கு மற்றொரு வியாக்கியானம் தேவையில்லை. நாம் செய்தி, அது எவ்வண்ணமாக கூறுகிறதோ அதை அவ்வண்ணமாகவே ஏற்றுக்கொள்ளவேண்டும், விசுவாசிக்கவேண்டும்.* ***To the Message every man has his own interpretation. That's why it is so confusing. We should not give any interpretation to the Message because it was already interpreted.***

18. தீர்க்கதரிசி இது குறித்து நமக்கு கொடுக்கும் ஆலோசனைகள் என்ன? *இப்பொழுது என்னை உங்கள் சகோதரனாக நினைத்து என்னுடைய ஆலோசனையை ஏற்றுக் கொள்ளுங்கள். எதற்கும் உங்கள் சொந்த வியாக்கியானத்தை கூறவேண்டாம்... ஏனென்றால் நீங்கள் அப்படி வியாக்கியானம் செய்யும் போது உண்மையான காரியத்தை விட்டு விலகி போய்விடுவீர்கள்.. நீங்கள் ஏதாவது ஒன்றை செய்ய முற்பட்டால் நீங்கள் மர்மமான ஒன்றை செய்ய முற்படுகிறீர்கள். ஆதலால் தேவனுடைய உண்மையான திட்டத்தை குழப்பி விடுகிறீர்கள். (முத்திரைகள் மீதுள்ள கேள்விகளும் பதில்களும்,* பத்திகள் 12, 14, நாள் 24-3-1963.)

*19. ஏதாவது புதிய காரியத்தை எடுத்துக்கொள்ளாதீர்கள் அவைகள் எங்கும் பறக்கின்றன. அதைவிட அதிகம் இன்னும் வரும். ஆதலால் இந்த புதிய காரியங்களை எடுத்துக்கொள்ளாதீர்கள். உங்கள் தேவனாகிய கர்த்தர் எது சத்தியம் என்பதை உங்களுக்கு பகிரங்கமாக அறிவித்திருக்கிறார். உங்கள் தேவனாகிய கர்த்தர் எது சத்தியம் என்பதை தம்முடைய வார்த்தையினாலும் தம்முடைய ஆவியினாலும் உறுதிப்படுத்தியிருக்கிறார். அவர் உங்களுக்கு சாயங்கால வித்துக்களை காட்டியிருக்கிறார். அவர் அதை உங்களுக்கு வார்த்தையினால் வெளிப்படுத்தியிருக்கிறார். அவர் தம்முடைய ஆவியினால் அதை உங்களுக்கு நிருபித்திருக்கிறார். (தேவ சித்தத்திற்கு புறம்பாக அவருக்கு ஒரு சேவை செய்தல். பத்தி 189, நாள் 18-7-1965) ஆதலால் கோவை ராஜாவின் புதிய காரியங்களை (வாலிபர்கள் செய்தியை சுமந்து செல்வார்கள்) புறம்பே தள்ளுங்கள்.*

20. *கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் நான் கூறுகிறேன். ஒரு காரியத்தையும் நீங்கள் கூட்டவே வேண்டாம். உங்கள் சொந்த கருத்துக்களை அதில் போடவேண்டாம். ஒலிநாடாக்களில் என்ன சொல்லியிருக்கிறதோ அதையே செய்யுங்கள். என்ன செய்யவேண்டுமென்று தேவனாகிய கர்த்தர் கட்டளையிட்டிருக்கிறாரோ அப்படியே சரியாக நீங்கள் செய்து விடுங்கள். அதோடு கூட்டாதீர்கள். அதோடு கூட்ட மட்டும் வேண்டாம். அதிலிருந்து எடுக்கவும் செய்யாதீர்கள். (தேவ சித்தத்திற்கு புறம்பாக அவருக்கு ஒரு சேவை செய்தல் பத்தி 187, 188 நாள் 18-7-1965*)

*21.* ஒன்றை மட்டும் ஞாபகத்தில் கொள்ளுங்கள். தொடக்கத்தில் எவ்வாறு இருந்ததோ, அப்படியே முடிவிலும் இருக்கும். ஆதிகாலத்தில் சாத்தான் ஏவாளிடம் ஒரே ஒரு வார்த்தைக்கு தவறாக அர்த்தம் கூறினான். அவளும் அதை விசுவாசித்தாள். ஏவாள் தான் வஞ்சிக்கப்பட்டாள். ஆதாம் அல்ல.. தவறான அபிஷேகம் பெற்று, மணவாட்டி என்று தன்னை அழைத்துக் கொள்பவள் தான் பொய்யான வார்த்தையை ஏற்றுக்கொண்டாள்.. ஏவாள் தான் பொய்யான வார்த்தையை விசுவாசித்தாள். ஆதாம் அல்ல. அது போன்று - *இக்காலத்தில் தன்னை மணவாட்டி என்று அழைத்துக்கொள்பவள் மாத்திரமே பொய்யான வார்த்தையில் விசுவாசம் கொள்ளுகிறாளே அல்லாமல் கிறிஸ்துவின் மணவாட்டியல்ல.* இது குறித்து நீங்கள் தியானியுங்கள் செய்தி: *கடைசி காலத்தில் ஆவியின் அபிஷேகம் பெற்றுள்ளவர்கள்,* பத்தி 172. *இன்றைக்கும் தங்களை மணவாட்டி என்று அழைத்துக் கொள்ளும் ஒரு கூட்டம் ஜனங்களே வஞ்சிக்கப்படுகிறார்கள். ஆனால் உண்மையான கிறிஸ்துவின் மணவாட்டி வஞ்சிக்கப்படமாட்டாள். அவள் தேவனுடைய வார்த்தையின், இக்காலத்துக்குரிய செய்தியின் ஒரு பாகமாக இருக்கிறாள். அவளை எந்த ஒரு மனிதனும் வஞ்சிக்க முடியாது. ஏனென்றால் அவள் அந்நிய சத்தத்திற்கு செவி கொடுக்கமாட்டாள். செய்தி எங்கே பேசுகிறதோ அங்கே அவள் பேசுவாள். செய்தி எங்கு மௌனம் சாதிக்கிறதோ, அங்கே அவளும் மௌனம் சாதிப்பாள். அவள் தன் சுயகருத்துக்களை ஒருக்காலும் கொண்டுவரமாட்டாள்.*

22. இந்நாட்களில் தமிழ் நாட்டில் கோவையிலிருந்து ஆட்டுத் தோலை போர்த்திய ஓநாய் ஒன்று சென்னையில் சுற்றித்திரிவதை நீங்கள் அறிவீர்கள். இதற்கும் சிலர் அடைக்கலம் கொடுத்து, மந்தையை பறிகொடுத்தது உண்டு. கோவை ராஜா எப்பொழுதுமே தன் சொந்த வியாக்கியானத்தை இக்காலத்துக்குரிய செய்திக்கு கொடுத்து மக்களை திசை திருப்புவதை கழுகுகள் அறியும். புதிய புதிய காரியங்களை கொண்டு

வந்து மக்களுடைய மனதை மயக்குகிறதை சாயங்கால வித்துக்கள் அறியும். கோவை ராஜா எப்பொழுதுமே செய்தியிலிருந்து ஒன்றை கூட்டவும் குறைக்கவும் செய்து விசுவாசிகளை குழப்புவதையும் ஆவிக்குரியவர்கள் அறிவார்கள். பிரியமானவர்களே, ***நீங்கள் உண்மையான கழுகாக இருந்தால், உங்கள் காலத்துக்குரிய செய்தியை நீங்கள் நன்கு புரிந்து கொள்வீர்கள், அறிந்து கொள்வீர்கள். நீங்கள் ஒரு உண்மையான கழுகாக இருந்தால் மாத்திரமே.*** கழுகுகளை கோவை ராஜா என்ன, எந்த ஊர் ராஜாவும் வஞ்சிக்கமுடியவே முடியாது. இந்த கருத்துக் குறித்து நீங்கள் ***ஈஸ்டர் முத்திரை*** என்ற செய்தியில் 24வது பக்க தொடர் பத்தியை 25 வது ப்க்கத்தில் தியானிக்கலாம். செய்தி நாள் 10-4-1965.

***23. அவர் ஏழாம் முத்திரையை உடைத்தபோது, பரலோகத்தில் ஏறக்குறைய அரைமணி நேரமளவும் அமைதல் உண்டாயிற்று. வெளி. 8:1 When he had opened the seventh seal, there was silence in heaven about the space of half an hour. Rev.8:1.***

## பலமுள்ள வேறொரு தூதன் வருகை சூரியஅஸ்தமனம் மலையில் 28-02-1963 அன்று சரித்திரமாகிவிட்டது என்பது ஒரு கள்ள உபதேசம்.

24. ஏழாம் முத்திரை குறித்து அந்நிய போதனைகள் பல இருந்தாலும் ஒரு சிலருடைய தவறான போதனைகளை இங்கு எடுத்துக்காட்டி, ஏழாம் முத்திரை குறித்ததான இக்காலத்துக்குரிய செய்தியை உங்களுக்கு தொகுத்து எழுதுகிறேன். அவைகள் நீங்கள் உங்களை சரிப்படுத்திக்கொள்ள பிரயோஜனமாக இருக்கும் என கிறிஸ்துவுக்குள் நம்புகிறேன்.

25. முதலாவது அமெரிக்காவை சேர்ந்த திரு.C.W. வுட். இவரது விலாசம் # 17, Scott Land Laveller Road, Dewitt, AR 72042 U.S.A. இவரது போதனைகளை இவரது வெளியீடு. Dewitt Tabernacle Teaching Series. Volume II, Chapter 23 "The Great Seventh Seal of Revelation 8:1." இதிலிருந்து எடுத்துள்ளேன்.

26. நம்மவர்களில் பலரை போன்று இவரும் வெளி 8:1, 10:1 மற்றும் 10:6 வேதவாக்கியங்களையும், மேலும் சூரியஅஸ்தமனம் மலையில் நிகழ்ந்த ஏழு தூதர்களின் கூட்டத்தையும், ஆக மேற்கூறிய நான்கு சம்பவங்களையும் ஒருமுகப்படுத்தி யோவான் 2000 ஆண்டுகளுக்கு முன்பு கண்ட வேறொரு பலமுள்ள தூதன் வானத்திலிருந்து இறங்கி வந்த சம்பவம் சூரியஅஸ்தமனம் மலையில் 28-2-1963-ல் நடந்து சரித்திரம் ஆகிவிட்டது என்கிறார். அமெரிக்கா, அரிசோனாவில் சூரியஅஸ்தமனம் மலையில் காணப்பட்ட ஏழு தூதர்களின் கூட்டம் கிறிஸ்துவின் திருமுகத்தை வெளி 1:14-ன் படி நமக்கு வெளிப்படுத்தியது. இது வேறொரு பலமுள்ள தூதன் வானத்திலிருந்து இறங்கி வந்த சம்பவம். ஆக யோவான் 2000 ஆண்டுகளுக்கு முன்பாக கண்ட தரிசனம் 28-2-1963-ல் சரித்திரம் ஆகிவிட்டது என்கிறார். ஏழு தூதர்களின் தோற்றம் வெளி.8:1 மற்றும் வெளி.10:1 நிறைவேறுதல் ஆகும் என்கிறார்.

27. The first and great thought that engages our mind is that John saw Jesus Christ in spiritual form, actually came down to earth, verse one (Revelation Chapter 10) tells of Christ decending from heaven, clothed with a cloud. We have actual photograph of this huge, beautiful cloud, what John saw in vision form 2000 years ago, actually happened February 28, 1963 in Arizona.

28. ***பிரியமானவர்களே, இங்கு நீங்கள் கவனிக்கவேண்டிய மிகமிக முக்கியமான காரியம் என்னவென்றால் சூரியஅஸ்தமனம் மலையில் ஏழு தூதர்களின் கூட்டம் இயேசு கிறிஸ்துவின் திருமுகத்தை வெளி.1:14-ல் கூறப்பட்ட பிரகாரமாக, மனுஷகுமாரனுக்கு ஒப்பாக வெளிப்படுத்தியதேயென்றி வெளி.10:1-க்கு ஒப்பாக வேறொரு பலமுள்ள தூதனுக்கு ஒப்பாக இல்லை. ஆதலால் ஏழு தூதர்களின் கூட்டம் சம்பவம் வேறு. வெளி. 10:1-ல் சம்பவம் வேறு. இரண்டையும் இணைப்பது பிசாசு. அடுத்து ஏழாம் தூதனின் செய்தியின் முடிவில் அந்த தூதன் நின்று கொண்டு "இனி காலம் செல்லாது" என்று சொல்வதை என்னால் காண முடிகிறது. (ஆறாம் முத்திரை, பழைய பதிப்பு, பக்கம் 408, கடைசி பத்தி) பிரியமானவர்களே, இங்கு மிக துல்லியமாக கவனியுங்கள். பலமுள்ள வேறொரு தூதன் ஏழாம் தூதனின் செய்தியின் முடிவில் தோன்றுகிறானேயன்றி, செய்தியின் தொடக்கத்தில் அல்ல.***

29. இவர் தன்னுடைய வெளியீட்டில் கிறிஸ்து ஐந்து முறை வருகிறார் என வேதமும், தீர்க்கதரிசியும் நமக்கு உபதேசிப்பதாக கூறுகிறார். ஆனால் அப்படி அல்ல என்று நாம் அறிவோம்

அ) முதலாவதாக இயேசு ஒரு பாலகனாக பிறந்து, வளர்ந்து, மனுஷகுமாரனுடைய ஊழியத்தை, தீர்க்கதரிசி ஊழியத்தை செய்தார் என லூக். 2:15ஐ சுட்டிக்காட்டி, இன்று கர்த்தராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர் தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார் எனவும்; உபா.8:15 சுட்டிக்காட்டி இயேசு, மோசே கூறின என்னைப் போல் ஒரு தீர்க்கதரிசி ஆவார் எனவும்; எசே.2:1ஐ சுட்டிக்காட்டி இயேசு ஒரு மனுபுத்திரன் எனவும் கூறுகிறார்.

ஆ) இரண்டாவதாக இயேசு தம்முடைய மரணம் மற்றும் உயிர்த்தெழுதலுக்குப் பிறகு மேல் வீட்டில் சுமார் 120 பேர் கூடியிருந்த போது பரிசுத்த ஆவியாக வந்தார் என்கிறார். அப்.2:4

இ) மூன்றாவதாக இயேசு ஒரு தீர்க்கதரிசிக்குள் வந்து இரண்டாவது முறையாக பூமியில் மனுஷகுமாரனாக தோன்றி மல். 4:5, லூக் 17:22-30 ஐ நிறைவேற்றுகிறார் என்கிறார். Christ in a Prophet. Second appearance of Christ on earth a Son of man என்கிறார்.

ஈ) நான்காவதாக மணவாட்டியை எடுத்துக்கொள்ளப்படுதலில் மத்திய ஆகாயத்தில் சந்திப்பதை கூறுகிறார். 1தெச. 4:16.

உ) ஐந்தாவதாக, பரிசுத்தவான்களோடு அர்மகெதோன் யுத்தத்தில் மற்றும் ஆயிரம் வருடம் அரசாட்சியில் என வெளி. 17வது அதி. மற்றும் 20:4,5 வசனங்களை குறிப்பிடுகிறார். With His saints to fight the battle of Armageddon and to setup the millenium reign.

30. இவர் மூன்றாவதாக இயேசு ஒரு தீர்க்கதரிசிக்குள் வந்து இரண்டாவது முறையாக பூமியில் மனுஷகுமாரனாக தோன்றினார் என்பதை குறித்து விளக்கம் கீழ்க்கண்டவாறு தருகிறார். கிறிஸ்து தாழ இறங்கி

பூமிக்கு வந்து வில்லியம் மாரியன் பிரன்காம் சரீரத்திற்குள் நுழைந்தார். இது அமெரிக்கா, அரிசோனாவில் உள்ள சூரியஅஸ்தமனம் மலையில் 28-2-1963 அன்று சம்பவித்தது என்கிறார். மேலும் கிறிஸ்து தோல் காலணிகளை அணிந்து மறுபடியும் பூமியில் நடந்தார். ஆனால் இந்த முறை ஆணிகள் அறைந்த இயேசு என்ற நாமமுடைய சரீரத்தில் அல்ல. மாறாக இன்று வில்லியம் மாரியன் பிரன்காம் சரீரத்தை உபயோகித்தார் என்கிறார்.

31. Christ has came, he came and entered into His prophet and repeated His earthly Son of man ministry. Luke.17:30. This is the coming of Christ in a Prophet to fulfil the Son of man ministry on earth for second time. Christ came down on earth in the body of William Marrion Branham on 28-2-1963. Christ walked on this earth in shoe leather once again but not in His nail scarred body. This time He used the body of William Marrion Branham.

32. மேலும் இவர் கூறும் விளக்கம்: முதல் முதல் மனுஷகுமாரன் வருகை - கர்த்தராகிய கிறிஸ்து - இயேசுவுக்குள். இரண்டாம் முறை மனுஷகுமாரன் வருகை - கர்த்தராகிய கிறிஸ்து - வில்லியம் மாரியன் பிரன்காமுக்குள் என்கிறார். அன்று கர்த்தராகிய இயேசு கிறிஸ்து. இன்று கர்த்தராகிய பிரன்காம் கிறிஸ்து என மறைமுகமாக பறைசாற்றுகிறார். இது தான் வெளி.10:6 தேவ இரகசியம் நிறைவேறுதல் ஆகும் என்கிறார். The mystery is the coming of Christ in a human body - William Marrion Branham.

33. மேலும் ஏழாம் முத்திரையின் இரகசியம் என்னவென்றால், அது எடுத்துக்கொள்ளப்படுதலுக்கு முன் கிறிஸ்துவின் வருகை சரீரப்பிரகாரமாக அவருடைய தீர்க்கதரிசியின் சரீரத்துக்குள் என்கிறார். இதை இன்னும் விளக்கவேண்டுமானால் கிறிஸ்து சூரியஅஸ்தமனம் மலையில் 28-2-1963 அன்று தாழ இறங்கி வில்லியம் மாரியன் பிரன்காமுக்குள் குடிகொண்டார் என்கிறார். Christ came down on earth in the body of William Marrion Branham on 28-2-1963. Mystery under the Seventh Seal was a coming of Christ before Rapture in the body form of His prophet.

34. இது மனிதன் முதன் முதலாக சந்திரனில் இறங்கிய அன்று 20-7-1969 சர்வ வல்லமையுள்ள தேவன் இந்த பூமிக்கு தாழ இறங்கி R.P. லாறி என்பவருடைய சரீரத்தில் குடிகொண்டார் என்ற உபதேசத்தை போன்ற மற்றொரு பிசாசுக்கடுத்த உபதேசமாகும். When man landed on the moon for the very first time on 20th July 1969, the Almighty God came down to this earth and dwelt in the body of Bro.R.P. Lawrie. நம்மவர்கள் லாறியை மனுஷகுமாரன் என்றார்கள். இவர்கள் பிரன்காமை மனுஷ குமாரன் என்கிறார்கள். இருவருக்கும் உள்ள வித்தியாசம் லாறி, பிரன்காம் தான். ஆக இரண்டுமே ஒரே குட்டையில் ஊறின மட்டைகள் தான். பிசாசு தான்.

***35. கிறிஸ்துவின் வருகை குறித்து இக்காலத்துக்குரிய செய்தி என்ன கூறுகிறது? கிறிஸ்துவின் முதல் வருகை இரத்தம் சிந்தி மரிப்பதற்கென மனிதனாக தோன்றினார். கிறிஸ்து மூன்று முறை வருகிறார். அவர் மூன்று என்னும் எண்ணிக்கையில் பரிபூரணப்படுகிறார். பாருங்கள்? ஆனால் சாத்தானின் எண்ணிக்கை நான்கு ஆகும். அவன் வருவதை கவனியுங்கள். அது நான்கு. கிறிஸ்துவை கவனியுங்கள். முதலாவதாக கிறிஸ்து இரத்தம் சிந்தி மரிப்பதற்கென மனிதனாக தோன்றினார். அது சரியா? அது அவருடைய முதலாம் வருகை. எடுத்துக் கொள்ளப்படுதலின் போது அவர் இரண்டாம் முறை வருகிறார். அப்பொழுது நாம் மறுரூபமாகி அவரை ஆகாயத்தில் சந்திப்போம். அவர் மூன்றாம் முறை வருகையில் அவர் தேவஅவதாரமாக இருக்கிறார். (ர்ந ளை வாந ைைெயசயெவந புழன.) ஆமென்! தேவன், இம்மானுவேல் பூமியை ஆளுவதற்கென வருகிறார். அது உண்மை. (நான்காம் முத்திரை பக்கம் 521, பத்தி 210)***

***36. பிரியமானவர்களே இங்கு நன்கு கவனியுங்கள். கிறிஸ்துவின் இரண்டாம் வருகை எடுத்துக்கொள்ளப்படுதலின் போது. அப்பொழுது நாம் மறுரூபமாகி அவரை ஆகாயத்தில் சந்திப்போம். இதுவே கிறிஸ்துவின் இரண்டாம் வருகை. ஆக கிறிஸ்து 1963-ல் வந்து விட்டார் என்பது பக்கா பிசாசின் உபதேசம். கோவை ராஜாவின் உபதேசம் லௌகிக சம்பந்தமானது, பேய்த்தனத்துக்கடுத்தது.***

***37. ஆயிரம் வருடம் அரசாட்சி வரைக்கும் மேசியா பூமிக்கு வரமாட்டார். நாம் ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு கர்த்தரை அங்கு சந்திப்போம். அவர் பூமிக்கு வருவதில்லை. அவர் மணவாட்டியை ஆகாயத்தில் இழுத்துக் கொள்கிறார். (கே.ப 123, பத்தி 448)***

38. மேலும் இவர் சகோ. பிரன்காமை வார்த்தையை முழுமையாக கொண்ட தீர்க்கதரிசி என்கிறார். A Full Word Prophet. அதோடு மட்டுமல்ல தம்முடைய தீர்க்கதரிசியின் சரீரத்தில் தேவன் தம்மை மறுபடியுமாக மனுஷகுமாரனாக வெளிப்படுத்தினார். இயேசு தம்முடைய ஆணிகளால் காயப்பட்ட சரீரத்தில் செய்த அதே தினசரி கிரியைகளை பிரன்காமின் சரீரத்தில் மீண்டும் செய்தார் என்கிறார். It's God in the body of His prophet revealing Himself as the Son of Man again by doing every works that Jesus did in His nail scarred body.

39. பாருங்கள், *சகோ. பிரன்காம் வார்த்தையை முழுமையாக கொண்ட தீர்க்கதரிசி அல்ல. தேவன் இயேசு என்ற சரீரத்தில் செய்த தினசரி காரியங்களை பிரன்காம் சரீரத்திலிருந்து செய்யவில்லை. ஆதலால் இது தவறான ஒரு வஞ்சிப்பின் உபதேசம்.* இது குறித்து இக்காலத்துக்குரிய செய்தி என்ன சொல்லுகிறது என்பதை கவனிப்போம்.

40. தேவவார்த்தை அவ்விதமாகவே இயேசு கிறஸ்துவில் கிரியை செய்தது. ஏனென்றால் அவர் தேவனுடைய வார்த்தையின் பரிபூரணமாக இருந்தார். *(தேவனே தமது வார்த்தையின் வியாக்கியானி,* பத்தி 91, நாள்

05-02-1964) He (Jesus Christ) was the Fullness of the WORD. பாருங்கள், இயேசு கிறிஸ்து தேவனுடைய வார்த்தையின் பரிபூரணம்.

41. பாருங்கள், அவர் யார் என்பதை. அதாவது அவர் தீர்க்கதரிசி என்பதை - அது காண்பிக்கிறது. தேவன் தீர்க்கதரிசி. அவர் தீர்க்கதரிசியிலும் பெரியவர். அவர் தேவனாயிருந்தார். தீர்க்கதரிசிகள் என்னவாயிருந்தனரோ அது அனைத்தும் அவருக்குள் இருந்தது - இன்னும் அதிகமாக. *தீர்க்கதரிசிகள் வார்த்தையின் ஒரு பாகத்தை மாத்திரமே கொண்டிருந்தனர்.* ஆனால் இயேசு வார்த்தை அனைத்தையும் கொண்டிருந்தார். அவர் வார்த்தையின் பரிபூரணமாக இருந்தார். *(தேவன் தமது விசேஷ குணங்களினால் அடையாளம் கண்டுக்கொள்ளப்படுகிறார்.* பத்தி 110, நாள் 11-3-1964) The Prophet had just a portion of His WORD. He had all the WORD, He was the WORD in its Fullness.

***42.*** இயேசுவும் ஒரு மனிதனே! அவர் மனிதனே! அவர் ஒரு ஸ்திரீயின் மூலம் பிறந்தார். அவர் மரித்தார். அது சரியா? அவர் மனிதன். அவர் புசித்தார். குடித்தார். அவருக்கு தாகம் உண்டாயிற்று. ***அவர் உங்களைப் போலவும் என்னை போலவும் ஒரு மானிடனாய் இருந்தார். ஆனால் தேவனுடைய ஆவி அவருக்குள் பரிபூரணமாக, அளவில்லாமல் வாசம் செய்தது. அவர் சர்வ சக்திமான். ஆனால் எலியாவோ அந்த ஆவியின் ஒரு பாகம் மாத்திரமே. ஒரு வேளை அவன் தன் சகோதரரைவிட சிறிது அதிகமாக அபிஷேகம் பெற்றிருந்திருக்க கூடும். ஆயினும் அவன் ஆவியின் ஒரு பாகம் மட்டுமே.. அவர்கள் தங்கள் சகோதரரை விட சிறிது அதிகமாக இந்த பாகத்தை கண்டவுடன் ஓ! என்னே, இது அவராகத்தான் இருக்கவேண்டும் என்றனர். (கே.ப 123, பத்தி 445,446)***

***43. மேலும் சகோ. பிரன்காம் தன்னை குறித்து கீழ்க்கண்டவாறு கூறுகிறார். முதலாவதாக நான் மேசியா அல்ல. பாருங்கள மேசியர், இயேசு கிறிஸ்துவே. ஆனால் நாம் குட்டி மேசியாக்கள். நாம் ஒவ்வொருவரும். மேசியா என்றால் அபிஷேகம் பண்ணப்பட்டவர் என்று பொருள். தேவத்துவத்தின் பரிபூரணம் எல்லாம் சரீரபிரகாரமாக அவருக்குள் வாசமாயிருந்தது. எனக்குள்ளோ அவருடைய ஆவியின் ஒரு பாகமே வாசமாயுள்ளது. அதுவே உங்களுக்குள்ளும் வாசமாயுள்ளது. சில காரியங்களை அறிந்துகொள்ள, முன்கூட்டியே எனக்கு ஒரு வரம் அளிக்கப்பட்டுள்ளது. நான் இன்னும் உங்கள் சகோதரனே. பாருங்கள் நான் மேசியா அல்ல. நான் உங்கள் சகோதரன். மந்தைக்கு ஒரு மேய்ப்பன் மாத்திரமே. நான் மேசியா என்று உங்களிடம் சொல்வேனாகில், நான் ஒரு பொய்யனாய் இருப்பேன். நான் ஒரு பொய்யனாயிருக்கவிரும்பவில்லை. (கே.ப 266, பத்தி 232)***

***44.*** நான் அந்த மனுஷகுமாரன் அல்ல. (The Son of Man) ஒரு மனுஷகுமாரன் (a son of man) இவ்விரண்டிற்கும் நிறைய வித்தியாசம் உண்டு. இயேசு கிறிஸ்து மனுஷகுமாரன், தேவகுமாரன், தாவீதின் குமாரன். (*கே.ப* 291, பத்தி 101)

***45.*** பிரியமானவர்களே, இயேசு கிறிஸ்து ஒருவரே வார்த்தையின் பரிபூரணம். அந்த ஸ்தானத்தை வேறு யாரும் எடுத்துக்கொள்ள முடியாது. ***சகோ. வில்லியம் மாரியன் பிரன்காம் ஏழாம் சபைக் கால தூதன். ஒரு தீர்க்கதரிசி. இதற்கு மிஞ்சினது யாவும் தீமையினால் உண்டானது ஆகும்.***

***46.*** லூக். 17:30 மனுஷகுமாரன் வெளிப்படும் நாளிலும் அப்படியே நடக்கும். The day when the Son of man is revealed என ஆங்கிலத்தில் உள்ளது. மனுஷகுமாரன் வெளிப்படுதலுக்கும் (manifested) மனுஷகுமாரன் வெளிப்படுத்தபடுதலுக்கும் (revealed) வித்தியாசம் உண்டு. God was manifest in the flesh. தேவன் மாமிசத்தில் வெளிப்பட்டார். The Son of man is revealed. - மனுஷகுமாரன் வெளிப்படுத்தப்பட்டார். அங்கு மனுஷகுமாரன் வெளிப்பட்டார். இங்கு மனுஷகுமாரன் வெளிப்படுத்தப்பட்டார். அன்று மனுஷகுமாரன் ஒரு சரீரத்தில் வெளிப்பட்டார், பிறந்து, வாழ்ந்தார். இன்று மனுஷகுமாரன் தம்மை தம்முடைய தீர்க்கதரிசியின் சரீரத்தில் வெளிப்படுத்துகிறார். அன்று அப்போஸ்தலனாகிய பவுலின் சரீரத்தில் தம்மை வெளிப்படுத்தினார். தம்முடைய குமாரனை நான் புறஜாதிகளிடத்தில் சுவிசேஷமாய் அறிவிக்கும் பொருட்டாக, அவரை எனக்குள் வெளிப்படுத்த பிரியமாயிருந்தபோது என பவுல் கூறுகிறான். கலா.1:16. To reveal His Son in me. இன்று தம்முடைய தீர்க்கதரிசியாகிய வில்லியம் மாரியன் பிரன்காம் சரீரத்தில் மனுஷகுமாரன் தம்மை வெளிப்படுத்துகிறார். இங்கு நீங்கள் வெளிப்படுதல் (manifest) வெளிபடுத்தப்படுதல் (revealed) இரண்டிற்கும் உள்ள வித்தியாசத்தை புரிந்து கொள்ளலாம்.

***47. மேலும் சகோ பிரன்காம் தனக்கும் மனுஷகுமாரனுக்கும் உள்ள வித்தியாசத்தை இவ்விதமாக விளக்குகிறார்.***
இந்த அற்புதங்களையெல்லாம் செய்பவன் நான் அல்ல. வரப்போகும் காரியங்களை பிழையின்றி அறிவிப்பவன் நான் அல்ல. அவர் இத்தகைய செயல்களை புரியும் போது, நான் அவருக்குள் இருக்கிறேன். அவர் என்னை தம்முடைய சத்தமாக உபயோகித்து வருகிறார். என் மூலம் அவர் பேசுவதற்கென என்னை நான் அவருக்கு முற்றிலுமாக அர்ப்பணித்து விட்டேன். அது ஏழாம் தூதன் அல்ல! அது மனுஷகுமாரன் வெளிப்படுத்தல் ஆகும். அது தூதன் அல்ல. அவனுடைய செய்தி. மறைபொருளாயிருந்த தேவனுடைய இரகசியம் வெளிப்படுதல் ஆகும். அது மனிதன் அல்ல. அது தேவன். தூதன் மனுஷகுமாரன் அல்ல. ஆனால் அவரால் அனுப்பப்பட்ட தூதன். மனுஷகுமாரன் எனப்படுவது கிறிஸ்து. அவரை தான் நீங்கள் புசித்து வருகிறீர்கள். நீங்கள் மனிதனின் வார்த்தையை புசிக்கவில்லை. மனிதனின் வார்த்தைகள் தவறுதலாகிப் போக ஏது உண்டு. ஆனால் நீங்களோ என்றென்றைக்கும் தவறாத மனுஷகுமாரனின் சரீரமாகிய வார்த்தையை புசித்து வருகின்றீர்கள். ***(கடைசி காலத்தில் ஆவியின் அபிஷேகம் பெற்றுள்ளவர்கள்,*** பக்கம் 94, பத்தி 269, நாள் 25-7-1965) பிரியமானவர்களே, இந்த பத்தியிலிருந்து நீங்கள் சகோ.பிரன்காம் மனுஷகுமாரன் அல்ல என்பதை நன்கு புரிந்து கொண்டிருப்பீர்கள் என நினைக்கிறேன்.

48. ***மேலும் வெளி.8:1 அரைமணிநேரமளவும் அமைதல் குறித்து இவர் இவ்வாறு எழுதுகிறார்.*** இந்த இரகசியமானது அதாவது கிறிஸ்து வானத்திலிருந்து தாழ பூமியில் இறங்கி சகோ.வில்லியம் மாரியன் பிரன்காம் சரீரத்துக்குள் குடிக்கொண்ட இரகசியம் 28-2-1963-ல் நடந்தாலும் அது மணவாட்டிக்கு 1983-ல் தான்

வெளிப்பட்டது. அதாவது ஏறக்குறைய 20 ஆண்டுகள் கழித்து தான் இந்த இரகசியம் வெளிப்பட்டது. ஒரு நாள் தேவனுடைய காலக் கணக்கின்படி 1000 வருடங்கள். இதைக் கொண்டு நாம் கணக்கிடும்போது 20 வருடங்கள் என்பது அரைமணி நேரமாகும். இப்பொழுது வெளி.8:1 அரைமணிநேரமளவும் அமைதல் என்பது தேவன் பிரன்காமுக்குள் 1963-ல் குடிக்கொண்டாலும் இந்த இரகசியம் 20 ஆண்டுகள் அமைதலாக இருந்தது. அது 20 ஆண்டுகளாக யாருக்கும் வெளிப்படவில்லை. 20 ஆண்டுகள் கழித்து தான் இந்த இரகசியம் வெளிப்பட்டது. இதுவே அரைமணிநேரம் அமைதல் என்று தனது நயவஞ்சகமான, தந்திரமான யூகத்தை வெளிப்பாடு என எழுதுகிறார். இந்த உபதேசமும் சத்தியத்தை விசுவாசியாமல் அநீதியில் பிரியப்படுகிறவர்களை வஞ்சித்துக் கொண்டிருக்கிறது. இவருக்கும் அமெரிக்காவில் பக்தர்கள் உண்டு. பொதுவாக நீங்கள் எந்த உபதேசத்தை கொண்டு வந்தாலும் உங்கள் பின் ஒரு சிறு கூட்டம் இருக்கும். இது இன்றைய சகஜ நிலை. ஆதலால் யாராவது ஒருவருக்கு பின் ஒரு கூட்டம் ஜனங்கள் இருப்பது ஆச்சரியம் அல்ல. ஆனால் ***காலேப் யோசுவாவுக்குப் பின் அன்று முதல் இன்று வரை ஓரிரு நபர்கள் தவிர, கூட்டம் என்பது இல்லை. அது என்றும் இருக்காது.*** இவருடைய வெளிப்பாட்டுக்கும் தேவனுடைய வார்த்தைக்கும், இக்காலத்துக்குரிய செய்திக்கும் எந்தவிதமான இணைப்பு, சம்பந்தம் எதுவும் உண்டா? இல்லவே இல்லை. ஆதலால் இப்படிப்பட்ட வெளிப்பாடுகளை உங்கள் வீடு குப்பை தொட்டியில் கொண்டு கொட்டுங்கள்.

## கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் வருகையினுடைய நான்கு கட்டங்கள்
## ஒரு வித்தியாசமான போதனை

49. சகோ.C.W.வுட், கிறிஸ்து ஐந்து முறை வருகிறார் என உபதேசித்தார். ஆனால் நம்முடையவர், நமது சென்னையை சார்ந்த சகோ.தாமஸ் ஜெயசீலன் கர்த்தருடைய வருகை குறித்து ஒரு புதிதான உபதேசத்தை கொண்டு வந்து ***கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் வருகையில் நான்கு கட்டங்கள்*** உண்டு என்கிறார். இவருடைய இன்றைய விலாசம் எனக்கு தெரியாது.

***50. இந்நாட்களில் தங்கள் கைகளில் 10 இக்காலத்துக்குரிய செய்தி புத்தகங்களை வைத்துக்கொண்டு எனக்கு இந்த வெளிப்பாடு கிடைத்துவிட்டது, அந்த வெளிப்பாடு கிடைத்துவிட்டது என கூறிக்கொண்டு மக்களை ஏமாற்றி கொண்டு வருகிறது ஒரு கூட்டம். அதில் ஒரு ரகம் தான் இது. இவர்களெல்லாம் தவறாக ஆவியின் அபிஷேகம் பெற்றுள்ளவர்கள். They are all false annointed ones. இவர்களை யாரும் தடை செய்ய முடியாது. அது சபை எடுத்துக்கொள்ளப்படும் வரை நடந்து கொண்டேயிருக்கும். ஆனால் அவர்கள் நடையை குறித்து நான் உங்களை எச்சரிக்கும்போது நீங்கள் அவர்களை விட்டு விலகுவீர்களானால் அதுவே நீங்கள் ஒரு புத்தியுள்ள கன்னிகை என்பதற்கு அடையாளம்.***

51. சகோ. தாமஸ் ஜெயசீலன் கீழ்க்கண்டவாறு தன்னுடைய உபதேசத்தை கொண்டு வருகிறார். இயேசு கிறிஸ்துவினுடைய வருகையில் நான்கு கட்டங்கள் உள்ளது என்கிறார். இது என்ன? சாத்தான். சாத்தானுக்குரிய எண் நான்கு. ஆக சகோ.தாமஸ் ஜெயசீலன் உபதேசம் சாத்தானுடையதே!

1. ***முதலாம் வருகை***: முடிவில் அப்போஸ்தலர்களை ஆண்டவர் விழித்திருக்கும்படி கூறினார்.
2. ***பின்பு அவர் வந்து*** ஆவி உற்சாகம் உள்ளது தான் என்றார். அப்போஸ்தலர்கள் மேலறையில் ஒரு மனம் கொண்டு கூடினார்கள். வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தை பெற்றுக்கொண்டார்கள். ***ஆவியில் உற்சாகம் அடைந்தார்கள்.*** அல்லேலூயா (***பரிசுத்த ஆவியின் வருகை இதுவே***)
3. ***அவர் திரும்ப வந்தபோது***: (மாற்கு 14: ) அவர்களுடைய கண்கள் நித்திரை மயக்கம் அடைந்திருந்தபடியால் மணவாளன் வர தாமதித்தபோது அவர்கள் நித்திரை மயக்கம் அடைந்து தூங்கிவிட்டார்கள். (மத்.25:5) 1963-ல் கர்த்தர் பலமுள்ள தூதனாக இறங்கி, முத்திரைகளின் இரகசியத்தை வெளிப்படுத்தினார். மணவாட்டிக்கு புதிய செய்தியை தந்தார். (பலமுள்ள வேறொரு தூதன் இறங்கி வந்து, முத்திரைகளின் இரகசியத்தை வெளிப்படுத்தினார், மணவாட்டிக்கு புதிய செய்தியை கொடுத்தார் என்பது இக்காலத்துக்குரிய செய்திக்கு புறம்பான உபதேசம்). ஆனால் ஸ்தாபனங்கள் இன்றைக்கு செய்தியை புறக்கணித்ததின் விளைவாக ஆவிக்குரிய நித்திரை மயக்கத்தில் காணப்படுகிறார்கள். (இங்கு சீஷர்கள் நித்திரை மயக்கத்தில் காணப்பட்டார்கள். அப்படியானால் சீஷர்களை ஸ்தாபன சபைகளோடு ஒப்பிடலாமா? சீஷர்களை அவ்வண்ணமாக ஒப்பிடுவது பிசாசு).

***அவர் திரும்ப வந்து போனதை அவர்கள் இன்னும் அறியவில்லை. ஆம் அவர் இப்பொழுது வாசல் அருகே வந்திருக்கிறார். இது அவருடைய இரண்டாம் வருகை ஆரம்பமே ஒழிய முழுமை அடையவில்லை. காணக்கூடிய சரீரத்தில் அவர் வரவில்லை. அப்படி வரும்போது தான் அவருடைய இரண்டாம் வருகை முழுமை அடையும். (எடுத்துக்கொள்ளப்படுதல், கர்த்தருடைய இரண்டாம் வருகை. இதற்கு முன் நடக்கவிருப்பது □ ஆரவாரம் - செய்தி. பிரதான தூதனுடைய சத்தம், தேவஎக்காளம். இதற்கு மாறான உபதேசம் யாவும் சாத்தானுடையதே)*** எப்படியெனில் முதலாம் வருகையில் சீஷர்களோடு வாழ்ந்தார். முடிவில் மரித்து உயிர்த்தெழுதல் நாளிலே மரித்த பழையஏற்பாடு பரிசுத்தவான்களை உயிர்ப்பித்து, அவரோடு கூட்டிச் சென்று சிறைப்பட்டவர்களை சிறையாக்கி கொண்டு போனார். அதே போல அவருடைய இரண்டாம் வருகையும். மரித்த புதிய ஏற்பாட்டு பரிசுத்தவான்களை தன்னோடு கூட்டிச் செல்வார். (எடுத்துக்கொள்ளப்படுதல், கர்த்தருடைய இரண்டாம் வருகையில் மரித்த புதியஏற்பாடு பரிசுத்தவான்கள் மட்டும் அல்ல, மரிக்காது உயிரோடிருக்கும் பரிசுத்தவான்களும் எடுத்துக்கொள்ளப்படுவார்கள்). அப்பொழுது தான் அவரது இரண்டாம் வருகை முழுமை அடையும். அல்லேலூயா! இதனை புரியாத சில முட்டாள்கள் வார்த்தையை குழப்புகிறார்கள். வந்து விட்டதாக கூறிவிடுகிறார்கள். தேவஞானமில்லாதவர்கள் இவர்களே. ***இப்பொழுது அவர் மணவாட்டியோடு வாசம்பண்ணிக்கொண்டிருக்கிறார். சரீரத்தில் அல்ல. வார்த்தையில். நீங்கள் என்னிலும் நான் உங்களிலும் இருக்கிறதை அந்நாளிலே*** நீங்கள் அறிவீர்கள். (யோவான். 14:20) எந்த நாளில் பெந்தெகொஸ்தே என்னும் நாளில் பரிசுத்த ஆவியாக வந்து இறங்கினாரே ***அந்த நாள் தான்*** அது.
***சீஷர்களோடு பரிசுத்த ஆவியாக வாசம்பண்ணினார். காணக்கூடிய சரீரத்தில் அல்ல. அதே போல் இப்பொழுது மணவாளனாக மணவாட்டியோடு இருக்கிறார். (ஏழாவது சபைக்காலத்தில் மட்டுமல்ல, ஏழு சபைக்காலங்களிலும் உள்ள மணவாட்டியோடு அவர் வாசம்பண்ணிக்கொண்டிருந்தார்).***

4. ***மூன்றாம் தரம் அவர் வந்து***: (மாற்கு 14:41) இனி நித்திரை பண்ணி இளைப்பாறுங்கள் என்று கூறினார்.

நித்திரைபண்ணி இளைப்பாறுதல் ஆயிரம் வருஷம் அரசாட்சியில் தான் நடக்கிறது. ***காணக்கூடிய சரீரத்தில்*** அவர் வந்து மணவாட்டியோடு கூட ராஜாதி ராஜாவாக ஆயிர வருஷ அரசாட்சி செய்கிறார். அல்லேலூயா! மணவாட்டி ஆயிரவருஷ இளைப்பாறுதலில் காணப்படுவாள்.

52. குறிப்பு: மணவாட்டிக்கு இன்னும் வெளிப்படாத இரகசியங்களை வெளிப்படுத்துவார் என்பதே என் விசுவாசம். ***மணவாளன் மணவாட்டிக்குரிய இரகசியங்கள்*** என்னும் தலைப்பில் செய்திகளை வெளியிட விரும்புகிறேன். ஜெபியுங்கள். மணவாளன் மணவாட்டியிடம் மட்டும் தான் ***இரகசியங்களை*** சொல்லுவார்.
போவாஸ் ரூத்துக்கு ஆறுபடி கோதுமையை மடியில் போட்டார். யாருக்கும் இந்த இரகசியம் தெரியாது. ரூத்துக்கு மட்டுமே தெரியும் ***மறைவான மன்னா*** இதுவே.
இலை மறைவில் கனி ஒளிந்திருக்கும். கனி மறைவில் சுவை ஒளிந்திருக்கும். சுவை மறைவில் வைட்டமின் ஒளிந்திருக்கும். வைட்டமின் மறைவில் பலம் ஒளிந்திருக்கும். கிறிஸ்துவின் மறைவில் மணவாட்டி ஒளிந்திருக்கிறாள். அது யார் என்பது தான் இரகசியம். ***நீங்கள் மரித்தீர்கள். உங்கள் ஜீவன் கிறிஸ்துவுடனே தேவனுக்குள் மறைந்திருக்கிறது.*** (கொலோசெயர் 3:3)
சிம்சோன் மணவாட்டிக்குரிய இரகசியம், ஈசாக்கு ரெபெக்காளுக்குரிய இரகசியம். இன்னும் தொடரும்.
இப்படிக்கு, உங்கள் சகோதரன், ஜெ. தாமஸ் ஜெயசீலன்.

***53. இங்கு இவர் கெத்செமனே என்னப்பட்ட இடத்தில் இயேசுவுக்கும் அவருடைய மூன்று சீஷர்களுக்கும் இடையில் நடந்த சம்பவத்தை ஆதாரமாக கொண்டு, அதை கர்த்தராகிய இயேசுவின் வருகையினுடைய நான்கு கட்டங்கள் எனக் கூறுகிறார். இந்த அற்பபுத்தியுள்ளவர்கள், இக்காலத்துக்குரிய செய்தியை புறம்பே தள்ளிவிட்டு, தங்களை ஒரு பொருட்டாக எண்ணிக்கொண்டு, ஆளுக்கொரு உபதேசத்தை கொண்டுவருகிறார்கள். முந்தியவர் கர்த்தர் ஐந்து முறை வருகிறார் என உபதேசித்தார். இவர் நான்கு முறை என உபதேசிக்கிறார். ஆனால் இக்காலத்துக்குரிய செய்தியோ மூன்று முறை எனக் கூறுகிறது. இது தான் வஞ்சிப்பின் காலம். செய்தி மூன்று முறை எனக் கூறினால், அதை தான் நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும். அதை விட்டு விட்டு நான்கு, ஐந்து என்பதெல்லாம் பேய்த்தனத்துக்கடுத்தது. பிசாசு.***

54. ***இவரது உபதேசம் மாற்.14:32-42 வசனங்களில் அடங்கியிருக்கிறது.***
அ) கர்த்தர் முதலாம் முறை வந்தபோது ***விழித்திருங்கள்*** (மாற்.14:34) என்று கூறிச் சென்றார். முதலாம் வருகையில் என்ன? நாம் எச்சமயத்திலும் விழிப்புள்ளவர்களாயிருக்க கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளோம். எபே.6:18, 1பேது.5:8, கொலோ.4:2 அன்று மட்டும் அல்ல. இன்று கூட நாம் விழித்திருக்க வேண்டும். நாம் விழித்திருக்காவிட்டால் தாமஸ் ஜெயசீலன் போன்றவர்களின் உபதேசம் நம்மை நித்திரைக்குட்படுத்திவிடும். ஆதலால் வாருங்கள் நாம் கர்த்தருடைய வருகை மட்டும் எப்பொழுதும் விழித்திருக்கிறவர்களாக காணப்படுவோம்.
ஆ) கர்த்தர் இரண்டாம் முறை வந்த போது ***ஆவி உற்சாகம் உள்ளது தான்.*** மாற்.14:38 என்று கூறி சென்றார். இதை அப்.2:4 உடன் ஒப்பிட்டு, கர்த்தருடைய இரண்டாம் வருகை - பரிசுத்த ஆவியின் வருகை என்கிறார். இந்த வருகையில் சீஷர்கள் ஆவியில் உற்சாகமடைந்தார்கள் என்கிறார். சபை எடுத்துக்கொள்ளப்படும் வரை பரிசுத்த ஆவியின் யுகம் உண்டு. அன்று என்ன, பரிசுத்த ஆவியையுடையவன் என்றும் உற்சாகத்துடன் காணப்படுவான். பரிசுத்த ஆவியினாலேயன்றி ஒருவன் தேவனுடைய வார்த்தையில், இக்காலத்துக்குரிய செய்தியில் உற்சாகம் பெற முடியாது. பரிசுத்த ஆவியே எப்பொழுதும் அவனை உற்சாகப்படுத்துகிறது. ***நான் கடந்த 27 ஆண்டுகளாக பரிசுத்த ஆவிக்குள் உற்சாகமாகவேயிருக்கிறேன். பாடுகளின் மத்தியில் நான் உற்சாகமாக இருப்பதற்கு எனக்குள் வாசம் செய்யும் பரிசுத்த ஆவியே காரணம்.***
இ) மூன்றாம் முறை கர்த்தர் வந்த போது சீஷர்கள் நித்திரை மயக்கத்தில் இருந்தார்கள். (மாற்.14:40) எனக் கூறி இதை மத்.25:5 உடன் ஒப்பிட்டு மணவாளன் வர தாமதித்தபோது அவர்கள் நித்திரை மயக்கமடைந்து தூங்கிவிட்டார்கள் என்கிறார். மூன்றாம் முறை கர்த்தர் வந்துபோனதை சீஷர்கள் அறியவில்லை. அவர்கள் நித்திரை மயக்கத்தில் இருந்தார்கள். அவ்வாறாக ***கர்த்தர் 1963-ல் பலமுள்ள தூதனாக இறங்கி திரும்ப வந்துபோனதை அவர்கள் அறியவில்லை. ஏனென்றால் அவர்கள் நித்திரை மயக்கத்தில் இருந்தார்கள் என்கிறார்.*** அங்கு சீஷர்கள் நித்திரை மயக்கத்தில் இருந்தார்கள் எனக் காண்கிறோம். இங்கு இவர் ஸ்தாபனங்கள் நித்திரை மயக்கத்திலிருந்தது என்கிறார். அங்கு சீஷர்களை நோக்கி இயேசு எழுந்திருங்கள் போவோம் என்றார். (மாற்.14:42) அப்படியானால் இன்று நித்திரை மயக்கத்திலிருக்கும் ஸ்தாபன மக்களை எழுந்திருங்கள் போவோம் என்கிறாரா? ஆக சீஷர்களை ஸ்தாபனத்துடன் ஒப்பிடுகிறார். இதெல்லாம் என்ன? லௌகீக சம்பந்தமான ஞானம். இந்த ஞானமானது பேய்த்தனத்துக்கடுத்தது. இயேசு சீஷர்களிடம் உங்களுக்கு செவி கொடுக்கிறவன் எனக்கு செவிகொடுக்கிறான் என்றார். லூக். 10:16.
ஈ) அடுத்து கர்த்தர் 1963-ல் பலமுள்ள தூதனாக இறங்கி வந்து சென்றதை கர்த்தருடைய இரண்டாம் வருகையின் ஆரம்பம் என்கிறார். இதற்கெல்லாம் வேதவாக்கியம் எங்கே? இக்காலத்துக்குரிய செய்தியில் ஆதாரங்கள் எங்கே? சகோ. தாமஸ் ஜெயசீலன் சிந்தனையை பிசாசு ஆட்கொண்டிருப்பதால், அவர் சிந்தனைகளில் மட்டுமே ஆதாரங்கள் உண்டு. இதெல்லாம் எந்த ஞானம்? பிசாசின் ஞானம். இந்த உபதேசத்துக்கும், தேவனுடைய வார்த்தைக்கும், இக்காலத்துக்குரிய செய்திக்கும் எந்தவிதமான சம்பந்தமும் உண்டா? இல்லவே இல்லை!
உ) கர்த்தர் நான்காவது முறையாக ஆயிர வருட அரசாட்சியில் வருகிறார் எனக்கூறி அதை மாற்.14:*41 இனி நித்திரைபண்ணி இளைப்பாறுங்கள்* என்பதனோடு ஒப்பிட்டு ஆயிரம் வருடம் அரசாட்சி ***நித்திரைபண்ணி இளைப்பாறுதல்*** என்கிறார். ஆயிரம் வருடம் அரசாட்சி இளைப்பாறுதல், அது சரி தான். ஆனால் அது நித்திரைப்பண்ணிக் கொண்டு இளைப்பாறுதல் ஆகாது. இது தாவீதின் குமாரனுடைய அரசாட்சி. கிறிஸ்துவினால் ஆதிக்கம் செலுத்தப்படும் ஒரு அரசாங்கம். இது கிறிஸ்துவும் அவருடைய மணவாட்டியினுடைய தேன் நிலவு ஆகும். ஆதலால் மாற்.14:41 நித்திரைபண்ணி இளைப்பாறுங்கள் என்பதை ஆயிரம் வருடம் அரசாட்சியோடு இணைப்பது ஒன்றை கூட்டுவது ஆகும். வார்த்தையோடு ஒன்றை கூட்டுவது பிசாசு. அந்த பிசாசின் கிரியைதான் இவர் செய்து கொண்டிருக்கிறார். ஆதலால் தான் சூளையில் தொடர்பு கொண்டுள்ளார். அங்கு இவரை போன்றவர்களுக்கு தானே அடைக்கலம்.
ஊ) இலையின் மறைவில் கனி ஒளிந்திருக்கும், கனியின் மறைவில் சுவை ஒளிந்திருக்கும், சுவையின் மறைவில் வைட்டமின் ஒளிந்திருக்கும். வைட்டமின் மறைவில் பலம் ஒளிந்திருக்கும், கிறிஸ்துவின் மறைவில் மணவாட்டி ஒளிந்திருக்கிறாள். அதெல்லாம் இருக்கட்டும், ஆனால் இன்று பிசாசின் மறைவில் தாமஸ் ஜெயசீலன்

ஒளிந்திருக்கிறார், சூளை மேட்டின் மறைவில் பிசாசு ஒளிந்திருக்கிறான். யார் பின்னால் யார் யார் ஒளிந்திருக்கிறார்கள் என்பதை அறிந்துகொண்டீர்களா?

55. *மாற்.14:32-42 சம்பவம் என்ன?* இயேசு தம்முடைய ஆத்துமா மரணத்துக்கேதுவான துக்கம் கொண்டிருந்ததால் தனித்து ஜெபம் பண்ண செல்லுகிறார். பேதுரு, யாக்கோபு, யோவான்யிடம் சோதனைக்குட்படாதபடிக்கு, அவர்களையும் விழித்திருந்து ஜெபம்பண்ணுங்கள் என்கிறார். ஆனால் அவர்களோ மாம்ச பலவீனத்தினிமித்தம் நித்திரைபண்ணுகிறவர்களாக காணப்பட்டனர். முடிவாக அவர் வேளை வந்தபோது, அதாவது யூதாஸ் அவரை காட்டிக்கொடுக்கவேண்டிய வேளை வந்தபோது, சீஷர்களை இதுவரை நீங்கள் விழித்திருந்து சோதனைக்குட்படாதபடிக்கு ஜெபம்பண்ணவில்லை, நித்திரை செய்தீர்கள். இப்பொழுது வேளை வந்து விட்டதினால் இனி நீங்கள் விழித்திருந்து ஜெபம்பண்ண தேவையில்லை. ஆதலால் நித்திரை செய்து இளைப்பாறுங்கள் என்கிறார். இதற்கு வேறொரு அர்த்தம் கொடுத்து வேதத்தை புரட்டுவது பிசாசு. மாற்.14:32-42 ஒரு இயற்கையான சம்பவம். இதற்கு புது விளக்கம் கொடுக்க தேவையில்லை, புது வியாக்கியானம் தேவையில்லை. ஏனென்றால் அது ஏற்கனவே வியாக்கியானம் செய்யப்பட்ட ஒன்றாகும். இப்பொழுது இந்த பகுதியிலிருந்து நாம் கற்றுக்கொள்வது என்ன? நம்முடைய இடுக்கண், இன்னல், பாடுகள் நேரத்தில் நாம் சோதனைக்குட்படாதபடிக்கு, சத்துரு நம்மை மேற்கொள்ள இடம்கொடுக்காதபடிக்கு நாம் விழித்திருந்து ஜெபம் பண்ணவேண்டும் என்பதே. இதில் கர்த்தருடைய வருகைக்குரிய இரகசியங்கள் எதுவும் இல்லை.

56. மேலும் ஏழாம் தூதனுடைய சத்தத்தின் நாட்களிலே அவன் எக்காளம் ஊதப்போகிறபோது தேவ இரகசியம் நிறைவேறும் என்று வெளி.10:6 கூறுகிறது. ஏழாம் தூதன் வந்து எக்காளம் ஊதி, நித்திரைக்குட்பட்டாயிற்று. அப்படியானால் தேவ இரகசியம் நிறைவேறிற்று என்றே பொருள். ஆனால் இவர் இன்னும் மணவாட்டிக்கு வெளிப்படுத்தபடாத இரகசியங்கள் உண்டு என்கிறார். அப்படியானால் இந்த ஞானம் எங்கிருந்து வந்தது? நீங்களே யூகித்துக் கொள்ளுங்கள். மணவாட்டி எடுத்துக்கொள்ளப்படுதலுக்கு தன்னை ஆயத்தப்படுத்திக்கொண்டிருக்கிறாள். கடைசி ஆடு மந்தையில் வந்து இன்னும் சேரவில்லை. அதற்காகவே கர்த்தருடைய வருகைக்கு காலத்தாமதம் ஆகி கொண்டிருக்கிறது. இனி எந்தவொரு வெளிப்பாட்டுக்கும் மணவாட்டி காத்துக்கொண்டிருக்கவேண்டிய தேவையில்லை. அவள் எடுத்துக்கொள்ளப்படுதலுக்கு ஆயத்தமாயிருக்கிறாள்.

57. இவர் ஒரு முறை எனக்கு போன் செய்து, சகோதரனே, உங்களிடம் உள்ள ஊழியர்கள் மற்றும் விசுவாசிகளின் விலாசம் எனக்கு தேவை என்றார். நானும் நீங்கள் என்னிடம் எனக்கு முன் அறிவிப்பு கொடுத்து, வந்து எடுத்துச் செல்லுங்கள் என்றேன். அதன்படி ஒருநாள் காலை வந்தார். அவர் வந்த சமயம் எங்களது கம்ப்யூட்டரில் என் பிள்ளைகள் சகோ.D.G.S. தினகரன் பாட்டுக்களை கேட்டுக்கொண்டிருந்தார்கள். இவர் என் வீடு வந்தவுடன், நான் என் பிள்ளைகளை நோக்கி பாட்டை நிறுத்தச் சொன்னேன். பின் இவரோடு பேச ஆரம்பித்தேன். இவருக்கு பேப்பர், பேனா கொடுத்து, எனது விலாசபட்டியல்களைக் கொண்ட நோட்டு புத்தகத்தையும் கொடுத்து உங்களுக்கு யார் யார் விலாசம் தேவையோ எடுத்துக் கொள்ளுங்கள் என்றேன். விலாசபட்டியல் அவருக்கு சமீபத்தில் சென்னை வந்திருந்த ஜெர்மன் சகோ.E.W. பிராங்க் கூட்டம் கைப்பிரதிகள் அனுப்ப தேவை என்றார். ***அது சரியான காரணம் அல்ல என்பது எனக்கு தெரியும்.*** இந்த விலாசங்கள் கொண்டு, சில சகோதரர்களிடம் சென்று தனது வெளிப்பாடுகள் என சிலவற்றை கூறி அவர்களிடம் உதவிகள் எதிர்பார்ப்பார். இது தான் இவரது தொழில். இதை நன்கு அறிந்தும் எனது விலாசபட்டியலை அவருக்கு கொடுத்தேன். ஏன்? ***தேவனுடைய வித்துக்களை ஒருவரும் வஞ்சிக்க முடியவே முடியாது. கோவை ராஜா, சகோ. ஜெயசீலன் போன்றவர்கள் எத்தனை குட்டிக்கரனங்கள் போட்டாலும் வித்துக்களை வஞ்சிக்கவே முடியாது.*** அவர் விலாசங்கள் எடுத்தப் பின்பு அவரோடு சிறிது நேரம் உட்கார்ந்து கர்த்தருடைய வருகை வந்து விட்டது என்ற உபதேசம் தவறு என்பதை குறித்து அவருக்கு சில குறிப்புகள் கொடுத்தேன். மதிய உணவுக்குப் பின்பு என்னிடமிருந்து பிரிந்து சென்றார்.

58. ஆனால் இந்த சம்பவத்தை ஒரு நாள் மாதவரத்தில் கூடும் ஒரு கூட்டத்தில் இவரது பிரசங்க வேளையில் முற்றிலுமாக மாற்றிக் கூறி இருக்கிறார். அதாவது இவர் என் வீடு வந்த சமயம் நான் சகோ.D.G.S. தினகரன் செய்தியை போட்டு கேட்டுக்கொண்டிருந்ததாகவும், இவரைக்கண்டவுடன் செய்தியை கேட்பதை நிறுத்திவிட்டதாகவும், அதற்கு இவர் என்னிடம் விளக்கம் கேட்க, நான் தற்போது தீர்க்கதரிசியின் செய்திகளை கேட்பதில்லை, படிப்பதில்லை, தியானிப்பதில்லை, ஏனென்றால் அது புளித்துவிட்டது. ஆதலால் இந்நாட்களில் நான் சகோ.D.G.S. தினகரன், சகோ. மோகன் சி. லாசரஸ் போன்றவர்களின் செய்திகளையே கேட்டு வருவதாக அவரிடம் கூறினதாக, ஆக நடக்காத ஒரு சம்பவத்தை நடந்ததாக, அதுவும் அவர் சபையில் தேவனுடைய பிரதிநிதியாக நின்றுகொண்டு செய்தி கொடுத்துகொண்டிருக்கும்போது கூறியுள்ளார். இதற்கு சபையில் எதிர்ப்புகள் இருந்தாலும், தான் கூறியது உண்மையே என சாதித்திருக்கிறார்.

59. இந்த விவரம் என் காதில் விழ, அது குறித்து ஒரு சில சகோதரர்களிடம் கேட்க, அவர்களும் அவர் அவ்வாறு கூறினார் என்பதை உறுதிப்படுத்தினார்கள். இதன்பின் ஒரு நாள் அவர் போனில் கிடைத்தார். நான் விவரம் கேட்க சகோதரனே உங்களுக்கு தெரியாதா, நம்முடையவர்கள் ஏதாவது ஒன்றை பிணைத்து கூறுவதில் திறமைசாலிகள், நான் அவ்வாறு கூறவே இல்லை என்று சாதித்தார். அன்று முதல் இவரை நான் இக்காலத்துக்குரிய செய்தியிலுள்ள விசுவாசிகள் பட்டியலில் கூட சேர்க்கவில்லை. மாறாக ஒரு பாவனை விசுவாசி பட்டியலில் சேர்த்துள்ளேன். இவர் சூளைமேட்டாரிடம் ஒட்டுவதெல்லாம் ஒரு சிறிய காணிக்கைகாகத் தானே. பணத்துக்காக ஒரு நாடகத்தை நன்றாக நடித்து காட்டுவார். செய்திக்கும் அவருக்கும் எந்தவித சம்பந்தமும் கிடையாது.

60. இந்த விலாசபட்டியல் என்றவுடன் மற்றொரு சம்பவம் எனக்கு ஞாபகம் வருகிறது. சில வேளைகளில், சில இடங்களில், சிலர் என்னிடம் சகோதரனே, உங்கள் சபைகள் இங்கு உண்டா, அங்கு உண்டா என்று கேட்பதுண்டு. என்னிடம் ஊழியர்கள் மற்றும் விசுவாசிகள் விலாசப் பட்டியல் ஒன்று உண்டு. அதைக் கொண்டு அவர்கள் கேட்குமிடத்தில் இக்காலத்துக்குரிய செய்தியை பிரசங்கிக்கும் சபைகள் உண்டு அல்லது இல்லை என்று கூறி வந்தேன். ஆனாலும் என்னிடம் உள்ள விலாச பட்டியல் பழைமையானது. தற்காலங்களில் புதியவர்கள் பலர் சேர்க்கப்பட்டிருப்பார்கள், ஆதலால் புதிய விலாசப் பட்டியல் ஒன்று எனக்கு தேவைப்பட்டது.

ஒரு நாள் WBGNS மற்றும் VOGR இரண்டிற்கும் போன் செய்து சகோ.மோசஸ் தயானந்தத்திடம், சகோதரி மேரியிடம் இந்த பட்டியல் ஒன்று கேட்டேன். அவர்கள் இருவருமே அவர்களிடம் பட்டியல் உண்டு. ஆனாலும் அதை யாருக்கும் கொடுக்ககூடாது என மேலிடத்திலிருந்து உத்தரவு என கூறினார்கள்.

61. நமது பெரிய புள்ளிகள் நம்முடைய ஜனங்களுக்கு நம்முடைய சபைகள் மற்றும் ஊழியர்கள் விலாசம் கொண்ட பட்டியலை கொடுக்கக்கூடாது என அந்த அளவுக்கு அதை பத்திரமாக தங்களுக்குள்ளே இரகசியமாக பாதுகாத்து வருகிறார்கள். இதன் மர்மம் தான் என்ன என்று எனக்கு தெரியவில்லை. அதாவது நம்முடைய ஊழியர்கள் யார் யார், சபைகள் எங்கெங்குள்ளது என்பதை யாரும் அறிந்து கொள்ளக்கூடாது என நினைக்கிறார்களா? அப்படி அறிந்து கொண்டால் நமது சபைகள் மற்றும் ஊழியர்களுடைய மாயையான தோற்றம் மற்றும் சபைகளின் சீர்கேடான நிலையை மக்கள் அறிந்து கொள்வார்கள், அதனால் இடறுவார்கள் என்ற நல்லெண்ணம் கொண்டு அப்படி செய்கிறார்களா, எனக்கு தெரியவில்லை. இந்த நல்லெண்ணத்துடன் அவர்கள் செய்வார்களாகில் அவர்களுடைய முடிவு மிகவும் வரவேற்கத்தக்கது.

62. ஸ்தாபன சபைகளை பாருங்கள், அவர்கள் கூட தங்கள் வருடாந்திர கையேடு புத்தகங்களில் (diary) தங்களது சபை இருக்குமிடம், அதன் ஊழியர்களின் பெயர் அவர்களின் போன் நெம்பர் முதலானவைகளை வெளியிட்டு அவர்கள் சபைகளை குறித்து மற்றவர்கள் அறிந்து கொள்ள அது ஏதவாயிருக்கும் என்ற நல்லெண்ணம் கொண்டுள்ளார்கள். ஆனால் இவர்களோ அந்தரங்கமான, இரகசியமான வைத்துக்கொள்ளவிரும்பும் வெட்க கேட்டை என்னவென்று சொல்வது? இவர்களை நினைக்கும்போது வெள்ளையடிக்கப்பட்ட கல்லரை தான் நினைவுக்கு வருகிறது. ஏனென்றால் இவர்களுடைய காரியங்கள் யாவும் வேஷமாகவேயிருக்கிறது. தயவு செய்து உங்கள் சபைகள், அதன் ஊழியர்கள் பட்டியலை பாரத ஸ்டேட் வங்கியில் ஒரு லாக்கரில் போட்டு பத்திரமாக வைத்துக்கொள்ளுங்கள் என ஆலோசனை கூறுகிறேன்.

*63. மாற்கு 14:32-42 வசனங்களை நாம் பரிசுத்த ஆவியின் ஒத்தாசையோடு இன்று தியானிப்போம்.*
*வசனம் 32*: இயேசுவும் அவருடைய சீஷர்களும் கெத்செமனே என்ற இடத்திற்கு வருகிறார்கள். அவர் சீஷர்களை நோக்கி நான் தனித்து ஜெபம்பண்ண மற்றொரு இடத்திற்கு போகிறேன், நீங்கள் இங்கு உட்கார்ந்திருங்கள் என்கிறார்.
*வசனம் 33*: இயேசு தம்முடைய சீஷர்களில் பேதுரு, யாக்கோபு, யோவான் மூவரை கூட்டிக்கொண்டு போகிறார். பொதுவாக இந்த மூன்று சீஷர்களும் எப்பொழுதும் அவருடன் இருந்து வருகிறார்கள். மாற்கு 5:37, 9:2, 13:3. அங்கு திகிலடையவும், மிகவும் வியாகுலப்படவும் தொடங்கினார்.
*வசனம் 34*: பின்பு மூவரை நோக்கி என் ஆத்துமா மரணத்துக்கேதுவான துக்கம் கொண்டிருக்கிறது. நீங்கள் இங்கே தங்கியிருங்கள். விழித்திருங்கள் என கூறி செல்லுகிறார். மேற்கூறிய சம்பவங்களை நீங்கள் மத்.26:36-46, லூக் 22:39-46, யோ.18:1 வசனங்களில் தியானிக்கலாம்.
*வசனங்கள் 35-36:* இயேசு கிறிஸ்துவின் முதலாவது ஜெபம். இதை நீங்கள் மத்.26:39, லூக் 22:41-42, வசனங்களில் தியானிக்கலாம். இயேசு தம்முடைய மூன்று சீஷர்களையும் விட்டு விலகி, சற்று அப்புறம் சென்று ஜெபிக்கிறார்.
*வசனம் 37:* இயேசு ஜெபித்துவிட்டு சீஷர்களிடம் வருகிறார். அவர்கள் நித்திரைபண்ணிக்கொண்டிருந்தனர். அவர்களை விழித்திருக்கும்படி கேட்டிருந்தார். ஆனால் அவர்களோ நித்திரைபண்ணிக்கொண்டிருந்தனர். ஆதலால் சீமோனுடன் ஒருமணிநேரமாவது விழித்திருக்கக்கூடாதா என வினவுகிறார்.
*வசனம் 38:* பின் மூன்று சீஷர்களையும் நோக்கி நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம்பண்ணுங்கள் என்று கூறுகிறார். ஜெபம் என்பது மனிதனுடைய நோக்கத்தையன்று தேவனுடைய சித்தத்தை தேடுவது. உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோல பூமியிலேயும் செய்யப்படுவதாக. நாம் ஜெபத்தின் மூலம் சோதனைகளை மேற்கொள்ள முடியும் என்பதை அவர்களுக்கு எடுத்துரைக்கிறார். அதே வேளையில் ஆவி உற்சாகம் உள்ளது, மாம்சம் பலவீனமுள்ளது என்பதையும் அவர்களுக்கு கூறுகிறார். நாம் நம்முடைய ஆவியில் உற்சாகமாக கர்த்தருக்கென்று அதைச் செய்யவேண்டும், இதைச் செய்யவேண்டும் எனக் கூறுவோம். பொருத்தனைகள் செய்வோம். ஆனால் மாம்சத்தில் அதை செய்யமுடியாதபடி தடைப்பட்டு நிற்போம். பொருத்தனைகள் பண்ணினதை நிறைவேற்றமுடியாமல் கஷ்டப்படுவோம். உள்ளத்திலே வாஞ்சை உண்டு. ஆனால் அதை நிறைவேற்ற முடியவில்லை. அதை தான் சீஷர்களிடம் கூறினார். ஆவி உற்சாகம் உள்ளது, மாம்சம் பலவீனமுள்ளது என்றார்.
விழித்திருந்து ஜெபம்பண்ணுவதன் முக்கியத்துவம் என்ன? லௌகீக கவலைகளினால் இருதயம் பாரமாயிருந்து போகாமல், இனி அவர்களுக்காகவும், அவருக்காகவும் சம்பவிக்கப்போகிற காரியங்களுக்கு அவர்கள் தப்பி மனுஷகுமாரனுக்கு முன்பாக பாத்திரமாக எண்ணப்படுவதற்கு ஜெபம்பண்ணி விழித்திருங்கள் என்றார். லூக் 21:36. பாருங்கள், யூதாஸ் மனுஷகுமாரனுக்கு முன்பாக நிற்க பாத்திரவானாக எண்ணப்படாமல் போனான். காரணம் பண ஆசை. அவனைப் போல் நீங்களும் பற்பல ஆசைகளிலும், இச்சைகளிலும் சிக்குண்டு மனுஷகுமாரனுக்கு முன்பாக நிற்க பாத்திரமாக போகாதபடிக்கு விழித்திருந்து ஜெபம்பண்ணுங்கள் என்றார். ஜெபத்தினால் சோதனைகளை மேற்கொள்ள முடியும் என்றார். மாம்ச பலவீனங்களை குறித்து நீங்கள் ரோ.7:18-24 வசனங்களில் தியானிக்கலாம்.
*வசனங்கள் 39, 40*: இயேசுவின் இரண்டாவது ஜெபம். இயேசு பேதுருவிடம் விழித்திருந்து ஜெபம்பண்ணுங்கள் என்று கூறிவிட்டு, மறுபடியும் தன் தனிமையான இடத்திற்கு சென்று அங்கு ஜெபம் செய்கிறார். அதன் பின் மீண்டும் திரும்பி வருகிறார். இந்த இரண்டாவது முறையும் சீஷர்கள் நித்திரைப்பண்ணுவதைக் கண்டார். கடந்த முறை பேதுருவிடம் பேசினார். இந்த முறை அவனிடம் கூட பேச முடியவில்லை. அந்த அளவுக்கு மூவருடைய கண்களும் மிகுந்த நித்திரை மயக்கத்திலிருந்தன. தாங்கள் மறுமொழியாக சொல்வது இன்னதென்றுகூட அறியாத அளவுக்கு தூக்கத்தில் இருந்தார்கள். இதை சில வேளைகளில் நாமும் நம்முடைய வாழ்க்கையில் அனுபவித்திருக்கிறோம். இதை நீங்கள் மத்.26:42, லூக்.22:44 வசனங்களில் தியானிக்கலாம்.
*வசனங்கள் 41, 42:* பின் இயேசு ஜெபத்திற்கு தனிமையாக சென்று ஜெபித்து விட்டு, மறுபடியும் சீஷர்களிடம் வருகிறார். இப்பொழுது அவர்களை நோக்கி மனுஷகுமாரன் பாவிகளுடைய கரங்களில் ஒப்புக்கொடுக்கப்படுகிறார். ஆதலால் நீங்கள் இனி நித்திரைபண்ணி இளைப்பாறுங்கள் என்கிறார். இப்பொழுது தூக்கத்தைவிட்டு எழுந்திருங்கள் என்கிறார். ஏனென்றால் சோதனைக்காரன் அப்பொழுது வந்துவிட்டான்.

***64. பிரியமானவர்களே, இந்த சம்பவத்தை கர்த்தருடைய வருகையோடு ஒப்பிடுவது பரத்திலிருந்து இறங்கிவருகிற ஞானமல்ல. மாறாக லௌகீக சம்மந்தமானது. இது இயேசுவின் பாடுகளின் வேளையில் நடந்த சம்பவங்கள். இதைக் கொண்டு அவருடைய வருகை நான்கு கட்டங்களை கொண்டது என்பது மாறுபாடான உபதேசம். மேலும் இது தேவனுடைய வார்த்தையோடு இக்காலத்துக்குரிய செய்தியோடும் பொருத்தமாக, இசைந்து செல்வதாக இல்லை. ஆதலால் இந்த சகோதரனுடைய வெளிப்பாடுகளை சென்னை கூவம் நதியில் கொண்டு கொட்டுங்கள். நாற்றத்தோடே நாற்றமாக போகட்டும். நீங்களோ, பிரியமானவர்களே உங்கள் வாழ்க்கையில் சோதனைக்குட்படாதபடிக்கு எப்பொழுதும் விழித்திருந்து ஜெபம்பண்ணுங்கள். நித்திரை மயக்கத்தில் காணப்படுவீர்களானால் சத்துரு உங்களை மேற்கொண்டு விடுவான். இன்று அநேகரிடம் ஜெப வாழ்க்கை இல்லாததினால் தான் பந்தைய பொருட்களை இழந்தவர்களாக காணப்படுகிறார்கள். ஜெபமே ஜெயம்! சகோ. தாமஸ் ஜெயசீலன் உங்களை நித்திரை மயக்கத்திற்குட்படுத்தாமலிருக்க எப்பொழுதும் விழித்திருந்து ஆவியில் ஜெபம்பண்ணுங்கள்.***

## அரைமணி நேரம் குறித்த "அந்த 29 டிசம்பர் 1997" திருப்பூர் ஆசீர் ஞானமுத்துவின் கேலிகூத்து

65. மூன்றாவதாக மும்பை அப்போஸ்தலர், சுவிசேஷகர், பாஸ்டர், இன்டர் நேஷனல் பிரசங்கியார் என தன்னை அழைத்துக்கொள்ளும் சகோ.டேனியேல் கிறிஸ்டியான் அவர்களின் மிக்க நெருக்கமான சீடரும், எனக்கு ஒரு காலத்தில் நன்கு அறிமுகமான நண்பராகிய ஆசீர் ஞானமுத்து அவர்களின் அற்ப புத்தியினாலும், பண திமிரினாலும், அரங்கேற்கப்பட்ட, சீ என்று இகழ்தக்கதான நாடகம் ***அரைமணிநேர அமைதல்*** இது குறித்***து அந்த 29 டிசம்பர் 1997*** எந்த சுற்றறிக்கையை சோலையார் டேம் பாஸ்டர் மேத்யூ செல்லப்பா, கோவை ராஜாவின் மாமனார் (மனைவியின் தகப்பனார்) வெளியிட்டார். 29 டிசம்பர் 1997 அன்று அரங்கேற்றிய ***அரைமணிநேர அமைதல்*** நாடகம் அன்றி இதர சில நாடகங்களும் உண்டு. அவைகள் இங்கு தேவையில்லை என்பதால் அவற்றை நான் எழுதவில்லை.

66. இவர் தனக்கு ***அரைமணிநேர அமைதல்*** குறித்த இரகசியம் வெளிப்படுத்தப்பட்டது என்றார். அதை பிரசங்கிக்க தனது பணவசதியினால் ஏகதடபுடலான ஏற்பாடுகள் செய்தார். நாடகத்தை அரங்கேற்றினார். தானே அதில் கதாநாயகனாக நடித்தார். நாடகம் முடிந்தது. அனைவரும் அவர் முகத்தில் காரி துப்பிவிட்டு சென்றுவிட்டார்கள். கூலிக்காக மார்பு அடித்த ஒரு கூட்டம் மட்டும் அவரை ஒட்டிக் கொண்டது.

67. சகோ. ஆசிர் ஞானமுத்து அவர்களின் நாடக அரங்கேற்றம் குறித்து பாஸ்டர் மேத்யூ செல்லப்பா அவர்களின் அறிக்கையை கீழே தருகிறேன்.

1. நடப்புகளை குறித்து யாரும் விகற்பமாய் எண்ணவேண்டாம். இவைகள் எல்லாம் தேவன் சொன்னப்படி நடக்கிறது என்று கூறி சகோதரன் பிரசங்கத்தை தொடர்ந்தார். காரியங்கள் - தரிசனங்களும், தீர்க்கதரிசனங்களும், அந்நிய பாஷைகளுமாய் நெய்யாய்ப் பொழிந்தது. உங்களைப் போல நானும் இதுவரை வெளிப்படாத அந்த அரை மணி நேர இரகசியத்தை அறிந்து கொள்ள ஆசையாய் உள்ளேன் என்று கூறிய போதும், மறுபடியும் பீடத்தில் வந்து, இதோ தேவன் சற்று முன்பு அதை எனக்கு வெளிப்படுத்தினார் என்ற போதும், பக்தி பரவசம் சிறகடிக்கத்தான் செய்கிறது. அப்படிப்பட்ட உணருதலை ருசிக்க எனது பக்தி, புத்தி எல்லாம் கூர்மையாக்கப்பட்டவனாய் ஒவ்வொருஅசைவிற்கும் இசைந்தவனாய் கவனமாய் இருந்தேன்.

2. அதற்குள் சிலர், கிளம்பி விட்டிருந்தார்கள். சிலர் இருமனமுடையவர்களாய் அசைந்து கொண்டிருந்தார்கள். சாதாரண ஜனங்களும் காணத்தக்கதாக வந்த ஒரு தீர்க்கதரிசனம் அநேகரது கவனத்தையும் ஈர்த்தது. இதோ என்னுடைய தாசன் இப்பொழுது.. தரையில் கால்படாமல் அக்கினியில் நின்று பிரசங்கிப்பார் என்பதே அது. உடனே அனைத்து கண்களும் பாதங்களை உற்றுப்பார்த்தன.

3. இவ்விஷயத்தில் காரியம் பொய்த்துப்போனது, இனி நான் இருக்க போவதில்லை என்று என்னிடம் கூறி புறப்பட்ட ஒரு ஊழியரை அந்த விஷயத்தில் ஆசீரை குற்றம் சுமத்துவது அவ்வளவு நியாயமாயிருக்காது- அந்த தரிசனத்தையும், தீர்க்கதரிசனத்தையும் உரைத்தவர்களே அதற்கு பொறுப்பு என்று கூறி இருக்கச் செய்தேன். ***சகோ.ஆசீர் பாம்புகளின் மத்தியில் குடியிருக்கிறார் என்பதை உணர்ந்துகொண்டேன். விடிந்தபோது அவருக்குள்ளும் இருந்தது அதுதான் என்பது நிச்சயமாயிற்று.*** $

4. பிறகு தான் சிறப்பான கட்டம். அரைமணிநேர அமைதி வெளிப்படுத்தப்பட்டது. மிக எளிமையாயிருப்பது மட்டும் செய்தியை உறுதி செய்துவிடுமா! எழுத தடைப்பண்ணப்பட்ட அந்த இரகசியம் எழுதப்பட்டவைகளிலிருந்து எடுக்கப்பட்டது. பரலோகம் அமைதியாயிருந்தது என்பது பரலோகம் முற்றிலுமாய் வெறுமையாக்கப்பட்டு பூமிக்கு வந்துவிட்டது என்று ஆகுமா! ஏழு தூதர்களையும் உயிரோடு எழுப்ப தேவன் இறங்கினார் என்பதும், அவர்கள் மீண்டும் எக்காளம் ஊதும் வேலைக்கு நியமிக்கப்படுகிறார்கள் என்பதும் ஏற்புடையது தானா? ஆறாம் முத்திரையின் போது மணவாட்டி எடுத்துக்கொள்ளப்பட்டிருப்பாள் என்றும் கூறியதாய் நினைவிருக்கிறது- இவைகளுக்குப் பிறகு வெளிப்பாடு குறித்து கேள்விகள் இருக்குமாயின் இனி தான் அவைகளுக்கு பதில் கிடைக்கும் என கூறியது போன்ற பல விஷயங்கள் இணக்கமில்லாமல் இருக்கிறது. முடிவாக நெய்யாய் பொழிந்த அனைத்தும் ஒரு பானை நீரில் ஒரு சொட்டு மோர் கலந்ததாய் போனது. ஏற்கனவே நீர் கலந்தது தான் மோர்.

5. ***சிந்திக்கவேண்டிய அதிமுக்கியமான சில விஷயங்களை நாம் பார்க்கலாம்: ஒன்று ஆடியோ, இரண்டு வீடியோ, சூட்டிங் மையம். மூன்று முறை சகோதரன் உடை மாற்றிக்கொண்டது. சொல்லப்பட்ட தீர்க்கதரிசனத்தின்படி பிரதிஷ்டை நடக்காமல், தன்னால் தெரிந்துக்கொள்ளப்பட்ட சீஷன் மூலம் பிரதிஷ்டை செய்து கொண்டது. தூதர்கள் ஒவ்வொருவராய் இறங்கி வந்தது, இறந்து போன சகோதரி மேரி இப்பொழுது என்னுடன் இருக்கிறாள் என்றது,*** இறுதியில் . . வாக்கு கொடுத்தப்படி எதுவும் நடக்கவில்லையாதலால் (இது 30 தேதி அதிகாலை) நான் போலியாக எதையும் செய்யமுடியாது, அப்படி ஒன்றும் இல்லை என்று கூறிவிடுவேன், என்றெல்லாம் அந்நிய பாஷையில் கூற அது தமிழில் வியாக்கியானம்படுத்தப்பட்டபோது .. அது சகோதரனும் அவரது அந்நிய பாஷையும், ஆவியும் எல்லாம் தெரு கூத்தாய் போனது. $

6. பீடத்தில் சகோதரனின் கைவிடப்பட்ட நிலைமை பரிதாபமானது. எங்கே தேவன்! தயவு செய்து தேவன் பேரில் பழி சுமத்தாதீர். தேவனுக்காக வக்காலத்து (வாய்தா) வாங்காதீர்கள். கிறிஸ்தவர்களுக்குள் கீழ்த்தரமான எந்த செயலுக்கும் பிசாசு மீது பழி சுமத்துவது வாடிக்கை. இங்கே (நல்லவைகள்) எல்லாம் தேவன் என்றாகிவிட்டிருந்தது.

7. ***வேதாவின்மேல் கூறப்பட்ட சாபம் எந்த விதத்திலும் மேதாவித்தனம் அல்ல. 29-ந் தேதி வேதா செத்து விடுவான் என்ற பேச்சும் கணக்கம்பாளையம் சபைக்குள் இருந்தது வருந்ததக்கது.*** ஓண்ணுக்கு போனாலும் உடன் அழைத்துச் செல்லப்பட்ட மும்பை டேனியல் சபிக்கப்பட்டதும், பின் ஏற்றுக்கொள்ளப்பட்டதும், வைராக்கியமாய் பயன்படுத்துவேன் என்றதும் விசித்திரமே. $

8. ஆசீர் சகோதரனுடைய வழுவழுத்ததன்மையும் தொளதொளா உபதேசமும் கடைசியில் இந்த நிலைக்கு காரணமாக இருப்பதாய் எனக்கு தோன்றுகிறது.

9. என்ன செய்யப்போகிறார் ஆசீர்! சீஷர்கள் இனியும் போதகர்களாயிருக்கப்போகிறார்களா! 29-ந் தேதி பிரசன்னமாகாது இருந்த சீஷர்கள் தப்பித்துக் கொண்டனரா! 29-ந் தேதிக்கு முன் காரியத்தை கவனித்தவர்களும் ஆசீரை ஏற்றுக்கொள்ள மனதில்லாதிருந்தவர்களும் ஞானிகளா! இல்லவே இல்லை. இல்லை ஐயா! ஏற்றுக்கொள்வீர்களானால் எல்லாமே வேகாத சட்டிகள் தான்.

*10.* முடிவாக அந்த ***அவன்*** பாளயத்திலும் இருக்கவில்லை. அப்படியானால் யார் அந்த நபர்? எங்கே இருக்கிறார். சரி பாளையக்காரர்கள் பொதுவான தங்களது இரட்சிப்பை தேடி கண்டடையவேண்டும். என்றும் அன்புடன், சகோதரன் மேத்யூ செல்லப்பா E.B. ரோடு, சோலையர் டேம், வழி வால்பாறை. 7-1-1998.
*குறிப்பு:* இதை என்னிடத்தில் விசாரித்து எழுத கேட்ட சகோதரர்களுக்காக எழுதுகிறேன். இதை அறியும் போது சகோ. ஆசீருக்கு வருத்தம் உண்டாகலாம். இப்பவும் அவரை அன்பாய் நேசிக்கிறேன். கொஞ்சம் குறைய மேலே எழுதப்பட்ட விஷயங்களை குறித்து பேசியிருக்கிறேன். ஆனாலும் அவரைக் காட்டிலும் கூடுதலாய் சத்தியத்தை நான் அதிகம் நேசித்து ஆகவேண்டும். உங்கள் கருத்துக்களை வரவேற்கிறேன்.
Dear Brother Vetha, Please acknowledge. Greetings.
$ Matters subject to correction. $ என்ற மார்க் செய்யப்பட்ட பத்தியில் தடித்த எழுத்தில் உள்ளவைகளை குறித்து சகோதரர் அது திருத்துதலுக்குட்பட்டவைகள் என்கிறார்.

68. இவ்வாறாக, குருவினுடைய ஊழியமே சாத்தானுடையதாக இருந்தது போன்று, சீடனுடைய ஊழியமும் சாத்தானுடையதாக இருந்தது. ஆதலால் இதில் ஆச்சரியப்படத்தக்கதாக காரியங்கள் எதுவும் இல்லை. இவருடைய ***அரைமணிநேர அமைதல்*** இவருடைய ஊழியத்திற்கு ***24 மணிநேர அமைதலை*** கொண்டு வந்தது. இந்த மனுஷனுடைய காரியங்கள் இப்படியிருக்க சென்னையிலுள்ள சில ஊழியர்கள் ஐந்து வகை ஊழியம் அதாவது சபை பக்திவிருத்திக்கான ஊழியம் செய்கிறோம் என்பவர்கள் இவர் பின்னால் இந்நாட்களில் சுற்றி திரிகிறது என்ன? அவர் திருந்திவிட்டார் என்கிறார்கள். நல்லது, திரிந்திவிட்டால் எங்கேயாவது ஒரு சபைக்கு சென்று அங்கு ஒரு விசுவாசியாக அமர்ந்து தன் மீதமுள்ள நாட்களை கழிக்கவேண்டியது தானே! இதைவிட்டு விட்டு இவர்கள் கிறிஸ்துவின் சரீரமாகிய சபை பக்திவிருத்தியடைய ஊழியம் என்று கூறிக்கொண்டு இவருடன் சுற்றிதிரிவது குறித்து என்ன கூறுவது? எல்லாம் மாயையும் மனதுக்கு சஞ்சலமுமாயிருக்கிறது.

## கோவை ராஜா ஒரு புரட்டுவாயன், மாய்மாலக்காரன்

69. அடுத்து, ***இந்நாட்களில் தமிழ்நாட்டை பொறுத்தளவில் இக்காலத்துக்குரிய செய்திக்கு தன் சொந்த விளக்கத்தை கொடுத்து மக்களை தீவிரமாக திசை திருப்பி மோசம்போக்கி வருவது கோவை ராஜா.*** இவர் ஒரு கள்ளகபடமுள்ள வேலையாள் என்பதை நாம் ஏற்கனவே தேவனுடைய வார்த்தையை கொ்ணடும், இக்காலத்துக்குரிய செய்தியை கொண்டும், வெளி.2:2-ன்படி அதை திருஷ்டாந்தப்படுத்தி கிறிஸ்துவின் மணவாட்டிக்கு அர்ப்பணித்துள்ளோம். ஆனால் சூளைமேடு அவருக்கு அடைக்கலம் கொடுத்து வருகிறது. ஏனென்றால் அது அருவருக்கப்படத்தக்கதானவர்களாகிய கோவை ராஜா, பொழிச்சலூர் மோசஸ் பாபு, பல்லாவரம் பால் சங்கர், போரூர் தாமஸ் ஜெயசீலன் போன்றவர்களுக்கு அடைக்கல பட்டணமாக இருந்து வருகிறது. Rs.100/- Rs.200/- காணிக்கைகளை கொடுத்து கொடுத்து எத்தனை காலம் தான் பாஸ்டர் ஜான் ஐசக், சகோ.மோசஸ் பாபு, சகோ.தாமஸ் ஜெயசீலன் போன்றவர்களை தக்கவைக்கிறார் என பார்க்கலாம்? இவர்கள் எல்லாரும் இனம் இனத்தைச் சேர்கிறது என்பதற்கு அடையாளமாக திகழ்கிறார்கள். புத்தியுள்ள, கற்புள்ள கன்னிகைகள் இவர்கள் கூட்டத்தில் காணப்படுவதில்லை. அந்த மட்டில் மகிழ்ச்சி.

70. கோவை ராஜா தனது சுற்றறிக்கை நாள் 21-10-2004-ல் என்னை குறித்து ***இந்த காலேப் யோசுவா எனக்கு தூசி போல்! ப் பூ என்றால் விழுந்துவிடுவார். இவருக்காக மனித ரூபத்தில் வக்காலத்து வாங்க ஒரு நாதி கூட கிடையாது*** என்று தன் கொடுமையின் கைகளினால் எழுதிய இந்த மிடுக்குகாரன், மாய்மாலக்காரன் 28-4-2005 அன்று எப்படி பல்டி அடிக்கிறார் என்பதை பாருங்கள். ***சகோ. காலேப் யோசுவா அனுப்பிய சுற்றறிக்கையை நான் படித்தவுடன் நான் வெளியே பிரசங்கங்களுக்கு செல்ல பயப்படுகிறேன். ஏனென்றால் அவர் மூலமாக அல்லது ஆட்கள் மூலமாகவோ ஏதேனும் எனக்கும் என் குடும்பத்தாருக்கும் உயிருக்கு ஏதேனும் ஆபத்து வந்துவிடுமோ என்று பயப்படுகிறோம்.*** பாருங்கள் இந்த மானங்கெட்டவன் நடிப்பை. இவன் மந்திரவாதிகளைவிட மோசமானவன். நயவஞ்சகமான பேச்சு, எழுத்து, நடிப்பு. கூட்டாளிகள் இருவரும் நன்றாக நாடகம் நடிக்கிறார்கள், கூத்தாடுகிறார்கள். புரட்டுவாயனால் வீட்டைவிட்டு வெளியே வரமுடியவில்லையாம். ஏனென்றால் எனக்கு அவ்வளவு பயமாம். ஆதலால் இவரது சென்னை கூட்டாளி இரு மெய்காவலாளர்களை சென்னையிலிருந்து கோவை அனுப்பி, இந்த இரு மெய்காவலாளர்களும் எப்பொழுதும் ஒருவர் அவர் இடது புறமும், அடுத்தவர் வலது புறமும் வலம் வந்து காவல் காத்து வருகிறார்களாம். பகல் வீட்டைவிட்டு வெளியே செல்லும்போதும் காவலர்கள் இருவரும் கூடே செல்லுவார்களாம். இரவில் படுக்கும்போதும் இருவரும் ஒருவர் இடது புறமும், அடுத்தவர் வலது புறமும் கண்விழித்து காவல் காத்து வருகிறார்களாம். அந்த அளவுக்கு எனக்கு பயந்து காவல் போட்டுள்ளதாக கேள்விப்பட்ட ஒரு தகவல். கர்த்தருக்கு ஸ்தோத்திரம். குறிப்பு: அந்த இரு

காவலாளர்களும் இரவில் அவரோடு தனித்திருக்க பயப்படுகிறார்களாம். காவலாளர்களுக்கு ஏன் இந்த பயம்? ஊட்டி சகோ. லாரன்ஸ் அவர்களை தான் கேட்கவேண்டுமாம். இவரெல்லாம் ஒரு தேவனுடைய மனுஷனா? ஆனால் இனம் இனத்தை அங்கீகரிக்கிறதே!

71. இதோடு மட்டுமல்ல, இந்த நாட்டின் சட்டதிட்டங்கள் எல்லாம் இவர் கரத்திலே இருப்பது போன்று, இவர் என்மீது எடுக்கும் நீதிமன்ற நடவடிக்கையினால் எனக்கு இரண்டு வருட சிறை, மேலும் ரூ.5 லட்சம் நஷ்டஈடு நான் இவருக்கு கொடுக்கவேண்டியதிருக்கும் என மிரட்டுகிறார். என்னை மிரட்டுவதோடு மட்டும் நின்றுவிடாது இதர ஊழியர்களும் நான் எழுதிய காரியங்களை மற்றவர்களுடன் பகிர்ந்து கொண்டால் அவர்கள் மீதும் அந்த நடவடிக்கை எடுப்பேன். அவர்களுக்கும் எனக்கு கிடைக்கும் அதே சிறை தண்டனை மற்றும் நஷ்ட ஈடு கொடுக்க நேரிடும் என்கிறார், பயமுறுத்துகிறார். தேவனுடைய மனுஷர்கள் பிசாசுகளின் மிரட்டல்களுக்கு ஒருக்காலும் அடிப்பணிய மாட்டார்கள் என நினைக்கிறேன். தேவனுடைய வித்துக்களுக்கு இவரைப் பற்றி நன்றாக தெரியும். ஆதலால் அவர்கள் கண்டவைகளையும், கேட்டவைகளையும் பேசாமல் இருக்க கூடாது. (அப்.4:20) ஒரு காலத்தில் தன் மாமனார், அத்தை மற்றும் மனைவியை மிரட்டியது போல இந்நாட்களில் என்னையும் மிரட்டிபார்க்கிறார்? நிச்சயமாக உங்கள் மிரட்டல்களுக்கு அஞ்சுகிறவன் நானல்ல.

*72. இதோடு மட்டும் நின்றுவிடவில்லை இவரது குள்ளநரி குணம். தன் தாயின் வயிற்றிலிருந்து பிறந்தது முதல் பொய் சொல்லி சொல்லி, மக்களை வழிதப்பி போகப்பண்ணி, அவர்களை ஏமாற்றியே பிழைப்பு நடத்தி வரும் இவர், ஓ! எனக்கு பிரியமானவர்களே, என் உடன் பிறப்புகளே, என் இரத்தத்தின் இரத்தமே! இதோ காலேப் யோசுவா நம் பறையர் இனத்தை தரக்குறைவாக எழுதிவிட்டார். வாருங்கள், கொதித்து எழுந்திருங்கள். நீங்கள் அனைவரும் இவரை கண்டனம்பண்ணி கடிதம் எழுதுங்கள். அதன் நகலை எனக்கு அனுப்பிவையுங்கள் நான் இவரை நீதிமன்றத்தில் ஒரு பார்வை பார்த்து விடுவேன். வாருங்கள், வாருங்கள் தூக்கத்திலிருந்து விழித்தெழும்புங்கள், எனக்கு கைகொடுங்கள் என கண்ணீர்விட்டு, கதறினார், அழுதார், புலம்பினார், அழைத்தார். தன் வாயின் வார்த்தைகளை கக்கினார். அவர் உதடுகளில் பட்டயங்கள் இருந்தது. ஆனால் தேவனுடைய பிள்ளைகளுக்கு நன்றாக தெரியும். காலேப் யோசுவா ஒருக்காலும் எந்த ஜாதியை குறித்தும் தரக்குறைவாக எழுதவில்லை, இழிவாக பேசியதில்லை, மட்டமாக விமர்ச்சித்ததும் இல்லை. ஆதலால் இந்த குள்ளநரியின் சத்தத்தை யாரும் செவிகளில் போட்டுக்கொள்ளவில்லை. இவருடைய பட்டயத்திற்கு அவர்கள் தப்பினார்கள். அதே நேரத்தில் இக்காலத்துக்குரிய செய்தியிலுள்ள விசுவாசிகள் அனைவருக்கும் தெரியும். சகோ. காலேப் யோசுவா தன் இனம் தவிர இதர இனத்தில் பெண் கொடுக்கவும் மாட்டார், பெண் எடுக்கவும் மாட்டார் என்பது. இதில் ஒளிவுமறைவு எதுவும் அன்று முதல் இன்று வரை கிடையாது. வரும் காலங்களிலும் இருக்காது. ஆக இவரது அழைப்பு வீணாய் போயிற்று. அனைவரும் முகத்தில் காரி துப்பினர்.*

*73. இவர் ஒரு யோக்கியனாக இருப்பாராகில் எனக்கு கொடுத்த வக்கீல் நோட்டீசில் 76 பக்கங்கள் கொண்ட எனது செய்தித்தொகுப்பில் 64 பக்கங்களைக் கொண்ட சிறு புத்தகத்தை* ***(Booklet)*** *பெற்றேன் என ஒரு பொய்யை துணிந்து எழுதமாட்டார்? 12 பக்கங்களை விழுங்கியது இவர் ஒரு அண்டபுழுகுகாரர் என்பதை எடுத்துக்காட்டுகிறது. துணிகரமாக உருட்டும் புரட்டும் பண்ணுகிற கொடியவன். இவர் என்னை குறித்து தரக்குறைவாக எழுதிய 12 பக்கங்களை மறைத்துவிட்டார். இந்த பித்தலாட்டம் ஏன்? இதிலிருந்து இவர் ஒரு மாயமாலக்காரன் என்று தெரிகிறது! கொஞ்சம் கூட இவரிடத்தில் உண்மை இல்லையே. இவருடைய இரத்தத்தின் ஒவ்வொரு துளியிலும் பொய்யன், பொய்யன், என்றே எழுதியுள்ளது.*

*74. அடுத்து சகோ.வேதா மற்றும் சகோ.லாரான்ஸ் அன்று சுற்றறிக்கைகள் மூலம் இவரது காதல் லீலைகள், ஆண்புணர்ச்சி போன்ற அவலட்சனமான நடத்தைகளை விமர்சித்த போது இவர் எங்கே இருந்தார்? எங்கே ஒளிந்து கொண்டார்? ஏன் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவில்லை. அன்றைய மௌனம், இவரது சம்பந்தத்தைதானே காட்டியது. அன்று இல்லாத ரோசம், இன்று எங்கிருந்து வந்தது?*

*75. அன்று பாஸ்டர் செபாஸ்டியான் சென்னையிலுள்ள ஒவ்வொரு சபையின் வாசற்படி ஏறிஇறங்கி, இவரது சர்ப்பத்தின் வித்து செயல்பாடுகளை பிரகடனம் செய்தாரே, அன்று இவர் எங்கே சென்றிருந்தார்? ஆம், பல ஆண்டுகளாக சென்னையில் தலையே காட்டவில்லை. அன்று இல்லாத மானம் இவருக்கு இன்று எங்கிருந்து வந்து விட்டது? அன்று பாஸ்டர் செபாஸ்டியன் மீது ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை?*

*76. இவருடைய காமலீலைகள், காம விகார நடத்தைகள், ஓரினசேர்க்கை நடத்தைகள், மாறுபாடான உபதேசங்கள் அனைத்தையும் அறிந்த பின்னும் ஒரு சிறு கூட்டம் இவரை சார்ந்து ஊழியம் செய்யுமாகில் அந்த கூட்டத்தினிடத்திலும் இவரது வாசனைகள் தானே வீசவேண்டும்? இனம் இனத்தை தானே சேரும்! பாஸ்டர் ஜிங்கி தேவராஜ் இவரை அடையாளம் கண்டுகொண்டார். அவருடைய மனக்கண்கள் திறக்கப்பட்டதற்காக கர்த்தரை ஸ்தோத்தரிக்கிறேன்.*

77. இவருக்குள் இருப்பவனைக் காட்டிலும் எனக்குள் இருப்பவர் பெரியவர். ஆதலால் இவர் என்னை எங்கு அழைத்தாலும் அங்கு இவரை சந்திக்க ஆயத்தமாகவேயுள்ளேன். ஆதலால் இவர் என்னை குறித்து பறக்கவிடும் வதந்திகளுக்கு செவிகொடுக்காதீர்கள். ஏனென்றால் சமீபத்தில் ஒரு சகோதரர் என்னிடம் சகோதரனே கோவை ராஜா உங்களுக்கு அனுப்பிய வக்கீல் நோட்டீசினால் செய்தித்தொகுப்புகள் வெளியிடுவதை நீங்கள் நிறுத்திவிட்டதாக கூட்டாளிகள் கூறுகிறார்களே?. இது உண்மை தானா? என்று கேட்டார். பாருங்கள் இப்படிப்பட்ட வதந்திகளை நம்பாதீர்கள். வதந்திகள் வருமாயின் அவ்வப்பொழுதே எனக்கு போன் செய்து அதை சரிப்படுத்திக்கொள்ளுங்கள். கெர்ச்சிக்கிற சிங்கம் போல பிசாசு என்னைப் பற்றி தூற்றிக் கொண்டே திரிகிறான்.

78. கடந்த செய்தித்தொகுப்புகளில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியை நான் இன்னும் சரிசெய்ய முடியவில்லை. அடுத்து இந்த செய்தித் தொகுப்பிற்கும் ஒரு பெரும் தொகை தேவைப்படுகிறது. தனிப்பட்ட ஒரு மனிதன் இதை சமாளிப்பது மிகவும் சிரமம். ஆனாலும் உள்ளான மனிதனின் பெலத்தால் செயல்பட்டு வருகிறேன். கர்த்தர் தாங்கி வருகிறார். அவர் இதுவரை கைவிட்டதில்லை. மேலும் செய்தித்தொகுப்புகள் எழுதவும் சமயம் அதிகமாகிறது. ஆவியானவருடைய வழிநடத்தலுக்கு என்னை அவ்வப்பொழுது ஒப்புவித்து கொஞ்சம் கொஞ்சமாக எழுதி பின் அவைகளை தொகுத்து ஒரு செய்தித் தொகுப்பாக எழுதுகிறேன். இதனால்

காலத்தாமதம் ஆகிறது. மற்றப்படி கோவை ராஜாவுக்கு பயந்துவிட்டார், அவரது வக்கீல் நோட்டீசுக்கு பதுங்கி விட்டார், கோர்ட்கேஸ் என்றவுடன் பறந்துவிட்டார், இதெல்லாம் சாத்தானின் புரளிகள். புரளிகளை வெளியிட்டு சாத்தான் உங்களை மனதை திசைதிருப்புகிறானேயன்றி மற்றப்படி அல்ல. சாத்தானுக்கு நான் பயப்படுகிறவன் அல்ல. அவன் எந்த ரூபத்தில் வந்தாலும், அவனை எதிர்த்து நிற்க என்னிடத்தில் தேவபெலன் உண்டு. என்னோடே வழக்காடுகிறவன் யார்? எனக்கு எதிராளியாக நிற்பவன் யார்? என்னை ஆக்கினைக்குள்ளாக்க தீர்க்கிறவன் யார்? அவன் என்னிடத்தில் வரட்டும். உன்னோடே வழக்காடுகிறவனோடு நான் வழக்காடுவேன் என்கிறார். இதோ, கர்த்தராகிய ஆண்டவர் எனக்கு துணையாக நிற்கிறார். உன்னோடே வழக்காடுகிறவர்களோடு நான் வழக்காடுவேன் என்கிறார். உனக்கு விரோதமாய் உருவாக்கபடும் எந்த ஆயுதமும் வாய்க்காதேபோம்; உனக்கு விரோதமாய் நியாயத்தில் எழும்பும் எந்த நாவையும் நீ குற்றப்படுத்துவாய்; இது கர்த்தருடைய ஊழியக்காரனின் சுதந்தரமும் என்னாலுண்டான அவர்களுடைய நீதியுமாயிருக்கிறது என்று கர்த்தர் சொல்லுகிறார்.

79. ஆனாலும் இந்த மாய்மாலக்காரனுக்கு கள்ளகபடமுள்ள வேலையாட்கள் சிலர் உடந்தையாக இருந்து வருகிறார்கள். இதில் ஒன்றும் ஆச்சரியம் இல்லை. விபச்சாரக்காரனோடு விபச்சாரக்காரனே கைக்கோர்த்து நிற்பான். கள்ளகபடமுள்ள வேலையாளோடு கள்ளகபடமுள்ள வேலையாளே மார்போடு மார்பு அணைத்துக்கொள்வான். ஆம் இனம் இனத்தை தானே சேரும்! இது உண்மை தானே!

80. சகோ. மோசஸ் பாபு யார்? பல்லாவரம், பொழிச்சலூர் பகுதிகளில் தெருக்களின் அளவுகளை எடுத்துக்கொண்டு திரியும் ஒரு நபர் தானே! நீங்கள் ரூ.100/- கொடுத்தால் உங்கள் பக்கம் வருவார். நான் ரூ.200/- கொடுத்தான் என் பக்கம் சாட்சியாக வந்துவிடுவார். கூலிக்கு, கள்ளசாட்சிகள் சொல்லிக்கொண்டு திரிவது தானே இவரது பிழைப்பு. இவரது மனைவி சகோதரி ரோஸிலின் மோசஸ் பாபு குரோம்பேட்டையில் ஒரு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தபோது நானும் சகோ. அந்தோணி தாஸ் குடும்பத்தினரும் அந்த சகோதரியை பார்க்க சென்றிருந்தோம். அப்பொழுது அங்கு சூளை மேடு பாஸ்டரும், கோவை ராஜாவும் வந்திருந்தார்கள். அப்பொழுதே அவர்கள் சகோ. மோசஸ் பாபுவிடம் பேரம் பேசி, தங்கள் சபைக்கு அழைத்தார்கள். இந்த கூலிக்கு மாரடிக்கிற மனுஷன் உடனே அவர்கள் பக்கம் சாய்ந்து விட்டான். முன்பு இவர்களுக்குள் நடந்த குடும்பி சண்டைகள் அனைத்தையும் பணம் மறைத்துவிட்டது.

81. சகோ.பால் சங்கரனது குடும்ப வாழ்க்கையை நீங்கள் நன்றாக அறிவீர்கள். முற்றிலுமாக அது தேவனுடைய வார்த்தைக்கும், இக்காலத்துக்குரிய செய்திக்கும் மாறுபாடானது. இனம் இனத்தைச் சேர்ந்து கொண்டு வருகிறது. அந்த கூட்டத்தில் கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு பாத்திரமான வாழ்க்கை உடையவர்களை காண்பது மிக மிக அரிது.

## சின்னஞ்சிறு சவால் ஒன்று பொய்களின் பிறப்பிடத்திற்கு

82. நான் இந்த செய்தித்தொகுப்பை கம்ப்யூட்டர் டைப் செய்து கொண்டிருக்கும் வேலையில் கோவை ராஜாவின் மற்றொரு சுற்றறிக்கை நாள் 25-6-2005, எனக்கு 20-ம் தேதி போஸ்ட் செய்யப்பட்டு, 23-6-2005 அன்று கிடைத்தது. சுற்றறிக்கை நாள், எனக்கு போஸ்ட் செய்யப்பட்ட தேதி, எனக்கு கிடைத்த தேதி இவைகளை நன்கு கவனியுங்கள். இந்த சுற்றறிக்கை மூன்றாவது பத்தியை பாருங்கள். அங்கு இவர் சகோ.ஆல்பர்ட் பிரேம் குமார் அவர்களை சந்தித்ததாகவும் அவர் என்னை குறித்து சில காரியங்களை தவறாக கூறியதாக அதில் எழுதியுள்ளார். இந்த சுற்றறிக்கை கிடைத்த 23-6-2005 அன்று இரவு சகோ.ஆல்பர்ட் பிரேம்குமாருக்கு விவரம் அறிய போன் செய்தேன்.

83. அவர் கூறியதாவது, கோவை ராஜா அடிக்கடி தன்னிடம் பணம் கேட்டு தன்னை தொந்தரவு செய்வது உண்மை தான். சமீபத்தில் ஒரு நாள் பணத்திற்காக என்னிடம் வந்திருந்தார். அந்த சமயம் உங்களது செய்தித் தொகுப்பு குறித்து பேசி அதில் ஒட்டியிருந்த மேலுறை இருந்தால் கொடுங்கள் என என்னிடம் கேட்டார். ஆனால் அது எதற்காக என்று என்னிடம் எதுவும் கூறவில்லை. நானும் கேட்கவில்லை. நல்லெண்ணத்துடன் அதை கொடுத்தேன். ஆனால் அவருடைய சுற்றறிக்கையை பார்த்தவுடன் தான் அவர் என்னை ஏமாற்றி மாறுபட்ட நோக்கத்துடன் அதை பெற்று சென்றுள்ளார் என்பதை அறிய வந்தேன். உடனே அவருக்கு ஒரு கண்டனம் கடிதம் எழுதி அதன் நகலை உங்களுக்கு அனுப்பி வைக்கவேண்டும் என்றிருந்தேன். ஆனால் அதற்குள் உங்கள் போன் வந்ததால் உங்களிடம் நேரில் பேச முடிந்தது எனக் கூறினார். மேலும் கோவை ராஜா எழுதியுள்ளபடி சகோ. ஆல்பர்ட் என்னை குறித்து தவறாக எதுவும் பேச இல்லவே இல்லை என்று கூறினார். மேலும் கோவை ராஜா எனக்கும் அவருக்கும் மத்தியில் உள்ள ஐக்கியத்தை சீர்குலைக்க மேலும் பிரிவினையை உண்டாக்க இந்த நாடகத்தை அரங்கேற்றியுள்ளார் என்றார். ஆனால் நான் இந்த நாடகத்தில் ஒரு பாத்திரமாக இருக்கமாட்டேன் என்று உறுதி கூறினார். மேலும் இப்பொழுது கோவை ராஜா யார் என்பதை அவர்கள் நன்கு அறிந்து கொண்டதாகவும் இனி அவருடைய வீட்டில் வாசற்படியில் கூட ஏற்றமாட்டோம் என்று மிகுந்த மனக்கிலேசத்துடன் பேசினார். உங்களை புறம்பாக்க உங்களை நாடி வைராக்கியம் பாராட்டும் வஞ்சகனை, நீங்களும் உங்கள் வாசற்படியில் ஏற்றாதீர்கள். அவனை உங்கள் வாசற்படியில் ஏற்றினால் அவனுடைய வஞ்சகத்திற்கு நீங்களும் உடந்தையாவீர்கள். ஊட்டியிலுள்ள விசுவாசிகளுக்கு கடந்த என்னுடைய செய்தித்தொகுப்பு மிக்க பிரயோஜனமாக இருந்ததை அறிந்து கர்த்தரை ஸ்தோத்தரிக்கிறேன். நான் முற்றிலுமாக முகமுகமாக அறியாத சகோ.டேவிட் ஜெயராமன் அந்த செய்தித்தொகுப்பின் நிமித்தமாக கர்த்தருக்கு நன்றி செலுத்துகிறேன் எனக் கூறி என்னோடு 08-07-2005-ல் சுமார் 15 நிமிடங்கள் தொலைபேசியில் பேசினார்.

84. *இப்பொழுது இந்த புரட்டுவாய்கொண்ட மாய்மாலக்காரனுக்கு ஒரு சவால். 2005, ஆகஸ்டு மாதம் ஏதாவது ஒரு சனிக்கிழமை (6, 13, 20, 27 தேதிகள்) காலை கோவை ராஜா, சகோ.ஆல்பர்ட் இல்லத்திற்கு வரட்டும். சனிக்கிழமை தான் சகோ.ஆல்பர்ட் அவகாசமாக இருப்பார். நானும் அங்கு செல்லுகிறேன். சகோ.ஆல்பர்ட் என்னைக் குறித்து பேசினது உண்மையா அல்லது அது இவருடைய குள்ளநரி தந்திரமான, சூதுள்ள விமர்சனமா என்பதை நேருக்கு நேர் முடிவு செய்யலாம். சூளைமேட்டார் ஓரிரு சாட்சிகளை அங்கு அனுப்பிவைக்கலாம். இந்த சவாலை கோவை ராஜா ஏற்றுக்கொள்ள தயாரா? நிச்சயமாக ஏற்றுக்கொள்வார். இவரிடத்தில் ஒரு கடுகு அளவு உண்மை இருக்குமானால். அடுத்து சகோ.ஆல்பர்ட், தன் பார்வைக்கு ஞானியாக*

***காணப்படும் கோவை ராஜா எழுதினது தவறு என்று கூறினார் என்றால். கோவை எனது போக்குவரத்து செலவுக்காக ரூ.500/- கொடுக்கவேண்டும். கோவை ராஜா எழுதியது சரிதான் என்றால் கோவையில்*** அவருக்கு போக்குவரத்து செலவு மற்றும் இதர சாட்சி நபர்களின் போக்குவரத்து செலவுகளையும் நான் கொடுக்க ஆயத்தமாயிருக்கிறேன்.

85. மேலும் காலேப் யோசுவா தாழ்த்தப்பட்ட சமுதாயத்தை இழிவுபடுத்திவிட்டார் என ஒரு பொய்யை திரும்ப திரும்ப கூறிகூறி அதை மெய்யாக்கிவிடலாம் என நினைக்கிறார். இந்த நாடகத்தை கொண்டு இன்னும் எத்தனை காலம் தான் சூளைமேடு ஜனங்களை ஏமாற்றுவார் என பார்க்கலாம்? நான் உண்மையாகவே தாழ்த்தப்பட்ட சமுதாயத்தை இழிவு படுத்தி பேசியிருந்திருந்தால், எழுதியிருந்தால் இவர் உடனே என்னை கைது செய்ய உடனடி போலிஸ் நடவடிக்கை எடுக்கலாமே? மேலும் சாதி பெயரைசொல்லி திட்டுபவர்களுக்கு முன் ஜாமின் கிடையாது. விசாரணையின்போதே கைது செய்யலாம் என சென்னை உயர்நீதிமன்றம் தீர்ப்பு கொடுத்துள்ளது என்பதை உங்கள் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன். ஆதலால் என் மீது தவறு இருந்தால் நீங்கள் உடனடியாக போலீஸ் நடவடிக்கைகள் எடுக்கலாமே? அதை விட்டு விட்டு தன் நாடகத்தினால் சூளைமேடு மக்களை ஏமாற்றிக்கொண்டே வருகிறார். முடிவு ஒரு நாள் அதற்கும் வரும். அனைத்துக்கும் ஒரு முடிவு உண்டு. அவர்கள் இவரை ஓட ஓட விரட்டும் நாள் சமீபமாகத்தான் உள்ளது.

## 28-02-1963-ல் தோன்றிய மேகவளையம் வானத்தில் அரைமணிநேரம் நின்றது - அது அரைமணிநேர அமைதல் - கோவை ராஜா இது உண்மையை தாறுமாறாக்கும் தந்திரமான உபதேசம்

86. இப்பொழுது சர்ப்பத்தின் விஷத்திற்கு ஒப்பான விஷத்தை கொண்ட கோவை ராஜாவின் உபதேசங்களைக் குறித்து காண்போம். இவரது வஞ்சிக்கும் உபதேசங்களுக்கு ஆதாரமாக இவரது ***சிங்கம் கெர்ச்சிக்கிறது. . . ஆகவே ஏறக்குறைய அரைமணிநேர அமைதல்*** வெளிப்படுத்தல் 10:1-3, 8:1 என்ற தனிச் சுற்றறிக்கையை எடுத்துள்ளேன். இவர் இதை வெளியிட்ட நாள் 28-2-2000. இவரது தலைப்பே வேதபுரட்டு என்பதை காண்கிறீர்களா? ஏறக்குறைய அரைமணிநேரமளவும் அமைதல் வெளி.8:1 இதை வேறுவிதமாக திரித்து, அதற்கு கண், மூக்கு, காது வைத்து எப்படி மக்களை சாத்தான் திசை திருப்புகிறான் என்பதை கவனியுங்கள். ***சிங்கம் கெர்ச்சிக்கிறது .. ஆகவே - ஏறக்குறைய அரைமணிநேரமளவும் அமைதல். வெளி.10:1-3, 8:1.*** பாருங்கள் ***சிங்கம் கெர்ச்சிக்கிறது, ஆகவே, அரைமணிநேரமளவும் அமைதல் என்று வேத வாக்கியங்களில் எங்கு உள்ளது?*** The Lion roars, therefore - about half an hour silence (Rev.10:1 - 3, 8:1) இது தேவனுடைய வார்த்தையோடு ஒன்றை கூட்டுவதும், குறைப்பதும் தானே? இவர் எழுதிய வண்ணமாக வேதவாக்கியம் இல்லை. மாறாக அது ***அவர் (ஆட்டுக்குட்டியானவர் வெளி.6:1) ஏழாம் முத்திரையை உடைத்தபோது பரலோகத்தில் ஏறக்குறைய அரைமணிநேரமளவும் அமைதல் உண்டாயிற்று என்றே உள்ளது. வெளி.8:1.*** இதை இந்த கேட்டின் மகன் எவ்வளவு தன் சிந்தனைக்கு ஏற்றாற்போல் திரித்து எழுதுகிறார் பார்த்தீர்களா? ஆரம்பமே கோணல். ஏமாற்று. வஞ்சகம். கள்ளகபடம் கொண்ட வார்த்தை, பிணைப்பு, இணைப்பு. தேவனுடைய வார்த்தையில் வானத்திலிருந்து இறங்கிவந்த அந்த பலமுள்ள வேறொரு தூதன் சிங்கம் கெர்ச்சிக்கிறது போல மகா சத்தமாய் ஆர்ப்பரித்தான். அவன் ஆர்ப்பரித்தபோது ஏழு இடிகளும் தங்கள் சத்தங்களை முழங்கின என வெளி.10:3-ல் வாசிக்கிறோம்.

87. அடுத்து தனது தனி சுற்றறிக்கையின் மூன்றாவது பக்கத்தில் இவ்வாறு எழுதுகிறார். இயேசு தன் திருமுகம் காட்சியளித்த மேகஸ்தம்பம் வானத்தில் தோன்றியபோது ஏழுதூதர்கள் இறங்கிவந்து தீர்க்கதரிசியை மேலே கொண்டு சென்றனர். அப்பொழுது தான் அவர் ஏழு முத்திரைகளின் இரகசியம் பெற்றுக்கொண்டார். இந்த ஏழு தூதர்களும் பிரமிடு (கூர்நுனி கோபுரம்) வடிவத்தில் இறங்கி வந்தது குறிப்பிடத்தக்கது. இந்த அதிசய மேகஸ்தம்பம் பிப்ரவரி 28-ம் தேதி 1963-ல் காணப்பட்டது. ஏறக்குறைய 26 மைல் நீளமும், 30 மைல் உயரமும் கொண்டது. ***அது 28 நிமிடங்கள் வானத்தில் நின்றது என்பது மிகவும் குறிப்பிடத்தக்கது. 28 நிமிடங்கள் நின்றது - ஏறக்குறைய அரைமணி நேரம்.***

88. இவரது இந்த சுற்றறிக்கை தலைப்பு மற்றும் அல்ல, இதன் முதல் பக்கம் தொடங்கி கடைசி பக்கம் வரை, அதாவது உச்சந்தலை தொடங்கி உள்ளங்கால் வரை ஒரே வேதபுரட்டு என்பதை நீங்கள் இங்கு நன்கு கவனிக்கலாம். மேகஸ்தம்பம் வானத்தில் தோன்றியபோது ஏழு தூதர்கள் இறங்கி வரவில்லை. ஏழு தூதர்கள் தோன்றி அவர்கள் மேலே சென்றபோது தான் அவர்களுடைய செட்டைகளை கொண்டு அந்த மேகவளையம் உருவாயிற்று. செய்தி இது குறித்து என்ன கூறுகிறது?

89. (1) எனக்கு முன்பாக ஏழு தூதர்கள் கூட்டமாக நின்றுகொண்டிருந்தனர். . . அந்த வட்டம் ஒரு மூடுபனியை போல் உயர எழும்பியது. அது அப்படி சென்ற போது, அது மலைக்கு சென்று அது வந்த வழியாகவே மேற்கு திசையில் வட்டமிட தொடங்கியது. சிறிது கழித்து, விஞ்ஞானம் அதை 30 மைல் உயரத்தில், 25 மைல் விட்டம் அளவில் கூர்நுனி கோபுரம் வடிவில் வட்டமிட்டு கொண்டிருப்பதைக் கண்டது. (***மலையின் மேலுள்ள கவர்ச்சி என்ன?*** பத்தி 138-141, நாள் 25-7-1965)

(2) அரிசோனாவிலுள்ள டுக்ஸனில், இந்த ஏழு தூதர்கள் நின்ற இடத்திலிருந்து அது எழும்பி, 26 மைல் உயரம் சென்றது. (***காலத்தையும் அதன் செய்தியையும் அடையாளம் கண்டு கொள்ளுதல்***, பக்கம் 7, பத்தி 1, நாள். 27-07-1964)

(3) அன்று காலை எனக்கு முன்னமே அறிவிக்கப்பட்டிருந்த அந்த இடத்தில், ஏழு தூதர்கள் பரலோகத்திலிருந்து இறங்கி வந்தனர். அவர்கள் சுழற்காற்றில் மேலே சென்றதை நாங்கள் கண்கூடாக கண்டோம். விஞ்ஞானம் அதை புகைப்படம் எடுத்தது. (***ஆகாயத்தில் எடுத்துக் கொள்ளப்படுதல்***, பத்தி 157, நாள் 4-12-1965)

***90. அடுத்து மேகஸ்தம்பம் வானத்தில் தோன்றின போது ஏழு தூதர்கள் இறங்கி வந்து தீர்க்கதரிசியை மேலே கொண்டு சென்றனர். அப்பொழுது தான் அவர் ஏழு முத்திரைகளின் இரகசியம் பெற்றுக் கொண்டார் என்பதும் தவறு.***

*சகோ.பிரன்காம் ஏழு தூதர்கள் குறித்து கண்ட தரிசனம் - நாள் 22-12-1962*

91. நான் கண்ட இத்தரிசனத்தில் என் சிறிய மகன் ஜோசப் என் அருகில் இருந்ததாக எனக்கு தோன்றினது. நான் அவனுடன் தரிசனத்தில் பேசிக்கொண்டிருந்தேன். ... அதிதூரமான அந்த நித்தியத்திலிருந்து ஏதோ ஒரு கூட்டம் இறங்கி வருவதைப்போல் காணப்பட்டது. முதலில் அது சிறு புள்ளிகள் போல் தென்பட்டது. மொத்தத்தில் ஐந்துக்கும் அதிகம் ஏழுக்கும் அதிகம் இல்லாத புள்ளிகள் காணப்பட்டன. அவை முன்பு வந்த பறவைகள் போன்று கூர்நுனிகோபுர வடிவில் இறங்கி வந்தன.

92. இது நிகழ்ந்த சமயம், சர்வவல்லமையுள்ள தேவனுடைய வல்லமை என்னை உயரத் தூக்கி, அவர்களை சந்திக்க என்னை கொண்டு சென்றது. இது நிகழ்ந்து எட்டு நாட்கள் ஆகிவிட்டன. இந்த செய்தி 30-12-1962-ல் பிரசங்கிக்கப்பட்டது. அதன்படி சகோ.பிரன்காம் 22-12-1962-ல் இந்த தரிசனத்தை கண்டிருக்க வேண்டும்.

93. அந்த தேவதூதர்களை என் கண்களால் கண்டேன், அவர்களுடைய சிறகுகள் பின்நோக்கியிருந்தன. ஒளியைக்காட்டிலும் அவர்கள் வேகமாக பறந்து வந்தனர். ஒரு இமைப் பொழுதில் அவர்கள் நித்தியத்திலிருந்து இங்கு வந்து அடைந்தனர். நாம் ஒரு முறை கண் இமைப்பதற்கு எடுக்கும் நேரத்தைக் காட்டிலும் குறைவான நேரத்தில் அவர்கள் இங்கு வந்து சேர்ந்தனர். அவர்கள் எடுத்துக் கொண்ட நேரத்தை என்னால் கணக்கிட முடியவில்லை. அவர்கள் பலமுள்ள மகத்தான தேவதூதர்கள். அவர்கள் பனியை போன்ற வெண்மை நிறமுடையவர்களாயிருந்தனர். அவர்களுடைய சிறகுகள் தலையில் அமர்ந்திருந்தன. அவர்கள் இறங்கி வரும்போது, வ்யூவ்யூ என்ற சீட்டி அடிக்கும் சத்தம் போல் கேட்டது. இது நிகழ்ந்தபோது நான் மேலே எடுக்கப்பட்டு கூர்நுனிகோபுர வடிவிலிருந்த தேவதூதர்கள் கூட்டத்திற்குள் கொண்டு செல்லப்பட்டேன். இது தான் என் முடிவு என்று நினைத்துக்கொண்டேன். அப்பொழுது அந்த தரிசனம் என்னை விட்டு அகன்றது. அதன்பின்பு ஒரு மணி நேரத்திற்கு எனக்கு எந்தவித சுரணையும் இல்லை. நான் அந்த தூதர்கள் மத்தியிலிருந்தபோது, மிகவும் பயந்து உணர்ச்சிகள் அனைத்தையும் இழந்து போனேன். செய்தி ஐயன்மீர், இதுவா சமயம்? பக்கம் 39-42.

94. இந்த தரிசனத்தின் நிறைவேறுதலை சகோ.பிரன்காம் ***தேவசித்தத்திற்கு புறம்பாக தேவனுக்கொரு சேவை செய்ய முயற்சித்தல்.*** (Trying to do God a service without it being God's Will.) என்ற செய்தியில் கூறுகிறார். 27-11-1965 அன்று பிரசங்கிக்கப்பட்டது. மேலும் ***தேவசித்தத்திற்கு புறம்பாக அவருக்கொரு சேவை செய்தல்*** (Doing God a service without His will) என்ற மற்றொரு செய்தி 18-7-1965-ல் பிரசங்கிக்கப்பட்டது. இது தமிழில் மொழிப்பெயர்க்கப்பட்டுள்ளது. ஆனால் 27-11-1965 செய்தி இதுவரை மொழிப்பெயர்க்கப்படவில்லை என நினைக்கிறேன்.

95. இங்கு இந்த சம்பவத்தை கூறும்போது, ஒரு நாள் அதிகாலை, அதாவது சூரியன் அஸ்தமிக்கும் வேளை, காலை 7.00 மணியளவில் வேட்டைக்காக மலைமேல் சகோ.ஃபிரட் சோத்மென் (Fred Sothmann) உடன் சென்றபோது, திடீரென்று ஒரு வெடிசத்தத்தை கேட்டதாகவும், அது தேசம் முழுவதையும் அசைத்தது எனக் கூறி அப்பொழுது அவர்முன் ஏழு தூதர்கள் நின்றார்கள். நான் பூமிக்கு மேல் சற்று உயரத்தில் நின்றதுபோல் உணர்ந்தேன் என்கிறார். (I felt like I was standing way up off the ground) மேலும் இந்த அபூர்வ மேகவளையம் குறித்து ***வானத்தின் மேல் அடையாளம்*** என்றே கூறுகிறார். (There shall be signs in the heaven above) இது குறித்து நீங்கள் மேற்கூறிய ஆங்கில செய்தியில் பத்தி 63-83 வரை தியானிக்கலாம்.

***96. மேலும் ஐயா, இது தான் முடிவின் அடையாளமா? செய்தியில் 380 பத்தியில் அன்று காலை ஏற்பட்ட பலத்த சத்தம், என்னை மறத்துபோக செய்து, இந்த கட்டிடத்தின் உயரம் (பிரன்காம் கூடாரம்) அளவிற்கு என்னை தூக்கி சென்றது என்கிறார்.***

97. மேலும் ***மலையின் மேலுள்ள கவர்ச்சி என்ன***? என்ற செய்தியில் 138 வது பத்தியில் அப்படிப்பட்ட ஒரு வெடிச் சத்தத்தை நான் கேட்டதே இல்லை. அது தேசம் முழுவதையும் அசைத்து விட்டது. அப்படி நேர்ந்தபோது, எனக்கு முன்பாக ஏழுதூதர்கள் கூட்டமாக நின்றுகொண்டிருந்தார்கள் என்கிறார்.

98. சகோ.பிரன்காம் கண்ட தரிசனத்திற்கும், நடைமுறையில் நடந்த சம்பவத்திற்கும், அவர் எந்தமட்டும் உயர எடுத்துக்கொள்ளப்பட்டார், அது உண்மையாக நடந்த ஒன்றா அல்லது அது ஒரு உணர்ச்சிவசமா என்பது அவருக்கு தான் தெரியும். நாம் அதை குறித்து தர்கம் செய்யக்கூடாது. ஏனென்றால் நாம் செய்தியை முழுமையாக விசுவாசிக்கிறோம். இறங்கிவந்த தூதர்கள் அவரை 26 மைல் உயரத்திற்கு தூக்கிச் சென்று, பின்பு கீழே போட்டிருக்க முடியாது. ஏனென்றால் அவர்கள் உயர சென்று, அவர்களை கொண்டு அந்த அதிசய மேகவளையம் உருவாயிற்று. ஆதலால் அது அவர் உள்ளத்தில் ஏற்பட்ட ஒரு உணர்வு தான். இதைதான் அவர் பூமியிலிருந்து சிறிது மேலே எடுக்கப்பட்டதாக கூறுகிறார். அவர் தான் பூமிக்கு மேல் சற்று உயரத்தில் நிற்பது போல் உணர்ந்ததை தான் அவ்வாறாக கூறுகிறார். இந்த அனுபவத்தை சொப்பனங்களில் நான்கூட கண்டிருக்கிறேன்.

*99.* பாருங்கள், எனக்கு முன்பாக ஏழு தூதர்கள் கூட்டமாக நின்று கொண்டிருந்தனர். .. வீடு திரும்புவேன். ஏனென்றால் கர்த்தர் உரைக்கிறதாவது வேதாகமத்தில் இத்தனை ஆண்டுகளாக ஸ்தாபனங்களுக்கும் மற்றவர்களுக்கும் மறைக்கப்பட்டிருந்த ஏழு பரம இரகசியங்களை தேவன் ஏழு முத்திரைகளை திறந்து வெளிப்படுத்தி தரப்போகிறார் என்றேன். (***மலையின் மேலுள்ள கவர்ச்சி என்ன?*** பத்தி 140, நாள் 25-7-1965. பாருங்கள், ***வெளிப்படுத்தி தரப்போகிறார். ஆனால் அப்பொழுது வெளிப்படுத்தி கொடுக்கவில்லை.***

100. ***முத்திரைகளின் இரகசியங்கள் தீர்க்கதரிசிக்கு வெளிப்படுத்தப்பட்டதின் விவரங்கள்***

(அ) இன்று (18-3-1963) 12.00 மணிக்கு பரிசுத்த ஆவியானவர் வேகமாய் அறைக்குள் நுழைந்தார். உடனே, முதலாம் முத்திரையை குறித்த இரகசியம் முழுவதும் திறக்கப்பட்டு வெளிப்பட்டது. (***ஏழு முத்திரை***, பழைய பதிப்பு, பக்கம் 125 கடைசி பத்தி)

ஆ) ஒவ்வொரு முறையும் வெளிப்படுத்துதல்காக நான் விடியற்காலையிலிருந்து நாள் முழுவதும் ஜெபத்தில் தரித்திருக்கிறேன். இன்று (20-3-1963) விடியற்காலை, பரிசுத்த ஆவியானவர் நான் இருந்த இடத்தை அடைந்து

எல்லாவற்றையும் வெளியரங்கமாக்கினார். மூன்றாம் முத்திரை திறக்கப்பட்டதை நான் கண்டேன். (*ஏழு முத்திரை*, பழைய பதிப்பு, பக்கம் 235, பத்திகள் 4, 5)

இ) நாளை இரவு (21-3-1963) பிரசங்கிக்க இருக்கும் நான்காம் முத்திரையை குறித்த வெளிப்பாட்டை அருளுமாறு அவரிடம் கேட்டு, நாளை இரவு உங்களுக்கு அதை பிரசங்கிப்பேன். (*ஏழு முத்திரை*, பழைய பதிப்பு, பக்கம் 234, கடைசி பத்தி)

ஈ) ஐந்தாம் முத்திரையை குறித்து ஒன்றும் அறிந்திராத எனக்கு காலை விடிவதற்கு அரைமணிநேர முன்பு நான் ஜெபம் செய்து கொண்டிருக்கையில் அதிசயவிதமாக அது வெளிப்பட்டது. நாள் 22-3-1963 (*ஏழு முத்திரை*, பழைய பதிப்பு, பக்கம் 345, பத்தி 1)

உ) வெளிச்சமற்ற ஒரு அறையில் கர்த்தருடைய வெளிப்பாட்டுக்காக நான் காத்திருப்பது இது ஏழாம் நாள் ஆகும். அறையில் மின்சார விளக்கை தவிர வேறு வெளிச்சம் எதுவுமில்லை. அங்கு நான் வேத்தை படித்துக்கொண்டும், தேவன் ஆறாம் முத்திரையை திறக்க வேண்டும் என்றும் ஜெபித்துக் கொண்டு வருகிறேன். (*ஏழு முத்திரை*, பழைய பதிப்பு, 6-ம் முத்திரை, பத்தி 398,399)

ஊ) இவ்வாறாக சகோ.பிரன்காமுக்கு அன்றன்று தான் முத்திரைகளின் இரகசியம் வெளிப்படுத்தப்பட்டது. மாறாக ஏழு தூதர்களை சந்தித்தபோது அல்ல. முத்திரையின் இரகசியங்கள் வெளிப்படுத்தப்பட்ட கால நேரங்கள் பின் வருமாறு.:

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மார்ச் | 18 | 1963 | - | 1-ம் | முத்திரை வெளிப்படுத்தப்பட்டது. |
| மார்ச் | 19 | 1963 | - | 2-ம் | முத்திரை வெளிப்படுத்தப்பட்டது. |
| மார்ச் | 20 | 1963 | - | 3-ம் | முத்திரை வெளிப்படுத்தப்பட்டது. |
| மார்ச் | 21 | 1963 | - | 4-ம் | முத்திரை வெளிப்படுத்தப்பட்டது. |
| மார்ச் | 22 | 1963 | - | 5-ம் | முத்திரை வெளிப்படுத்தப்பட்டது. |
| மார்ச் | 23 | 1963 | - | 6-ம் | முத்திரை வெளிப்படுத்தப்பட்டது. |
| மார்ச் | 24 | 1963 | - | 7-ம் | முத்திரை வெளிப்படுத்தப்பட்டது. |

101. **நான் எட்டு நாட்களாக அந்த அறையில் உட்கார்ந்து கொண்டிருந்தேன். (*ஏழாம் முத்திரை* பத்தி 401) அவர் என்னை தரிசனத்தில் கொண்டு சென்றபோது, இது குறித்த ஒன்றையாவது அப்பொழுது அவர் வெளிப்படுத்தவில்லை. ..அப்பொழுது அவர்கள் அதன் அர்த்தத்தை எனக்கு விவரிக்க முடியவில்லை. *அது தேவையாயிருந்த போது அந்த அறையில் எனக்கு வெளிப்பாடு கிடைத்தது.* (ஏழாம் முத்திரை பத்தி 410, 411)**

**102. முத்திரைகள் வெளிப்பாட்டை பெறுவதற்காக சகோ.பிரன்காம் சகோ.பாங்ஸ் வுட் என்பவரது வீட்டில் ஒரு அறையில் தங்கியிருந்தார். சாப்பிடும் வேளை மாத்திரம் அவர் தனது சில நண்பர்களுடன் சென்று விட்டு வருவார். அங்கு ஒவ்வொரு முறையும் முத்திரைகள் குறித்த இரகசியம் அவருக்கு அவர் தங்கியிருந்த அறையில் வெளிப்படுத்தப்பட்டது. கோவை ராஜாவின் கூற்றுப்படி ஏழு தூதர்கள் தோன்றினபோது வெளிப்படுத்தவில்லை.**

103. அடுத்து என்னோடு இவரது சுற்றறிக்கையில் நான்காவது பக்கம் வாருங்கள். பூமியில் ஒரு காரியம் நடக்கும்போது அது தேவன் வானத்தில் காட்டுகிறார் என்று கூறியுள்ளார் தீர்க்கதரிசி. 1963-ல் பிப்ரவரி 28-ந் தேதி, 28 நிமிடங்கள் காணப்பட்ட மேகஸ்தம்பத்தை கவனியுங்கள். 28 என்ற எண்ணை கவனியுங்கள். இதிலிருந்து ஏழு தூதர்கள் பிரமிடு வடிவத்தில் வந்து தீர்க்கதரிசியை தூக்கி சென்றனர். ஏழு முத்திரைகளை பெற்றார். ***அது 28 நிமிடங்கள் நின்றது.*** ஏறக்குறை அரைமணி நேரம் மணவாட்டிக்குள் தேவன் வார்த்தையாக வருகிறார். இயேசு கிறிஸ்துவின் முதலாம் வருகையில் வார்த்தையானது மாம்சமானது இயேசு வரும்வரை எலியாவின் ஆவிபெற்ற யோவான்ஸ்நானன் காட்சியிலிருந்தான் என்பதை கவனியுங்கள்! அப்படியானால் இயேசுவின் இரண்டாம் வருகையில் தீர்க்கதரிசி பிரன்காம் காட்சியில் இருக்கவேண்டும். தேவன் காரியங்களை எப்பொழுதுமே எளிமையாய் நடத்துகிறார். இயேசு முதலாம் வருகையின் போது மேசியா பூமியில் நின்றபோதும் அதை உணராதவர்கள் மேசியாவின் வருகையை பிரசங்கித்துக்கொண்டே சென்றனர். ஓ .. அதுவே இன்றும்.

104. இயேசு கிறிஸ்துவின் முதலாம் வருகையில் யோவான்ஸ்நானன் காட்சியிலிருந்தான். அதுபோல் இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் எலியாவின் ஆவியையுடைய சகோ.பிரன்காம் காட்சியிலிருந்தார் என கோவை ராஜா கூறுகிறார். அதாவது 28-2-1963 கிறிஸ்துவின் இரண்டாம் வருகை வந்தது. அப்பொழுது பிரன்காம் காட்சியிலிருந்தார் என தன் லௌகீக ஞானத்தை கொண்டு எழுதுகிறார். இதற்கும் வேத வாக்கியங்களுக்கும், இக்காலத்துக்குரிய செய்திக்கும் எந்தவிதமான சம்மந்தமும் இல்லை.

105. மேலும் 28-2-1963-ல் கிறிஸ்துவின் இரண்டாம் வருகை வந்துவிட்டது. கிறிஸ்து - தலைக்கல். 28-2-1963 அன்று தலைக்கல் வந்துவிட்டது என்றும் உபதேசிக்கிறார். இந்த தலைக்கல் இறங்கும் போது, பலமுள்ள தூதன் சிங்கம் கெர்ச்சிக்கிறது போல ஆர்ப்பரித்தபோது அரைமணிநேர அமைதல் உண்டாயிற்று என்கிறார். இவ்வாறு இவரது உபதேசம் சென்று கொண்டிருக்கிறது.

106. இங்கு இவர் சகோ.பிரன்காம் ஏழு தூதர்களின் கூட்டத்தினால் காணப்பட்ட மேகம் 26 மைல் உயரத்தில் காணப்பட்டது. அவ்வளவு உயரம் சகோ.பிரன்காம் சரீரத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டார் என உபதேசிக்கிறார். இதுவும் தவறு. Bro. Branham went to the desert of Arizona where he was picked up bodily by seven angels that took him up in a cloud that they formed, twenty six miles high and thirty miles across the sky என்கிறார்.

107. சகோ. பிரன்காம் கூறியது என்ன? இந்த கட்டிடத்தின் உயரம் அளவுக்கு என்னை தூக்கி சென்றது. அந்த தேவ தூதர்களின் கூட்டம். கூர்நுனி கோபுர வடிவில் ஏழு தூதர்கள், *(ஐயா, இது தான் முடிவின் அடையாளமா?* புதிய பதிப்பு பத்தி 380) I raised up in the air as high as this building and that constallation of angels, seven angels in the form of a pyramid. இந்த பிரசங்கத்தை எங்கிருந்து செய்தார். பிரன்காம் கூடாரத்திலிருந்து. ஆக பிரன்காம் கூடாரத்தின் உயரத்திருக்கே அவர் தூக்கப்பட்டார். மேலும் இது தரிசனம். தான் தரிசனத்தில் கண்டதை கூறுகிறார்.

108. அமெரிக்கா, அரிசோனா மாநிலத்தில், கோரனோடா காட்டிலுள்ள சூரியஅஸ்தமனம் மலை சிகரத்தில் 28-2-1963-ல் அன்று காலை சகோ.பிரன்காமுடன் ஏழு தூதர்கள் ஏழு முத்திரைகள் திறக்கப்படுவதை குறித்து பேசிய பிறகு அவர்கள் மேலே ஏறி சென்றனர். அவர்களுடைய செட்டைகளினால் உருவாக்கப்பட்ட ஒரு மேக வளையம் ஒரு மூடுபனியை போல் உயரே எழும்பினது. வட்டமிட தொடங்கினது. இந்த இயற்கைக்கு மேற்பட்ட மேகவளையத்தை (வட்டம்) கொண்டு சாத்தான் பற்பல உபதேசங்களை கொண்டு வந்து ஜனங்கள் ஆதியில் கொண்டிருந்த விசுவாசத்தை சீர்குலைத்து வருவதை காண்கிறேன். பேலியாளின் மகன் இந்த சம்பவம் தான் *அரைமணி நேர அமைதல் வெளி.8:1, பலமுள்ள தூதன் வருகை. வெளி.10:1, தலைக்கல் வருகை, கர்த்தருடைய இரண்டாம் வருகை* என மாறுபாடான பல உபதேசங்களை கொண்டு வந்து சபையை பாழாக்கி வருவதையும் காண்கிறேன்.

***109. சகோ. பிரன்காம் அவர்கள் கண்களுக்கு மறைந்துவிட்டப்பின், சிலர் அந்த வழியாக செல்ல ஆரம்பித்தனர், சிலர் ஒரு வழியாக சென்றனர், சிலர் வேறொரு புறமாக சென்றனர். ஆனால் வெகு சிலர் மாத்திரமே தரித்து நின்று நான் எதை நோக்கி கொண்டிருக்கவேண்டுமென்று கூறினேனோ அதை உற்று நோக்கிக் கொண்டிருந்தனர். இது தான் இக்காலத்துக்குரிய செய்தியின் மத்தியில் நடந்து கொண்டிருக்கிறது. மெஜாரிட்டி ஜனங்கள் கடைசிக் கால செய்தி, செய்தி எனக் கூறிக்கொண்டு ஆளுக்கொரு பக்கம் சென்று கொண்டிருக்கின்றனர். ஆனால் தேவனுடைய வித்து மாத்திரமே இக்காலத்துக்குரிய செய்தியோடு தங்கள் கண்களையும் இருதயத்தையும் பதிய வைத்துள்ளார்கள்.***

110. நான் இப்பொழுது மௌனமாக இருக்க கூடாது. இந்த அதிசய மேகவளையம் குறித்து ஆதாரப்பூர்வமாக ஒரு செய்தித் தொகுப்பு எழுதி மக்கள் மத்தியில் ஒரு விழிப்புணர்ச்சியை கொண்டு வரவேண்டியது என்மேல் விழுந்த கடமையாயிருக்கிறது. இங்கு இந்த அதிசய மேகவளையம் குறித்து, அமெரிக்கா, டுக்ஸான், அரிசோனா பல்கலைக்கழகம், வளிமண்டல இயற்பியல் கலாசாலை, திரு.ஜேம்ஸ் ஈ.மெக்டொனால்டு அவர்கள் எழுதிய அறிக்கையின் சுருக்கத்தை உங்களுக்கு கீழே தருகிறேன். இது, இந்த மேகவளையம் குறித்ததான காரியங்களை நீங்கள் அறிந்து கொள்ளவும், கோவை ராஜாவின் தவறான உபதேசங்களை விட்டு வெளியே வரவும், மேலும் இதனைக் கொண்டு அநேக தவறான உபதேசம் கொண்டுவந்தவர்கள் மனக்கண்கள் திறக்கப்படவும் உதவும் என கிறிஸ்துக்குள் நம்புகிறேன். இந்த அறிக்கை கோவை ராஜாவுக்கு ஒரு மரண அடி கொடுக்கும் என கிறிஸ்துவுக்குள் நம்புகிறேன்.

111. இந்த சம்பவம் குறித்து 1962-ம் ஆண்டு, டிசம்பர் மாதம், 22-ந் தேதி சகோ.பிரன்காமுக்கு ஒரு தரிசனம் உண்டாயிற்று. இது குறித்து *ஐயா, இது தான் முடிவின் அடையாளமா*? நாள் 30-12-1962 என்ற செய்தியில் குறிப்பிடுகிறார். இதை நீங்கள் பத்திகள் 198 முதல் 221ஐ தியானிக்கலாம். இப்பொழுது இந்த தரிசனம் 1963-ம் ஆண்டு, பிப்ரவரி மாதம் 28-ந்தேதி நிறைவேறிற்று. இந்த சம்பவம் அமெரிக்காவில் ***சயன்ஸ்*** என்ற பத்திரிக்கையில் 19-4-1963-லும், ***லைப்*** என்ற பத்திரிக்கையில் 17-5-1963-லும் பிரசுரிக்கப்பட்டது.

## அதிசய மேகவளையம் தோற்றம் அரைமணிநேரமளவும் அமைதல் அல்ல

*இந்த அதிசய மேகவளையம் குறித்ததான அதிகாரப்பூர்வமான அறிக்கை கீழ்க்கண்டவாறு. இந்த அதிசய மேகவளையம் வானத்தில் அரைமணிநேரம் நின்றிருந்தது. அது தான் வெளி. 8:1 அரைமணிநேரமளவும் அமைதல் என்ற கோவை ராஜாவின் உபதேசம் பேய்த்தனத்துக்கடுத்தது என்பதை இந்த அறிக்கை மூலம் நீங்கள் தெளிவுப்படுத்திக்கொள்ளலாம்.*

### ஸ்டேரேடோஸ்பியரின் மேல் காணப்பட்ட மேகவளையம்

***ஜேம்ஸ் E. மெக்டொனால்டு, வளிமண்டல இயற்பியல் கலாசாலை, அரிசோனா பல்கலைக்கழகம், டுக்ஸான், அமெரிக்கா***


குறிப்பு: ஸ்டேரேடோஸ்பியர் என்பதன் அர்த்தம் புவி பரப்பிற்கு மேல் 9கி.மீ. - 24 கி.மீ. வரை நீடித்திருக்கும் வளிமண்டலம். இதன் வெப்ப நிலை ஏறக்குறைய - 45 டிகிரி சென்டிகிரேட் முதல் -75டிகிரி சென்டிகிரேட் ஆகும்.

112. 1963 ஆம் வருடம், பிப்ரவரி 28-ம் நாள் சூரிய அஸ்தமனத்தின் போது, தென் மேற்கிலே, கிட்டத்தட்ட 200 ஆயிரம் சதுரமைல் பரப்பளவில் சிதறி இருந்த மக்கள், அவர்களின் உள்ளத்தையும் கருத்தையும் கவரத்தக்க அழகிய மேகக்காட்சியைக் கண்டு சான்று பகர்ந்தனர். அவர்களின் கண்ணைக் கவர்ந்தது என்ன என்று தீர்மானிப்பதில் மூன்று மாதங்களாக நான் முயன்று கொண்டிருந்தாலும் எனக்கு நிச்சயமாகத் தெரியவில்லை. ஆனால் அதற்கு பொருத்தமான தடயங்களின் எண்ணிக்கை அதிகமாகி உள்ளது.

113. டுக்ஸானிலிருந்து அக்காட்சியைக் கண்டபோது நான எண்ணிய வண்ணமாகவே அநேகரும் அதை ஜெட்விமானம் விட்டுச்செல்லும் பெரிய புகை மண்டலமாகவே எண்ணினார். அஸ்தமிக்கும் சூரியனின் கதிரிர்கள், மேற்கில் உள்ள உயரமான சிர்ரஸ் (Cirus) மேகங்களை இருளாக்கிய நிலையிலும் அந்த மேகவளையமானது மட்டும் இன்னும் அழகாக வெள்ளியைப் போன்று ஒளிர்ந்து கொண்டிருந்ததைக் கண்டபோது தான் அதன் மிக அதிகமான உயரத்தைக் குறித்த தடயம் கிடைத்தது. சூரியஅஸ்தமனம் வடிவியல் அடிப்படையில் நான் விரைவாக தொகுத்து *அதன் உயரம் 30 கி.மீட்டருக்கும் மேல் என்ற நிர்ணயம் செய்து* உடனடியாக செய்தி இதழ் மற்றும் வானொலி வாயிலாக பார்வையாளர்களின் அறிக்கைகளுக்காக கோரிக்கை விடுவித்தேன். *200 அறிக்கைகள் முடிவாக கிடைக்கப்பெற்றன.* செய்தி இதழ் மூலம் புகைப்படங்களுக்காக ஏறெடுக்கப்பட்ட கோரிக்கைகளின் விளைவாக *35 வேறுபட்ட வட்டாரங்களிலிருந்து 85 புகைப்டங்கள் வந்து சேர்ந்தன.*

*114.* அந்த வளையமானது கடல் மட்டத்திலிருந்து 43 கி.மீ உயரத்தில் இருந்ததாக இப்பொழுது தெரிய வந்துள்ளது. இது, 20-30 கிமீ வரை மேகங்களைக் காட்டிலும் மிகவும் உயரமானது. ***மேகவளையம்***

***அரிசோனாவிலுள்ள பிளாக்ஸடாப் என்ற இடத்தில் தலைக்கு நேர்மேலாக காணப்பட்டது.*** பிளாக்ஸ்டாப் என்பது ஒரு பட்டினம். இது ஒரு அருமையான ஸ்தலம். பிளாக்ஸ்டாப் என்பதற்கு பதிலாக கொடிக்கம்பத் துருவம் என்றே சகோ.பிரன்காம் அதை அழைக்க விரும்புவார். (ஆதாரம்: செய்தி - வாசலுக்குள்ளே வாசல்கள். பத்தி 5, 10, நாள் 6-2-1965) இதற்கு முன் கண்டிராத உள் அலை அமைப்புகளைக் கொண்ட அம்மேகத்தைச் சித்தரிக்கும் பல சிறந்த புகைப்படங்கள் அப்பகுதயில் உள்ள மக்களிடமிருந்து கிடைக்கப்பெற்றன. அதன் வட-தென் பரப்பளவு 50 மைல்களுக்கு மேலாகவும், கிழக்கு - வடக்கு அகலம் சுமார் 30 மைல்கள் அளவும் இருந்தது. ***அதன் மையப்பகுதி தெளிவாக இருந்தது.***




படம் - 1
அரிசோனாவின் மேல் காணப்பட்ட ஸ்டேரேடோஸ்பெரிக் மேகம்
வெதர்வைஸிலிருந்து (Weatherwise) மறுபிரதி எடுக்கப்பட்டது. நூல் தொகுப்பு 16, எண் 3, ஜுன் 1963
அமெரிக்கா ஐக்கிய நாடுகளில் அச்சடிக்கப்பட்டது.

115. அரிசோனாவிலுள்ள பெரும்பான்மையான பார்வையாளர்களுக்கு அந்தி வானத்தில், அம்மேகம் வெள்ளியைப் போன்று வெண்ணிறமாய் காட்சியளித்தாலும் நியூ மெக்ஸிகோவிலுள்ள பெரும்பான்மையான பார்வையாளர்கள் அது வானவில்லைப் போன்று தோன்றியதாகக் கூறினர். அவ்வளையம் அரிசோனா கொலராடோ, நியூமெக்ஸிகோ மட்டுமல்ல, வடமெக்ஸிகோவில் (ஜியூரேஷ் - மேகவளையத்தின் தென்முனையிலிருந்து சுமார் 38 மைல்கள்) காணப்பட்டது. இம்மேகத்தைப் போன்று அழகான மேகத்தை தங்கள் வாழ்நாளிலேயே கண்டதில்லை என்ற பார்வையாளர்கள் அழுத்தம் திருத்தமாக கருத்து வெளியிட்டிருந்ததை ஒவ்வொரு அறிக்கையிலும் நான் படித்தேன்.



படம் - 2
லின் E. கோபில் (Lynne E-Cobble) என்பவரால் ஆல்புகர்க் (Albuquerque) என்ற இடத்தில், மேகத்தில் இருந்து சுமார் 280 மைல்கள் தொலைவிலிருந்து எடுக்கப்பட்ட இப்புகைப்படத்தில் பிளாக்ஸ்டாப் மேல் காணப்படும் மேகவளையம் தொலை தூரத்தில் இருந்து காணும்போது, கிடையான, நீள மெலிதான வளையமாகத் தென்படுகிறது. மேகதூள்களின் (நீர் அல்லது பனிக்கட்டி என அனுமானிக்கப்படும்) குறைகோண. முன்னோக்க சிதறலானது அந்தி வானத்தில் மிகவும் வேறுபட்ட காட்சியை உருவாக்குகிறது. ***இப்புகைப்படம் எடுக்கப்பட்ட அரைமணி நேரத்திற்கு முன்பாகவே ஆல்புகர்க்கில் சூரியன் அஸ்தமித்து விட்டது.*** புகைப்படம் உபயம்: இவ்வரிய நிகழ்வை ஆராய்ந்து வரும் ஆர்தர் A.பிரான்சிஸ், கிர்ட்லாண்டு AFB.

***வட அரிசோனாவின் மேல் காணப்பட்ட ஸ்டேரேடோஸ்பெரிக் மேகம்:***



படம் - 3
***சூரிய அஸ்தமனத்திற்குப் பிறகு*** சுமார் 160 மைல் கிழக்கு தென் கிழக்கிலிருந்து எடுக்கப்பட்ட இப்புகைப்படத்தில், அரிசோனா மாநிலத்தில் பிளாக்ஸ்டாப் என்ற இடத்திற்கு மேல் உள்ள ஸ்டேரேடோஸ்பெரிக்

மேகம் காணப்படுகிறது. மேற்கில் காணப்படும் கரும் சிர்ரஸ் மேகங்களின் மேல் சூரியன் முன்பாகவே அஸ்தமித்து விட்டது. (I.E. தானியேல்ஸ், ஸ்பிரிங்வில், அரிசோனா)

***116. சுருக்கம்:*** 1963 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 28-ம் நாள், சூரியஅஸ்தமனம் வேளையில் வழக்கத்திற்கு மாறான வளையம் வடிவு மேகம் வட அரிசோனாவின் மேல் நெடுந்தொலைவிற்கு காணப்பட்டது. அதிகமான பார்வையாளர்களின் அறிக்கைகளின்படி அது பிளாக்ஸ்டாப் என்ற இடத்திற்கருகே தலைக்கு நேர்மேலாக காணப்பட்டது. அந்த மேகத்தின் தென் திசையிலிருந்து 190 மைல்கள் அளவில், டுக்சானிலிருந்து எடுக்கப்பட்ட நான்கு புகைப்படங்களின் அடிப்படையில் செய்யப்பட்ட ஆரம்பகட்ட மதிப்பீட்டின்படி அதன் உயரம் சமார் 35 கி.மீ ஆக இருந்தது. ***அதிகபட்ச தூரமாக அந்த மேகம் 280 மைல்கள் வரை காணப்பட்டது. அறிக்கையும் தரப்பட்டது. சூரிய அஸ்தமனத்திற்கு பிறகும் 28 நிமிடங்களுக்கு அந்த மேகம் சூரிய ஒளியினால் ஒளிர்ந்தது.*** அதிகமான பார்வையாளர்கள், அந்த மேகம் வானவில் போன்ற நிறங்களுடையதாக காணப்பட்டது என்றனர். அந்த மேகம் நாக்ரீயஸ் (Nacreous) மேகத்திற்கு ஒத்தது என்று தற்காலிகமாக கருதப்பட்டாலும் அதனுடைய ***அசாதாரணமான அதிக உயரமும் வழக்கத்திற்கு மாறான குறைவான நிலக்கோடும், சிறப்பு மிக்க வடிவமும் இதற்கு முன் பதிவு செய்திராத ஒரு வகை மேகம் எனத் தெரிவிக்கிறது.***

117. 1963 ஆம் வருடம், பிப்ரவரி 28-ம் நாள் சூரிய அஸ்தமன நேரத்தில் அசாதாரணமான வடிவமைப்புடனும் பல வண்ணங்களுடன் கூடிய ஒரு மேகம் அரிசோனாவிலுள்ள பல வட்டாரங்களிலும் சுற்றுப்புறத்திலுள்ள மாநிலங்களிலும் காணப்பட்டது. அம்மேகம் ஒரு பெரிய முட்டை வடிவ வளையமாக, (நடுவில் தெளிவாக) அதன் நீண்ட அச்சு வடக்கு மற்றும் தெற்கு திசை வழியாக செல்வதாக காட்சியளித்தது. சூரியன், மேற்கில் உயரமாக சிர்ரஸ் (Cirrus) மேகங்கள் மேல் மறைந்த பிறகும் அந்த மேகவளையம் நன்றாக ஒளிர்ந்து கொண்டிருந்தது, டுக்சானிலிருந்து 190 மைல்கள் தெற்கில் அதன் கோண உயர்வு 6 டிகிரியாக இருந்தது. அந்த மேகம் பூமியின் நிழலில் மறைந்தவுடனே வடிவியல் விதிப்படி அதன் உயரத்தை நான் ஓரளவு கணித்து அதை உறுதிப்படுத்துவதற்காக மற்ற பார்வையாளர்கள் அதைப் பற்றிய விவரங்களைத் தரும்படி செய்தி இதழ் மூலமாகவும் வானொலி மூலமாகவும் வேண்டுகோள் விடுத்தேன்.

118. சுமார் 150 அறிக்கைகள் கிடைக்கப்பெற்றதில் ***வருடக் கணக்கில் மேகங்களை கவனித்துக் கொண்டிருந்த போதிலும் இதைப் போன்ற மேகத்தை இதற்கு முன் கண்டதில்லை என்று மக்கள் தெரிவித்திருந்தனர்.*** அந்த மேகம் அரிசோனா மாநிலம் பிளாக்ஸ்டாப் (Flagstaff) என்ற இடத்திற்கு நேர்மேலாக இருந்ததாகவும் வடதுருவத்தின் ஸ்டேரேடோஸ்பியர் நாக்ரீயஸ் மேகங்களைப் போன்று பல வண்ணங்களைக் கொண்டதாகவும் ***வினோதமான உள்ளமைப்பு கொண்டதாகவும்*** இருந்ததென விரைவில் உறுதிப்படுத்தப்பட்டது. அந்த மேகத்திற்கு நேர் கீழாக இருந்த பார்வையாளர்கள் பச்சை மற்றும் நீலநிறம் தென்பட்டதாகவும் அவ்வப்போது பிங்க் நிறமும் காணப்பட்டதாகவும் கூறினர். அதன் வட எல்லை நார்போன்ற அமைப்பு உடையதாகவும், தென் எல்லை எடர்நா மேகக்குவியலுடன் காணப்பட்டதாகக் கூறினர். 280 மைல்கள் தூரத்திலிருந்தும் அந்த மேகம் காணப்பட்டது.

119. பல பார்வையாளர்கள், அப்பிரதான மேகத்தின் வடமேற்கே அதைப் போன்றே வடிவமுடைய, ஆனால் கால்பங்கு மட்டுமே அளவு கொண்ட மற்றொரு மேகத்தையும் கண்டதாகக் கூறினார்கள். வட அரிசோனாவில் இருந்து கிடைத்த சில புகைப்படங்கள் மூலம் அது உண்மை என நிருபிக்கப்பட்டது. அந்த மேகம் தென்கிழக்கு திசையில் நகர்ந்து கொண்டிருந்தது என்றாலும் இக்கருத்தில் முரண்பாடுகள் எழுந்துள்ளன. மேலும் ஆராய்ச்சியில் மேற்கொண்டே இதற்கு தீர்வு காணமுடியும்.

120. டுக்சானிலிருந்து எடுக்கப்பட்ட நான்கு புகைப்படங்களைப் பகுத்தாய்வு செய்தபோது அந்த மேகத்தின் அருகாமையிலுள்ள புள்ளியின் கோண உயர்வு 5,9லிருந்து 6.2 டிகிரியாக இருந்தது. அதன் சரியான உயரத்தை நிர்ணயம் செய்ய முடியவில்லை. இருந்தபோதிலும் மேற்கோள் காட்டப்பட்ட கோண உயர்வும் பூமி வளைவு கோடும் அந்த மேகம் 35கி.மீ உயரமுள்ளது என தெரிவிக்கிறது. இது ஸ்கான்டினேவிய நாக்ரீயஸ் (Scandinavian nacreous) மேகங்களைக் காட்டிலும் மிக அதிய உயரமாகும். ஸ்டார்மர் (Stormer) மற்றும் பிறராலும் பல வருடங்களாக கூறப்பட்டுவந்த மேகங்களின் உயரம் 30 கி.மீட்டருக்கு மேல் இருந்ததில்லை. பெரும்பான்மையானவை 22 முதல் 28 கி.மீ வரையே இருந்துள்ளன.


121. நிர்ணயிக்கப்பட்ட உயரமானது 35 கி.மீ ஆதலால் பிளாக்ஸ்டாப் மேல் காணப்பட்ட மேகம் ஜெட் விமானம் விட்டுச் சென்ற புகையின் தடம் என்பது நிகழக்கூடியதல்ல.

122. 1959 ஆம் ஆண்டு மிகவும் சாதகமான சூழ்நிலையில் லாக்ஹீட் (Lockheed - 104) என்ற விமானம் சென்ற அதிகபட்ச உயரம் 103, 395 அடி (31.6 கி.மீ) என்ற தற்போதை அமெரிக்க உயரக்குறிப்பு ஆவணம் தெரிவிக்கிறது. அம்மேகம் தென்பட்ட நேரத்தில் ஜெட்விமானத்தினால் உருவாகக்கூடிய புகைபடலத்தின் அதிக பட்ச உயரம் 24 கி.மீக்கும் குறைவாகத்தானிருக்கும் என்று வின்ஸ்லோ (Winslow) இருந்து வெளிவரும் தகவல் தெரிவிக்கிறது.

123. இத்தொடக்க கட்ட குறிப்புகளால் பிப்ரவரி 28-ல் தோன்றிய பிளாக்ஸ்டாப் மேகம் வானிலை ஆய்வாளர்களின் கவனத்தைக் கவரும் மிக அசாதாரணமான நிகழ்வாக அமைந்து உள்ளது. அரிசோனா மாநிலத்தைச் சுற்றியுள்ள 16 இடங்களில் இருந்து புகைப்படங்கள் வந்துள்ளதால் அந்த மேகத்தின் உயரம், வடிவம் மற்றும் அளவினைத் துல்லியமாக நிர்ணயிக்க முடியும். டுக்சானிலிருந்து நிர்ணயம் செய்யப்பட்ட உயரத்திற்கும் சூரியஅஸ்தமனம் வடிவியலின்படி உள்ள உயரத்திற்கும் இடையே உள்ள முரண்பாடு தற்போது ஆய்வில் உள்ளது. லாஸ் ஏன்ஸெல்ஸில் அல்லது அதற்கு மிக அருகில் என மதிப்பீடு செய்யப்பட்ட கதிர்-தொடுகோடு புள்ளிக்கும் மேகத்திற்கும் இடையே உள்ள சிர்ரஸ் மேகங்களினால் அந்த மேகம் முன்னதாகவே மறைந்திருக்கக்கூடும்.

*124.* செங்குத்துகோடு இயக்கத்துறையின் நீரம இயக்கவியல் இதைப் போன்ற மேகத்தை உருவாக்குவது புதிராகவே உள்ளது. தற்போதைய மதிப்பீட்டின்படி மூடப்பட்ட மேகவளையத்தின் நீளம் 30 கி.மீ எனவும் வளைய குறுக்கு வெட்டு அளவு கிடைமட்டமாக 30 கி.மீ எனவும் தெரிகிறது. வளிமண்டலத்தின் எந்த அடுக்கிலும் இதைப் போன்ற வடிவமும் அளவும் கொண்ட மேகம் காணப்பட்டதாக எனக்குத் தெரிந்த வரை இல்லை. இதற்கு முன் எப்பொழுதும் இருந்திராத உயரத்தில் அந்த மேகம் தென்பட்டதால் அதற்குத் தேவையான நீராவியின் மூலம் குறித்த வியத்தகு வினாக்கள் எழுந்துள்ளன. ***ஜேம்ஸ் E மெக்டொனால்டு***

*வடக்கு அரிசோனா மேல் ஸ்டேரேடோஸ்பெரிக் மேகம்*
ஜேம்ஸ் E மெக்டொனால்டு



படம் - 4

ஏப்ரல் 19, 1963, சயின்ஸ் (Science) பத்திரிக்கை, நூல்தொகுப்பு 140, எண் 3564, பக்கங்கள் 292-294-ல் இருந்து மறுபிரதி எடுக்கப்பட்டது. பதிப்புரிமை - 1963 - அமெரிக்க அறிவியல் முன்னேற்ற கழகம்.

குறிப்பு: இந்த அறிக்கையை ஆங்கிலத்திலிருந்து தமிழில் சுருக்கி மொழிப்பெயர்த்து எனக்கு கொடுத்த சென்னை, பொழிச்சலூர், சகோ.ரூபன் மாணிக்கராஜ் தம்பதிகளுக்கு எனது மனமார்ந்த நன்றியை கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் தெரிவித்துக்கொள்கிறேன்.

125. பல இடங்களிலிருந்து பல கோணங்களில் இந்த மேகவளையம் புகைப்படமாக எடுக்கப்பட்டது. உங்களுக்கு அதில் சில புகைப்படங்களை மேலே பிரசுரித்துள்ளேன். இவைகள் அனைத்திலும் சயன்ஸ் பத்திரிக்கை வெளியிட்ட புகைப்படம் நமது மத்தியில் பிரபலமாயிற்று. ஏனென்றால் இதில் ***இயேசு கிறிஸ்துவினுடைய திருமுகத்தை வெளி.1:14-க்கு ஒப்பாக, வெளி.10:1-க்கு ஒப்பாக அல்ல*** காண்கிறோம். சூரிய அஸ்தமனம் மலையில் நிகழ்ந்தது என்ன? ***தேவன் தமது வார்த்தையை உறுதிப்படுத்துகிறார். தேவன் தமது வார்த்தையை நிறைவேற்றுகிறார்.*** எல்லா நித்தியத்துக்கும் பிரதானமான நீதிபதியாயிருந்து அங்கே நின்று கொண்டு ***இந்த மணி நேரத்திற்கான செய்தியை உறுதிப்படுத்துகிறார்.*** இது குறித்து ***மலையின் மேலுள்ள கவர்ச்சி என்ன?*** என்ற செய்தியில் பத்திகள் 135-152 வரை தியானியுங்கள். மேலும் அப்பொழுது அங்கே அரிசோனாவிலே அந்த ஏழு தூதர்கள் அந்த மலையின் உச்சிக்கு கீழே இறங்கி வந்ததை காண்கிறோம். தேச முழவதிலும் கூட பத்திரிக்கைகள் இதை பிரசுரித்தன. இயேசுவானவர் தாமே அங்கே வானங்களில் இருந்து கீழ் நோக்கி பார்த்துக்கொண்டு வெளிப்படுத்தின விசேஷம் 10:7-ல் ஏழாம் தூதனுடைய செய்தியிலே இந்த முத்திரைகள் திறக்கப்படும். தேவனுடைய இரகசியங்கள் அறியப்படும் என்று சொல்வதைக் காண்கிறோம். (*தற்கால நிகழ்ச்சிகள் தீர்க்கதரிசனத்தின் மூலம் தெளிவாக்கப்படுகின்றன.* பத்தி 320, நாள் 6-12-1965).

***126. நான் இங்கு வரைந்து காட்டின விதமாக, கூர்நுனி கோபுரம் வடிவில் அமைந்த ஒளிவட்டம் ஒன்று தென்பட்டது. செய்தித்தாள்களும், பத்திரிக்கைகளும் அதன் புகைப்படத்தை வெளியிட்டு, இச்செய்தியை நாடு முழுவதும் பரப்பின. அரிசோனாவிலுள்ள டூக்ஸனில் அந்த ஏழு தூதர்கள் நின்ற இடத்திலிருந்து அது எழும்பி, 26 மைல் உயரம் சென்றது. அதன் அகலம் 30 மைல், நாடு முழுவதும் அது தென்பட்டது. நாம் வாழும் நேரத்தின் ஆவிக்குரிய முக்கியத்துவத்தை உங்களுக்கு வெளிப்படுத்தவே அது அறிவிக்கப்பட்டதெயன்றி, மற்றப்படி வேறல்ல. இதை தொடர்ந்து வந்த செய்தி ஏழு முத்திரைகளை திறந்து, வேதத்தில் மறைந்து கிடந்த பரம இரகசியங்களை வெளிப்படுத்தினது. (காலத்தையும் அதன் செய்தியையும் அடையாளம் கண்டுகொள்ளுதல், பக்கம் 7, பத்தி 1, நாள் 20-07-1964)***

*127. பிரியமானவர்களே இங்கு நீங்கள் நன்கு கவனித்தீர்களானால் வெளி.10:2-ன்படி கிறிஸ்து தமது வலது பாதத்தை சமுத்திரத்தின்மேலும், தமது இடது பாதத்தை பூமியின் மேலும் வைத்துக்கொண்டும், சிரசின் மேல் வானவில்லைக் கொண்டும் காட்சியளிக்கவில்லை. மாறாக, வானங்களிலிருந்து கீழ்நோக்கி பார்த்துக்கொண்டிருப்பதாக காணப்படுகிறார். ஆதலால் என் மகனே, என் மகளே இக்காலத்துக்குரிய செய்தியை*

*விட்டு விலகச் செய்யும் பேலியாளின் சாட்சிக்காரன் கோவை ராஜாவின் போதகங்களை நீ கேளாதே! செவிகொடுக்காதே! அது உன்னை மரணத்துக்கு வழிநடத்தும். இந்த மேகவளைய காட்சி, வஞ்சிப்பின் ஆவியினால் ஆட்கொள்ளப்பட்டு மக்களை வஞ்சித்து கொண்டுவரும் கோவை ராஜாவின் உபதேசங்களை உறுதிப்படுத்துவதற்காக அல்ல. இந்த மேகவளையம் அரைமணிநேரமளவும் அமைதல் அல்ல, தலைக்கல் வருகை அல்ல, பலமுள்ள வேறொரு தூதனின் தோற்றம் அல்ல, கர்த்தருடைய இரண்டாம் வருகையும் அல்ல. மாறாக நாம் வாழும் நேரத்தின் ஆவிக்குரிய முக்கியத்துவத்தை நமக்கு வெளிப்படுத்த கொடுக்கப்பட்ட அடையாளம். வானத்தில் மனுஷகுமாரனுடைய அடையாளம்.*

128. இந்த மேகவளையம் அரைமணிநேரம் மட்டுமே வானத்தில் நீடித்திருக்கவில்லை. இது குறித்து நான் மேலே கொடுத்துள்ள, மேகவளையத்தை குறித்ததான அறிக்கையை நீங்கள் தியானித்திருக்கலாம். ஆதலால் இது கோவை ராஜாவின் அரைமணிநேர அமைதல் உபதேசத்திற்கு பொருந்தாது. பாருங்கள், சகோ.பிரன்காம் கூட்டங்கள் எதற்கும் செல்லாததால் 28-2-1963 அதிகாலை தனது நண்பர் சகோ.ஃபிரட் (Bro.Fred) உடன் வேட்டைக்காக செல்லுகிறார். இது சூரியன் மேலே வந்துக்கொண்டிருக்கிற சமயம் காலை ஏழு மணி இருக்கும். சூரியஅஸ்தமனம் மலையில் அந்த வேளையில் ஏழு தூதர்கள் ஒளி வேகத்தில் சகோ.பிரன்காமிடம் துரிதமாக இறங்கி வந்தனர். அவர், அவர்கள் நடுவில் இந்த பயங்கரமான இடியில் எடுக்கப்பட்டது போல் தோன்றினது. தனக்கு முன்பாக ஏழு தூதர்கள் கூட்டமாக நின்று கொண்டிருப்பதைக் கண்டார். பின் அவர்கள் கூட்டமாக மேலே சென்ற போது, அவர்களுடைய செட்டைகளினால் ஒரு மேகவளையம் உருவானது. ஏழு தூதர்கள் பரலோகத்திலிருந்து இறங்கி வந்தனர். அவர்கள் சுழல் காற்றில் மேலே சென்றதை நாங்கள் கண்கூடாகக் கண்டோம். விஞ்ஞானம் அதை புகைப்படம் எடுத்தது. (***ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்படுதல்,*** பத்தி 157) அவர்கள் ஏழு தூதர்கள் தேவனிடத்திலிருந்து கீழே இறங்கி வந்தார்கள். (Seven Angels came down from God. Testimony (Witness), para 32, dt. 28-11-1963) And I looked, and standing before me stood Seven Angels .. I felt like I was standing way up off the ground (Trying to do God a service without it being God's will, para 70, dt. 27-11-1965). ஆனால் அந்த மேகவளையம் ஜனங்களுடைய காட்சிக்கு சூரிய அஸ்தமன வேளையில் காணப்பட்டது. சூரிய அஸ்தமன வேளைக்கு பின்பு அரைமணி நேரத்திற்கு மேலும் காணப்பட்டதாக அறிக்கை கூறுகிறது. ஆதலால் இந்த மேகம் பகலில் உருவாகி, சூரிய அஸ்தமனத்திற்கு பின்பும் அரைமணி நேரமளவும் காணப்பட்டது. அந்த மேகம் ஒளிர்ந்து கொண்டிருந்ததாக அறிக்கை கூறுகிறது. பகல் வேளையில் அதன் பிரகாசம் மக்கள் கண்களை கவரவில்லை. மாலை வேளையில் அதன் பிரகாசம் மக்கள் கண்களை கவர்ந்தது. ஆனால் மேகவளையம் பகலிலே உருவாகிவிட்டதை சகோ. பிரன்காமே உறுதிப்படுத்துகிறார். ஆதலால் அரைமணி நேரம் தான் அந்த மேகவளையம் காணப்பட்டது என்பது உண்மைக்கு புறம்பான ஒரு உபதேசம். சூரிய அஸ்தமனம் மலையின் மேல் சூரியஅஸ்தமனம் வெளிச்சம். சாயங்கால வெளிச்சம் வந்து விட்டது. ஆதலால் இந்த மேகவளையம் அரைமணிநேரம் தான் வானத்தில் காணப்பட்டது என்ற கோவை ராஜாவின் உபதேசம் ஆதாரமற்றது. ஆதலால் அது பிசாசினுடையது. கொடிதான வஞ்சகமானது.

## இக்காலத்துக்குரிய செய்தி மக்கள் மத்தியில் எங்கும் எதிலும் வஞ்சிப்பு, வஞ்சிப்பு



படம் - 5

ஏழாம் சபைக்கால தூதனாகிய சகோ. வில்லியம் மாரியன் பிரன்காமின் தலைக்கு மேலே காணப்படுகிற அக்கினி ஸ்தம்பம் அமெரிக்காவில் டெக்ஸாஸ் மாகாணத்தில் ஹவுஸ்டன் என்ற இடத்தில் 1950-ம் ஆண்டு ஜனவரி மாதம் எடுக்கப்பட்டது. இந்த அதிசயமான ஒளி நெகடிவிலும் காணப்பட்டபடியால், இந்த புகைப்படம் ஹவுஸ்டனிலுள்ள டக்ளஸ் ஸ்டுடியோவிலிருந்து F B I என்ற போலிஸ் துப்பறியும் இலாகாவில் சந்தேகமான தாஸ்தாவேஜுக்களின் பரிசோதனைக்காக டாக்டர் ஜாாஜ் ஜெ. லேசி என்பவருக்கு பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்டது. மைக்ராஸ்கோப் என்னும் கருவியின் உதவியினால் அப்படத்தின் இருபக்கங்கள் முழுவதும் தெளிவாக ஆராயப்பட்டது, ஆய்வுக்குப்பின் நெகடிவ் முற்றிலும் தத்ரூபமானது. பரிசோதனைக்காக கொடுக்கப்பட்ட நெகடிவ் தொடப்படாததும், இருமுறை அல்லது அநேக முறையோ படம் எடுக்கப்படாமல் ஒரே முறை எடுக்கப்பட்டது. சகோ.பிரன்காமின் தலைக்கு மேலே வெறுமையான இடத்தில் காணப்படும் ஒளியானது,

ஒரு ஒளி நெகடிவில் நேரடியாக விழுந்திருப்பதால் உண்டானதாகும் என சான்றிதழ் கொடுக்கப்பட்டது. நாள் 29-1-1950.

129. இந்தியாவை பொறுத்தளவில் இதோ அக்கினி ஸ்தம்பம் இறங்கி, என் ஊழியத்தில் தேவன் சாட்சி கொடுக்கிறார் எனக் கூறி கூறி மக்களை மோசம் போக்கி லட்சாதிபதியான பிரதான ஊழியக்காரர் மும்பை பாஸ்டர் டேனியேல் கிறிஸ்டியான் அவர்கள். இவர் ஊழியத்தில் அநேக மக்கள் வஞ்சிக்கப்பட்டார்கள். அன்று தேவன் அக்கினி ஸ்தம்பத்தில் இறங்கி சகோ.பிரன்காம் ஊழியத்தில் சாட்சிக் கொடுத்தார். அது விஞ்ஞான பூர்வமாக உறுதிச் செய்யப்பட்டதை மேலே கண்டீர்கள்.
அக்கினி ஸ்தம்பம் விஞ்ஞான புகைப்படக் கருவிகளாலும் கூட முற்றிலும் அடையாளம் கண்டுக்கொள்ளப்பட்டது. .. நமக்குள்ளான மிகச் சிறந்த ஒருவரால் அது விஞ்ஞான பூர்வகமாக நிருபிக்கப்பட்டது. அமெரிக்கா போலிஸ் துப்பறியும் பிரிவில் கைரேகை மற்றும் தாஸ்தாவேஜுக்களை ஆராயும் பகுதியின் தலைவரான ஜார்ஜ் ஜே லேசி என்பவர் சங்கை பிரன்காமே நானும் கூட அதை மனோதத்துவம் என்று தான் அழைத்து வந்தேன். ஆனால் ஒளி புகைப்படக் கருவியின் லென்ஸ் மேல்பட்டது. அதை நான் நான்கைந்து நாட்களாக அல்ட்ரா வையலட் கதிர்களை கொண்டு பரிசீலனை செய்தேன். ஒளி லென்ஸ் மேல் பட்டது. இந்த லென்ஸ் மனோ தத்துவத்தை புகைப்படம் எடுக்காது என்று கூறினார். இப்பொழுது அது அடையாளம் கண்டுகொள்ளப்பட்டது. ***கே.ப.*** 291 பத்தி 115.

130. ஆனால் பாருங்கள் அப்போஸ்தலர் டேனியல் கிறிஸ்டியான் உருவாக்கிய அக்கினி ஸ்தம்பம் அடையாளம் கண்டுக்கொள்ளப்பட்டதா? இல்லவே இல்லை. அது சாத்தானின் வஞ்சிப்பு. அன்று முதல் இன்று வரை அவர் சாத்தானின் கரத்தில் ஒரு கருவியாக இருந்து வருகிறார். இதில் எள்ளளவு கூட சந்தேகம் இல்லை. இது சத்தியத்தை விசுவாசியாமல் அநீதியில் பிரியப்படுகிற யாவரும் ஆக்கினைக்குள்ளாக்கப்படும்படிக்கு தேவனால் அனுப்பப்படும் கொடிய வஞ்சகமாகும். ஊழியத்தில் அக்கினி ஸ்தம்பம் தோன்றியது என்றால், உடனே அதை போலிஸ் துப்பறியும் பிரிவுக்கு எடுத்துச் சென்று தோன்றிய அக்கினி ஸ்தம்பம் உண்மையானதே என்று நிருபிக்கவேண்டியது இவருடைய கடமை. இது பொது மக்களுடைய கடமை அல்ல. மற்றொரு ஊழியக்காரனுடைய கடமையும் அல்ல.



படம் -6

இங்கே கொடுக்கப்பட்டுள்ள புகைப்படம் 19-1-1999 அன்று திருநெல்வேலி, பாளையங்கோட்டை நேரு சிறுவர் கலை அரங்கில், சகோ.டேனியல் கிறிஸ்டியான் அவர்கள் செய்தி வேலையில் எடுக்கப்பட்டது. பாஸ்டர் டேனியல் கிறிஸ்டியான் அவர்கள் ***என்னுடைய செய்தி கழுகு குஞ்சுகளுக்காக மட்டுமே, மற்றவர்களுக்கு அல்ல. இப்பொழுது இந்த இடத்தில் யெகோவா வெள்ளை கழுகு தன் குஞ்சுகளுக்காக வட்டமிட்டுக் கொண்டிருக்கிறார்*** என்ற உறுதியோடு பிரசங்கித்துக்கொண்டிருக்கும்போது, பாளையங்கோட்டை அருகிலுள்ள பானான்குளத்து சகோ.சாத்ராக் (மும்பையில் வசிப்பவர்) மேடை முன் வந்து, சாதாரணமான புகைப்படக் கருவியினால் புகைப்படம் எடுத்ததாகவும், மறுநாள் 20-1-1999 அன்று பிலிமை கழுவி பார்க்கும்போது கழுகின் அலகு தென்பட்டது என பாஸ்டர் டேனியல் கிறிஸ்டியான் தனது ***இடிமுழக்க எதிரொலி***, மலர்-6, இதழ்-2, நவம்பர் 1999 இதழில் இந்த புகைப்படத்துடன் மேற்கண்ட அறிக்கையை வெளியிட்டுள்ளார்.



படம் -7

இங்கே கொடுக்கப்பட்டுள்ள படத்தில் பாஸ்டர் டேனியேல் கிறிஸ்டியான் 22-9-1997-ல் சமாரிய போகும் போது ஆட்டுக்குட்டி உருவத்தில் அக்கினி ஸ்தம்பம் தோன்றுகிறது என்கிறார். ***இடிமுழக்க எதிரொலி*** மலர்5 இதழ் 12, அக்டோபர் 97 - ஜனவரி 98. இதோ தேவன் அக்கினி ஸ்தம்பத்தில் ஆட்டுக்குட்டி ரூபத்தில் தோன்றினார், இதோ பூனைக்குட்டி ரூபத்தில் இங்கு காட்சியளித்தார், அதோ அங்கு கழுதைகுட்டி சாயலில் தரிசனமானார் என்று கூறி கூறி மக்களை அடிமுட்டாள்களாக்கி, அவர்கள் மனதை மயக்கி, ஏழை எளிய மக்களை பிக்பாக்கெட் அடித்த இந்த கொள்ளைக்காரனை போல் ஒருவரை நீங்கள் இக்காலத்துக்குரிய செய்தியில் எங்காவது கண்டிருப்பீர்களா? அவருக்கு ஒரு புறம் வெட்கம், நிந்தை. மறுபுறம் வருமானம். வருமானம் வெட்கத்தையும், நிந்தையையும் மேற்கொண்டது. இதுதான் வஞ்சிப்பு. வஞ்சிப்பு. என் ஜனங்கள் வஞ்சிக்கப்பட்டார்கள். ஆனால் எங்கள் மூலமாய் கேள்விப்பட்டதை விசுவாசித்தவர்கள் யார்? அன்று கர்த்தருடைய வேதத்தை கேட்க மனதில்லாத புத்திரர்களாயிருந்தார்கள். இன்றும் மனதில்லாத புத்திரர்களாயிருக்கிறார்கள். அந்தோ! பரிதாபம்.



படம் -8

இங்கே கொடுக்கப்பட்ட படத்தில் எருசலேம் வீதியில் புகைப்படம் எடுத்தப்போது ஒரு நீக்ரோ இளம் பெண் உருவம் (ஆவிக்குரிய சரீரம் படத்தில் தென்பட்டது. உயிர்த்தெழுதல் ஆரம்பித்துவிட்டதா? என்கிறார். ***இடிமுழக்க எதிரொலி*** மலர் 5, இதழ் 12, அக்டோபர் 97 - ஜனவரி 98



படம் - 9

இங்கு பாஸ்டர் டேனியேல் கிறிஸ்டியான் மரித்த ஒரு சகோதரனது அடைக்க ஆராதனையில் பங்கு கொண்டு, ஜெபித்த போது சவபெட்டி மீது அக்கினி ஸ்தம்பம் இறங்கி நின்றதாக படம் எடுத்து பிரசுரித்துள்ளார். இந்த ஆராதனையின் போது தேவன் பிரசன்னமாகி துக்கம் விசாரித்து சென்றுள்ளதாக கூறுகிறாறோ? எது எப்படியோ, சகோ. ஜான் பாண்டியனுக்கு தேவனுடைய பிரசன்னம் நாற்றமாக இருக்கிறது. வாயையும் மூக்கையும் துணியினால் மூடிக்கொண்டுள்ளார். ***நூதனமான காட்சி, வெட்கக்கேடான சாட்சி.***

131. இவ்வாறாக நூற்றுக்கணக்கான போட்டோக்களை பாஸ்டர் டேனியேல் கிறிஸ்டியான் பிரசுரித்து, விளம்பரங்கள் செய்து தனது ஊழியத்தில் எங்கும் எப்பொழுதும் தேவன் பிரசன்னமாகி சாட்சிக் கொடுக்கிறார் என விளம்பரங்கள் செய்து, மக்களை ஏமாற்றி லட்சக்கணக்கான பணத்தை தன் சுய வருமானத்துக்கு மேல் சம்பாதித்து, இடது கைக்கும் வலது கைக்கும் வித்தியாசம் தெரியாத மக்களது பாக்கெட்டுக்களை பகல் கொள்ளை அடித்தார். இரவு கொள்ளை அடிக்கிறவனைவிட பகலில் கொள்ளை அடிக்கிறவன் தான் கில்லாடி, காரிய சமர்த்தன். இந்த பெருமை பாஸ்டர் டேனியேல் கிறிஸ்டியானுக்கு மட்டுமே பொருந்தும். இப்படிப்பட்ட ஊழியங்களை எல்லாம் நம்பி தசமபாகம், காணிக்கை என அள்ளி அள்ளி கொடுக்கும் அளவுக்கு ஜனங்களுடைய கண்களை சாத்தான் குருடாக்கிவிட்டானே என்பதை நினைத்து பார்க்கும்போது இந்த ஜனங்களுக்காக பரிதாபப்படுவதை விட்டு விட்டு வேறு என்ன செய்ய முடியும்? இது 2தெச.2:11,12 வசனங்கள் நிறைவேறுதல் ஆகும்.



படம் - 10

இங்கு குஜராத் மாநிலத்தில் உம்மர்காவ் என்ற இடத்திலுள்ள காந்திவாடி என்ற பகுதியில் வசிக்கும் திரு.ஏலக்குமார் என்பவர் தனது திருமண நாளில் அவர் தனது நண்பர்களுடன் ஆடிப்பாடி நடனம் ஆடி கூத்தாடும் போது ஒளி இறங்கி வந்து சாட்சிக் கொடுத்தது என்கிறார். அதாவது இவர், பாஸ்டர் டேனியேல் கிறிஸ்டியான் போன்று தானும் அக்கினி ஸ்தம்பத்தை உற்பத்தி செய்ய முடியும் என்கிறார். இப்படத்தை எனக்கு கொடுத்து உதவி, இதன் காரியத்தை எடுத்துக்கூறியவர் மும்பை சகோ.தேவதாஸ். இவருக்கு எனது நன்றி.





படம் - 11

132. மும்பை பாஸ்டர் டேனியேல் கிறிஸ்டியானுக்கு தொழிலில் போட்டி குஜராத்தில் மட்டுமல்ல, தமிழ்நாட்டிலும் எழுந்துள்ளது. மேலே கேஸ்சிலிண்டரில் அக்கினிஸ்தம்பம் விழுந்துள்ள புகைப்படத்தை எனக்கு கொடுத்து சென்னை, நுங்கம்பாக்கம், சகோ.தேவநேசன் என்னிடம் கூறியதாவது: இவரது இளைய சகோதரன் சகோ. டேவிட் ராஜன் கடந்த ஆண்டு தன்னுடைய பணிநிமித்தமாக மும்பையில் ஒரு மாதம் தங்கியிருந்தாராம். அப்பொழுது பாஸ்டர் டேனியேல் கிறிஸ்டியான் சபைக்கு சென்று வந்தாராம். அப்பொழுது பாஸ்டர் டேனியேல் கிறிஸ்டியான் அவருடைய ஊழியத்தில் அக்கினி ஸ்தம்பம் இறங்கி சாட்சி கொடுத்ததாக அநேக புகைப்படங்களை அவருக்கு கொடுத்து அனுப்பியிருக்கிறார். அவர் அந்த படங்களை கொண்டுவந்து தன் அண்ணன் சகோ.தேவநேசனிடம் காட்டி, பாஸ்டர் டேனியேல் கிறிஸ்டியான ஊழியத்தை புகழ்ந்து பேசியிருக்கிறார். அவர் கொடுத்த அக்கினி ஸ்தம்பம் சாட்சி புகைப்படங்களை பார்த்ததும் சகோ.தேவநேசனுக்கு அதன் மேல் நம்பிக்கை இல்லை, மாறாக சந்தேகமே அதிகம் எழும்பியுள்ளது. ஏனென்றால் தேவனுடைய வித்துக்களை சாத்தான் ஒருக்காலும் வஞ்சிக்க முடியாது அல்லவா!

133. உடனே பாஸ்டர் டேனியேல் கிறிஸ்டியான் உற்பத்தி செய்த அக்கினி ஸ்தம்பம் புகைப்படங்களை தனக்கு அறிமுகமான ஒரு புகைப்படக்காரரிடம் கொண்டு சென்று, அக்கினி ஸ்தம்பம் புகைப்படம் குறித்து விளக்கம் கேட்டிருக்கிறார். அவர் உங்கள் ஊழியக்காரர் உயிருள்ள, செத்த மனிதர்கள் மேல் அக்கினி ஸ்தம்பம் இறங்கியதாக புகைப்படங்கள் எடுத்துள்ளார். நான் உயிரற்ற ஒரு ஜடலம் மீது அக்கினி ஸ்தம்பம் விழுவதை புகைப்படம் எடுத்து தருகிறேன் என கூறி, பின் மறுநாள் தன் வீட்டு கேஸ் சிலிண்டர் மீது அக்கினி ஸ்தம்பம் இறங்கியதாக புகைப்படம் எடுத்துக் கொடுத்திருக்கிறார்.

134. இப்படியாக, நான் கிறிஸ்துவின் சரீரமாகிய சபை பக்திவிருத்தியடைய கர்த்தரால் அப்போஸ்தலனாக, சுவிசேஷகனாக, பாஸ்டராக ஏற்படுத்தப்பட்டுள்ளேன் என்று கூறி மக்களை ஏமாற்றும் கள்ளகபடமுள்ள வேலையாள் மும்பை பாஸ்டர் டேனியேல் கிறிஸ்டியான் ஊழியத்தில் அக்கினி ஸ்தம்பம் ஒரு கேலி கூத்தாகிவிட்டது. பாருங்கள், பாஸ்டர் டேனியேல் கிறிஸ்டியான் பிரசுரித்தது அக்கினி ஸ்தம்பம் என்றால், திரு.ஏலக்குமார் மற்றும் சகோ.தேவநேசன் பிரசுரித்ததும் அக்கினி ஸ்தம்பமே. அதை யாரும் மறுக்க முடியாது. பாஸ்டர் டேனியேல் கிறிஸ்டியான் ஊழியத்தில் அநேகர் வஞ்சிக்கப்பட்டார்கள். இது என்ன? சத்தியத்தை விசுவாசியாமல் அநீதியில் பிரியப்படுகிற யாவரும் ஆக்கினைக்குள்ளாக்கப்படும்படிக்கு தேவன் அனுப்பிய வஞ்சகம். எவனொருவன் ஊழியத்தின் பேரில் தனக்காக சொத்துக்களையும் ஆஸ்திக்களையும் சேர்க்கிறானோ, எவனொருவன் ஆடம்பர வாழ்க்கை ஊழியத்தின் பேரில் வாழ்கிறானோ அவன் என்றுமே ஒரு வஞ்சகன், கள்ளகபடமுள்ள வேலையாள் என்பதை நீங்கள் அறிந்து கொள்ளுங்கள். மந்தையில் பசி, பட்டினி, தாகம் இருக்கும் போது ஒரு தேவனுடைய ஊழியக்காரன் எப்படி ஆடம்பரமாக வாழமுடியும்? சுகபோகமாக

வாழமுடியும்? முடியாதே! இவரும் அவர்களில் ஒருவனாக அல்லவா இருக்கவேண்டும்? சபை ஒரு குடும்பம் அல்லவா? மேய்ப்பன் ஒரு குடும்ப தலைவன் அல்லவா? என் பிள்ளைகள் பசியிலும், பட்டினியிலும், உடுக்க தகுந்த ஆடைகளும் இல்லாது வாழும் சமயம் நான் எப்படி ஆடம்பரமாகவும், உல்லாசமாகவும் வாழமுடியும்? இந்நாட்களில் மந்தைக்காக மேய்ப்பன் இல்லை. மாறாக மேய்ப்பனுக்காகவே மந்தை என்ற நிலையுள்ளது. இது என்ன? இது தான் வஞ்சகம்.



- படம் - 12

கிறிஸ்து பிரன்காம் அடக்கம் பண்ணப்பட்ட மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார். பரத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டார். அதை நிருபிக்க, நிலைநிறுத்த இதோ ஒரு மேகஸ்தம்ப காட்சி என வேலூர் எஸ்.தாமஸ் இந்த புகைப்படத்தை வெளியிட்டுள்ளார். THE REAL EASTER BY BRO. S. THOMAS பாஸ்டர் டேனியேல் கிறிஸ்டியான் நீக்ரோ பெண் உயிர்த்தெழுந்ததை புகைப்படம் எடுத்தார். நான் அவரிலும் குறைந்தவன் அல்ல. சகோ.பிரன்காம் உயிர்த்தெழுந்தார், அவர் உயிர்த்தெழுந்ததை என்னால் புகைப்படமாக எடுக்க முடியும் என சவால்விட்டு மேற்கண்ட புகைப்படத்தை தயார் செய்து எடுத்துள்ளார். பாருங்கள் எங்கும் எதிலும் இனம் இனத்தையே சேருகிறது. எல்லாமே ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள் தான். இரண்டுமே பிசாசு தான்.

**135. பிரியமானவர்களே, ஒருவன் தேவனுடைய வித்து இல்லை என்றால், இந்த வஞ்சிப்பு காலத்திலிருந்து தப்பவே முடியாது. அந்த அளவுக்கு எங்கும் எதிலும் வஞ்சிப்பு, வஞ்சிப்பு. உபதேசங்களில் வஞ்சிப்பு, புகைப்படங்களில் வஞ்சிப்பு, சாட்சிகளில் வஞ்சிப்பு, வாழ்க்கையில் வஞ்சிப்பு, ஊழியத்தில் வஞ்சிப்பு. ஆக வஞ்சிப்பு, வஞ்சிப்பு என்ற மயம் தான் எங்கும்.**

136. முடிவாக கோவை ராஜாவின் உபதேசங்கள் ஒரு வஞ்சிப்பு, மும்பை டேனியேல் கிறிஸ்டியாவின் அக்கினி ஸ்தம்பம் ஒரு வஞ்சிப்பு. வேலூர் எஸ். தாமஸ் ஊழியங்களும், புகைப்படங்களும் ஒரு வஞ்சிப்பு.

## இந்த விநோதமான மேகம் என்ன?

137. இங்கு ரெவ.E.ஷியர்ல் அவர்கள் எழுதிய ***இந்த விநோதமான மேகம் என்ன?*** என்ற கைப்பிரதியில் இரு பத்திகளை விட்டுவிட்டு நீங்கள் ஏழு தூதர்களால் உருவான அந்த அதிசய மேகவளையத்தை குறித்து அறிந்து கொள்வதற்கு ஏதுவாக எழுதுகிறேன்.

1. விஞ்ஞானத்திற்கு இது இன்னும் விளங்காத ஒரு புதிராகவே இருக்கிறது. ஆனால் உங்களுக்கு இது என்னவாய்த் தோன்றுகிறது? தேவன் இந்நாட்களில் நடப்பிக்கின்ற அவருடைய கிரியைகளுக்கு ***இந்த மேகம் ஓர் அடையாளமாக இருப்பதால்,*** கீழே கொடுக்கப்பட்டுள்ள விவரங்களை நீங்கள் சற்று ஆராய்ந்து பார்க்க வேண்டுமென்று விரும்புகிறேன்.

2. இந்த மேகமானது சுமார் 50 மைல் நீளமும் 30 மைல் அகலமும் பூமிக்குமேல் 26 மைல் உயரமுமாயுள்ளது என விஞ்ஞானிகள் கணக்கிட்டுள்ளனர். மேலும் இந்த மேகமானது பூமியின் வானவெளி எல்கைக்கு அப்பாலுள்ளதால், இவ்வளவு உயரத்தில் ஒரு மேகம் உண்டாக முடியாது எனவும் அவர்கள் கூறுகின்றனர்.

3. 1963 ஆம் ஆண்டு பிப்ரவரிமாதம் 28 ஆம் தேதியன்று மாலை வேளையில், அமெரிக்க ஐக்கிய நாடுகளிலுள்ள அரிசோனாவின் ஆகாய வெளியிலே இந்த மேகம் தோன்றியது. இதை 35 வித்தியாகப்பட்ட இடங்களிலிருந்து 85 புகைப்படங்கள் எடுத்தார்கள். இப்படி ஒரு மேகத்தை உண்டாகத்தக்கதான ஒரு ராக்கெட்டோ, உயரபறக்கக் கூடிய சாதனமோ அல்லது வானவெளிக் கருவியோ அந்தக் குறிப்பிட்டநேரத்தில் அரிஸோனாவின் ஆகாய வெளியிலே காணப்படவில்லை என்பதை கவனமான ஆராய்ச்சி நிரூபித்தது. இதற்கேற்றாற்போல நீண்டகாலமாக மேகங்களைத் தொடர்ச்சியாக கவனித்து ஆராய்ச்சி செய்யும் ஒருவர், மேகங்களை நோக்கி ஆராய்ந்ததில் நான் இது வரையும் என் ஜீவிய நாட்களில் இப்படிப்பட்ட ஒரு அழகிய மேகத்தைக் கண்டதில்லை" என்று அழுத்தமாகக் குறிப்பிட்டுள்ளார்.

4. 1963 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 19-ம் தேதியின் "சயன்ஸ்" மேகஸின்" (science magazine) என்ற ஆங்கில வெளியீட்டின் மேலட்டையில் காணப்படும் இப்புகைப்படம் 1963, மே, 17-ம் தேதியின் "லைப் மேகஸின் (Life Magazine) என்ற ஆங்கில வெளியீட்டிலும், லண்டன் அப்ஜெர்வா், (London Observer) என்ற ஆங்கில புத்தகத்திலும் பிரசுரிக்கப்பட்டது. என்சைக்கிலோபீடியா பிரிட்டானிக்கா (Encyclopaedia Brittannica) என்ற புத்தகமும், தன்னுடைய 1965-ம் வருடத்திய வெளியீட்டில் இந்த மேகத்தைக் குறித்த தகவற்குறிப்புக்களைக் கொண்டுள்ளது.

5. இப்பொழுது நீங்கள் இதை முழுவதுமாக அறிந்து கொள்ள முடியாது. ஆனால் தேவன் நாம் அறிந்திருக்கிறதான வேதவார்த்தையாகிய பரிசுத்த சேதாகமத்தில் (Holy Bible) வாக்குத்தத்தமொன்றைச் செய்திருக்கிறார். "கர்த்தராகிய இயேசு கிறிஸ்து சபையை எடுத்துக் கொள்ளவரும் இந்தக் கடைசி நாட்களில். தம்முடைய வருகைக்கு முன்பாக ஒரு தீர்க்கதரிசியை அனுப்பி, தேவனுடைய பிள்ளைகளை தேவனுடைய வார்த்தைக்குத் திருப்பி, தம்முடைய ஜனங்களை தம்முடைய வருகைக்கு ஆயத்தப்படுத்துவார்" என்பதே அந்த வாக்குத்தத்தமாகும்.

6. எலியாவின் ஆவியும் பெலனும் உடையவராய் வந்த அந்த தீர்க்கதரிசி வில்லியம் மரியான் பிரன்காம் என்பவரே யாவார். (மல்கியா 4:5-6, மத்தேயு 17:11, வெளி 10:7). உண்மையாகவே, தேவன் இந்தத் தீர்க்கதரிசியின் ஊழியத்தின் மூலமாகத் தம்முடைய வார்த்தையை அநேக வழிகளில் உறுதிப்படுத்தினார்.

7. மேகம் தோன்றுவதற்குக் காரணமாயிருந்த இந்த மகத்தான அனுபவத்தைக் குறித்த தரிசனமொன்றை, அது நடப்பதற்கு இரண்டு மாதங்களுக்கு முன்பாகவே, கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தாமே 1962 ஆம் ஆண்டு டிசம்பர் 22-ல் சகோதரன் பிரன்காமுக்கு கொடுத்தார். அப்போது இந்த தரிசனத்தைத் தம்முடைய சபையிலும் இவர் எடுத்துக் கூறினார்.

8. இந்தத் தரிசனம் தேவனால் உண்டானது என்பதை விசுவாசித்தவராய் சகோதரன் பிரன்காம் அது நிறைவேற வேண்டிய இடமான மேற்கேயுள்ள அரிசோனாவுக்கு (Arizona -U.S.A.) சென்றார். 1963-ம் ஆண்டு ஜனவரி மாதம் "போனிக்ஸ்" (Phoenix) என்ற இடத்தில் கன்வென்ஷன் கூட்டம் ஒன்று நடந்தது. சகோதரன் பிரன்காம் இந்த தரிசனத்தின் விளக்கங்களை கன்வென்ஷனுக்கு வந்திருந்த ஜனங்களுக்கு எடுத்துச் சொல்லி ஏதோ ஒரு விசேஷமான காரியம் சம்பவிக்கப் போகிறபடியால், விழிப்போடு கவனிக்குமாறு கூறினார்.

9. 1963-ம் ஆண்டு பிப்ரவரி 28-ம் தேதியன்று அமெரிக்காவைச் சேர்ந்த அரிஸோனாவிலுள்ள டியூசான் (Tuscon) என்ற இடத்திற்கு சுமார் 40 மைல் வடகிழக்கு புறத்திலுள்ள ஓரிடத்தில் இரண்டு கிறிஸ்தவ சகோதரர்களோடு கூட சகோதரன் பிரன்காம் வேட்டையாடிக் கொண்டிருந்தார். அப்பொழுது ஏழு பலமுள்ள தூதர்கள் ஒளியின் வேசத்தில் வானத்திலிருந்து இறங்கி வந்து சகோதரன் பிரன்காமை தூக்கிச் சென்று தங்கள் மத்திலே நிறுத்தினார்கள். அவர் கிழக்கேயுள்ள "ஜெபர்ஸன்வில் (Jeffersonville) என்ற இடத்துக்குச் சென்று, வெளிப்படுத்தலின் புத்தகம் ஆறாம் அதிகாரத்திலிருந்து அவருக்கு வெளிப்படுத்தப்படப்போகிறதான ஏழு முத்திரைகளின் இரசகசியங்களைப் பிரசங்கிக்கும்படியாக அவருக்கு கட்டளை (commission) கொடுத்தார்கள். அவ்வாறே, காலங்களாய் மறைக்கப்பட்டிருந்த இந்த இரகசியங்கள் அவருக்கு வெளிப்படுத்தப்பட்டன. அவர் இவைகளை 1963-ம் ஆண்டு மார்ச் 17-ந் தேதியிலிருந்து 24-ந் தேதி வரைக்கும் பிரசங்கித்தார். இந்தச் சத்தியங்கள் மெய்யாகவே, கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் வருகைக்கு முந்தியதான நேரத்திலே நாம் ஜீவித்துக் கொண்டிருக்கிறோம் என்பதை வெளிப்படுத்துகின்றன.

10. இந்த தூதர்களின் சந்திப்புக்கும், மேகத்திற்கும் என்ன சம்பந்தம்? என்று நீங்கள் ஆச்சரியப்படலாம். ஆகாயத்திலே காணப்பட்ட இந்த மேகம் போன்ற தோற்றம், அவருக்குக் கட்டளை கொடுத்துத் திரும்பிச்சென்ற தூதர்களால் உண்டானது என்று தேவனுடைய தீர்க்கதரிசி கூறுகின்றார். ***இந்த நிகழ்ச்சியானது, வேத வாக்கியங்களிலுள்ள மகத்தான சம்பவமாகிய "ஏழு முத்திரைகளின் இரகசியங்களின் வெளிப்படுத்தலை உறுதிப்படுத்துகிறதாயும், சுட்டிக் காட்டுகிறதாயும் இருக்கிறது.*** கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் வருகைக்கு காத்திருக்கும் ஒவ்வொரு விசுவாசிக்கும் இந்த வெளிப்பாடு மிக இன்றியமையாததாகும்.

11. இயற்கைக்கு மேற்பட்டதான இந்த மேகப்படத்தை ஒட்டிய எல்லா நிகழ்ச்சிகளையும் குறித்து விளக்கமாக எழுதவேண்டுமானால் ஒரு சிறு புத்தகமே வெளியிட வேண்டியிருக்கும். மேலே சொல்லப்பட்ட காரியங்கள் அனைத்தும் அதை குறித்த சுருக்கமேயாகும். நீங்கள் இதைக் குறித்த விளக்கங்களை மேலும் அறிய விரும்பினால் சகோ.பிரன்காம் தாமே எடுத்துரைக்கின்ற, 1962 டிசம்பர் 30-ல் பேசிய, "ஐயா இது எந்த நேரம்? (Sirs,What is the Time?) என்ற ஆங்கில செய்தியிலிருந்து விளங்கிக் கொள்ளலாம். அதோடு 1965 நவம்பர் 27-ம் தேதியன்று, அமெரிக்காவிலுள்ள ஷிரிவ்போர்ட் (Shreve port) என்ற இடத்தில் கிறிஸ்தவ வியாபாரிகள் சங்கத்தில் (Christian Business Men) தேவனுடைய சித்தமில்லாமல் அவருக்குச் செய்யும் ஊழியம் (Doing God a Service without His will) என்ற ஆங்கில செய்தியிலும் அதைக் குறித்து அவர் பேசியுள்ளார். ***இருபதாம் நூற்றாண்டின் தீர்க்கதரிசி*** (Twentieth Century Prophet) என்ற புத்தகமும் மேகத்தைக் குறித்த விளக்கங்களைக் கொண்டதாயிருக்கிறது.

12. முதன்மையாக (original) எடுக்கப்பட்ட புகைப் படங்களும். அவைகளைக் கொண்டு பிரசுரிக்கப்பட்ட பளபளப்பான (Glossy) படங்களும் பக்க வாட்டிலிருந்து பார்க்கும் போது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் முழு முகத்தையும் வெளிப்படுத்துகிறதாயிருக்கின்றன. தேவனுடைய பூரணசித்தத்தில் காணப்பட வாஞ்சிக்கிற நம் ஒவ்வொருவரையும் இந்த இயற்கைக்கு மேற்பட்ட மேகவளையத்தைக் குறித்த உண்மை, எங்ஙனம் தேவனுடைய வார்த்தையோடு இசைந்திருக்கிறது என்பதை தேவன் தாமே தம்முடைய பரிசுத்த ஆவியைக்கொண்டு நமக்கு விளங்கப் பண்ணும்படி நாம் அவரை வேண்டிக் கொள்ள நம்மை ஏவட்டும்.

13. கர்த்தர், தம்முடைய தீர்க்கதரிசியை அனுப்பியிருப்பாரானால் இக்காலத்தின் சபையின் நிலையை ஆதி சபையின் நிலைக்குத் திருப்பும்படியாக நான் என்னுடைய தீர்க்கதரிசியை அனுப்புகிறேன் என்ற தேவனுடைய

வார்த்தையின் வெளிச்சத்திலே ஒவ்வொரு தேவனுடைய பிள்ளையும் நடக்க வேண்டியது அத்தியாவசியமாயிருக்கிறது. இதுவே என்னுடைய ஆலோசனையாகும்.

14. இவ்விதமான சத்தியங்கள கட்டுப்பட்ட ஸ்தாபனங்களின் உபதேசத்திற்கு எதிர்மாறாகக் காணப்படலாம். ஆனால் தேவனோ மனுஷருடைய உபதேசங்களுக்குக் கட்டுப்பட்டவரல்ல. தேவனுடைய வார்த்தையில் எழுதியிருக்கிறபடியே அவருடைய வார்த்தை நிறைவேறும். தேவன் அனுப்பினவரை ஏற்றுக் கொள்வது நமக்கு அவசியமாயிருக்கிறது. நாம் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டிருப்போமானால் அல்லது அவ்விதமான அனுபவத்தை வாஞ்சிப்போமானால் தேவன் தாம் நடப்பித்தவைகளை நாம் நிச்சயமாகவே உணர்ந்து ஏற்றுக் கொள்ளும்படி செய்வார்.

15. நீங்கள் நினையா நாழிகையிலே மனுஷகுமாரன் வருவார். ஆதலால் நீங்களும் ஆயத்தமாயிருங்கள் என்று மத்.24:44-ல் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தாமே சொன்ன வார்த்தைகளை சிந்தனையில் வையுங்கள்.

*16.* இந்த கைப்பிரதியின் தமிழாக்கம் மற்றும் வெளியீடு ***ஏல் பெத்தேல் ஜெபவீடு,*** சென்னை - நன்றி.

***138. மேற்கூறிய 15 பத்திகளிலிருந்து நீங்கள் அறிந்து கொண்டது என்ன? விநோதமான அந்த மேகம் குறித்து இதற்கு மேல் விளக்கம் கொடுக்க முடியாது. அவர் ஏழு முத்திரைகளை உடைத்து அதன் இரகசியத்தை வெளிப்படுத்துவதற்கு முன்பு, அவர் அந்த அற்புதத்தை முதலில் வானத்தில் காண்பித்தார். அவர் அதை பூமியில் செய்வதற்கு முன்பே, அதை வானங்களில் வெளிப்படுத்துகிறார். வானங்கள் அவரை வெளிப்படுத்துகின்றன. சங். 19:1. (ஷாலோம், பக்கம் 22, 23, பத்தி 64,66) அவர் தமது கிருபையுள்ள வசனத்திற்கு சாட்சியாக அடையாளங்களும், அற்புதங்களும் அவர்கள் கைகளினால் செய்யப்படும்படி அநுக்கிரகம் பண்ணினார். அப்.14:3. இந்த மேகம் ஏழு முத்திரைகளின் இரகசியங்களில் வெளிப்படுத்தலை உறுதிப்படுத்த வானத்தில் தோன்றிய ஒரு அடையாளமேயன்றி மற்றப்படி எதுவுமே இல்லை. இது எந்த வகையிலும் கர்த்தருடைய வருகை கிடையவே கிடையாது. ஆதலால் இந்த மேவளையத்தைக் கொண்டு இது கர்த்தருடைய வருகையில் ஒரு பாகம், இரண்டாவது பாகம் என்றெல்லாம் கூறி செய்தியை புரட்டுவது பிசாசு. இந்த மேகத்திற்கும் வெளி.10:1 பலமுள்ள தூதனின் தோற்றத்திற்கும் எந்தவிதமான சம்மந்தமும் கிடையவே கிடையாது. மாறாக இது வெளி.8:1 அரைமணி நேர சம்பவமும் கிடையாது. விநோதமான மேகவளையம் குறித்து இதற்கு மிஞ்சின உபதேசங்கள் யாவும் சர்ப்பத்தின் வித்தினுடையது. கோவை ராஜா யார்? நிச்சயமாக அவர் ஒரு சர்ப்பத்தின் வித்தே.***

139. ஏழு முத்திரைகளால் முத்தரிக்கப்பட்ட புத்தகத்தை திறக்கவும், முத்தரைகளை உடைக்கவும் ஆட்டுக்குட்டியானவர் ஒருவரே தகுதியுள்ளவர். ஏழு முத்தரைகளின் இரகசியம் வெளிப்படுத்தபடுவது மனுஷகுமாரனுடைய ஊழியம். ஆதலால் தான் ஏழு தூதர்களின் கூட்டம் மனுஷகுமாரனை வெளி.1:13, 14-க்கு ஒப்பாக அவருடைய சிரசும், மயிரும் வெண்பஞ்சைப் போலவும், உறைந்த மழையை போலவும் வெண்மையாக காணும்படி சபைக்கு வெளிப்படுத்தினார்.

140. இப்பொழுது சரியாக சூரியஅஸ்தமனம் மலையின் மேல் சூரியஅஸ்தமனம் வெளிச்சம். சாயங்கால வெளிச்சம் வந்துவிட்டது. தேவன் தம்மை உறுதிப்படுத்துகிறார். அது என்ன? தேவனும் கிறிஸ்துவும் ஒருவரே என்னும் உண்மையாகும். அந்த ***வெள்ளை*** எதனை போல, நாம் வெளிப்படுத்தல் முதலாம் அதிகாரத்தில் பேசின விதமாக அவருடைய தலையின் மேல் இந்த தலை அங்கியை கண்டீர்கள்! பாருங்கள், சகல அதிகாரத்தையுடைய பிரதான தேவன்! வேறே சத்தம் இல்லை, வேறே தேவன் இல்லை, வேறு ஒன்றும் இல்லை. தேவத்துவம் சரீரப்பிரகாரமாக அவருக்குள் வாசமாயிருக்கிறது. தூதர்களே அவருடைய தலை அங்கி. ஆமென். (***மலையின் மேலுள்ள கவர்ச்சி என்ன?*** பத்தி 147)

*141.* டூசான் நகரில் உள்ள பெரிய வானிலை ஆராய்ச்சி கூடங்களில் உயரத்திலிருந்த அதை புகைப்படம் எடுத்திருக்கிறார்கள். என்ன நிகழ்ந்தது என்று இன்னமும் ஆச்சரியப்படுகிறார்கள். அது என்ன? யாருக்காவது அதை பற்றி தெரியாது. தெரியுமா? என்ன, அது எப்படி நேர்ந்திருக்க கூடும்? என்று இன்னமும் செய்திதாள்களில் கேட்கிறார்கள். அவ்வளவு உயரத்தில் வானத்தில் 30 மைல் உயரத்தில் மூடுபனியோ, காற்றோ, ஈரப்பசையோ கிடையாது. என்ன ஆச்சரியம்.! **உயர வானத்தில் அடையாளங்கள் காணப்படும். மேலும் இந்த காரியங்கள் நிகழும்போது, பல்வேறு இடங்களில் பூகம்பங்கள் ஏற்படும்போது *அப்பொழுது மனுஷகுமாரனுடைய அடையாளம் வானத்தில் காணப்படும்.* அந்த நாளில் லூக்கா 17 மனுஷகுமாரன் தம்மை மறுபடியும் வெளிப்படுத்துவார். அவர் தாமே வெளிப்படுத்தப்பட்டிருப்பார்.** .. வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள். அவைகளில் உங்களுக்கு நித்திய ஜீவன் உண்டு என்று எண்ணுகிறீர்களே, வார்த்தையை குறித்து சாட்சி கொடுக்கிறவைகளும் அவைகளே. சத்தியத்தைக் குறித்தும், தேவன் இந்த மணி வேளையில் செய்கிற காரியங்களைக் குறித்தும் சாட்சி கொடுக்கிறவைகள் அவைகளே. (***தேவ சித்தத்திற்கு புறம்பாக அவருக்கொரு சேவை செய்தல்,*** பத்தி 167, நாள் 18-07-1965) கர்த்தர் தம்மை வார்த்தையின் மூலம், தோற்றத்தின் மூலம் நமக்கு வெளிப்படுத்திக்கொண்டு வருகிறார். ஆதலால் அவருடைய வருகை பிரகாசமடைந்து வருவதை நாம் உணருகிறோம்.

***142. கிறிஸ்துவுக்குள் எனக்கு பிரியமானவர்களே, 28-02-1963 அன்று தோன்றிய அதிசய மேகவளையம் மனுஷகுமாரனுடைய அடையாளமேயன்றி, தேவன் இந்த மணிவேளையில் செய்கிற காரியங்களை குறித்து சாட்சி கொடுப்பதாகுமேயன்றி அது:***
***அ) அரைமணிநேர அமைதல் கிடையாது.***
***ஆ) பலமுள்ள வேறொரு தூதனுடைய வருகையல்ல.***
***இ) தலைக்கல் வருகை அல்ல.***
***ஈ) கர்த்தருடைய இரண்டாம் வருகையும் அல்ல, வருகையில் ஒரு பாகமும் அல்ல.***

***இவைகள் யாவும் நம் மத்தியிலுள்ள போலி கோவை ராஜாவின் நயவஞ்சக உபதேசங்கள் ஆகும். இவைகளில் நீங்கள் சிக்குண்டு உங்கள் பந்தய பொருளை இழந்து போகாதீர்கள். செம்மறி ஆடுகளே என் சத்தத்திற்கு செவிகொடுக்கும். வெள்ளாடுகள் ஒருக்காலும் செவிகொடுக்காது.***

## தலைக்கல் வந்துவிட்டது - கோவை ராஜாவின் லௌகிக ஞானம்

143. இப்பொழுது மாறுபாடான போதனைகளை கா்ப்பந்தரித்து, அதை இருதயத்திலிருந்து புறப்படப்பண்ணும். கோவை ராஜாவின் ***தலைக்கல்*** உபதேசம் பிசாசினுடையது, அது உங்களை சத்தியத்தை விட்டு விலக செய்து, உங்கள் விசுவாசத்தை கவிழ்த்து போடும் வஞ்சகம் என்பதை இங்கு காண்போம்.

1. பொதுவாக தலைக்கல் வந்துவிட்டது என உபதேசிக்கிறவா்கள் ***ஒன்றாயிருத்தல்*** செய்தியில் பக்கம் 59 பத்தி 183ஐ குறிப்பிட்டு ***இப்பொழுது அவர் பெந்தெகொஸ்தேயிலிருந்து தெரிந்து கொள்ளப்பட்டவர்களை அழைத்து தலைக்கல் அதற்குள் வரும்படி செய்கிறார்*** எனவும், ***அவர் சீக்கிரமாக வந்து சரீரத்தை உரிமை கோரி பெற்று கொள்வார். ஆமென்! தலையானது சரீரத்திற்கு வருகிறது. உங்களுக்கு புரிகிறதா?*** என்ற பகுதியை ***கேள்விகளும் பதில்களும்*** 2:20-ல் பக்கம் 47, பத்தி 116-லிருந்து குறிப்பிடுகிறார்கள்.

2. ***ஒன்றாயிருத்தல்*** செய்தி 11-2-1962-ல் பிரசங்கிக்கப்பட்டது. இங்கு ***சரீரத்துக்குள் தலைக்கல் வரும்படி செய்கிறார்*** என தீர்க்கதரிசி கூறுகிறார். ***கேள்விகளும் பதில்களும்*** 2:20 23-8-1964-ல் பிரசங்கிக்கப்பட்டது. இங்கு ***தலையானது சரீரத்துக்கு வருகிறது*** என கூறுகிறார். இந்த இரு பகுதிகளிலும் ***தலைக்கல் வந்துவிட்டது*** என தீர்க்கதரிசி கூறவேயில்லை.

3. மேலும் நீங்கள் இதே ***கேள்விகளும் பதில்களும்*** 2:20-ல் 118வது பத்தியை வாசித்தால் அங்கு தீர்க்கதரிசி ***தலைக்கல் இனி வரவேண்டும்*** என கூறுகிறார். செய்தி தலைக்கல் வருகை குறித்து இவ்வண்ணமாக இருக்க, இவர்கள் தலைக்கல் வந்துவிட்டது என்று கூறுவது எப்படி?

4. தீர்க்கதரிசி 1965-ல் கீழ்க்கண்டவாறு பிரசங்கிக்கிறார். அவருடைய நாமத்திற்கென்று சபை வெளியே அழைக்கப்பட்டு வருகிறது. அவர் உலகிலுள்ள எல்லா ஸ்தாபனங்களிலிருந்தும் உலகிலிருந்தும், உலகத்தின் அசுத்தத்திலிருந்தும், உலகத்தின் காரியங்களிலிருந்தும் தமது மணவாட்டியை வெளியே அழைத்துக்கொண்டிருக்கிறார். (***கிறிஸ்துவின் மணவாட்டியின் காணக்கூடாத இணைப்பு,*** பக்கம் 70,கடைசி பத்தி 25-11-1965.) 1965 வரை மணவாட்டியை தேவன் வெளியே அழைத்துக்கொண்டிருக்கும் வேளையில் இவர்கள் 1963-ல் தலைக்கல் வந்துவிட்டது என்று எப்படி உபதேசிக்கிறார்கள்? கடைசி நபர் சரீரத்திற்குள் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிறகு தான் கிறிஸ்து வருவார். அது எப்பொழுது? நாம் அறியோம். தேவன் ஒருவரே அறிவார்.

5. இது தேவனும் அவருடைய மணவாட்டியும் இணையும் நேரம் கூட. கிறிஸ்துவின் மணவாட்டி அழைக்கப்பட்டாள் என்று நான் விசுவாசிக்கிறேன். அவள் தேவனுடைய இராஜ்யத்தில் முத்திரிக்கப்பட்டாள் என்று நான் விசவாசிக்கிறேன். எல்லாம் ஒன்று சேர்க்கப்பட்டு இயங்க ஆயத்தமாயுள்ளது என்று நான் விசுவாசிக்கிறேன். அவர்கள் பூமியிலிருந்து அவளை மகிமைக்குள் எடுத்துக்கொள்ளப்படுதலில் கொண்டு செல்லயிருக்கும் இயக்கும் சக்திக்காக காத்துக்கொண்டிருக்கின்றனர். அவர் எப்படி அதை செய்யப்போகிறார் என்று நமக்கு தெரியாது. ஆனால் அவர் அதை செய்வார். அவரே இயக்கும் சக்தி. ***(கிறிஸ்து என்னப்பட்ட இயேசுவை நான் என்ன செய்ய வேண்டும்*** பத்தி 115,116 நாள் 24-11-1963)

***6. ஆக 1965 வரை தலைக்கல் வரவில்லை. அது இனி வரவேண்டியதாயிருக்கிறது என செய்தி கூற கோவை ராஜா 1963-ல் தலைக்கல் வந்துவிட்டது என உபதேசிப்பது வருவதற்காக ஒன்றை வாஞ்சையுடன் எதிர்நோக்கிக் கொண்டிருக்கும் மக்களுக்கு, வந்துவிட்டது என கூறி அவர்களை சோர்ந்து போகசெய்து, பந்தய பொருளை இழக்க செய்யும் சாத்தானின் இக்கடைசிக்கால கொடிய வஞ்சக உபதேசம் ஆகும்.***

7. தலைக்கல் சரீரத்துடன் இணைந்து விட்டதா? இவர்கள் தீர்க்கதரிசியின் காலத்தில் இயேசு கிறிஸ்து பூமிக்கு வந்து விட்டார், ஆதலால் சரீரத்துடன் இணைந்து விட்டது, இப்பொழுது நான், நான் அல்ல. நான் கோவை ராஜா அல்ல. நான் கிறிஸ்து என்கிறார்கள். ஆனால் இவர்களுடைய வாழ்க்கை, கிறிஸ்துவை பிரதிபலிக்க காணோமே? இவர்களுடைய வாழ்க்கையில் மாம்சத்தின் கிரியைகள் அனைத்தும் காணப்படுகிறதே! இவர்களுடைய சரீரமோ அனைத்து அசுத்த ஆவிகளின் குடியிருப்பாக இருக்கிறதே! கோவை ராஜாவே உங்களை நீங்களே சீா்தூக்கிப் பாருங்கள். உங்கள் இல்லற வாழ்க்கை கிறிஸ்துவுக்கும் அவருடைய மணவாட்டிக்கும் உள்ள ஐக்கியத்தை பிரதிபலிக்கிறதாக காணப்படுகிறதா? இல்லவே இல்லை என்று என்னால் கூறமுடியும். உங்கள் வாழ்க்கையே உருட்டும், புரட்டும் தான். காரியம் இப்படியிருக்க உங்களுக்குள் கிறிஸ்து எப்படி வாசம் செய்ய முடியும்?

8. 1965 வரை தலைக்கல் வரவில்லை என்பதை இக்காலத்துக்குரிய செய்தியை கொண்டு தியானித்தோம். ஆதலால் தலைக்கல் 1963-லே வந்து சரீரத்துடன் இணைந்து விட்டது என்று ஒரு தவறான உபதேசம். ***தலைக்கல் சரீரத்துடன் இணைந்தால் உடனே எடுத்துக்கொள்ளப்படுதல் நடைபெறும்.***

9. தீர்க்கதரிசி காலத்தில் இயேசு கிறிஸ்து பூமிக்கு வந்தார். அப்பொழுது தலைக்கல் சரீரத்துடன் இணைந்து விட்டது என்கிறார்கள். இவர்கள் இதற்கு ஆதாரமாக ***ஏழு முத்திரை,*** பக்கம் 963, பத்தி 327ஐ குறிப்பிடுகிறார்கள். ***ஒரே சமயத்தில் நாங்கள் இருவர் இருக்க முடியாது. பாருங்கள்? அப்படியிருக்க நேர்ந்தால், அவர் பெருக வேண்டும். நான் சிறுக வேண்டும். எனக்கு தெரியாது*** என தீர்க்கதரிசி கூறுவதை எடுத்துக்கொண்டார்கள். இங்கு தீர்க்கதரிசி ***எனக்கு தெரியாது*** என்று கூறி அதற்கு முற்றுப்புள்ளி வைத்து விட்டார். இப்படியிருக்க மனதை மயக்குகிறவர்கள் தங்களுக்கு அவருக்கு தெரியாததெல்லாம் தெரியும் என அலட்டிக்கொள்வதென்ன?

*10.* நீங்கள், *ஏழு முத்திரைகள்* பக்கம் 962-ல் பத்தி 321-க்கு வாருங்கள். அங்கு *அவருடைய ஜனங்கள் கிறிஸ்துவின் அதி சீக்கிர வருகையை எதிர்நோக்கியிருக்கின்றனர் எனக் கூறி பத்தி 326-ல் அந்த மகத்தான நபர் தோன்ற நாம் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோமே அவர் தோன்றும் நேரம் இப்பொழுதாக இருக்கலாம். (கிறிஸ்துவின் வருகை வந்துவிட்டது என கூறவில்லை - கா.யோ) ஜனங்களை தேவனுடைய வார்த்தைக்கு திருப்ப முயன்ற என்னுடைய ஊழியம் ஒருக்கால் அதற்கு அஸ்திபாரமாக அமைந்திருக்கும் என்கிறார்.*

*11. இந்த பகுதிகளை நன்கு தியானியுங்கள். ஜனங்கள் கிறிஸ்துவினுடைய/மணமவாளனுடைய வருகையை எதிர்நோக்கிக்கொண்டிருக்கிறார்கள். அவர் தோன்றும் நேரம் இதுவாக இருக்கலாம், என்னுடைய ஊழியம் அதற்கு அஸ்திபாரம் என்றே தீர்க்கதரிசி இங்கு கூறுகிறார். மணவாளனாகிய கிறிஸ்து தம்முடைய மணவாட்டிக்காக வந்து விட்டார் என்று கூறவே இல்லை. அதாவது தலைக்கல் வருவதற்கு அவருடைய ஊழியம் ஒரு அஸ்திபாரம் என்கின்றாரேயென்றி தலைக்கல் வந்துவிட்டது என கூறவே இல்லை.*

***12. தலையும், சரீரமும் ஒன்றாக இணையும் போது என்ன நிகழும்? இது தேவனும் அவருடைய மணவாட்டியும் இணையும் நேரமும் கூட.. கிறிஸ்துவின் மணவாட்டி அழைக்கப்பட்டாள் என்று நான் விசவாசிக்கிறேன். அவள் தேவனுடைய இராஜ்யத்தில் முத்தரிக்கப்பட்டாள் என நான் விசுவாசிக்கிறேன். அவர்கள் பூமியிலிருந்து அவளை மகிமைக்குள் எடுத்துக்கொள்ளப்படுதலில் கொண்டு செல்லவிருக்கும் இயக்கும் சக்திக்காக காத்துக்கொண்டிருக்கின்றனர். .. அவரே இயக்கும் சக்தி .. மணவாட்டி சபையின் இயக்கும் சக்தி பரிசுத்தஆவியினால் மறுபடியும் நிரப்பப்படுவதே. சரீரத்துடன இணைய தலைக்கல் வந்து கொண்டிருக்கும் நேரத்தில் நாம் பரிசுத்தஆவியை அளவுடன் பெற்று கிரியை செய்து கொண்டிருக்கிறோம். ஆனால் தலையும் சரீரமும் ஒன்றாக இணையும்போது பரிசுத்த ஆவியின் முழு வல்லமை அவளை சரியாக அதே விதமாக எழுப்பும். மரித்தவர்கள் கூட, நூறு ஆண்டுகளுக்கு முன்பு கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் அவருடைய பரிசுத்த அலங்காரத்துடன் உயிரோடெழுந்து வானங்களின் வழியாக பறந்து செல்லுவார்கள். இயக்கும் சக்தி பரிசுத்த ஆவியே. (கிறிஸ்து என்னப்பட்ட இயேசுவை நாங்கள் என்ன செய்யவேண்டும்? பத்தி 115,116 செய்தி நாள் 24-11-1963)***

***13. கூர்நுனி கோபுரத்தின் செய்தி உங்களுக்கு ஞாபகம் இருக்கிறதா? அது தலைக்கல். அது என்ன செய்தது? பரிசுத்த ஆவியானவர் தனிப்பட்ட நபரின் மேல் பொருத்தப்பட்டு அதை முத்தரித்தல். எப்பொழுது? நாம் விசுவாசம் என்பதுடன் நீதியையும், தேவ பக்தியையும் கூட்டிக்கொண்டே வந்த போது ஏழு காரியங்களை பெற்றுக்கொள்ளும் வரை நாம் கூட்டிக்கொண்டே வந்தோம். ஆகவே ஏழாவது தேவனுடைய அன்பு ஆகும். அவ்விதமாக தான 'அவர் ஒரு தனிப்பட்ட நபரை உருவாக்கி அவனை பொருத்த பரிசுத்தஆவியினால் அவனை முத்தரிக்கிறார். (ஐயா, இதுதான் முடிவின் அடையாளமா? பத்தி 373)***

***14. ஜீவபுஸ்தகத்தில் முன்குறிக்கப்பட்ட மணவாட்டியானவள் அழைக்கப்படும்போது, வானத்திலிருந்து ஒரு சத்தம் பிறந்து, அது மணவாட்டிக்குள் பரிசுத்தஆவியின் அபிஷேகத்தை அபரிதமாக நிரப்பி, பூமியிலிருந்து அவள் எடுக்கப்படுவதற்கேற்ற கிருபை உண்டாக்கும் என்று நான் விசுவாசிக்கிறேன். தேவன் அதை வாக்குத்தத்தம் செய்திருக்கிறார். (மூவகை விசுவாசிகள், பக்கம் 22, பத்தி 2, நாள் 24-11-1963.)***

***15. இந்த பகுதியை நாம் நன்கு தியானித்தால் நாம் இப்பொழுது பரிசுத்த ஆவியை அளவுடன் பெற்று கிரியை செய்து கொண்டு வருகிறோம். தலையும் சரீரமும் இணையும் போது பரிசுத்த ஆவியின் முழு வல்லமை மணவாட்டியை உயிருடன் எழுப்பும். அந்த இயக்கும் சக்திக்காக இப்பொழுது மணவாட்டி காத்துக்கொண்டிருக்கிறாள் என காண்கிறோம். தலைக்கல் வந்து விட்டது என்று கூறும் நம்முடைய மேதாவிகள் இந்த இயக்கும் சக்தியை பெற்றுவிட்டார்களா? அதாவது பரிசுத்த ஆவியின் முழு வல்லமையை பெற்றுவிட்டார்களா? இல்லவே இல்லை. பரிசுத்த ஆவியின் முழு வல்லமையை அவர்கள் பெற்றிருந்தால் அவர்கள் எப்பொழுதோ எடுத்துக்கொள்ளப்பட்டிருப்பார்கள். ஆதலால் அவர்கள் செய்தியை சரியாக புரிந்து கொள்ளாமல் கூத்தாடுகின்றனர். கோவை ராஜாவே நீங்கள் தேவனுடைய வித்துக்களை வஞ்சிக்க முடியவே முடியாது.***

**16. அதோ அவர் தான் அது. கிறிஸ்து தான் அந்த கல். அவர் தேவஆவியினால் மறுபடியும் பிறந்த ஒரு சபைக்காக வருகிறார். ஏனெனில் அந்த தலைக்கல்லின் சத்துவமானது ஒரு காந்தத்தை போல் சபைக்குள் பாய்ந்தோடுகிறது. .. நாம் தானே அந்த மகத்தான தலைக்கல்லினால் அதன் காந்தத்தினால் கவரப்படவேண்டும். பரிசுத்தஆவியாகிய கிறிஸ்துவே தலைக்கல்லாயிருக்கிறார். பரிசுத்த ஆவியின் காந்த விசையை பெற்றிருக்கும் நாம் ஒவ்வொருவரும் அந்த கல்லானது வந்து அச்சிலையை மோதி அதை நொறுக்குகையில் சபையானது அக்கல்லிடமாக பாய்ந்தோடும். பரிசுத்தவான்களின் எடுத்துக்கொள்ளப்படுதல் நிகழும்போது அந்த நாளுக்குள்ளாக அவள் செல்லுகையில், அவள் மகிமைக்குள்ளாக உயரே எடுத்துக்கொள்ளப்படுவாள். (*தானியேலின் 70 வாரங்கள்.*, பக்கம் 196, பத்தி 139,140)**

***17. பிரியமானவர்களே, தலைக்கல் இறங்கி வந்துவிட்டால் பரிசுத்தவான்கள் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கவேண்டும். இது இரும்பு துண்டுகள் ஒரு காந்தத்தின் ஈர்ப்பு சக்திக்குள் வந்தவுடன் காந்தத்தோடு ஒட்டுக்கொள்வது போன்றதாகும். தலைக்கல் இறங்கும்போது மணவாட்டி பரிசுத்த ஆவியினால் ஈர்க்கப்பட்டு ஆவியோடு ஒட்டிக்கொள்வாள். அது எடுத்துக்கொள்ளப்படுதல் ஆகும். உயிரோடிருக்கும் பரிசுத்தவான்கள் எடுத்துக்கொள்ளப்படுதல். தலைக்கல் இறங்கிவிட்டால் மணவாட்டி உயிரோடிருப்பவள் எடுத்துக்கொள்ளப்படுவாள். எடுத்துக்கொள்ளப்படுதலில் பங்கு பெற***

***நீயும் ஒரு பரிபூரண மனிதனின் வளர்ச்சியை அடையவேண்டும். அவ்வாறாக கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் உள்ள ஒவ்வொரு அவயவமும் பரிபூரண மனிதனின் வளர்ச்சியடைந்தவுடன், தலைக்கல் வரும். மணவாட்டி சபை எடுத்துக்கொள்ளப்படும். இது தான் தலைக்கல்லை குறித்ததான போதனை. ஆதலால் உங்கள் கோவை ராஜாவின் உபதேசம் தாறுமாறானது, மாயமாலமானது, பேய்த்தனத்துக்கடுத்தது.***

18. *இந்த வேத வாக்கியம் இன்றைய தினம் நிறைவேறிற்று* என்ற செய்தியில் 227வது பத்தியை கொண்டு இந்த சந்ததி இயேசு கிறிஸ்து பூமிக்கு திரும்புவதை காணும். நீங்கள் காண இந்த வேதவாக்கியம் இன்றைய தினம் நிறைவேறிற்று என்று இன்று இரவு மறுபடியும் கூறுகிறேன் என்று தீர்க்கதரிசி கூறுவது கொண்டு தீர்க்கதரிசி காலத்தில் மணவாளனாகிய கிறிஸ்து பூமிக்கு வந்துவிட்டார், எலியேசர் மணவாளனுக்கு ரெபெக்காளை அறிமுகப்படுத்திவிட்டான் என்பது கோவை ராஜாவின் ஒரு கேடான சிந்தனை.

*19. நீங்கள் இந்த செய்தியில் 169வது பத்தியிலிருந்து 228வது பத்திவரை பரிசுத்தஆவியின் ஒத்தாசையினால் தியானித்தால் உங்களுக்கு முழு விவரங்கள் புலனாகும். ஆரம்பத்தை பாருங்கள் இந்த நாளை குறித்தும் நாம் வாழும் சமயத்தை குறித்தும் வேதவாக்கியம் என்ன கூறுகிறது? .. சோதோமின் நாட்களில் எப்படி இருந்ததோ அப்படியே மனுஷகுமாரன் வெளிப்படும் நாளிலும் நடக்கும் என்றார். லூக்17:28-30. இப்பொழுது 172வது பத்திக்கு வாருங்கள். நாம்வாழும் இந்த கடைசி காலத்திலே சோதோமில் எப்படி நடந்ததோ, அப்படியே நடக்கும்போது மனுஷகுமாரன் மீண்டும் வெளிப்படுவார் என்று இயேசு கூறினார். மீண்டும் 211வது பத்தியை வாசியுங்கள். சோதோமின் நாட்களில் எப்படி இருந்ததோ அப்படியே மனுஷகுமாரன் வருகையிலும் இருக்கும். ஆமென். அந்த நாள் இதுவே என்றால், இந்த வேதவாக்கியம் நிறைவேறிற்று என்றார். அதாவது லூக் 17:30-ன் நிறைவேறுதலை தீர்க்கதரிசி இங்கு குறிப்பிடுகிறார். இந்த லூக் 17:30-ன் நிறைவேறுதலை தான் கடைசி நாளில் வாழ்ந்து கொண்டிருக்கும் சந்ததி இயேசு கிறிஸ்து பூமிக்கு திரும்புவது காணும், நீங்கள் காண இந்த வேதவாக்கியம் இன்றைய தினம் நிறைவேறிற்று என 220வது பத்தியில் கூறுகிறார். குருடராகிய இவர்கள் லூக் 17:30 நிறைவேறுதலுக்கும் கர்த்தருடைய வருகைக்கும் வித்தியாசம் தெரியாது குருடர்களுக்கு வழிக்காட்டி கொண்டிருக்கிறார்கள்.*

20. *நாம் இயேசுவின் வருகைக்கு அருகில் இருக்கிறோம். அப்பொழுது அவருடைய சபையுடன் அவர் இணைந்து வார்த்தையாகும். (கிறிஸ்துவின் மணவாட்டியின் காணக்கூடாத இணைப்பு, பக்கம் 60, பத்தி 2, நாள் 25-11-1965) லூக் 17:30 கிறிஸ்துவின் வருகைக்கு முன் அவரை அறிமுகப்படுத்துவதாகும். அதாவது மனுஷகுமாரன் தன்னை வெளிப்படுத்துவதாகும்.*

*21. ஏழாம் சபைக்கால தூதன் கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு முன்னோடி அல்ல. அன்று அந்த நட்சத்திரங்கள் ஒரு கூட்டமாக சேர்ந்து அந்த தூதன் தோன்றி யோவான் பழைய ஏற்பாட்டை முடித்து இயேசு கிறிஸ்துவை அறிமுகப்படுத்த எவ்வாறு அனுப்பப்பட்டானோ அவ்வாறே உன் செய்தியும் தளர்ந்த முனைகளை ஒன்று சேர்த்து மேசியாவின் வருகைக்கு சற்று முன்பாக அவரை அறிமுகப்படுத்தும் என்றார். (ஐயன்மீர், இதுவா சமயம்? பக்கம் 70, கடைசி பத்தி.*

22. There is going tobe a Message comeforth, that will introduce the Messiah to the people and it ‘ll be in such a way they will stand dump founded like they did then. He promised it . (***The voice of the sign.*** Para 152, date 21-3-1964) இந்த ஆங்கில பகுதியிலிருந்து 1964 வரை *செய்தி* மணவாளனாகிய கிறிஸ்துவுக்கு மணவாட்டியை அறிமுகப்படுத்தவில்லை என தெரிகிறது. ஆனால் நமது அதிகபிரசங்கிகள் எலியேசர் மணவாளனை மணவாட்டிக்கு 1963-ல் அறிமுகப்படுத்துவிட்டார் என்கிறார்கள். செய்தி தான் மணவாட்டிக்கு மணவாளனை அறிமுகப்படுத்தும். ஏனென்றால் இக்கடைசிக்கால *செய்தி - ஆரவாரம் - சத்தம்* கர்த்தருடையது.

*23. இங்கு நன்கு கவனித்தீர்களானால் யோவானஸ்நானன் இயேசு கிறிஸ்துவின் முதலாம் வருகையில் அவரை அறிமுகப்படுத்த அனுப்பப்பட்டான். ஆனால் சகோ. பிரன்காம் அவ்வண்ணமாக அனுப்பப்படவில்லை. அவருக்கு தேவனால் கொடுக்கப்பட்ட செய்தி - சத்தம் மேசியாவின் வருகைக்கு சற்று முன்பு அவரை அறிமுகப்படுத்தும். செய்தியே அறிமுகப்படுத்தும். சகோபிரன்காம் அறிமுகப்படுத்தவில்லை. இன்று சகோ.பிரன்காம் நம் மத்தியில இல்லை. அவர் நித்திரையில் இருக்கிறார். மரித்தோர் உயிர்த்தெழும் நாளில் அவரும் உயிர்த்தெழுவார். ஆனால் அவர் மூலமாக மணவாட்டிக்கு கொடுக்கப்பட்ட செய்தி இன்னும் நம் மத்தியிலிருந்து நம்மை எடுத்துக்கொள்ளப்படுதலுக்கு நம்மை ஆயத்தப்படுத்திக்கொண்டிருக்கிறது. அல்லேலூயா! ஏனென்றால் அது தேவனுடைய சத்தம், ஆரவாரம், செய்தி.*

24. A voice came that shook all around the place there, said, 'as John the Baptist, was sent to forerun the first coming of Christ, the Message that is given you will be a forerunnning of the Second Coming of Christ, 'Not that I would be a forerunner, but the Message was the forerunning' I know no more than any one else it’s the Christ, We are speaking of (***Testimony, William Branham***. San.Juan. PR.Wednessday 02.10.1960) பாருங்கள் இங்கு சகோ.பிரன்காமே நான் கிறிஸ்துவின் முன்னோடி அல்ல. செய்தியே முன்னோடி என்று மிக திட்டவட்டமாக கூறுகிறார்.

25. உங்களுக்கு அது ஞாபகம் உள்ளதா? கிறிஸ்துவின் முதலாம் வருகைக்கு முன்னோடியாக யோவான்ஸ்நானன் அனுப்பப்பட்டது போல, உன் செய்தி .. கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு முன்னோடியாய் இருப்பது இந்த செய்தியே. அப்படிதான் கர்த்தருடைய தூதன் உரைத்தார். (*கேள்விகளும் பதில்களும்.* 2:12, பக்கம் 100 பத்தி384. நாள் 21-1-1961

26. 1933-ம் ஆண்டு ஜுன் மாதம் 15-ம் தேதி மதியம் சகோ.பிரன்காம், அமெரிக்காவில் ஓகியோ நதிகரையில் சுமார் 500 பேருக்கு ஞானஸ்நானம் கொடுக்க நின்று கொண்டிருந்தார். மதியம் சுமார் 2 மணிக்கு 17வது நபர் எட்வர்ட் கால்வின் (Edward Colvin) என்ற சிறுவனுக்கு ஞானஸ்நானம் கொடுக்கும் சமயம் *மேலே பார்*

என்றதொரு சத்தத்தை கேட்டார். பார்த்தபோது *தேவன் அக்கினி ஸ்தம்பத்தில் காட்சியளித்தார். தேவன் இறங்கினார். யோவான்ஸ்நானன் கிறிஸ்துவின் வருகைக்கு முன்னோடியாக அனுப்பப்பட்டதுபோல உன் செய்தி கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு முன்னோடியாக இருக்கும் என்று விளங்கிற்று.* As John the Baptist was sent forth to forerun the first coming of Christ, your Message shall cover the earth and forerun the Second Coming of Christ. பாருங்கள் சகோ. பிரன்காம் கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு முன்னோடி அல்ல. அவர் மூலமாக தேவன் கொடுத்த செய்தியே கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு முன்னோடி. அதாவது மல்கியா 4 மூலம் தேவன் பிள்ளைகளுடைய இருதயத்தை பிதாக்களுடைய இருதயத்துக்கு திருப்புவதற்காக கொடுக்கப்பட்ட செய்தி. இது கர்த்தருடைய வருகைக்கு ஆயத்தப்படுத்தும் ஆரவாரம் - செய்தி. 1தெச 4:16. இது குறித்து தான் தீர்க்கதரிசி மேசியா வருகைக்கு சற்று முன்பு அவரை அறிமுகப்படுத்தும் என *ஐயன்மீர், இதுவா சமயம்?* பக்கம் 70, கடைசி பத்தியில் கூறுகிறார். வெளி.10:6 வாசியுங்கள். ஏழாம் தூதனுடைய சத்தத்தின் நாட்களிலே என உள்ளது. ஏழாம் தூதனுடைய நாட்களிலே அல்ல. ஏழாம் தூதன் இன்று நம் மத்தியில் இல்லை. அவர் கிறிஸ்துவுக்குள் நித்திரை அடைந்துவிட்டார். மரித்தோர் உயிர்த்தெழும்பும் போது அவருடையவர்களுடன் உயிர்த்தெழுவார். ஆனால் அவர் மூலமாக தேவன் கொடுத்த செய்தி - சத்தம் இன்றும் நம் மத்தியிலிருந்து கொண்டு மணவாட்டியை ஆயத்தப்படுத்திக்கொண்டிருக்கிறது. ஏனென்றால் செய்தி கர்த்தருடையது.

***27. நண்பனே, என்னை நோக்கி பார்க்கவேண்டாம். நான் உங்கள் சகோதரன். என் பேரில் கவனம் செலுத்தவேண்டாம். நான் இறக்கவேண்டியவன். நான் உரைத்ததற்கு மாத்திரம் செவிகொடுங்கள். நான் உரைத்தது செய்தி ஆகும். தூதன் மேல் கவனம் செலுத்தாதீர்கள். ஆனால் செய்தியை நன்கு கவனியுங்கள். உங்கள் பார்வை தூதன் மேல் அல்ல, செய்தியின் பேரில் இருக்கவேண்டும். நான் அதன் மேல் மாத்திரமே கவனம் செலுத்தவேண்டும். (ஐயன்மீர், இதுவா சமயம்? பக்கம் 84, கடைசி பத்தி) பிரியமானவர்களே, நீங்கள் நன்கு கவனமாக காரியங்களை நிதானித்து பார்ப்பீர்களானால், சாத்தான் இன்று செய்தியில் இருக்கிறோம் என்று கூறுகிறவர்களின் பார்வையை தூதன் மேல் திருப்பிவிட்டான். எதற்கெடுத்தாலும் பிரன்காம், பிரன்காம் என்ற சத்தமே ஒலித்துக்கொண்டிருக்கிறது. செய்தியை குறித்ததான தாகம் யாரிடமும் எங்கும் இல்லை. இதுதான் கொடிய வஞ்சிப்பு.***

28. Then I'll meet you again, some of these glorious mornings under the resurrection when the saints (the redeemed) are brought back to the earth again for the great millennium. I hope to spend an endless eternity with you in the kingdom of God, to which I represent here tonight. (**God has a provided way**. Volume 25/9, page 2, para 14 dated 04-04-1954) I will meet them at the Supper, when the battle is all won and the great table is spread across the canoples of the sky, and we sit and look across. (***Who is Jesus,*** Volume 20:16, page 23, para 163 dated 20-6-1964.)

## பலமுள்ள வேறொரு தூதன் (வெளி.10:1) வருகை 28-02-1963 அன்று நிகழ்ந்தது என்ற கோவை ராஜாவின் உபதேசம் பிசாசினுடையது.

144. பலமுள்ள வேறொரு தூதன் தனது வலது பாதத்தை சமுத்திரத்தின் மேலும், தன் இடது பாதத்தை பூமியின் மேலும் வைத்து, சிங்கம் கெர்ச்சிக்கிறது போல மகா சத்தமாய் ஆர்ப்பரித்தான். வெளி.10:2,3. இதுகுறித்ததான விளக்கத்தை கீழே தருகிறேன். உங்களுக்கு அதில் ஒருமனப்பாடு இருந்தால் ஏற்றுக்கொள்ளுங்கள். இல்லாவிட்டால் நான் தவறான ஒரு விளக்கம் கொடுத்துவிட்டேன் என்று நினைத்து எனக்காக ஜெபம் பண்ணுங்கள். நான் உங்கள் மீது எதையும் திணிக்கவிரும்பவில்லை.

1. இதோ, வானத்தில் ஒரு சிங்காசனம் வைக்கப்பட்டிருந்தது. வெளி. 4:2
2. அந்த சிங்காசனத்தின் மேல் ஒருவர் வீற்றிருந்தார். வெளி. 4:2
3. அவருடைய வலது கரத்தில் உள்ளும், புறம்பும் எழுதப்பட்டு, ஏழு முத்திரைகளால் முத்தரிக்கப்பட்டிருந்த ஒரு புத்தகம் இருந்தது. வெளி. 5:1
4. வானத்திலாவது, பூமியிலாவது, பூமியின் கீழாவது, ஒருவனும் அந்த புத்தகத்தை திறந்து வாசிக்கவும், அதை பார்க்கவும் கூடாதிருந்தது. வெளி. 5:3,4
5. ஆட்டுக்குட்டியானவர் வந்து, அவருடைய வலது கரத்திலிருந்த புஸ்தகத்தை வாங்கினார். வெளி.5:7.
6. அப்பொழுது வானத்திலும், பூமியிலும், பூமியின் கீழுமிருக்கிற சிருஷ்டிகள் யாவும்; சமுத்திரத்திலுள்ளவைகளும், அவற்றுளடங்கிய வஸ்துக்கள் யாவும் சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கிறவருக்கும், ஆட்டுகுட்டியானவருக்கும் ஸ்தோத்திரமும், கனமும் மகிமையும் வல்லமையும் சதாகாலங்களிலும் உண்டாவதாக என்றார்கள். வெளி. 5:13. அதாவது பூமியிலுள்ள சிருஷ்டிகளும், சமுத்திரத்திலுள்ளவைகளும், ஆட்டுக்குட்டியானவருக்கு ஸ்தோத்திரம் கனம் மகிமை வல்லமையும் சதாகாலங்களிலும் உண்டாவதாக என்றார்கள். தியானியுங்கள் வெளி. 5:13 ஏசா 42:10, சங். 68:23 *தேவனுக்கு அல்லேலூயாக்களையும், துதிகளையும் ஏறெடுத்து ஆர்ப்பரித்தார்கள். ஆர்ப்பரிப்பின் சத்தம் மேலே எழும்பினது. ஏன்? அந்த புத்தகத்தில் எழுதப்பட்டிருந்த அவர்களுடைய பெயர்கள் வெளிப்பட வேண்டியதாயிருந்தது. ஆட்டுக்குட்டியானவர் அதை வெளிப்படுத்தினார். ஆட்டுக்குட்டியானவர் அவர்களை மீட்டுவிட்டார்.*
7. இதன்பின் ஆட்டுக்குட்டியானவர் முத்திரைகளை உடைக்கிறார். வெளி. 6வது அதி.
8. வெளி.10:1-ல் பலமுள்ள வேறொரு தூதன் வானத்திலிருந்து இறங்கி வருவதை காண்கிறோம்.
9. வெளி. 10:2-ல் திறக்கப்பட்ட ஒரு சிறு புஸ்தகம் அவன் கையிலிருந்ததை காண்கிறோம்.
10. வெளி. 5:1-ல் உள்ளும் புறம்பும் எழுதப்பட்டு, ஏழு முத்திரைகளால் முத்தரிக்கப்பட்ட புத்தகத்தின் முத்திரைகள் உடைக்கப்பட்டு, இன்று புத்தகம் திறக்கப்பட்ட நிலையிலுள்ளது.
11. அதிலுள்ள இரகசியங்கள் வெளிப்படவேண்டும். இது வெளி. 10:4-ல் உள்ள ஏழு இடிமுழக்கங்கள் முழங்கும் சமயத்தில் வெளிப்படும். (*ஏ.மு.* பக்கம் 120, பத்தி 29)
12. ஏழு முத்தரைகளால் முத்தரிக்கப்பட்ட இந்த புத்தகத்தில் அடங்கியுள்ள இரகசியம் ஏழாம் சபையின் தூதன் செய்தி முழங்கும்போது வெளிப்படும். (*ஏ.மு.* பக்கம் 122, பத்தி 37)

*13.* இப்பொழுது இந்த இரகசியங்கள் வெளிப்படவேண்டிய நேரம் வந்துவிட்டதால் ***இனி காலம் செல்லாது*** என்ற செய்தியை கொண்டு அந்த தூதன் வருகிறான்.

*14.* ***இனி காலம் செல்லாது*** என்ற செய்தி வானத்தின் கீழிருக்கிற பூமிக்கும் சமுத்திரத்திற்கும் செல்ல வேண்டியதாயுள்ளது. ஆதி.1:9,10.

*15.* சமுத்திர தீவுகளிலும் அவருடைய ஜனத்தில் மீதியானவர்கள் உண்டு. ஏசா.11:11. கர்த்தரின் நாமத்தை சமுத்திர தீவுகளிலும் மகிமைப்படுத்துகிறவர்கள் உண்டு. ஏசா. 24:14,15. நியாயத்தீர்ப்பின் நாளில் பூமியும், சமுத்திரமும் தங்களிலுள்ளவர்களை ஒப்புவிக்கவேண்டும். தானி. 12:2, வெளி. 20:13. ஆதலால் ***இனி காலம் செல்லாது*** என்ற செய்தி வானத்தின் கீழெங்கும் சாட்சியாக செல்லவேண்டும்.

*16.* இதனால் தான், பூமிக்கும் சமுத்திரத்திற்கும் சாட்சியாக அந்த தூதன் ஒரு பாதத்தை பூமியின் மேலும், மற்றொரு பாதத்தை சமுத்திரத்தின் மேலும் வைத்தான்.

*17.* ***ஆனாலும் இது தத்ரூபமான தோற்றம் இல்லை. மாறாக பிரசன்னம். இப்பொழுது நினைவில் கொள்ளுங்கள். நான் மேசியா அல்ல. நான் கிறிஸ்து அல்ல. ஆனால் அவர் இங்கு இருக்கிறார். அவர் இங்கு இருக்கிறார் என்பதை நீங்கள் கண்டுகொள்ளவேண்டுமென்று நான் முயற்சி செய்கிறேன். அவர் தமது வார்த்தையை நிறைவேற்றுகிறார். (தேவன் தமது விசேஷ குணங்களினால் அடையாளம் கண்டுகொள்ளப்படுகிறார். பத்தி 159, நாள் 11-3-1964). I am not no Messiah. I 'm no Christ. But He is here. இது தான் அது.***

*18.* பூமியும், சமுத்திரமும் மீட்பின் புத்தகத்தோடு ஆரம்பத்திலும் (வெளி. 5:13) தொடர்பு கொண்டிருந்தது. முடிவிலும் (வெளி.10:2) தொடர்பு கொண்டதாகவே இருக்கிறது.

145. வேத இரகசியங்களின் வெளிப்பாட்டை பெற்றிருக்கிறோம் எனக் கூறும் சிலர் ஆறாம் முத்திரை 655 பக்கத்தில் 102வது பத்தியில் ஏழாம் தூதனின் செய்தியின் முடிவில் அந்த தூதன் (மணவாளன்) நின்று கொண்டு ***இனி காலம் செல்லாது*** என்று சொல்வதை என்னால் காணமுடிகிறது. அவருக்கு உண்மையாயிருந்த அந்த சிறு மணவாட்டி வரப்போகும் ஒரு நாளில் பறந்து சென்று இயேசுவின் கரங்களை அடைவாள் என்று சகோ.பிரன்காம் பிரசங்கித்ததாக தமிழ் மொழிப்பெயர்ப்பை சுட்டிக் காட்டுகிறார்கள்.

2. இங்கு குள்ளநரி குட்டி சாத்தானுடைய வேலையை கவனியுங்கள். தொடக்கத்தில் ஏழாம் தூதனின் செய்தியின் முடிவில் அந்த தூதன் அதற்கு அடுத்து அடைப்புக்குறிக்குள் **மணவாளன்** என்று செய்தியில் இல்லை. இதை தீர்க்கதரிசியின் செய்தியோடு ஒன்றை கூட்டுவதாகும். அடுத்து ***அவருக்கு உண்மையாயிருந்த அந்த சிறு மணவாட்டி*** என்று சகோ.பிரன்காம் பிரசங்கிக்கவே இல்லை. அதாவது அந்த பலமுள்ள வேறொரு தூதனுடைய மணவாட்டி என்று தீர்க்கதரிசி பிரசங்கிக்க இல்லை.

3. மேலே குறிப்பிட்டுள்ள இந்த பகுதியை ஆங்கிலத்தில் நீங்கள் கீழ்க்கண்டவாறு வாசிக்கலாம். I can almost see that Angel standing there saying, ***at the last of that Seventh Angel's Message "Time shall be no more"*** That little, loyal bride will fly away into the arms of Jesus one of these days. என்றுள்ளது. இங்கு That little loyal bride என்று தான் உள்ளது. அதாவது ***அந்த சிறு உண்மையான மணவாட்டி*** என்றே பொருள். ***அவருக்கு உண்மையாயிருந்த அந்த சிறு மணவாட்டி*** என்று பொருள்படாது. ***அவருக்கு உண்மையாயிருந்த*** என்று மொழிப்பெயர்த்தால் ***அந்த தூதனுக்கு உண்மையாயிருந்த*** என்று பொருள் ஆகிவிடும். ஆனால் அது அப்படி அல்ல. ***அந்த சிறு உண்மையுள்ள மணவாட்டி*** என்பதே சரியான மொழிப்பெயர்ப்பு. நமது தமிழ் மொழிப்பெயர்ப்பாளர்கள் செய்தியை கூட்டியும் குறைத்தும் தமிழில் மொழிப்பெயர்ப்பு செய்து ஆதியிலிருந்தே தீர்க்கதரிசியின் செய்தியை இரண்டாம் தர செய்தி ஆக்கிவிட்டார்கள். ஒரு சாரார் செய்தியை கூட்டியும் குறைத்தும் பிரசங்கம் செய்து செய்தியை பாழாக்கிகொண்டிருக்கிறார்கள். இவர்கள் செய்தியை தவறாக அர்த்தம் கொள்ள மொழி பெயர்த்து செய்தியை பாழாக்கி வருகிறார்கள். இது லூக். 17:30 மனுஷகுமாரன் ஊழியத்தை தாறுமாறாக்குவதாகும்.

*4.* ***பின்பு பலமுள்ள வேறொரு தூதன் வானத்திலிருந்து இறங்கி வரக் கண்டேன். மேகம் அவனை சூழ்ந்திருந்தது. அவனுடைய சிரசின் மேல் வானவில் இருந்தது. நீங்கள் நன்றாக கவனித்தால், அது கிறிஸ்து என்று விளங்கும். பாருங்கள், அவர் பழைய ஏற்பாட்டில் உடன்படிக்கையின் தூதன் என்று அழைக்கப்படுகிறார். அவர் இப்பொழுது யூதர்களிடம் நேரிடையாக வருகிறார். ஏனெனில் சபை அப்பொழுது ஏற்கனவே எடுக்கப்பட்டுவிட்டது. பாருங்கள், அது சரி .. இப்பொழுது அவர் இஸ்ராவேல் ஜனங்களுக்கு செய்தியாளனாக, தூதனாக வருகிறார். பாருங்கள், சபை ஏற்கனவே எடுக்கப்பட்டுவிட்டது, அல்லது அது எடுக்கப்படவிருக்கிறது. அவர் தமது சபைக்கு வருகிறார். (ஏழு முத்திரைகள், பக்கம் 120, பத்தி 29-31.***

5. ஏழாம் தூதன் செய்தி முடிவடைந்தது. ஏழாம் தூதன் எல்லாவற்றையும் வெளிப்படுத்தி முடித்து விடுகிறார். ஆனால் அந்த தூதனோ (இங்கு தீர்க்கதரிசி பலமுள்ள வேறொரு தூதனை குறிப்பிடுகிறார். சபையின் தூதர்களை போன்று பூமியில் தோன்றினவன் அல்ல. அவர்களுடைய பணி முடிந்து விட்டது. அந்த தூதன் (பலமுள்ள வேறொரு தூதன்) அடுத்த அறிவிப்பை கொண்டு வருகிறார். தூதன் என்றால் தூதை கொண்டு வருபவன் என்று பொருள் அவர் வானத்திலிருந்து அக்கினி ஸ்தம்பத்தில் இறங்கி வருகிறார். அவர் மேகத்தை ஆடையாக உடுத்தி, தலையின் மேல் வானவில் கொண்டவராயிருக்கிறார். ***வானவில் உடன்படிக்கைக்கு அடையாளம்.*** அவ்விதம் ஒரு பாதத்தை பூமியில் மேலும், ஒரு பாதத்தை சமுத்திரத்தின் மேலும் வைத்து ***இனி காலம் செல்லாது*** என்று ஆணையிடுகிறவர் கிறிஸ்துவே. (*ஐயன்மீர், இதுவா சமயம்?,* பக்கம் 71) **தீர்க்கதரிசி சபையின் தூதர்கள் பணி முடிந்த பின்பு, பலமுள்ள வேறொரு தூதன் அடுத்த அறிவிப்பை கொண்டுவருகிறான் என்கிறார். ஆதலால் பலமுள்ள தூதன் 28-02-1963-ல் இறங்கவில்லை. குட்டிசாத்தான் கோவை ராஜாவின் உபதேசம் சாத்தானுடையதே.**

6. அடுத்து இவர்கள் ***ஏழு முத்திரைகளின் வெளிப்பாடுகளில் ஏழு சபைக் காலங்களுக்கும் ஏழு முத்திரைகளுக்கும் இடையேயுள்ள பிளவு,*** பக்கம் 123, பத்தி 41-42ஐ குறிப்பிட்டு : ஆகவே அந்த முத்திரைகள் உடைக்கப்பட்டு தேவ இரகசியம் வெளிப்படுகையில், அந்த தூதன், அந்த செய்தியாளன், கிறிஸ்து கீழே இறங்கிவந்து தம்முடைய பாதத்தை பூமயின் மேலும் சமுத்திரத்தின் மேலும் வைக்கிறார். அவருடைய சிரசின் மேல் வானவில் இருக்கிறது. பலமுள்ள தூதன் பூமிக்கு இறங்கும் இந்த வருகையின் நேரத்தில் அந்த ஏழாம் தூதன் பூமியில் ஏற்கனவே இருக்கிறான் என்பது நினைவிருக்கட்டும். யோவான் செய்தியை கொடுத்துக் கொண்டிருக்கும் போது அந்த சமயத்தில் மேசியா வந்ததற்கு இது ஒத்திருக்கிறது.

***7. இதைக் கொண்டு தீர்க்கதரிசியின் காலத்தில் மணவாளன் தம்முடைய மணவாட்டிக்காக பூமியில் வந்துவிட்டார் என்பது பேய்த்தனத்திற்கடுத்த விளக்கம். இந்த***

***பலமுள்ள தூதன் கிறிஸ்து தான் இதில் ஒரு கடுகளவு கூட சந்தேகமே இல்லை. ஆனால் அவர் வானத்திலிருந்து, அக்கினி ஸ்தம்பத்தில் இறங்கி உடன்படிக்கையின் தூதனாக இனி காலம் செல்லாது என்று தூதை கொண்டுவந்த கிறிஸ்து. மணவாட்டிக்காக வந்த மணவாளனாகிய கிறிஸ்து அல்ல. மேலும் பலமுள்ள வேறொரு தூதனுடைய வருகை மற்றும் இயேசு கிறிஸ்துவினுடைய இரண்டாம் வருகையும் அல்ல. ஏனென்றால் தூதன் என்றாலே அவன் செய்தியை கொண்டு வருகிற ஒரு தூதன் என்றே பொருள். தூதன் மணவாளனாக முடியாது. கிறிஸ்து இங்கு தூதன் என்கிற ஸ்தானத்தில் வந்தாரேயென்றி, மணவாட்டிக்கு மணவாளன் என்ற ஸ்தானத்தில் வரவில்லை.***

*146. பின்பு பலமுள்ள வேறொரு தூதன் வானத்திலிருந்து இறங்கிவரக் கண்டேன்; மேகம் அவனை சூழ்ந்திருந்தது. அவனுடைய சிரசின் மேல் வானவில் இருந்தது. .. நீங்கள் நன்றாக கவனித்தால் அது கிறிஸ்து என்று விளங்கும். பாருங்கள்? அவர் பழைய ஏற்பாட்டில் உடன்படிக்கையின் தூதன் என அழைக்கப்படுகிறார். அவர் இப்பொழுது யூதர்களிடம் நேரிடையாக வருகிறார். ஏனெனில் சபை அப்பொழுது ஏற்கனவே எடுக்கப்பட்டுவிட்டது. பாருங்கள்? அது சரி.*

*147. வெளிப்படுத்தின விசேஷம் முதலாம் அதிகாரத்தில் தூதன் என்று யார் அழைக்கப்படுகிறது என்பது நினைவிருக்கிறதா? அதுவே தான். அங்கு தூதன் என்னும் பதம் இவ்வுலகில் தேவனுடைய செய்தியை கொண்டுவரும் ஒரு செய்தியாளனை குறிக்கிறது. இப்பொழுது அவர் இஸ்ராவேல் ஜனங்களுக்கு செய்தியாளனாக, தூதனாக வருகிறார். பாருங்கள்? சபை ஏற்கனவே எடுக்கப்பட்டுவிட்டது. அல்லது அது எடுக்கப்படவிருக்கிறது. அவர் தமது சபைக்கு வருகிறார்.*

148. ஐந்தாம் அதிகாரத்தில் அவர் ஆட்டுக்குட்டியாக தோற்றம் அளிக்கிறார். வெளி. 10-ம் அதிகாரத்தில், இங்கே அவர் சிங்கமாக கெர்ச்சிக்கிறார். ஆகவே அந்த முத்திரிரைகள் உடைக்கப்பட்டு, தேவ இரகசியம் வெளிப்படுகையில் அந்த தூதன் அந்த செய்தியாளன் கிறிஸ்து கீழே இறங்கிவந்து தம்முடைய பாதத்தை பூமியின் மேலும் சமுத்திரத்தின் மேலும் வைக்கிறார். அவருடைய சிரசின் மேல் வானவில் இருக்கிறது. பலமுள்ள தூதன் பூமிக்கு இறங்கும் இந்த வருகையின் நேரத்தில் இந்த ஏழாம் தூதன் பூமியில் ஏற்கனவே இருக்கிறார் என்பதை நினைவிருக்கட்டும். இப்பொழுது, இந்த செய்தியாளன் செய்தியை முழங்கும் சமயம், தேவ இரகசியம் யாவும் இந்நேரத்தில் நிறைவேறும். இப்பொழுதே ஏழாம் சபையின் தூதன் இங்கே பூமியில் இருக்கிறார். வேறொரு தூதன் பலமுள்ள செய்தியாளன் வானத்திலிருந்து இறங்கி வருகிறார். பாருங்கள்? இந்த தூதன் பூமிக்குரிய தூதன், செய்தியாளன் ஆவார். ஆனால் இங்கே ஒருவர் வானத்திலிருந்து வருகிறார். பாருங்கள், அவர் சிரசின் மேல் வானவில் இருந்தது. அது உடன்படிக்கைக்கு அடையாளம். பாருங்கள் அது கிறிஸ்துவாகத் தான் இருக்கமுடியும்.

149. மூன்றாவது முத்திரையில் தீர்க்கதரிசி அந்த பலமுள்ள வேறொரு தூதன் வருகை குறித்து கீழ்க்கண்டவாறு கூறுகிறார். வெளிப்படுத்தல் 10-ம் அதி சொல்லியுள்ளபடி கடைசி நாட்களில் அதன் இரகசியம் வெளிப்படவேண்டும். ஏழாம் தூதனுக்கு அச்செய்தி அளிக்கப்படும். ஏனெனில் ஏழாம் சபையின தூதன் எக்காளம் ஊதும்போது அவன் காலத்தில் தேவஇரகசியமாயிருந்த அனைத்தும் நிறைவேற வேண்டும். ***இவையாவும் வெளிப்பட்டபின்பு*** கிறிஸ்துவாகிய அந்த தூதன் பரலோகத்திலிருந்து இறங்கி வருகின்றார். இப்பொழுது நினைவில் கொள்ளுங்கள். பூமியிலுள்ள இந்த தூதன், ஒரு செய்தியாளன் ஆவான். ***(மூன்றாம் முத்திரை,*** பக்கம் 396, 397, பத்தி 41, புதிய பதிப்பு)

**150.** ***The Seventh Angel is going to be given the Message of that, because it said that in the time of the sounding of the Seventh Church Age, the Seventh Angel. When he sounds all the mysteries of God should be finished up by his time. THEN AFTER IT IS REVEALED THE ANGEL CAME DOWN FROM HEAVEN, It was Christ Now remember, this angel is on the earth, a messenger. (Third Seal, Page 235. Para 3.)*** **இங்கு தீர்க்கதரிசி ஏழாம் சபைக்கால தூதன் தன் பணியை நிறைவேற்றி முடித்தபின்பு, இந்த பலமுள்ள வேறொரு தூதன் இறங்கி வருகிறார் என்கிறார். அப்படியானால் 28-02-1963 அன்று பலமுள்ள வேறொரு தூதன் இறங்கி வரவில்லை.**

***151. தேவ இரகசியம் யாவும் நிறைவேறி முத்திரைகள் உடைக்கப்பட்டு, இனி காலம் செல்லாது என்று சொல்லப்படவேண்டிய சமயத்தில் அவர் பத்தாம் அதிகாரத்தில் கூறப்பட்ட பிரகாரம் மறுபடியும் இறங்கி வருகிறார். அவர் இறங்கி வந்து ஏழாம் தூதன் எக்காளம் ஊதப்படுகிறபோது தேவ இரகசியம் நிறைவேறும் என்கிறார். ஆகையால் அந்த தூதன் பிரத்தியட்சமாகிறதற்கு சமயம் வந்து விட்டது. நாம் மிக அருகாமையில் இருக்கிறோம். நான் கூறுவது சரி. (ஏழு முத்திரைகள், பக்கம் 120-125, பத்திகள் 29, 30, 31, 33, 41, 45, 47)***

**152. பாருங்கள் இந்த தீர்க்கதரிசி என்ன கூறுகிறார்? அந்த தூதன் பிரத்தியட்சமாகிறதற்கு சமயம் வந்துவிட்டது என்கிறார். எப்பொழுது? 17-3-1963 ஞாயிறு காலை. அப்படியானால் அந்த தூதன் 17-3-1963 ஞாயிறு காலை வரை பிரத்தியட்சமாகவில்லை என்றே அர்த்தம். அப்படியானால் அந்த தூதன் 28-2-1963-ல் பிரத்தியட்சமாகிவிட்டார், பலமுள்ள தூதன் வானத்திலிருந்து இறங்கி விட்டார் என்ற உபதேசம் ஒரு கள்ள உபதேசமே. அப்படியானால் அந்த உபதேசத்தை கொண்டு வந்தவன் யார்? அவன் பிசாசு. ஆம் கோவை ராஜா இக்காலத்துக்குரிய செய்தியின் படி ஒரு பிசாசு தான். இதில் எள்ளளவு கூட சந்தேகம் இல்லை.**

*153.* நம் மத்தியில் தீமையை கர்ப்பந்தரித்து, அக்கிரமத்தில் பிறந்து, உதடுகளினால் பொய்களையே பேசி பந்தாவாக நடமாடிக்கொண்டு தாறுமாறுகளின் ஆவியினால் சபையை பாழாக்கிவரும் வலுசர்ப்பம் கோவை ராஜா செய்வது என்ன? தேவன் கூறினதை எடுத்துக்கொண்டு, இக்காலத்துக்குரிய செய்தியில் கொஞ்சம் அங்கும் கொஞ்சம் இங்கும் எடுத்துக்கொண்டு, அதற்கு மேல் வெள்ளையடிப்பதாகும். அதை சிறிதளவு தவறாக எண்ணம்

கொண்டு, சிறிதளவு இதனுடன் கூட்டி, சிறிதளவு இதிலிருந்து எடுத்துபோடுவதாகும். பின் அவனுடைய ஆடுகளும் அவனுடன் சேர்ந்து கொண்டு, ஆக சிலர் ஒன்று சேர்ந்து கொண்டு, இதுதான் அர்த்தம் என்பார்கள். மேடை ஏறகிறாயா, நாம் தர்க்கிப்போம் என்பார்கள், மேடைக்கு அழைக்கும் ஊழியம் எங்கள் ஊழியம் மட்டுமே என கொக்கரிப்பார்கள். ***ஆனால் வார்த்தையோ இதுதான் அது என்கிறது.*** ஆதலால் ரெகொபெயாமையும் அவன் சமூகத்திலுள்ள வாலிபர்களை குறித்து எச்சரிக்கையாயிருங்கள். ரெகொபெயாமின் நிலைதான் சூளைமேட்டார் நிலையும். இளம்வயதும் வாலிபமும் மாயையே என பிரசங்கி கூறுகிறார். கர்த்தருடைய வருகை வரும் வரை சந்ததி வரும், சந்ததி போகும். சூளை மேட்டார் சந்ததிக்கு ஒன்றும் முக்கியத்துவம் இல்லை. அவரே தனக்கு ஒரு முக்கியத்துவத்தை ஏற்படுத்திக்கொண்டார். அது என்ன? மேட்டிமை, பிசாசு.

***154. சூரிய அஸ்தமனம் மலையில் நிகழ்ந்தது என்ன?***

வெளிப்படுத்தின விசேஷம் முதல் 10 அதிகாரங்களுக்குள் நாம் சில தூதர்களை குறித்து காண்கிறோம். வெளி.1:1-ல் இயேசு கிறிஸ்துவின் தூதன். நாம் அது திஸ்பியனாகிய எலியா என்று வேதவாக்கியங்களை கொண்டும், இக்காலத்துக்குரிய செய்தியை கொண்டும் கண்டோம். பின் வெளி.2:1-ல் எபேசு சபையின் தூதன். இது அப்போஸ்தலனாகிய பவுல். வெளி.2:8-ல் சிமிர்னா சபையின் தூதன் இது இரேனியஸ். மூன்றாவது வெளி.2:12-ல் பெர்கமு சபையின் தூதன். இது மார்டின். அடுத்து வெளி.2:18-ல் தியத்தீரா சபையின் தூதன். இது கொலம்பா. ஐந்தாவது வெளி.3:1-ல் சர்தை சபையின் தூதன். இது மார்டின் லூதர். ஆறாவது வெளி.3:7-ல் பிலதெல்பியா சபையின் தூதன். இது ஜான் வெஸ்லி. முடிவாக வெளி.3:14-ல் லவோதிக்கேயா சபையின் தூதன். இது வில்லியம் மாரியன் பிரன்காம் என்று நமக்கு வெளிப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் நாம் சில தூதர்களை குறித்து காண்கிறோம். வெளி.5:2-ல் பலமுள்ள தூதன். (Strong Angel) வெளி.7:2-ல் வேறொரு தூதன் (Another Angel) வெளி. 8:3-ல் வேறொரு தூதன் (Another Angel) இவர்களெல்லாம் நமக்கு யாரென்று வெளிப்படுத்தப் படவில்லை. பின் வெளி.10:1-ல் நாம் பலமுள்ள வேறொரு தூதன் (Another Mighty Angel) குறித்து காண்கிறோம். இது கிறிஸ்து என்று நாம் அறிவோம்.

155. இந்த பலமுள்ள வேறொரு தூதன் உடன்படிக்கையின் தூதன், அவர் ***இனி காலம் செல்லாது*** என்ற தூதை கொண்டு வந்த தூதன். அவருடைய சிரசின் மேல் வானவில் இருந்தது. அது ஒரு உடன்படிக்கை. அவர் உடன்படிக்கையின் தூதனான கிறிஸ்து அதோடுமட்டுமல்ல ஏழாம் தூதனுடைய சத்தத்தின் நாட்களிலே அவன் எக்காளம் ஊதப்போகிறபோது தேவஇரகசியம் நிறைவேறும். என்றும் ஆணையிட்டு சொன்ன தூதன். வெளி.10:6. அதாவது இந்த தூதன் கிறிஸ்துவாக இருந்தாலும் தூதை கொண்டு வந்த ஒரு தூதனேயல்லாமல் மணவாட்டிக்காக வந்த மணவாளனாகிய கிறிஸ்து அல்ல.

156. இந்த தூதனுடைய வருகை குறித்து ***அந்த தூதன் பிரத்தியட்சமாவதற்கு சமயம் வந்துவிட்டது. நாம் மிக அருகாமையில் இருக்கிறோம்*** என 17-03-1963 அன்று காலை தீர்க்கதரிசி கூறுகிறார். ***இரண்டாவதாக பலமுள்ள தூதன் பூமிக்கு இறங்கும் இந்த வருகை நேரத்தில் இந்த ஏழாம் தூதன் பூமியில் ஏற்கனவே இருக்கிறார்*** என்று 17-03-1963 அன்று மாலை கூறுகிறார். மேலும் ***ஏழாம் சபையின் தூதன் எக்காளம் ஊதும்போது அவன் காலத்தில் தேவஇரகசியமாயிருந்த அனைத்தும் நிறைவேறவேண்டும். இவையாவும் வெளிப்பட்டபின்பு கிறிஸ்துவாகிய அந்த தூதன் பரலோகத்திலிருந்து இறங்கிவருவார்*** என 20-03-1963-ல் மூன்றாவது முத்திரை குறித்து பிரசங்கிக்கும்போது கூறுகிறார்.

***157. பிரியமானவர்களே, இக்காலத்துக்குரிய செய்தியில் எந்த அளவுக்கு பலமுள்ள வேறொரு தூதன் குறித்த போதனை உண்டோ அந்த மட்டத்தில் நாம் நிலைகொண்டிருப்பது நல்லது. செய்திக்கு மிஞ்சி நாம் எதுவும் தெரிந்து கொண்டதாக நெஞ்சை நிமிர்த்த வேண்டாம். பலமுள்ள வேறொரு தூதன் வருகை குறித்து இக்காலத்துக்குரிய செய்தியில் போதுமான விளக்கம் நமக்கு கொடுக்கப்படவில்லை என்பதே எனது கருத்து. பலமுள்ள வேறொரு தூதன் எப்பொழுது இறங்கினான்.? இறங்கினான் என்றால் ஏறினான் என்றும் பொருள்படும். அப்படியானால் எப்பொழுது அவன் ஏறினான் என்ற விவரம் எதுவுமில்லை. ஆனால் அந்த தூதன் யாரென்ற விளக்கம் மட்டுமே நமக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. அத்துடன் நாம் நிலைநின்று கொண்டால், அது நலமாக இருக்கும். ஆதலால் 28-02-1963 அன்று காணப்பட்ட அதிசய மேகவளையம் தான் பலமுள்ள வேறொரு தூதனுடைய வருகை என கோவை ராஜா உபதேசிப்பது பேய்த்தனத்துக்கடுத்தது. அது அவருடைய லௌகிக ஞானம். அந்த உபதேசத்திற்கும் இக்காலத்துக்குரிய செய்திக்கும் எந்த விதமான சம்பந்தமும் இல்லை.***

158. நாம் கடைசி காலத்தில் இருக்கிறோம். அவர் எதை செய்ய வரப்போகிறார்? முதலாவதாக என்ன நடைபெறும்? இயேசு பூமிக்கு திரும்பவருவதற்கு முன்னால் முதலாவதாக நடைபெறும் காரியம் என்னவாயிருக்கும்? சபைக்கு என்ன நடக்கும்? அது எடுக்கப்பட்டுவிடும்.

159. தேவஎக்காளம் தொனிக்கும். அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள். 1தெச.4:16. பின்பு உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டுபோக அவர்களோடே கூட ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு (1தெச.4:17) விடுவோம். ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைபொழுதிலே நாம் எல்லோரும் மறுரூபமாக்கப்படுவோம். (1கொரி.15:51) அந்த வேளையிலே அவ்வேளைதான் சபைக்காலத்தை முடிவுக்கு கொண்டுவருகிறது. பிறகு, இங்கே கீழே பூமியிலே தேவன் யூதர்களோடு இடைப்பட ஆரம்பமாகிறார். (***தானியேல் 70 வாரங்கள்,*** பக்கம் 132, 133, பத்தி 138) இந்த பகுதியிலிருந்து நாம் அறிந்து கொள்வது என்ன? சபை எடுத்துக்கொள்ளப்படுமுன் இயேசு கிறிஸ்து பூமிக்கு திரும்ப வரமாட்டார்.

160. தேவன் தம்முடைய வார்த்தையை உறுதிப்படுத்துகிறார். இந்த சந்தடி எல்லாம் அது குறித்து தான். கவனியுங்கள் அது வெளி.10:1-7 முடிய வாக்களிக்கப்பட்டுள்ள வார்த்தையை தேவன் நிறைவேற்றுதலாகும். ஏழாம் தூதனுடைய சத்தத்தின் நாட்களிலே அவன் எக்காளம் ஊதப்போகிறபோது தேவ இரகசியம் வெளிப்படும். வெளி.10:1-7யின் விளக்கம் மறைக்கப்பட்ட இரகசியம் கடைசி சபை காலத்துக்கு அளிக்கப்படும் கடைசி செய்தி, இந்த காலத்தில் அப்படியே நிறைவேறுகிறது. லூக்.17:30 ***மனுஷகுமாரன் வெளிப்படும் நாளில். (மலைமேலுள்ள கவர்ச்சி என்ன?,*** பக்கம் 41, பத்தி 148, நாள். 25-7-1965)

**161. அதன் பின்பு வேறொரு தூதன் இறங்கி வருவதை யோவான் காண்கிறான். இது செய்தி தன்னிடம் அளிக்கப்பட்ட பூமியை சேர்ந்த தூதன் அல்ல, ஆனால் வேறொரு தூதன், மகத்தான் தூதன் பரலோகத்திலிருந்து இறங்கி வருகிறார். *அவர் ஏழு முத்திரைகளை உடைத்து அதன் இரகசியத்தை வெளிப்படுத்துவதற்கு முன்பு, அவர் அந்த அற்புதத்தை முதலில் வானத்தில் காண்பித்தார்..* இதோ அது லை:ப் பத்திரிக்கையில் வெளியாகி இங்கே தொங்கிக்கொண்டிருக்கிறது. அது இன்னும் அவர்களுக்கு மர்மமாயுள்ளது. அவர் அதை பூமியில் செய்வதற்கு முன்னே, அதை வானங்களில் வெளிப்படுத்துகிறார். அவர் எப்பொழுதும் அப்படியே செய்து வருகிறார். *அவர் முதலில் தமது அடையாளங்களை வானங்களில் காண்பிக்கிறார். வானங்கள் அவரை வெளிப்படுத்துகின்றன* என வேதமும் கூறுகிறது. சங்.19:1 (*சாலோம்*, பக்கம் 22,23, பத்தி 64-66, நாள் 12-1-1964)**

162. *இங்கு கவனித்தீர்களா? வெளி.10:1-7 சமயம், மணவாளன் மணவாட்டிக்காக வந்த சமயம் அல்ல. இது கர்த்தருடைய இரண்டாம் வருகையும் அல்ல. மாறாக இங்கு தேவன் தம்முடைய வார்த்தையை அடையாளங்களினால் உறுதிப்படுத்துகிறார். இது கர்த்தர் தமது கிருபையுள்ள வசனத்திற்கு சாட்சியாக அடையாளங்களினால் தீர்க்கதரிசியின் ஊழியத்தை உறுதிப்படுத்துவதாகும், வானத்தின் அடையாளங்களினால் உறுதிப்படுத்துகிறார்.* அடையாளத்திற்கும், வருகைக்கும் உள்ள வித்தியாசத்தை உங்களால் புரிந்து கொள்ள முடிகிறதா?

163. எடுத்துக்கொள்ளப்படுதலாவது நம் முன்னிருக்கும் இந்நாட்களில் பரலோகத்தை நோக்கி புறப்படும் இக்காட்சி எத்தகைய பவனியாயிருக்கும் என்பதை சிந்தனைசெய்து பாருங்கள். ***சகோதரரே, வரப்போகும் அந்த எடுத்துக்கொள்ளப்படுதலின் நேரத்திற்காக நாம் ஆவலுடன் எதிர்நோக்கியிருக்கிறோம்.*** முதலாம் எடுத்துக்கொள்ளப்படுதல் நிகழ்ந்துவிட்டது. (தீர்க்கதரிசி இங்கு மத்.27:52-53 நிகழ்ச்சியை குறிப்பிடுகிறார். ***இரண்டாவது இப்பொழுது அருகிலுள்ளது.*** எடுத்துக்கொள்ளப்படுதல் மூன்று முறை நிகழும். வெளி.11:11,12-ல் கூறப்பட்ட இரண்டு சாட்சிகள் எடுத்துக்கொள்ளப்படுவார்கள். (***ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்படுதல்,*** பக்கம் 54, பத்தி 3,4 நாள் 12-4-1965. )

164. சபையே, அவர் இந்நாட்களில் ஒன்றில் வருவார். அவர் முதல் தரம் வந்தது எவ்வளவு நிச்சயமோ, அவ்வளவு நிச்சயமாய் அவர் மறுபடியும் வருவார். எல்லாவற்றையும் ஆயத்தப்படுத்துங்கள். ***உங்களை பதரிலிருந்து பிரித்துக் கொள்ளுங்கள்*** எதிர் நோக்குகளுடன் இருங்கள். (***கிறிஸ்துவின் மணவாட்டியின் காணக்கூடாத இணைப்பு***, பக்கம் 72, பத்தி 1, நாள் 25-11-1965)

*165. பாருங்கள் 1965வரை எடுத்துக்* ***கொள்ளப்படுதல் இரண்டாம் முறை நிகழவில்லை. அந்த மணி நேரத்திற்காக தீர்க்கதரிசி காத்திருந்தார். ஆவலுடன் அதை எதிர்நோக்கிக்கொண்டிருந்தார். இப்படியிருக்க குள்ளநரி கூட்டங்கள் 1963-ல் சபை காலங்களில் மரித்த பரிசுத்தவான்கள் யாவரும் உயிரோடு எழுந்துவிட்டார்கள், நீக்ரோ சகோதரி எழுந்துவிட்டாள், சகோ.பிரன்காம் உயிர்த்தெழுந்துவிட்டார், எடுத்துக்கொள்ளப்படுதல் நடந்துகொண்டிருக்கிறது அல்லது எடுத்துக்கொள்ளப்படுதல் நடந்துவிட்டது என்று கூறுவது வஞ்சகனின் ஒரு உபதேசம் ஆகும். கள்ளகபடமுள்ள வேலையாட்களின் உபதேசம் ஆகும். இவர்களுக்கு செவிகொடுத்து நீங்கள் மோசம் போகாதிருங்கள்.***

*166.* ***பொதுவாக குழப்பத்தின் பிள்ளைகள் தீர்க்கதரிசியின் ஊழியத்தில் எபி.13:8 யோ.14:12, லூக்.17:30 மல்.4:6 வெளி.10:6 நிறைவேறுதலை புரிந்து கொள்ளாமல் தலைக்கல் வந்துவிட்டது தலைக்கல் சரீரத்துடன் இணைந்து விட்டது, கர்த்தருடைய வருகை வந்துவிட்டது எனக் கூறி மக்கள் மத்தியில் குழப்பத்தை உண்டுப்பண்ணுகிறார்கள். குழப்பத்திலுள்ளவர்கள் எக்காளம் ஊதும்போது யார் அவர்கள் பின்செல்லுவார்கள்? குழப்பத்தில் உள்ளவர்களே.***

*167.* பிரியமானவர்களே, மேலும் செய்தியை தியானியுங்கள். மனுஷகுமாரன் வெளிப்படும் அதே நாளில் (வெளி.10:1-7) ஏழாம் தூதனின் செய்தி முத்திரைகளை திறக்கும். ஏழாம் தூதன் மனுஷகுமாரன் அல்ல. ஆனால் அந்த தூதன் மனுஷகுமாரனை வெளிப்படுத்துகிறார். இவ்விருவரும் (அதாவது மனுஷகுமாரன் மற்றும் ஏழாம் சபைக்கால தூதன்) யாரென்று இப்பொழுது புரிகிறதா? இது தான் இதுவரை உங்களுக்கு புரிந்து கொள்ள முடியாத கடினமான செயலாயிருந்துவருகிறது. ***ஏழாம் தூதன் மனுஷகுமாரன் அல்ல. ஆனால் அவர் மக்களுக்கு மனுஷகுமாரன் யாரென்று வெளிப்படுத்துகிறார்.*** (*கடைசி காலத்தில் ஆவியின் அபிஷேகம் பெற்றுள்ளவர்கள்,* பழைய பதிப்பு, பக்கம் 82, பத்தி 1,2 நாள் 25-7-1965).

*168.* ***இந்த அற்புதங்களையெல்லாம் செய்பவன் நான் அல்ல.*** *வரப்போகும் காரியங்களை பிழையின்றி* ***அறிவிப்பவன் நான் அல்ல. அவர் இத்தகைய செயல்களை புரியும் போது நான் அவர் அருகில் இருக்கிறேன். அவர் என்னை தமது சத்தமாக உபயோகித்து வருகிறார். என் மூலம் அவர் பேசுவதற்கென என்னை நான் அவருக்கு முற்றிலுமாக அர்ப்பணித்துவிட்டேன். அது ஏழாம் தூதன் அல்ல. அது மனுஷகுமாரன் வெளிப்படுதல் ஆகும். அது தூதன் அல்ல, அவனுடைய செய்தி, மறைபொருளாயிருக்கிற தேவனுடைய இரகசியம் வெளிப்படுதல் ஆகும். அது மனிதன் அல்ல. அது தேவன். தூதன் மனுஷகுமாரன் அல்ல. ஆனால் அவரால் அனுப்பப்பட்ட தூதன். மனுஷகுமாரன் என்னப்படுவது கிறிஸ்து. அவரை தான் நீங்கள் புசித்து வருகிறீர்கள்.*** *(கடைசி காலத்தில் ஆவியின் அபிஷேகம் பெற்றுள்ளவர்கள், பழைய பதிப்பு, பக்கம் 84, பத்தி 1,2, நாள் 25-7-1965).*

169. இங்கு நான் மேலே ***அது தூதன் அல்ல, அவனுடைய செய்தி*** என்று எழுதியுள்ளேன். ஆனால் தமிழ் மொழிப்பெயர்ப்பில் ***அவனுடைய செய்தி*** என்ற வார்த்தை பழைய பதிப்பிலும், புதிய பதிப்பிலும் இல்லை. இது ஆங்கிலத்தில் கீழ்க்கண்டவாறு உள்ளது. It was not the seventh angel, oh no; it was a manifestation of the Son of Man. It was not the angel, His message; it was the mystery that God unfolded. (***The annointed one's at the end time,*** Page 63, para 269.

170. *இயேசுவை நோக்கி பார்த்தல்* செய்தியில் பத்தி 179ஐ தியானியுங்கள். இது 22-1-1964-ல் பிரசங்கிக்கப்பட்டது. ஆனால் அவர், சோதோமில் நடந்தது போன்று, இந்த கடைசி நாட்களில் *மனித சரீரத்தில் வெளிப்படுவார்* என்று வாக்களித்திருக்கிறார் என மொழிப்பெயர்த்துள்ளார்கள். இதை ஆங்கிலத்தில் கீழ்க்கண்டவாறு வாசிக்கலாம். But he promised in the last days that he would manifest himself in human flesh like he did the at Sodom. இதன் மொழிப்பெயர்ப்பு *ஆனால் அவர் அங்கு சோதோமில் செய்தது போல, இந்த கடைசிநாட்களில் தம்மை மனித சரீரத்தில் வெளிப்படுத்துவார் என வாக்களித்துள்ளார் என்று இருக்கவேண்டும். இங்கு மனித சரீரத்தில் வெளிப்படுவார் என்பதற்கும் தம்மை வெளிப்படுத்துவார் என்பதற்கும் உள்ள வித்தியாசத்தை உங்களால் புரிந்து கொள்ள முடிகிறதா?* சுருக்கமாக சொல்லப்போனால் வஞ்சக ஆவியினால் வழிநடத்தப்படும் இந்த தமிழ் மொழிப்பெயர்ப்பாளர்கள் தீர்க்கதரிசியை இயேசு கிறிஸ்துவாக மாற்றி உங்களை மோசம் போக்குகிறார்கள்.

*171. நலமல்லாத வழியிலே தன் நினைவுகளின்படி நடந்து தன் மிகுதியான இனிய சொற்களால் மக்களை வசீகரிக்கும் கோவை ராஜா தன் சுற்றறிக்கையின் 6வது பக்கத்தில், ஆம், அந்த அரைமணி நேர அமைதல், அவர் வருகை, இடி முழக்கம், அந்த மேகஸ்தம்பம் 28 நிமிடங்கள் நின்றது. ஏறக்குறைய அரைமணி நேரம் புரிந்து கொண்டீர்களா என்றும், பக்கம் 8-ல் ஏழு முத்திரைகள் எனப்பட்ட அந்த கல்லில் கிறிஸ்து தன்னை அபிஷேகித்துக் கொண்டார். தலையாகிய கிறிஸ்து - அந்தக் கல்லில்! அதுவே - நமக்கு தலைக்கல். தலைக்கல் செய்தி. அல்லேலூயா! இந்த தலைக்கல் இறங்கும் போது - பலமுள்ள தூதன் சிங்கம் கெர்ச்சிப்பதை போல ஆர்ப்பரித்தபோது அமைதி - ஏறக்குறைய அரைமணிநேர அமைதி! ஏன எழுதுகிறார். நாம் இவைகள் யாவும் தவறான கள்ள உபதேசம் என்பதை ஏற்கனவே தியானித்துவிட்டோம்.*

**172. இந்த பிசாசின் மகன் கோவை ராஜா சபையில் குழப்பத்தையே ஏற்படுத்திக்கொண்டிருப்பதை நீங்கள் அறியாதிருப்பது என்ன? இக்காலத்துக்குரிய செய்தியை அது கூறப்பட்டுள்ள விதமாக பிரசங்கியாமல், எழுதாமல் அத்துடன் தன் சொந்த கருத்துக்களை நுழைத்து சபையை பாழாக்கி கொண்டு வருகிறதை உணராதிருக்கிறதென்ன? கி.பி.1963லிருந்து கி.பி.2003 வரை நாற்பது ஆண்டுகள் ஒரு சந்ததி முடிந்து கி.பி.2005 மறு சந்ததி நாட்களில் கர்த்தர் அந்த காலத்திலுள்ள வாலிபர்கள் மூலம் இக்காலத்துக்குரிய செய்தியை எடுத்துச் செல்லுகிறார் என்பது யார் உபதேசம்? பிசாசினுடையதே, அருவருப்பானவனுடையதே! இதற்கு வேதவாக்கியங்களிலும், இக்காலத்துக்குரிய செய்தியிலும் ஆதாரங்கள் உண்டா? இக்காலத்துக்குரிய செய்திக்கு பொறுப்பானவர்கள் ஐந்து வகை ஊழியத்திற்கென கர்த்தரால் ஏற்படுத்தப்பட்டவர்களே. கோவை ராஜாவுக்கும் இக்காலத்துக்குரிய செய்திக்கும் சம்பந்தமே இல்லை. இக்காலத்துக்குரிய செய்தியை சுமந்து செல்வதில் என்ன அரசியலா? இது என்ன ஒரு காமராஜர் திட்டமா? வயது வந்தவர்கள் விலகுங்கள், இளம்பிராயத்தினருக்கும் இளைய தலைமுறைக்கும் இடம் கொடுங்கள் என்று கூறி ஒரு திட்டத்தைக் கொண்டு வர? சூளைமேடு சபையில் திருமணமாகி, பிள்ளைகள் பெற்று, குடும்பம் நடத்தாதவர்கள் பாஸ்டராக இருக்கலாம், வாலிபர்கள் மூப்பர்களாக இருக்கலாம். ஏனென்றால் அது முரண்பாட்டின் வித்து. ஆனால் தேவனுடைய சபையில் அப்படி அல்ல.**

173. ஆதலால் எனக்கு பிரியமானவர்களே, தன் உதடுகளின் மதுரவாக்கினால் தன் உபதேசத்திற்கு இணங்கப்பண்ணும் கோவை ராஜாவையும் அவருடைய லௌகிக வெளிப்பாடுகளையும் புறக்கணித்து, உங்களை அழிவிலிருந்து காப்பாற்றிக்கொள்ளுங்கள என திரும்ப திரும்ப எச்சரிப்பது என் மேல் விழுந்த கடமையாயிருக்கிறது. சிலர் என்னிடம் வந்து சகோதரனே உங்களுக்கும், கோவை ராஜாவுக்கும் ஏதோ பிரச்சனைகள் இருப்பது போன்று தெரிகிறது. இருவரும் ஐக்கியமாகி இக்காலத்துக்குரிய செய்தியை பல இடங்களுக்கு எடுத்துச் செல்லுங்கள் என்கிறார்கள். ஆனால் நானோ கிறிஸ்துவுக்கும் பேலியாளுக்கும் இசைவேது? என்றேன். ஒளிக்கும் இருளுக்கும் ஐக்கியமேது? என்றேன். ஒருக்காலும் இருக்காது ஆதலால் பிரியமானவர்களே இப்படிப்பட்ட ஐக்கிய காரியங்களை என்னிடத்தில் தயவு செய்து கொண்டு வராதீர்கள். அவர் சபையை பாழாக்கும் பிசாசு. அவர் வாயின் வாக்குகள் புரட்டும், விபரீதமும் கொண்டது. ஆதலால் அவர் விழுந்து போகும் வரை அவரை எதிர்த்து நிற்பேன்.

*174. டேப்பிலுள்ள போதனைகளில் நிலைக்கொண்டிருங்கள். டேப் கூறுவதை தவிர வேறொன்றையும் கூறாதீர்கள். டேப் சொல்லுவதை மாத்திரம் சொல்ல ஜாக்கிரதையாயிருங்கள். வேறொன்றையும் சொல்லாதீர்கள். இதை நான் என் சுயமாய் சொல்லவில்லை. தேவன் தான் இதை கூறுகிறார். டேப்கள் சொல்லாததை சொல்லுவதன் மூலம் அநேக சமயங்களில் குழப்பங்கள் ஏற்படுகின்றன. அநேகர் எழுந்திருந்து இதற்கு அது தான் அர்த்தம் என்று இவர் சொன்னார் என்று கூறுகிறார்கள். டேப்கள் சொல்லுகிறதை அப்படியே ஏற்றுக்கொண்டு அதோடு விட்டுவிடுங்கள். அவ்விதமாகவே வேதம் கூறுவதை நாம் அப்படியே ஏற்றுக்கொள்வது அவசியம். உங்கள் சொந்த அர்த்தத்தை அத்துடன் சேர்க்காதீர்கள். ஏனென்றால் வேதம் ஏற்கனவே வியாக்கியானம் செய்யபட்டாகிவிட்டது. (ஏழு முத்திரை, பழைய பதிப்பு, பக்கம் 11, பத்தி 2, 3) உங்கள் கோவை ராஜா இந்த ஆலோசனைக்கு மாறாக செயல்பட்டு தன் சொந்த கருத்துக்களை வெளிப்பாடு என்ற பெயரில் உங்கள் மீது திணிப்பதை நீங்கள் அறியாதிருக்கிறது என்ன? புத்தியுள்ளவர்கள் அறிந்துகொண்டோம் என்கிறார்கள்.*

### அடையாளம், தேவனுடைய பிரசன்னம் மற்றும் கர்த்தருடைய வருகை

175. பொதுவாக மக்களுக்கு *அடையாளம்* (Sign), காட்சியளித்தல் / *பிரசன்னமாகுதல்* (The appearing of the Lord), **கர்த்தருடைய வருகை** (The coming of the Lord), இந்த மூன்றுக்கும் உள்ள வித்தியாசத்தை புரிந்து கொள்ளமுடியவில்லை. இதனால்தான் கர்த்தருடைய வருகை வந்துவிட்டது என்ற உபதேசம் நம் மத்தியில் நிலவிவருகிறது. சாத்தானுக்கு இடம் கொடுக்கிறவர்கள் அவிசவாசிகள், மற்றும் பாவனை விசுவாசிகள். இப்பொழுது இந்த மூன்றும் வித்தியாசமான சொற்கள் என்பதை நீங்கள் முதலில் கவனத்தில் கொள்ளவேண்டும்.

176. இதை நினைவில் கொள்ளுங்கள். பிரசன்னமாகுதல் (Appearing) வருகை (Coming) என்பவை இரண்டு வித்தியாசமான சொற்கள். முதலில் பிரசன்னமாகி, பிறகு வருதல். இப்பொழுது பிரசன்னமாகுதல். இந்த கடைசி நாட்களில் அவர் ஏற்கனவே பிரசன்னமாகிவிட்டார். கடந்த சில வருடங்களாக நம்முடன் கூடவே இங்கு இருக்கிறார். ***அது அவருடைய வருகையின் அடையாளம்.*** அவர் தமது சபையில் பரிசுத்தஆவியின் ரூபத்தில் பிரசன்னமாகி அது அவர் என்பதை காண்பித்துக்கொண்டிருக்கிறார். ஏனெனில் பரிசுத்தஆவி செய்வதாக நீங்கள் காண்பதை மனிதன் யாருமே செய்யமுடியாது. எனவே இது கர்த்தர் பிரசன்னமாகுதல். இப்பொழுது கவனியுங்கள். இரண்டு இடங்களிலும் பிரசன்னமாகுதலும், வருகையும். (***முடிவு கால சுவிசேஷம்***, பத்தி 50, நாள் 3-6-1962).

177. Convinced and then concerned. Chicago IL 21-05-1962, E-31 Now, John was so sure that he was going to see the Messiah, till he said, “He ‘s in our midst now.” Now, watch.
Notice: There’s a great big difference in the sign of Jesus appearing, and then Jesus coming. There’s two different words, means two different things: the appearing of the Lord, and the coming of the lord.

Now, the appearing of the Lord is now, when He’s appearing in His people. His Spirit working among them, proving that it’s Him with them, getting them ready for the rapture, for the coming of the Lord to catch away His-the Bride (See?): the appearing and the coming. All right.

178. Perseverance S. Pines, NC 08-06-1962 E-98 Now, when that Angel of the Lord came to Abraham, there in the time before the destruction, now, that was God appearing in human flesh. And Jesus said, “As it was in the days of Noah. So will it be in the coming of the Son of Man” As it was in the days of Lot… He give the morals of what they were doing in the days of Noah.

In the days of Lot, watch that Messenger to Abraham. Watch the messengers to Lot and the nominal church . Just, “Come out, Come out” and Abraham pleading for them. Notice, the Angel, God, Elohim, appearing in a form of human flesh shows that Elohim in the last days will appear, not the coming of Christ, but the appearing of Chirst in human flesh in His church, making His same signs and things that he did, and hasn’t done it in the church for two thousand years (See?): the appearing of the Lord.

179. இந்த இரு ஆங்கில செய்திகளில் தீர்க்கதரிசி தேவனுடைய பிரசன்னம் (appearing) மற்றும் கர்த்தருடைய வருகை (coming) இரண்டையும் வித்தியாசப்படுத்தி காட்டுவதை நீங்கள் காணலாம். ஆதலால் ஏழு தூதர்கள் கூட்டத்தினால் உண்டான அதிசயமான மேகவளையம் எந்த விதத்திலும் கர்த்தருடைய வருகை அல்லது பலமுள்ள வேறொரு தூதனுடைய வருகை ஆகவே ஆகாது என்பது நூற்றுக்கு நூறு சதவீதம் உண்மை.

180. ***அடையாளம்*** என்றால் என்ன? இதை ஆங்கிலத்தில் இவ்வாறாக கூறலாம். Any outward fact with serves as pledge of a Divine Word or a proof of Divine Deed is a sign, whether it be natural or supernatural in its character, அதாவது அடையாளம் என்பது ஒரு தெய்வீக வார்த்தைக்கு அல்லது ஒரு தெய்வீக செயலுக்கு நிருபனமாக, வாக்குறதியாக தொண்டுபரியும் ஒரு வெளிப்படையான நிகழ்ச்சி ஆகும்.

181. தேவன் ஒரு அடையாளத்தை முதலில் காண்பிக்காமல் எதையும் செய்வதில்லை. ஒரு அடையாளத்தை கொண்டு பிரகடனம் செய்யாமல் ஒரு காரியத்தை செய்த குற்றத்தை அவர் புரிந்ததில்லை. (***நாங்கள் அவருடைய நட்சத்திரத்தை கண்டு அவரை பணிந்து கொள்ள வந்திருக்கிறோம்***, பத்தி 24, நாள் 16-12-1963)

182. உதாரணமாக: (அ) கிதியோன் தன்னோடே பேசுகிறவர் தேவன் தான் என்று ஒரு அடையாளத்தைக் காட்ட வேண்டும் என தன்னோடு பேசியவரோடு கேட்டான். அவர் அடையாளத்தை கொடுத்தார். தியானியுங்கள். நியா. 6:17-22. (ஆ) தேவன் தம்முடைய சுதந்தரத்தின் மேல் தலைவனாக அபிஷேகம் பண்ணின சவுலோடு இருக்கிறார் என்பதற்கு மூன்று அடையாளங்கள் கொடுக்கப்பட்டது, தியானியுங்கள் 1சாமு. 10:7, 2, 3, 5 (இ) தேவன் தாவீதின் வம்சத்திற்கு கொடுத்த அடையாளம். ஏசா.7:13,14 (ஈ) கிறிஸ்துவின் பிறப்புப் பற்றி மேய்ப்பருக்கு கொடுக்கப்பட்ட அடையாளம். லூக். 2:12 (உ) சீஷர்கள் கர்த்தரை முன்னிட்டு தைரியமுள்ளவர்களாய் போதகம் பண்ணினார்கள். அவர் தமது கிருபையிலுள்ள வசனத்திற்கு சாட்சியாக அடையாளங்களையும் அற்புதங்களையும் அவர்கள் கைகளினால் செய்யப்படும்படி அநுக்கிரகம் பண்ணினார். அப்.14:3 (ஊ) பரிசேயரும், சதுசேயரும் இயேசுவை சோதிக்கும்படி அவரிடத்தில் வந்து வானத்திலிருந்து ஒரு அடையாளத்தை தங்களுக்கு காண்பிக்கவேண்டும் என்றார்கள். இயேசு, யோனா தீர்க்கதரிசியின் அடையாளமேயன்றி வேறு அடையாளம் இவர்களுக்கு கொடுக்கப்படுவதில்லை என்றார். தியானியுங்கள். மத்.16:1-4. (எ) ஒரு பெரிய அடையாளம் வானத்தில் காணப்பட்டது. வெளி.12:1 (ஏ) வேறொரு அடையாளம் வானத்தில் காணப்பட்டது. வெளி.12:3 வானத்திலே பெரிதும் ஆச்சரியமுமான வேறொரு அடையாளம் காணப்பட்டது. வெளி. 15:1.

***183. மேலே தேவனுடைய வார்த்தைக்கும், கிரியைகளுக்கும் வாக்குறுதியாக அடையாளங்கள் கொடுக்கப்பட்டதை கண்டோம். இங்கு நான் அந்த ஏழு தூதர்களை ஒரு கூர்நுனிக் கோபுர வடிவில் கண்டேன். (இடைவெளியில் நிற்றல், பத்தி 80, நாள் 23-06-1963) அந்த கூர்நுனிக் கோபுரம் ஒரு அடையாளம் (எக்காள பண்டிகை, பக்கம் 28 தொடக்கபத்தி முடிவு, நாள் 19-07-1964) பாருங்கள் ஏழு தூதர்களின் கூட்டம் ஒரு அடையாளம். அது கர்த்தருடைய வருகையல்ல. ஒரு செய்தி புறப்பட்டு செல்லும்போது அடையாளங்களும், அற்புதங்களும் நிகழ்கின்றன. தேவன் உங்கள் கவனத்தை ஒன்றிடம் காப்பதற்காகவே அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்கிறார். (கர்த்தருடைய சமூகத்தினின்று விலகி ஓடிப் போகும் ஒரு மனிதன். பத்தி 137, நாள்***

***17-02-1965) அவ்வளவு உயரத்தில் வானத்தில் முப்பது மைல் உயரத்தில் மூடுபனியோ, காற்றோ, ஈரப்பசையோ கிடையாது. உயர வானத்தில் அடையாளங்கள் காணப்படும். மேலும் இந்த காரியங்கள் நிகழும்போது, பல்வேறு இடங்களில் பூகம்பங்கள் ஏற்படும்போது, அப்பொழுது மனுஷகுமாரனுடைய அடையாளம் வானத்தில் காணப்படும். அந்த நாளிலே (லூக்கா 17) மனுஷகுமாரன் தம்மை மறுபடியும் வெளிப்படுத்துவார். அவர்தாமே வெளிப்படுத்தப்பட்டிருப்பார். (தேவசித்தத்திற்கு புறம்பாக அவருக்கொரு சேவை செய்தல், பத்தி 167, நாள் 18-07-1965) பிரியமானவர்களே இது அரைமணிநேரம் அமைதல் அல்ல, பலமுள்ள வேறொரு தூதனுடைய வருகையல்ல, தலைக்கல் வருகையல்ல, கர்த்தருடைய வருகையும் அல்ல. ஆதலால் பிசாசினால், கோவை ராஜாவின் உபதேசங்களினால் வஞ்சிக்கப்படாதீர்கள்.***

184. இனி ***தேவனுடைய பிரசன்னம்*** குறித்து காண்போம். தேவனுடைய பிரசன்னம் வேறு. தேவனுடைய வருகை வேறு. இதில் குழம்பக்கூடாது. அவ்வாறே தேவனுடைய அடையாளம் வேறு, தேவனுடைய வருகை வேறு. இதிலும் குழம்பக்கூடாது. ஆனால் சாத்தான் நிச்சயமாக குழப்பத்தை உண்டுபண்ணி மக்கள் மத்தியில் புதுபுது உபதேசங்களை கொண்டுவந்து, அவர்களை திசைதிருப்புவான். அவர்கள் விசுவாசத்தை கவிழ்த்து போடுவான். ஆதலால் நீங்கள் ஜாக்கிரதையாயிருங்கள். ஆனாலும் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களை சாத்தான் ஒருக்காலும் வஞ்சிக்கமுடியாது. அவன் எத்தனை முறைதான் திரும்ப திரும்ப ஒருவரது வீடு சென்று அழைத்தாலும், அவர்கள் கால்களை தொட்டு கும்பிட்டு வாருங்கள் வாருங்கள் என கெஞ்சினாலும், அவர்களிடம் எவ்வளவு தான் நயமாக பேசினாலும் அவர்களை வஞ்சிக்க முடியவே முடியாது. வஞ்சகன் கோவை ராஜாவினால் தேவனுடைய பிள்ளைகளை ஒருக்காலும் வஞ்சிக்கமுடியாது. ஆனாலும் சாத்தானுடைய ஆடுகள் சாத்தானுடைய சத்தத்துக்கு செவிகொடுக்கும், இதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை.

185. ***காட்சியளித்தல் / பிரசன்னம்*** குறித்து நாம் தியானிக்கும்போது: தேவன் வெவ்வேறு இடங்களில் பலமுறைகளில் தம்முடைய பணிக்காக தாம் தெரிந்து கொண்ட பாத்திரங்களை அணுகி, அவர்களை சந்திக்கிறார். அவர்களுக்கு தரிசனமாகிறார். உதாரணமாக:

அ) மோசே, கர்த்தர் எகிப்திலிருக்கிற இஸ்ரவேல் ஜனத்தின் உபத்திரவத்தை பார்த்தார். அவர்கள் இடுகிற கூக்குரலைக் கேட்டார். அவர்கள் படுகிற வேதனைகளை அறிந்தார். எகிப்தியர் அவர்களை ஒடுக்குகிற ஒடுக்குதலைக் கண்டார். அவர்களை எகிப்தியரின் கைக்கு விடுதலையாக்க இறங்கினார். இஸ்ரவேல் புத்திரரை எகிப்திலிருந்து அழைத்து வரும்படி பார்வோனிடத்திற்கு மோசேயை அனுப்ப அவனுக்கு தரிசனமானார். வாசியுங்கள் யாத். 3:1-10. இங்கு நன்கு கவனியுங்கள். ***இறங்கினார், தரிசனமானார்*** என்று காண்கிறோம். இதை நாம் கர்த்தருடைய வருகை என்று கூறக்கூடாது. ஆனால் சாத்தான் இதை கர்த்தருடைய வருகையாகவே எடுத்துக் கூறுவான். எதற்கு? உண்மையான வருகைக்கு நீங்கள் உங்களை ஆயத்தமாக காத்துக்கொள்ளாதபடிக்கு, நீங்கள் உங்கள் பந்தய பொருளை இழந்து போக செய்ய. இதை தானே இன்று நம்முடைய சத்துருவாகிய கோவை ராஜா செய்து வருகிறார்.

ஆ) இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய பார்வைக்கு பொல்லாப்பானதை செய்தார்கள். அப்பொழுது கர்த்தர் அவர்களை மீதியானியரின் கைகளில் ஒப்புக்கொடுத்தார். மீதியானியரோ இஸ்ரவேலரை மிகவும் சிறுமைப்படுத்தினார்கள். இஸ்ரவேலர் கர்த்தரை நோக்கி முறையிட்டார்கள். ஆதலால் இஸ்ரவேலை மீதியானியரின் கைக்கு நீங்கலாக்கி இரட்சிக்க கிதியோனை அனுப்ப அவனுக்கு கர்த்தர் ஒரு கர்வாலி மரத்தின கீழ் உட்கார்ந்து தரிசனமானார். நியா. 6:1-12.

இ) பவுல் பிரயாணமாய் போய் தமஸ்குவுக்கு சமீபித்தப்போது அவனுக்கு தரிசனமானார். அவன் புறஜாதிகளுக்கும், இராஜாக்களுக்கும், இஸ்ரவேல் புத்திரருக்கும் அவருடைய நாமத்தை அறிவிக்கிறதற்கும் தெரிந்து கொண்ட பாத்திரமாயிருந்தான். அப்.9:1-15.

186. அடுத்து வருகை குறித்து தியானிப்போம். அவருடைய வருகை மூன்று முறைகள். முதல் தடவை அவர் தம்முடைய மணவாட்டியை மீட்க வந்தார். இரண்டாவது தடவை அவர் தமது மணவாட்டியை எடுத்துக்கொண்டு போக வருகிறார். இது ஒரு காதல் விவகாரமாக உள்ளது. அவர் தானே இரகசியமாக வந்து அவளை இரவு நேரத்தில் திருடிக்கொண்டு, உலகை விட்டு எடுத்துக்கொண்டு போய்விடுகிறார். அவரை நாம் ஆகாயத்தில் சந்திப்போம். அது கர்த்தருடைய இரகசிய வருகையாயிருக்கிறது. இரண்டாவது தடவை அவர் வருவது தம்முடைய மணவாட்டியை எடுத்துக்கொள்ளத்தான். முதலாவது தடவை, அவர் அவளை மீட்டுக்கொள்ளவந்தார்.. இரண்டாவது முறை அவளை பெற்றுக்கொள்ள வருகிறார். மூன்றாவது தடவை அவளோடு வருகிறார். இராஜாவும் இராணியும் வருகிறார்கள். ***(இயேசு கிறிஸ்துவை பற்றிய வெளிப்படுத்துதல்,*** இரண்டாம் பாகம். பத்து கன்னிகைகள், பத்தி 197).

**187. இங்கு நன்கு கவனியங்கள். கர்த்தர் தம்முடைய இரண்டாவது வருகையில் தம்முடைய மணவாட்டியை எடுத்துக்கொண்டு போக வருகிறார். அது கர்த்தருடைய இரகசிய வருகையாய் உள்ளது. இது எவ்வாறு நடக்கிறது? கர்த்தர் கீழே இறங்கி வருகிற வழியிலே அவரை மத்திய ஆகாயத்திலே, சபையானது ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு சந்திக்கும். (*பத்துக்கன்னிகைகள்,* பத்தி 148) That's the way the church will be caught up in air, in the middle of the air and meet the Lord on His road down. பாருங்கள் ஈசாக் தன் மணவாட்டியை அவளுடைய இருப்பிடத்திலோ அல்லது தன்னுடைய இருப்பிடத்திலோ சந்திக்காமல் அவளை நடுவழியில் சந்தித்து பின் தன் இருப்பிடத்திற்கு அழைத்துச் செல்கிறான். அவ்வண்ணமாகவே இயேசு கிறிஸ்துவும் தம்முடைய மணவாட்டியை பூமியில் சந்திக்காமல், பரலோகத்தில் தம்முடைய இருப்பிடத்தில் சந்திக்காமல் ஆகாயத்தில் சந்தித்து பின் அவளை பரலோகத்திற்கு அழைத்து செல்கிறார். இந்நாட்களில் ஒன்றில் நாம் பூமிக்கு அப்பால், பூமியின் வளையத்திற்கு அப்பால், எங்கோ ஆகாயத்தில் நிற்போம். அப்பொழுது நாம் இன்னமும் பரலோகத்தில் போய்விடமாட்டோம். நாம் அவரை ஆகாயத்தில் சந்திப்போம். (*பத்து கன்னிகைகள்,* பத்தி 146) And one of these days we will stand out beyond the earth, yonder the ring of the earth, out yonder somewhere in space;and we won't be in heaven yet, we will be caught up to**

**meet Him in the earth. இந்நாட்களில் கர்த்தருடைய வருகை வந்துவிட்டது என்று கூறினால் அது கர்த்தருடைய இரகசிய வருகை, அதாவது கர்த்தருடைய இரண்டாம் வருகையாகத் தான் இருக்கவேண்டும். மற்றபடி எதுவும் அவருடைய வருகை ஆகாது. ஆக 1963-ல் கர்த்தருடைய வருகை வந்துவிட்டது என்பது பரத்திலிருந்து வந்த ஞானமல்ல. அது கோவை சாத்தானின் கள்ள உபதேசம், அதில் மதிமயங்கிவிடாதீர்கள்.**

*188. இது ஒரு இரகசிய வருகையாக இருக்கும். அது எப்பொழுது சம்பவிக்கப்போகிறது என்பதை ஒருவரும் அறியமாட்டார்கள். நாம் ஆயத்தமாகவும், விழிப்புடனும் இருக்கும்படி கட்டளையிடப்பட்டிருக்கிறோம். எந்த மணிவேளை என்பதை நாம் அறியோம். ஆனால் அது என்னவாயிருந்தாலும் சரி, கடந்த காலத்தில் மரித்தவர்களுக்கு முந்திக் கொள்வதில்லை. முதலில் நாம் அவரை சந்திப்பதில்லை. நாம் ஒருவரையொருவர் நாம் முதலில் சந்திப்போம். வேதம் கூறுகிறது. எபே. 5-ம் அதிகாரம். கர்த்தருடைய வருகை மட்டும் உயிரோடிருக்கும் நாம் நித்திரை அடைந்தவர்களுக்கு முந்திக்கொள்வதில்லை. தங்களுடைய சாட்சிகளை தங்களுடைய இரத்தத்தினால் முத்திரையிட்ட அந்த விலையேறப் பெற்ற மக்கள் நித்திரையடைந்தவர்களை நாம் முந்திக்கொள்வதில்லை. ஏனெனில் எக்காளம் தொனிக்கும் அதுதானே அவருடைய வருகையை அறிவித்தலாகும். கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது உயிரோடெழுந்திருப்பார்கள். பின்பு உயிரோடிருக்கும் நாமும் மறுரூபமடைவோம். ஒரு ஷணத்தில், ஒரு இமைப்பொழுதில் நாம் மறுரூபம் அடைவோம். சுருக்குகள் மறைந்து போகும். நரைமயிர் நீங்கிவிடும். ஒரு மாற்றம் ஏற்படுவதை நாம் உணருவோம். நாம் நின்று கொண்டிருக்கையில் நமக்கு பிரியமானவர்களை முதலில் நாம் சந்திப்போம். அதோ அங்கே அம்மா இருக்கிறார்கள், அப்பா இருக்கிறார்கள், அதோ அங்கே என் பாலிய சிநேகிதன் இருக்கிறான். ஓ அல்லேலூயா! நாம் ஆயத்தமாக இருக்கிறோம் என்று சொல்லுகிறோம். மரித்து உயிர்த்தெழுந்த நாம் ஆகாயத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டு கர்த்தரை சந்திப்போம் என்று வேதவாக்கியம் கூறுகிறது. இதுவே வருகையின் ஒழுங்காகும். (இயேசு கிறிஸ்துவை பற்றிய வெளிப்படுத்துதல், இரண்டாம் பாகம், பத்து கன்னிகைகள், பத்தி 141, 142)*

***189. முதலாவதாக, கிறிஸ்து இரத்தம் சிந்தி மரிப்பதற்கென மனிதனாக தோன்றினார். அது அவருடைய முதலாம் வருகை. எடுத்துக்கொள்ளப்படுதலின் போது அவர் இரண்டாம் முறை வருகிறார். அப்பொழுது நாம் மறுரூபமாகி அவரை ஆகாயத்தில் சந்திப்போம். (நான்காம் முத்திரை, பக்கம் 521, பத்தி 210) First coming, He come a mortal, to bleed and die. That's His first coming. The second coming is the rapture; we meet Him in the skies, immortal. பாருங்கள் எடுத்துக்கொள்ளப்படுதல் தான் கர்த்தருடைய இரண்டாம் வருகை. ஆதலால் கோவை ராஜாவை நம்பி அக்கினி கடலில் பங்கடையாதீர்கள். ஜீவபுஸ்தகத்திலே எழுதப்பட்டவனாக காணப்படுகிறவன் நிச்சயமாக கர்த்தருடைய இரண்டாம் வருகை, ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்படுதல் என்ற உண்மையை பற்றிக்கொள்வான். இக்காலத்திற்குரிய செய்தியை கொண்டு தன்னை கர்த்தருடைய இரண்டாம் வருகைக்கு ஆயத்தப்படுத்தி வருகிறான்.***

190. அவர்கள் அனைவரும் தங்கள் சொத்துக்களை விற்றுவிட .. அவர்கள் ஒரு தேதியை குறித்து, அதை வேதவசனங்கள் மூலம் நிருபித்து, இயேசு அந்த குறிப்பிட்ட தேதியில் வருவாரென்று அறிவித்து, தாங்கள் தங்கள் சபையாருடனும் மற்றவர்களுடனும் மலைக்கு மேலே சென்று அங்கு உட்கார்ந்து காத்துக்கொண்டிருந்தார்கள். அடுத்த நாள் காலையில் பனி பெய்து அவர்களுடைய சிறகுகளையெல்லாம் நனைத்துவிட்டது. காற்றையெல்லாம் மேல் விட்டவர்களாக அவர்கள் கீழே இறங்கி வந்தனர். பாருங்கள்? கொள்கைகளும் (cults) மற்றவைகளும், அதை நம்பாதீர்கள். இயேசு இன்னும் நூறு ஆண்டுகளுக்கு வராமல் இருக்கக்கூடும். அவர் எப்பொழுது வருகிறார் என்று எனக்கு தெரியாது. அவர் எப்பொழுது வருகிறார் என்று எந்த மனுஷனுக்கும் தெரியாது. ஆனால் அவர் வரும்வரைக்கும் நான் தொடர்ந்து பிரசங்கிக்கவேண்டும். அவர் எப்பொழுது வருவார் என்று எனக்கு தெரியாது. ஆனால் அவருடைய வார்த்தைக்கும், அவருடைய மக்களுக்கும் நான் உண்மையாய் ஜீவித்து, ஒரு கிறிஸ்தவனைப் போல வாழ்ந்து, அவருடைய வருகைக்காக காத்திருக்க விரும்புகிறேன். (*கே.ப.* 314, பத்தி 201, 202, நாள் 23-8-1964) இது குறித்து மேலும் நீங்கள் *கே.ப.* 172, பத்தி 132-135 வரை தியானிக்கலாம்.

191. நாம் கர்த்தருடைய வருகைக்கு காத்திருக்க மட்டும் செய்யவேண்டும். காத்திருக்க மட்டும் செய்யுங்கள். உங்கள் தீவட்டிகளை சுத்தம்பண்ணி வைத்திருங்கள். அதை எண்ணெய்யால் முழுவதும் நிரப்புங்கள். ஒவ்வொரு மணிநேரமும் ஜெபித்துக்கொண்டிருங்கள். ஒவ்வொரு நாளும் அல்ல, ஒவ்வொரு மணிநேரமும் உங்களை ஆயத்தமாக வைத்திருங்கள். ஆயத்தமாகவே இனிமையாயிருங்கள், விழித்து காத்திருங்கள். (*கே.ப.* 253, பத்தி 198, நாள் 23-8-1964)

## பிரதான தூதனுடைய சத்தம் (1தெச. 4:16) மிகாவேல் தூதனுடையது என்பது கோவை ராஜாவுக்குள் குடியிருக்கும் பிசாசின் ஞானம்.

192. பொய்யிலே பிறந்து, அக்கிரமத்திலே உருவாகி, பொய் பேசுகிறவனாகவே இக்காலத்துக்குரிய செய்திக்குள் வந்த பந்தாக்காரனின் கைபிரதி ஒன்றை பார்த்தேன். *அது கடைசிக்கால செய்தி விசேஷகூட்டம் கி.பி. 2004,* 14 நவம்பர் 2004 நடந்தது. இந்த கைபிரதியின் நான்காவது பக்கம் *கடைசி கால செய்தி ஊழியர்களின் கவனத்திற்கு* என்று இருந்தது. அதில் *இரண்டாம் வருகையின் இரண்டு பாகங்கள்* என இருந்தது.
1. இரகசிய வருகை - மூன்று பகுதிகள் உள்ளது. (அ) ஆரவாரம் 1947 - 48 யிருந்து. (ஆ) பிரதான தூதனுடைய சத்தம் (மிகாவேல் இயேசு கிறிஸ்துவின் சத்தம்) 1963 லிருந்து என இருந்தது.
அ) இங்கு பிரதான தூதனுடைய சத்தம். (மிகாவேல் இயேசு கிறிஸ்துவின் சத்தம்) என்று எழுதியிருப்பது இக்காலத்துக்குரிய செய்தியிலிருந்து கொடுக்கப்பட்ட உபதேசமா? இல்லையே! பின் எங்கிருந்து எடுக்கப்பட்ட உபதேசம்? இது நம்முடைய எதிராளியாகிய பிசாசானவனுடைய சத்தம். இவன் சூளைமேடை விழுங்கிவிட்டான். மேலும் பல்லாவரம், பொழிச்சலூரையும் விழுங்க பார்க்கிறான். ஏனென்றால் இங்கும் போலியான அநேக ஊழியர்கள் உண்டு. ஆதலால் தான் பிசாசானவனுடைய நாட்டம் இந்நாட்களில் இந்த பகுதிகளில் அதிகமாக காணப்படுகிறது.

ஆ) ***இப்பொழுது இந்த பிரதான தூதனுடைய சத்தம், பிரதான தூதனாகிய மிகாவேல் சத்தமா? இல்லவே இல்லை. அப்படியானால் பின் இந்த சத்தம் யாருடையது? இது காபிரியேல் தூதனுடைய சத்தமாகும். நீங்கள் விசுவாசிக்கும் இக்காலத்துக்குரிய செய்தி இதுகுறித்து நமக்கு கொடுக்கும் போதனை கீழ்க்கண்டவாறு உள்ளது.*** **But when you see Gabriel come down, something major on the road. Gabriel announced the first coming of Jesus. *He will announce the second coming of Jesus. He will sound the trumpet, that dead in Christ shall rise, Gabriel, the great Archangel of God (Believest Thou this ? Houston, TX 15-1-1950)* காபிரியேல் தூதன் கீழே இறங்கி வருவதை நீங்கள் காணும்போது, அங்கு ஏதோ ஒரு பெரிய காரியம் நிகழ்வதாக இருக்கும். காபிரியேல், இயேசுவின் முதலாம் வருகையை அறிவித்தான். அவன் இயேசுவின் இரண்டாம் வருகையையும் அறிவிப்பான். அவன் எக்காளம் முழங்கும்போது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் எழுந்திருப்பார்கள். காபிரியேல் தேவனுடைய மிகவும் பெரிய, பிரதான தூதன்.**

இ) Gabriel was the one who announced the first coming of Jesus Christ. Is that right? And we're taught in the Bible that Gabriel will announce the Second Coming. He will sound the trumpet of God. (Is that right?) the coming of the Lord, the Angel of God, Gabriel, who stands at the – Lord's right hand. (Iam the resurrection and life. Chicago, IL 10-8-1952). இயேசு கிறிஸ்துவினுடைய முதலாம் வருகையை காபிரியேல் தூதன் அறிவித்தான். காபிரியேல் இரண்டாவது வருகையையும் அறிவிப்பான் என்று நாம் தேவனுடைய வார்த்தையிலிருந்து கற்பிக்கப்பட்டுள்ளோம். அவன் தேவனுடைய எக்காளத்தை முழங்குவான், கர்த்தருடைய வருகைக்காக. கர்த்தருடைய தூதனாகிய காபிரியேல் தேவசந்நிதானத்தில் தேவனுடைய வலதுபாரிசத்தில் நிற்பவன்.

ஈ) Now, when God get ready to do something, he sends a messenger. Always, always has, He always will Gabriel announced the first coming of Christ, Gabriel will announce the Second Coming of Christ. That's right. (Mary's belief . Beaument, TX 21-01-1961) இப்பொழுது, தேவன் ஒரு காரியத்தை செய்ய ஆயத்தமாகையில் அவர் எப்பொழுதும் ஒரு தூதனை அனுப்புகிறார். எப்பொழுதும் அவ்வாறே செய்கிறார். அவ்வாறே இனி மேலும் செய்வார். காபிரியேல் கிறிஸ்துவின் முதலாம் வருகையை அறிவிப்பு செய்தான். கிறிஸ்துவின் இரண்டாம் வருகையையும் காபிரியேல் அறிவிப்பான். அது சரிதான். (*மரியாளின் விசுவாசம்*, பத்தி 44, நாள் 21-10-1961)

193 *பிரியமானவர்களே நீங்கள் இங்கு நன்கு கவனித்தீர்களானால், பிரதான தூதனுடைய சத்தம் மிகாவேல் தேவதூதனுடையது அல்ல, மாறாக அது காபிரியேல் தேவதூதனுடையது என்பதை இக்காலத்துக்குரிய செய்தியிலிருந்து நன்கு அறிந்து கொள்ளலாம். ஆக அது மிகாவேல் என்று செய்திக்கு மாறாக உபதேசிப்பவன் பிசாசு. அவனுடைய உபதேசங்கள் குறித்து எச்சரிக்கையாயிருங்கள், எச்சரிக்கையாயிருங்கள் என திரும்ப திரும்ப நான் உங்களை எச்சரித்துக்கொண்டே வருகிறேன். செவி கொடுப்பது செவி கொடாமல் இருப்பது உங்களுடைய சுயாதீனம்.*

## இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை

***194. எடுத்துக்கொள்ளப்படுதலின் போது அவர் இரண்டாம் முறை வருகிறார். அப்பொழுது நாம் மறுரூபமாகி அவரை ஆகாயத்தில் சந்திப்போம். (நான்காம் முத்திரை, பக்கம் 521, பத்தி 210) இது தான் கர்த்தருடைய இரண்டாம் வருகை. இதையன்றி வேறெதுவும் கர்த்தருடைய இரண்டாம் வருகை ஆகாது. அது ஒரு போதும் ஆகாது. இதில் இருபாகமோ, மூன்று பாகமோ எதுவும் கிடையாது.*** *Rapture is the Second Coming of our Lord.* ***இதர சம்பவங்கள் யாவும் அடையாளம், பிரசன்னமாக இருக்கின்றன. அவைகள் கர்த்தருடைய இரண்டாம் வருகை ஆகாது.***

195. இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை இரு பாகங்கள் கொண்டது. ஒன்று இரகசிய வருகை. மற்றொன்று பகிரங்க வருகை என ஒரு நவீன உபதேசத்தையும் கொண்டு வந்த பெருமை கள்ளம், கபடம், சூது, வஞ்சனை, பொய், பித்தலாட்டம் நீருற்றுகளிலிருந்து சுரந்து, கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தை அறிக்கையிடும் கோவை ராஜாவுக்கு சேரும். ஆனால் இந்த உபதேசம் தீர்க்கதரிசியின் செய்தியில் எங்கேயாவது காணப்படுகிறதாயென்றால், கிடையாது. அதோடு மட்டுமல்ல தேவனுடைய வார்த்தையில் தான் எங்கேயாவது இதற்கு ஆதாரம் உண்டா என்றால் அதுவும் கிடையாது. இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை குறித்து இக்காலத்துக்குரிய செய்தி என்ன கூறுகிறது.

அ) ***முதலாவதாக ஆரவாரம்.*** **கர்த்தர் வானத்திலிருந்து இறங்கி வரும்போது முதலாவது ஆரவாரம் புறப்பட்டு சென்றது. ஆரவாரம் என்பது ஜனங்களை ஒன்றுக்கூடுவதற்கென்று அளிக்கப்படும் செய்தியாகும். மணவாட்டியை ஒன்று சேர்க்க அழைக்கும் செய்தி.** ***ஏழு முத்திரைகள் திறக்கப்பட்டு இரகசியம் வெளியானபோது தான் இச்செய்தி வந்தது. இது மணவாளனுக்கு எதிர்கொண்டுப்போகப் புறப்படுங்கள் என்கிற சத்தம் ஆகும். இது கன்னிகைகள் தங்கள் தீவட்டிகளை ஆயத்தப்படுத்தும் சமயம் ஆகும். மத். 25:6,7. இது மல்.4 வது அதி. நேரம். லூக்.17: அதி. நேரம். ஆக ஆரவாரம் கர்த்தருடைய வருகைக்கென்று மக்களை ஆயத்தப்படுத்த ஒரு செய்தியாகும்.***

ஆ) ***இரண்டாவதாக பிரதான தூதனுடைய சத்தம்.*** **இது கிறிஸ்துவுக்குள் மரித்தோரை உயிரோடெழுப்பும் சத்தம். யோவான். 11:38-44 லாசருவை கல்லறையை விட்டு வெளியே வரும்படி அழைத்த அதே சத்தம். லாசருவே வெளியே வா என்று அவர் கூறின அதே உரத்த சத்தம். உயிரோடெழுப்பும் சத்தமாக அமைந்து, நித்திரையடைந்த மணவாட்டியை உயிரோடெழும்ப செய்யும். கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள். மரணமடைந்த மற்றவர்கள் 1000 வருடம் முடியுமளவும் உயிரடைவதில்லை. இவர்கள் நோவாவைப் போல் உபத்திரவக் காலத்துக்குள் பிரவேசிக்கிறார்கள். ஆக பிரதான தூதனுடைய சத்தம் தொனிக்கும்போது மரித்தோர் உயிரோடெழும்புகின்றனர். முன் காலங்களில் நித்திரையடைந்த மணவாட்டியை உயிரோடெழுப்புதல்.**

**இ) *மூன்றாவது எக்காளம்.* அதாவது தேவஎக்காளம். எக்காளம் ஊதப்பட்டு ஜனங்கள் விருந்துக்கு அழைக்கப்படுகிறார்கள். இது தான் ஆட்டுக்குட்டியானவர் மணவாட்டியுடன் ஆகாயத்தில் நடத்தும் விருந்தாகும். ஆகாயத்தில் நடக்கும் விருந்துக்காக உயிரோடெழும்பின மணவாட்டியும், உயிரோடுள்ள மணவாட்டியும் ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்படுதல். அவர் எக்காளம் முழங்கி, மணவாட்டியை ஆட்டுக்குட்டியானவருடைய விருந்துக்கு அழைப்பார். இது குறித்து நீங்கள் *ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்படுதல்* செய்தியில் பத்தி 152-165 வரை தியானிக்கலாம். செய்தி நாள். 4-12-1965.**

196. மணவாட்டி சபை நித்திரையடைந்தவர்களுடன் கூட எடுக்கப்பட்டு, கர்த்தரை ஆகாயத்தில் சந்திக்கிறது. ஏனோக் இதற்கு முன் அடையாளம். ஏனோக் 300 ஆண்டுகள் தேவனோடே சஞ்சரித்துக்கொண்டிருந்து காணப்படாமல் போனான். தேவன் அவனை எடுத்துக்கொண்டார். விசுவாசத்தினாலே ஏனோக் மரணத்தைக் காணாதபடிக்கு எடுத்துக்கொள்ளப்பட்டான். தேவன் அவனை எடுத்துக்கொண்டபடியினாலே அவன் காணப்படாமல் போனான். அவன் தேவனுக்கு பிரியமானவன் என்று அவன் எடுத்துக்கொள்ளப்படுதலுக்கு முன்னமே சாட்சி பெற்றான். ஆதி.5:22-34. எபி.11:5. நாங்கள் இப்பொழுதே எடுத்துக்கொள்ளப்படுதலுக்கு ஆயத்தம், ஆயத்தம் எனக் கூறும் சகோதரனே, சகோதரியே உன்னுடைய வாழ்க்கை தேவனுடைய சாட்சிப் பெற்றதாக உள்ளதா? ஆயத்தம் எனக் கூறும் நீ உன்னையே நன்கு சீர் தூக்கிப் பார், வஞ்சிக்கப்படாதே. இது கொடிதான வஞ்சிப்பின் காலம்.

197. **அடுத்து கிறிஸ்து மூன்று முறை வருகிறார். அவர் மூன்று என்னும் எண்ணிக்கையில் பரிபூரணப்படுகிறார். முதலாவது கிறிஸ்து இரத்தம் சிந்தி மரிப்பதற்கென மனிதனாக தோன்றினார். அது அவருடைய முதலாம் வருகை. *எடுத்துக்கொள்ளப்படுதலின் போது அவர் இரண்டாம் முறை வருகிறார். அப்பொழுது நாம் மறுருபமாகி அவரை ஆகாயத்தில் சந்திப்போம்.* அவர் மூன்றாவது முறை வருகையில் அவர் தேவ அவதாரமாக இருக்கிறார். தேவன் இம்மானுவேல் பூமியை ஆளுவதற்கென வருகிறார். அது உண்மை. அவர் மூன்று முறை மட்டுமே வருகிறார். *(நான்காம் முத்திரை,* பக்கம் 521, பத்தி 210,** Watch Christ, First coming, He come a mortal to bleed and die. Is that right? That's His first coming. ***The second coming is the rapture. we meet Him in the skies, immortal***. His third coming – He's the incarnate God Amen! God Immanuel to reign on earth. That's right. Only three. (Revelation of the Seven Seals, Page 308, Last para. – in Old Edition. In the new Edition page 274, para 210.)

198. இப்பொழுது சாத்தானுடைய உபதேசத்தை, தீர்க்கத்தரிசியின் உபதேசத்தோடு ஒப்பிட்டுப் பாருங்கள். ***கிறிஸ்து மூன்று முறை வருகிறார். அதில் இரண்டாவது வருகை எடுத்துக்கொள்ளப்படுதல் (Rapture) எனக் காண்கிறோம்.*** இந்த இரண்டாம் வருகையில் இரு பாகங்கள் கிடையாது. இது ஒரே சம்பவம் தான். அதாவது எடுத்துக்கொள்ளப்படுதல். இந்த இரண்டாம் வருகைக்கு முன் மூன்று சம்பவங்கள் நடைபெற வேண்டும். ஒன்று ஆரவாரம், இரண்டு பிரதான தூதனுடைய சத்தம், மூன்றாவது தேவஎக்காளம். இந்த மகத்தான நிகழ்ச்சியை நீங்கள் காண விரும்புகிறேன். காணத் தவறவேண்டாம். ***கர்த்தர் பிரசன்னமாகு முன்பு மூன்று காரியங்கள் நிகழ வேண்டும் என்று 13-16 வசனங்கள். (1தெச.4அதி உரைக்கின்றன) அவை ஆரவாரம், சத்தம், எக்காளம் என்பனவாம்.*** பாருங்கள் கர்த்தருடைய இரண்டாம் வருகை, அதாவது எடுத்துக்கொள்ளப்படுதலுக்கு முன் மூன்று காரியங்கள் சம்பவிக்கவேண்டும்.

199. இந்த சம்பவங்கள் மூன்று குறித்து நாம் தீர்க்கதரிசியின் செய்தியை மேலே கண்டோம். ஆனால் இந்த மூன்று சம்பவங்கள் குறித்து சாத்தான் கீழ்க்கண்டவாறு பிரசங்கம் செய்கிறான். இதை நான் இவரது 14-11-2004 கூட்ட அழைப்பு கைப்பிரதியிலிருந்து எடுத்துள்ளேன். இரகசிய வருகை மூன்று பகுதிகள் உடையது. ஒன்று ஆரவாரம் 1947-48லிருந்து. இரண்டாவது பிரதான தூதனுடைய சத்தம் (மிகாவேல் இயேசு கிறிஸ்துவின் சத்தம்) 1963லிருந்து. இந்த இரு பகுதிகளும் நிறைவேறிவிட்டது. இனி மூன்றாவது கட்டம், தேவஎக்காளம் ஒன்று மாத்திரமே நிகழவேண்டும் என உபதேசிக்கிறார். இந்த ஞானம் எங்கிருந்து வந்தது? பாதாளத்திலிருந்து. மூன்றாவது தேவஎக்காளம்? இனி வரப்போவது தேவ எக்காளம் தொனித்தவுடன் மத்திய ஆகாயத்தில் மணவாட்டி இருப்பாள். 1தெச.4:13-18

200. மேற்கண்ட உபதேசம் தீர்க்கதரிசியின் செய்திக்கு எவ்வாறு முரண்பட்டது என்பதை நீங்களே புரிந்து கொள்ளலாம். தேவனுடைய வித்துக்கள் இன்னும் மரித்தோர் உயிர்தெழுதல் நடக்கவில்லை என்றே விசுவாசிக்கின்றனர். ஆக இக்காலத்துக்குரிய செய்தியின்படி நாம் ஆரவாரம் கட்டத்தில் தான் உள்ளோம். இரண்டு மற்றும் மூன்றாவது சம்பவங்கள் இன்னும் நடைபெறவில்லை. ஆனால் கோவை சாத்தான் தீர்க்கதரிசியின் செய்தியை மாற்றி அங்கு தன் சொந்த விளக்கம் கொடுத்து, தன் உபதேசத்தின்படி ஒன்று மற்றும் இரண்டாவது கட்டம் நிறைவேறிவிட்டது என்று போதிக்கிறார். இந்த உபதேசத்தில் தேவனுடைய வித்துக்களுக்கு எந்தவித பங்கும் இல்லை. அவர்கள் சாத்தானுடைய சத்தத்துக்கு செவி கொடுக்க மாட்டார்கள்.

201. ***கோவை ராஜாவை போன்ற கள்ள போதகர்களும், நாகரீக பிரசங்கிமார்களும், இக்காலத்தில் காணப்படுவார்கள். நாம் அதை தடுக்க முடியாது. இக்காலத்துக்குரிய செய்தி, செய்தி என்று மார்பு அடிப்பவர்கள் மத்தியில் நீங்கள் உண்மையான செய்தியை காணமுடிகிறதில்லை. எங்குமே கூட்டியும், குறைத்தும் செய்தி காணப்படுகிறது. வலசரவாக்கம் சென்றாலும், பெரவலூர் சென்றாலும் எங்கும் வறட்சி நிலைதான். ஆனால் கூட்டம் உண்டு. கூட்டமிருந்து அங்கு தேவனுடைய வார்த்தையும், இக்காலத்துக்குரிய செய்தியும் இல்லாவிட்டால், அதினால் பலன் என்ன? ஒன்றுமேயில்லை.***

202. நான் மஹாராஸ்டிரா, பூனாவில் ஒரு சபையை அறிவேன். அங்கு ஒரு நல்ல கூட்டம் இருந்து வந்தது. பின் சில காலம் கழித்து நான் அங்கு சென்றபோது பாஸ்டர் மனைவியை விட்டு வேறு யாரும் சபையில் இல்லை. ஏன் இந்த பரிதாபமான நிலை? சத்தியத்தை சத்தியமாக, வேதவாக்கியங்களை கொண்டும், இக்காலத்துக்குரிய செய்தியைக் கொண்டும் சபையை கடிந்து கண்டனம் பண்ணினேன். அதன் விளைவு தான்,

இந்த நிலை என்றார் எனது அருமை சகோதரனும் பாஸ்டருமாகிய சகோ.எஸ்வந்த் குப்தே. இருவரும் கிறிஸ்துவுக்குள் மகிழ்ச்சி அடைந்தோம்.

203. **பெரவலூரிலும், வலசரவாக்கத்திலும் ஓரளவு கூட்டமுண்டு. இதை யாரும் மறுக்க முடியாது. ஆனால் அங்கு சத்தியம் இல்லையே. பாஸ்டர் ஐசக் வசந்தகுமார், பாஸ்டர் சாமுவேல் இருவரின் சொந்த சரக்குகளே அங்கு விலை போகிறது. தேவனுடைய வார்த்தைக்கும், இக்காலத்துக்குரிய செய்திக்கும் அங்கு இடமேயில்லை. ஆவியின்படி பேசுவோமானால், இந்நாளில் ஒரு பெரிய ஆவிக்குரிய வறட்சியிருப்பதை ஆவிக்குரியவர்களாகிய நாம் நன்றாக அறிந்திருக்கிறோம். *கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு முன்பாக தேசத்திலே பஞ்சம் உண்டாயிருக்கும். வெறும் ஆகாரத்திற்காக அல்ல, தேவனுடைய வார்த்தையை கேட்கக்கூடாத பஞ்சம். அந்த நாள் இதுவே.* இது குறித்து நீங்கள் *ஏற்றகாலத்தில் ஆவிக்குரிய ஆகாரம்* என்ற செய்தியில் பத்தி 342ஐ தியானியுங்கள். செய்தி நாள் 18-07-1965. தேவனுடைய உண்மையான வார்த்தையை சபைகளில் கேட்க முடியவில்லை. இக்காலத்துக்குரிய செய்தியை அது உள்ளபடியே கேட்கமுடியவில்லை. எங்கும் கூட்டியும், குறைத்தும் தங்கள் கருத்துக்களோடு அதை இணைத்து, செய்தியாக பிரசங்கிக்கப்படுகிறது. இதனால் எங்கும், எதிலும் செய்திக்குள் குழப்பமே காணப்படுகிறது. இதனால் தான் ஒருவர் தலைக்கல் வந்துவிட்டது என்கிறார். இரண்டாவது நபர் கர்த்தருடைய வருகை வந்துவிட்டது என்கிறார். மூன்றாம் நபர் கர்த்தர் முழுவதுமாக இறங்கி இன்னும் வரவில்லை, பல கட்டங்களில் இறங்கி, இறங்கி வந்து கொண்டிருக்கிறார் என்கிறார். நான்காவது நபர் கர்த்தருடைய இராப்போஜனம் தேவையில்லை என்கிறார், ஐந்தாவது நபர் இனி கால்களை கழுவும் பந்தியும் தேவையில்லை என்கிறார், ஆறாவது நபர் பலமுள்ள வேறொரு தூதன் வந்துவிட்டார், அது தான் கர்த்தருடைய வருகை என்கிறார். ஏழாவது நபர் இனி ஞானஸ்நானம் தேவையில்லை என்கிறார். எட்டாவது நபர் ஏழு தூதர்கள் சகோ.பிரன்காமை சந்தித்தார்கள். அவர்களால் உண்டான மேகவளையம் தான் ஏழாம் முத்திரையின் அரைமணி நேரமளவும் அமைதல், அதாவது கர்த்தர் வந்துவிட்டார், ஏழாம் முத்திரை சம்பவம் நிறைவேறிவிட்டது என்கிறார். ஐயோ! எங்கும் தலைக்காட்ட முடியவில்லை. எங்கு பார்த்தாலும் ஆவிக்குரிய பஞ்சம், வறட்சி.**

204. பல்லாவரம், பொழிச்சலூர் பக்கம் போனால் கர்த்தருடைய வருகை வந்துவிட்டது என்கிறார்கள். வலசரவாக்கம் பக்கம் போனால் பைபிள் தேவையில்லை, செய்தி ஒன்றே போதும் என்கிறார்கள். சூளைமேடு பக்கம் போனால், நான் உங்கள் எலும்பும், உங்கள் மாம்சமுமானவன் என்று நினைத்துக்கொள்ளுங்கள். இப்பொழுது நீங்கள் யார்? நீ 80 சதவீதமா? அல்லது 5 சதவீதமா, 80 சதவீதம் தலைமையை ஏற்றுக்கொள்ள தயாரா என்கிறார்கள். ஷிபோலேத், சிபோலேத் (நியாயாதி 12:6) பாகுபாடுதான் இங்கு தலையெடுத்து ஆடுகிறது. இப்படியாக இக்காலத்துக்குரிய செய்தி மக்கள் மத்தியில் சென்று தலைகாட்ட முடியவில்லை. அவிசுவாசிகளும், பாவனை விசுவாசிகளும், கள்ளபோதகர்களும், நாகரீக பிரசங்கிமார்களும் வரப்போகிற நியாயத்தீர்ப்புக்கு இடமளித்து விட்டார்கள். இவர்கள் தேவனுடைய வார்த்தையையும், இக்காலத்துக்குரிய செய்தியையும் விட்டு விலகி, தங்கள் கோட்பாடுகளை, சுய கருத்துக்களை செய்திக்குள் நுழைத்து தங்களுக்கு ஒரு பெயர் தற்காலிகமாக உண்டாக்கி கொண்டார்கள். ஆனால் முடிவோ பாபேல் தான். அவர்கள் கூட்டம் சேருகிறதை பார்த்து பெருமைபடுகிறார்கள். ஆனால் நானோ தேவனுடைய வார்த்தை நிறைவேறுகிறதை பார்த்து மகிழ்ந்து கொண்டிருக்கிறேன். இதுதான் அவர்களுக்கும் எனக்குமுள்ள வித்தியாசம். உங்களுடைய காரியம் என்ன?

**205. ஸ்தாபனம் சென்றால் அங்கு நீ அசெம்ளி ஆப் காட், நான் தி பெந்தெகொஸ்தே, அவன் இரட்சணிய சேனை, இவன் ஏழாம் நாள் திருசபை எனக்கூறி ஒருவருக்கொருவர் முட்டி, மோதி கொள்கிறார்கள். தேவனுடைய பிள்ளைகளை ஸ்தாபன சபைகள் வேறு பிரிக்கிறது. ஆனால் கிறிஸ்துவோ பிரிந்திருக்கவில்லை. அங்கிருந்து இக்காலத்துக்குரிய செய்தி எனக்கூறும் கூட்டத்துக்குள் வந்தால் அங்கு ஆயிரம் வித்தியாசமான உபதேசங்களைக் கொண்டு, ஒவ்வொருவனும் தனக்கென்று ஒருசில ஆத்துமாக்களை ஆதாயப்படுத்திக்கொண்டு, நீ அவனிடம் செல்லாதே, இவனிடம் செல்லாதே என்று கூறி கூறி தங்கள் தங்கள் காரியங்களை நயவஞ்சகமாக சமாளிக்கிறார்கள். பாஸ்டர்களுடைய ஆதிக்கமே எங்கும். பாஸ்டர் வணக்கமே எங்கும். கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்திற்கு பாத்திரமான வாழ்க்கை எங்கும் காணப்படுவதில்லை. பாஸ்டர்கள் விசுவாசிகளின் காணிக்கை, தசமபாகத்தை கொண்டு தங்களுக்கு ஒரு கூட்டம் ஜனங்கள், சொத்து, ஆஸ்திகளை சேர்ப்பது தான் ஆர்வமாய் உள்ளார்கள். ஸ்தாபன சபைகளைவிட இவர்கள் கேடுகெட்ட நிலையில் இருக்கிறார்கள். எங்கும் மாய்மாலம், பித்தலாட்டம். கடைசி காலத்தில் இக்காலத்துக்குரிய செய்தியிலுள்ள சபைகள் என கூறி கூறி அதன் பாஸ்டர்களான மாய்மாலக்காரர்களே உங்களுக்கு ஐயோ, ஒருவனை உங்கள் பக்கம் இழுத்து உங்கள் மார்கத்தானாகும்படி அவனை வசீகரித்து, பின் அவனை உங்களிலும் இரட்டிப்பாய் நரகத்தின் மகனாக்குகிறீர்கள். உங்கள் பொருளாசையினால், கள்ளகபடமுள்ள போதனைகளால் அவனை பாழாக்கும் நீங்கள் நரகாக்கினைக்கு எப்படி தப்பித்து கொள்வீர்கள்? சென்னை பாஸ்டர்களே, நீங்கள் மனந்திரும்பும்படி உங்களை அழைக்கிறேன்.**

*206. ஆக பொய் போதகம் பண்ணுகிற கோவை ராஜாவின் உபதேசங்கள் அனைத்தும் மாயையும் மனதுக்கு சஞ்சலமுமாயிருக்கிறது. ஆனாலும் சத்துருவாகிய சாத்தானுக்கு யார் செவிக்கொடுப்பார்கள்? அவனுடைய ஆடுகளே அவனுக்கு செவிக்கொடுக்கும். சாத்தான் மனிதன் அறிவின் அடிப்படையில் பல சுவிசேஷ திட்டங்களை உருவாக்கி, தேவனை உண்மையாய் சேவிக்க ஆவல் கொண்டிருப்பவர்களை வசீகரத்து அவன் கூறும் பொய்யை நம்பசெய்கிறான். இதை தான் நம் மத்தியிலுள்ள கள்ளகபடமுள்ள கோவை ராஜா செயது வருகிறார். ஆனாலும் சாத்தானுக்கு வெற்றி உண்டு. எப்படி? அந்தந்த காலத்திற்கென அளிக்கப்பட்டுள்ள அக்காலத்துக்குரிய செய்தியின் முக்கியத்துவத்தை குறைத்துப்போட ஒவ்வொரு காலத்திலும் ஜனங்கள் அவனை அனுமதித்ததின் விளைவாக அவன் அமோக வெற்றியை கொண்டுள்ளான். ஒவ்வொரு காலத்திலும் அவன் அப்படியே செய்து வருகிறான். இந்த அடிப்படையில் தான் சூளைமேடு சபை அவனுக்கு அடைக்கலம்*

*கொடுத்துள்ளது. ஆதலால் நாம் இதில் ஆச்சரியப்படத்தக்க விஷயம் ஒன்றுமில்லை. செய்தி நிறைவேறி வருவதை நீங்கள் காணத்தவறுவதென்ன? தேவனுடைய வித்துக்கள் இதைக்காண தவறமாட்டார்கள். ஏனென்றால் அவர்கள் விழிப்புள்ளவர்கள், தெளிந்த புத்தியுள்ளவர்கள். இது குறித்து நீங்கள் தியானிக்க விரும்பினால் சாத்தானின் ஏதேன் என்ற செய்தியில், பக்கம் 18, பத்தி 4 ஐ தியானிக்கலாம்.*

207. *உங்களுக்கு அது ஞாபகமாயுள்ளதல்லவா? கிறிஸ்துவின் முதலாம் வருகைக்கு முன்னோடியாக யோவான்ஸ்நானன் அனுப்பப்பட்டதுபோல, உன் செய்தி .. கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு முன்னோடியாயுள்ளது. இந்த செய்தியே. அப்படித்தான் கர்த்தருடைய தூதன் உரைத்தான்.*
*அந்த தூதனே, கிறிஸ்துவின் முதலாம் வருகைக்கு முன்னோடியாக யோவான்ஸ்நானன் அனுப்பப்பட்டதுபோல நீ இந்த செய்தியுடன் அனுப்பபட்டிருக்கிறாய் இது கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு முன்னோடியாக இருக்கும் என்ற செய்தியை அளித்தார். இப்பொழுது, செய்தி (கே.ப. 123, பத்தி 384, 385)*
*வேதவாக்கியங்களின் படி 30ஆண்டுகளுக்கு முன்பு, 33 ஆண்டுகளுக்கு முன்பு அவர் அங்குள்ள நதியண்டை கூறின விதமாக (1933வது ஆண்டில்) எல்லாமே அப்படியே நிறைவேறிவிட்டது. ஒருக்காலும் நான் அதை செய்ய மாட்டேன். ஆனால் இந்த செய்தியானது இயேசுவை உலகிற்கு அறிமுகப்படுத்தும். யோவான்ஸ்நானன் அவருடைய முதலாம் வருகைக்கு முன்னோடியாய் அனுப்பப்பட்டது போல இந்த செய்தியும் அவருடைய இரண்டாம் வருகைக்கு முன்னோடியாயிருக்கும். யோவான், இதோ உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்க்கிற தேவஆட்டுக்குட்டி என்றான். யோ.1:29. எனவே, எல்லாவகையிலும் இது இணையாக உள்ளது. அது அப்படியிருக்குமென்று எனக்கு தெரியும். செய்தியானது போய்கொண்டிருக்கும் (பார்வையை திருப்பி இயேசுவை நோக்கிப் பாருங்கள், பக்கம் 14, பத்தி 1-ன் கடைசி பாகம், நாள் 29-12-1963.)*
***A voice came that shook all around the places there, said, as John the Baptist was sent to forerun the first coming of Christ, the Message that is given you will be forerunning of the second coming of Christ. NOT THAT I WOULD BE A FORERUNNER, BUT THE MESSAGE WAS THE FORERUNNING. (Testimony, William Branham. Sun . Juen P R Wednessday 2-10-1960***
*பாருங்கள் ஏழாம் தூதன் கர்த்தருடைய வருகைக்கு முன்னோடி அல்ல. அவன் மூலமாக தேவன் சபைக்கு கொடுத்த செய்தியே கர்த்தருடைய இரண்டாம் வருகைக்கு முன்னோடி.*

208. *நாங்கள் முடிவுள்ளவர்கள் என்பதை நாங்கள் அறிந்திருக்கிறோம். கர்த்தாவே நாங்கள் யாராயிருந்தாலும் சரி. நாங்கள் அழிவுள்ளவர்கள் தான். செய்தியாளன் அல்ல, செய்தி தான். அதை அளித்தருளும். (முற்றிலுமானவர். பத்தி 374. நாள் 30-12-1962) தீர்க்கதரிசியின் செய்தி கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு முன்னோடி. இரண்டாம் வருகை என்பது எடுத்துக்கொள்ளப்படுதல்* ***Prophetic Message is to forerun the Second Coming of Christ - The Rapture.***

**209. இங்கு நன்கு கவனியுங்கள், ஏழாம் சபைக் கால தூதன் இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு முன்னோடி அல்ல. செய்தியே முன்னோடி. ஆரவாரம் - செய்தி புறப்படுகிறதற்கு முன்னே, மணவாட்டி தன்னை ஆயத்தப்படுத்தும் முன்னே கிறிஸ்துவின் இரண்டாம் வருகை எவ்வாறு நிகழ முடியும்? செய்தி - ஆரவாரம் முத்திரையின் இரகசியங்கள் வெளிப்படுத்தப்பட்டபின்பு தானே புறப்பட்டது. அது மணவாட்டியை, மணவாளனை சந்திக்க ஆயத்தப்படுத்திக் கொண்டு வருகிறது. ஆக மணவாளனை சந்திக்க செய்தி புறப்பட்டு சென்று மணவாட்டியை ஆயத்தப்படுத்தும் முன் கர்த்தருடைய இரண்டாம் வருகையை எப்படி வந்துவிட்டது? செய்திக்கு கர்த்தருடைய வருகை முன்னோடியாகி விட்டதோ? சாத்தானே உன்னுடைய ஆழங்கள் எனக்கு தெரியாதோ? கர்த்தருடைய இரண்டாம் வருகை 1963, பிப்ரவரியில் வந்துவிட்டது என்கிறீர்கள். ஆனால் ஆரவாரம் - செய்தி 1963 மார்ச்சில் புறப்பட்டது. அப்படியானால் வருகை செய்திக்கு முன்னோடியாகிவிட்டதல்லாவா? ஆதலால. வஞ்சிக்கிறதற்கேதுவான தந்திரமுள்ள போதகங்களை கொண்டுவந்து சபையை பலவீனப்படுத்தும் கோவை ராஜாவை புறம்பே தள்ளுங்கள். அவருடைய உபதேசங்கள் யாவும் பிசாசினுடையவைகள். அன்று ஏவாள் பிசாசின் உபதேசத்தினால் மதிமயங்கினது போல் நீங்களும் கோவை ராஜாவின் உபதேசங்களில் மதி மயங்கிவிடாதீர்கள். இவர் தந்திரமானவர். சாத்தான் தந்திரமானவன்.**

210. இயேசு கிறிஸ்துவின் வருகையை நாங்கள் இன்று இரவு கூட எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம். (*வித்து பதருடன் சுதந்தரவாளியாய் இருப்பதில்லை,* பக்கம் 43, தொடரும் பத்தியின் முடிவு. நாள் 18-2-1965) 18-2-1965 அன்று கூட கர்த்தருடைய வருகையை தீர்க்கதரிசி எதிர்நோக்கி கொண்டிருக்கும் வேளையில் சூளை மேட்டார் 1963-ல் கர்த்தருடைய இரண்டாம் வருகை வந்துவிட்டது. மற்றும் 1963-லிருந்து 2003 வரை ஒரு சந்ததி முடிந்து மறு சந்ததி தோன்றி, அதன் காலத்தில் ***இந்த வெளிப்பாடுகள் தோன்றவேண்டும்*** என்பது வேத பூர்வமானது எனக் கூறி தனது கூட்டாளியிடமிருந்து வெளிப்பாடுகளுக்காக 2005-ல் காத்திருக்கும் நம்பிக்கை தேவன் தொடங்கினது தானா? இல்லை என்பதே எனது கணிப்பு. நம்முடைய சந்ததியில் நான் எழுப்புதலை எதிர்பார்க்கவில்லை. கர்த்தருடைய வருகையை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறேன். (***கிறிஸ்துவின் மணவாட்டியின் காணக்கூடாத இணைப்பு,*** பக்கம் 9, பத்தி 2, நாள் 25-11-1965) சபைக்கால தூதன், தீர்க்கதரிசி தன் சந்ததியிலே கர்த்தருடைய வருகையை எதர்பார்த்துக்கொண்டிருந்தார். ஆனால் இந்த குருடர்கள் ஒரு சந்ததி ஆரம்பித்து 2003-ல் அது முடிந்து மறு சந்ததியில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். மறுசந்ததியில் 2005-ல் நாங்கள் புதுபுது வெளிப்பாடுகளை எதிர்ப்பார்த்துக்கொண்டிருக்கிறோம் என்கிறார்கள். கூட்டாளிகள் இருவர்களுடைய உபதேசத்திற்கும், இக்காலத்துக்குரிய செய்திக்கும் எந்தவிதமான சம்பந்தம் உண்டா என்று கவனிப்பீர்களாகில், எல்லாம் ஒன்றுக்கொன்று முரண்பாடாகவே இருக்கும். ஆதலால் தான் நான் இவர்களை முரண்பாட்டின் வித்து என அழைக்கிறேன்.

211. மேலும் இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை வந்துவிட்டது என்ற உபதேசம் தவறு என்று சொல்லுகிறவர்களை மேடைக்கு அழைத்த உபதேசம் இது தான். இதுவரை யாரும் எங்களுக்கு முன்னே எதிர் நின்றது இல்லை என தனக்கு தானே கழுத்தில் புகழ் மாலை சூட்டிக் கொள்ளும் விரியன் பாம்பு குட்டியே, நீங்கள் ஒரு வீரனாக இருந்தால் முதலில் எனது பிப்ரவரி - ஏப்ரல் 2005 செய்தித்தொகுப்பில் பத்திகள் 230-240 வரை எழுதப்பட்டுள்ளவைகளுக்கு முதலில் பதில் கொடுங்கள். உங்களது பதில் தேவனுடைய வார்த்தையைக்

கொண்டும், இக்காலத்துக்குரிய செய்தியைக் கொண்டும் இருக்கவேண்டும். உங்களைப் போன்று நான் ஒன்றும் அரைகுறை வேக்காடு அல்ல. நான் நிதானமாய் நடக்கிறவன். நான் என் வழிகளில் தாறுமாறானவன் அல்ல. நான் ஒரு பந்தா கேஸ் அல்ல. நான் செல்வாக்கையோ, கூட்டாளிகளின் புகழ்ச்சியையோ இதுவரை என்னுடைய ஊழியத்தின் பாதையில் என்றும் தேடினதில்லை என்பதை என்னோடு நன்கு பழகினவர் அறிவார்கள். என்னால் இயன்றவரை ஒரு தாழ்மையுள்ளவனாய் வாழ்ந்து, ஒரு உண்மையும் உத்தமுமான கிறிஸ்தவன் எவ்வாறு இருக்கவேண்டுமோ அவ்விதம் வாழ்ந்து வருகிறேன். வழவழவென்று ஒத்துபோகும் ஆவியுடன் நான் சிறிதளவு கூட இசைந்து செல்வதில்லை. ஒரு மனம் இல்லாத இடத்திலிருந்து என்னை எப்பொழுதும் வேறு பிரித்து, வேறு பிரித்துக்கொண்டே வருகிறேன். ஏனோக்கை போன்று தேவனோடு சஞ்சரிப்பதை அதிகமாக விரும்புகிறேன். பாருங்கள் செய்தியும் என்ன கூறுகிறது? செய்தியானது அவிசுவாசிகளிடமிருந்து விசுவாசிகளை வேறு பிரிக்கிறது. (*சாயங்கால செய்தியாளன்*, பத்தி 253, நாள் 16-01-1963) இவைகள் யாவும் என் சுயமுயற்சியினால் இயலாத காரியங்கள். ஆனால் தேவனோ அதை வாய்க்கப்பண்ணுகிறார். கர்த்தராகிய ஆண்டவர் எனக்கு துணை செய்கிறார். ஆகையால் நான் வெட்கப்படேன். நான் என்றும் வெட்கப்பட்டுபோவதில்லை எனவும் அறிந்திருக்கிறேன். அவருடைய பரிசுத்த நாமத்திற்கு ஸ்தோத்திரம்.

*212. ஒரு மனிதன் விசுவாசத்தினாலே ஜீவித்து, விசுவாசத்தினாலே நடந்து வரும்போது இந்த முழு உலகத்தினின்று பிரிக்கப்பட்டவனாய் கிறிஸ்துவிலே புது சிருஷ்டியாக மாறுகிறான். அங்கே நீ மணவாட்டி என்னும் பொருளுக்குள் செல்லுகிறாய். அப்பொழுது நீ எடுத்துக்கொள்ளப்படும் நிலைக்கு செல்லுகிறாய். .. ஒவ்வொரு தனிப்பட்ட ஆளும் தேவனோடு இருக்கும் உலகத்திலே நடக்கிறார்கள். அவருடைய இராஜ்யத்திற்குள் ஞானஸ்நானம் எடுத்துக்கொண்டாய். அங்கே உன்னையும் தேவனையும் தவிர வேறு ஒருவரும் இல்லை. (பரிபூரண விசுவாசம், பத்தி 114, நாள் 25-8-1965) பிரியமானவர்களே, நீங்கள் இந்த நிலைக்குள் இன்னும் வரவில்லை என்றால் நீங்கள் எடுத்துக்கொள்ளப்படுதலுக்குரிய நிலை அடையவில்லை.*

213. சூளை மேட்டாரே உங்களது சவாலும், உங்கள் நவீன கூட்டாளியின் சவாலும் சந்திரனைப் பார்த்து நாய் குரைப்பதற்கு சமமாக இருக்கிறது. நான் வேதவாக்கியங்கள், இக்காலத்துக்குரிய செய்தியின் மேல் அமர்ந்திருப்பதினால் பிசாசுகளின் ஆவிக்கு செவிகொடுக்கவேண்டியதில்லை. *பிசாசின் தூண்டுதலின் பேரில் எதை எதையோ எழுதவேண்டும், அகந்தையும் மனபெருமையுடன் பேசவேண்டும், பின் மற்றவர்களை சவாலுக்கு அழைக்கவேண்டும். இதுவே உங்கள் இருவருடைய பிழைப்பு ஆயிற்று. ஆனால் ஆவிக்குரியவர்கள் பிசாசுக்கு செவிகொடுக்கமாட்டார்கள் என உங்களுக்கு நன்கு தெரியும். உடனே பார்த்தீர்களா? எங்கள் சவாலை யாரும் எதிர்த்து நிற்கமுடியவில்லை என பெருமை பாராட்டிக்கொண்டிருக்கிறீர்கள். இந்த ஈன புத்தி யாருடையது? பிசாசினுடையது. வெளிப்பாடு என கூறிக்கொண்டு, தேவனுடைய வார்த்தையோடு, இக்காலத்துக்குரிய செய்தியோடு, தங்கள் சுயகருத்துக்களை சேர்த்து, செய்தியை தங்கள் நோக்கத்திற்கேற்றவாறு அமைத்து சாத்தான் மக்களை தன் ஊழியர்கள் மூலம் ஏமாற்றுவான், செய்தியை சீர்குலைப்பான் என எனக்கு நன்கு தெரியும். கூட்டாளிகளாகிய நீங்கள் இருவரும் இதைதானே செய்து வருகிறீர்கள். கூட்டாளிகளாகிய உங்கள் இருவருக்கும் செவிகொடுக்கிறவர்கள் உங்கள் கூட்டாளிகளாக தான் இருக்கவேண்டும்.*

214. *நீங்கள் எடுத்த சர்வே படி சென்னையிலுள்ள சபைகளில் ஏறக்குறைய 20க்கு மேற்பட்ட சபைகளில்* **இயேசு கிறிஸ்துவின் வருகை வந்துவிட்டது** என்பதை விசுவாசிக்கிற விசுவாசிகள் ஒவ்வொரு *சபையிலும் 38 சதவீதம் உள்ளார்கள் என நீங்கள் மார்பு தட்டிக் கொள்ளுகிறீர்கள். அன்று 85 சதவீதம் என்று சர்வே எடுத்து அதில் பெருமை பாராட்டினீர்கள். இன்று 38 சதவீதம் என்று ஆரவாரம் செய்கிறீர்கள். நாளை எதற்கு சர்வே எடுப்பீர்கள் தெரியவில்லை? பரவாயில்லை, உங்கள் தொழில், நல்ல தொழில் தான். ஆனால் சூளைமேட்டாரே நீங்கள் கூறிய 20 சபைகளிலும் 99 பேர் முதல் 100 பேர் கர்த்தருடைய வருகை வந்து விட்டது என்று விசுவாசித்தாலும் என்னில் அது எந்த மனமாற்றத்தையும் கொண்டு வராது. அது குறித்து நான் ஒரு கடுகளவு கூட கவலைப்படபோவதுமில்லை. அது என்னை அசைக்கவும் அசைக்காது. அன்று ஆகாப் ராஜா சர்வே எடுத்தபோது 401 பேர்களில் அவன் பக்கம் 400 பேர்கள் இருந்தார்கள். ஆனால் அந்த 400 பேர்களிடம் தேவன் இருந்ததில்லை. மாறாக அந்த ஒரே ஒரு நபருடன் தான் தேவன் இருந்தார். தேவன் இடைபட்டார் என்பதை உங்களுக்கு ஞாபகம் ஊட்ட விரும்புகிறேன். ஆதலால் நண்பனே உங்கள் சர்வேயின் படி ஆகாப் ராஜாவின் முடிவு தான் உங்கள் முடிவாக இருக்கும். ஆவிக்குரிய மரணம் உங்களை தொடர்ந்து பயணம் செய்து கொண்டு வருகிறது என உங்களை எச்சரிக்க விரும்புகிறேன்.*

*215. எவனோ ஒருத்தன் எழுதிக் கொடுக்கிறான், அதில் கையெழுத்துயிடுகிற உங்களுக்கு இந்த ஆணவம் கூடாது. நீங்கள் ஒரு கொள்கைக்காக நிற்கும் ஆண்மைதனம் கொண்ட மனிதன் என்றால் தீர்க்கதரிசியின் செய்தியில் (அ) இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை வந்துவிட்டது. (ஆ) கடைசி நாட்களில் வாலிபர்கள் எழும்பி, தீர்க்கதரிசியின் செய்தியை இடிமுழக்கமாக கொண்டு செல்வார்கள் என்பது தான் செய்தி என்று எங்கு எழுதியுள்ளது என்பதை எனக்கு ஒரு போஸ்ட்கார்டில் எழுதி அனுப்பி உங்கள் வீண் பந்தாவை நிருபித்துவிட்டால் நான் அன்று முதல் எனது ஊழியத்தை விட்டு விலகி கொள்ளுகிறேன். உங்கள் சபையில் ஒரு விசுவாசியாக வந்து அமர்கிறேன். இதற்காக பல ஆயிரம் செலவு செய்து ஒரு கூட்ட ஏற்பாடு வேண்டாம். ஐம்பது பைசா செலவு ஒன்றே போதும். என்னை களத்தைவிட்டு வெளியேற்ற ஐம்பது பைசா போஸ்ட்கார்டு ஒன்றே போதும். அப்படி உங்களால் நிருபிக்கமுடியாவிட்டால் நீங்கள் உங்கள் கிரியைகளுக்கு மனந்திரும்புங்கள். இருளை விட்டு வெளிச்சத்திற்கு வாருங்கள். ஜாதியின் அடிப்படையில் சபை நடத்துவதை விட்டுவிடுங்கள். அது ரொம்ப நாட்கள் நிலைக்காது.*

216. *1963-ம் ஆண்டு இறுதி வேளையில் தீர்க்கதரிசியின் ஊழியத்தை பாருங்கள். அவர் தனது ஊழியம் குறித்து கீழ்க்கண்டவாறு பேசுகிறார்: என் ஊழியத்தில் மாறுதல் ஏற்பட்டு, அது பின்னடைவதை நீங்கள் காணலாம். முன்னேற்றம் அல்ல. பின்னடைதல். அந்தக் காலத்தில் இப்பொழுது நாம் இருக்கிறோம். அது இனியும் முன்னேற முடியாது .. இப்பொழுது முதல் என்னைப் போன்றவர்கள் முழுமையாக தள்ளப்படுவார்கள். அது முற்றிலும் உண்மை. ஏனென்றால் அவர்கள் அதை செய்ய முடியாது. அது இறுக்கமடைந்து வருகிறது. (பார்வையை திருப்பி இயேசுவை நோக்கிப் பாருங்கள். பக்கம் 12, 13, நாள் 29-12-1963) இறுக்கமானது, இறுக்கி உங்களை வெளியே தள்ளும். பாருங்கள் 1963-ல் ஒரு தீர்க்கதரிசியின் ஊழியத்தின் நிலை இது என்றால், அது*

*2005-ல் எந்த நிலை அடைந்திருக்கும் என்பதை உங்களால் நிதானிக்க முடிகிறதா? ஆதலால் நண்பனே உங்கள் நெஞ்சை ரொம்ப முன்னே தள்ளவேண்டாம். அதனால் காரியம் ஒன்றும் ஆகபோவதில்லை. என் ஸ்தானத்தை நான் நன்கு அறிவேன். இறுக்கமானது என்னை போன்ற ஊழியக்காரனை நிச்சயமாக வெளியே தள்ளும்.*

## அரைமணிநேரமளவும் அமைதல் வெளி.8:1

217 *இனி நாம் வெளி.8:1ஐ குறித்து செய்தி என்ன சொல்லுகிறது என்பதைக் காண்போம்.*
ஆட்டுக்குட்டியானவர் ஏழாம் முத்திரையை உடைத்தப்போது பரலோகத்தில் ஏறக்குறைய அரைமணிநேரமளவும் அமைதல் உண்டாயிற்று. ஏழாவது முத்திரை உடைக்கப்பட்டபோது பரலோகத்தில் அரைமணி நேரம் அமைதி. யோவான் பரலோகத்தில் ஏறக்குறைய அரைமணிநேரம் அமைதி உண்டாயிற்று என்று எழுதுகிறான். ஏழாவது முத்திரையின் இரகசியத்தை, அதை உடைத்தபோது, எந்தவிதமான அடையாளத்தின் மூலமாகவும் தேவன் வெளிப்படுத்தவில்லை. இது தேவன் மாத்திரம் முற்றிலும் அறியும் ஒரு இரகசியம். இயேசு மத்.24வது அதிகாரத்தில் முடிவு காலத்தைக் குறித்து பேசின போது ஆறு முத்திரைகளை குறித்து பேசினார். ஆனால் ஏழாவது முத்திரைக் குறித்து எதுவும் கூறவில்லை.

218. இந்த வேளையில் பரலோகத்திலுள்ள சிங்காசனத்தின் மத்தியிலும் சிங்காசனத்தை சுற்றிலும் நான்கு ஜீவன்கள் (சிங்கத்திற்கு ஒப்பானது, காளைக்கு ஒப்பானது, மனுஷ முகம் கொண்டது, பறக்கிற கழுகுக்கு ஒப்பானது) இருந்தவரும் இருக்கிறவரும், வருகிறவருமாகிய சர்வ வல்லமையுள்ள தேவனாகிய கர்த்தர் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர் என்று இரவும் பகலும் ஓயாமல் சொல்லிக்கொண்டிருந்தது மௌனம் ஆயிற்று. இவைகள் சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கிற சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறவர்களுக்கு மகிமையையும், கனத்தையும், ஸ்தோத்திரத்தையும் செலுத்தி வந்தது நிறுத்தப்பட்டது. சிங்காசனத்தை சூழ இருந்த 24 மூப்பர்களும் சிங்காசனத்தின் மேல் வீற்றிருப்பவர் முன்பு வணக்கமாய் விழுவதை நிறுத்திவிட்டனர். மூப்பர்கள் தங்கள் கிரீடங்களை சிங்காசனத்திற்கு முன்பாக வைத்து, கர்த்தாவே, தேவரீர் மகிமையையும், கனத்தையும், வல்லமையையும் பெற்றுக்கொள்ள பாத்திரர் என்று கூறிக்கொண்டிருந்ததையும் நிறுத்தி விட்டார்கள். தூதர்கள் பாடுவதை நிறுத்திவிட்டனர். சேராபீன்களும் பாடல்கள் பாடுவதை நிறுத்திவிட்டனர். பலிபீடத்தில் ஆராதனை இல்லை. யாரும் சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறவரை போற்றி துதிக்கவில்லை. ஆக ஏறக்குறை அரைமணிநேரம் எல்லாம் அமைதியாயின. பரலோகத்தின் சேனைகள் யாவும் அமைதி. எதுவும் எங்கும் நகரவில்லை. அவரவர்கள் நின்று கொண்டிருக்கிற இடத்தில் அமைதி. அனைவரும் பயபக்திப்பூர்வமான பயம் கொண்டு அமைதியாயிருந்தனர். அவர்கள் அதை குறித்து முன்பு அறிந்திருக்கவில்லை. ஆதலால் அதைக் கண்ட மாத்திரம் அனைவரும் ஸ்தம்பித்து நின்றுவிட்டனர்.

219. *ஏழாவது முத்திரையின் இரசகியம் வேதவாக்கியங்களில் எழுதப்படாத பரிபூரணமான இரகசியம். சாத்தான் அதை அறிந்துவிட்டால் ஆள் மாறாட்டம் செய்வான். ஏழு என்பது தேவனுடைய பரிபூரண எண்ணிக்கை. அப்படியானால் இந்த ஏழாம் முத்திரையின் இரகசியம் என்ன? அது இயேசு மத்.24:36-ல் அந்த நாளையும், அந்த நாழிகையையும் என் பிதா தவிர மற்றொருவனும் அறியான். பரலோகத்திலுள்ள தூதர்களும் அறியார்கள். குமாரனும் அறியார். ஆக இது பிதா தவிர வேறொருவரும் அறியார் என்று கூறிய சம்பவம். மாற்.13:32. இதனால் தான் அது குறித்து ஒன்றும் எழுதப்படவில்லை. அது கர்த்தருடைய வருகை வரும் வரை வெளிப்படாது.*

220. *ஏழு சபை காலங்களின் வியாக்கியானம்*, பக்கம் 35, 2வது பத்தி, 5வது வரியில் கர்த்தருடைய இரகசிய வருகை பற்றி: *இரகசிய வருகை பரிசுத்தவான்கள் மாத்திரம் அறிவர்* என தமிழ் மொழிப்பெயர்ப்பில் உள்ளது. ஆனால் இதற்குரிய ஆங்கில வார்த்தை ***An Exposition of the Seven Church Ages***-ல் இல்லை.

*221 கர்த்தருடைய வருகைக்கு முன்பு 3 காரியங்கள் நிகழவேண்டும். 1தெச.4:13-17*
*அ) ஆரவாரம் **(Shout)***
*ஆ) சத்தம் **(Voice of the Arch angel)***
*இ) தேவஎக்காளம் **(Trumpet of God)***
ஆரவாரம் என்பது செய்தியாகும். குழப்பமுறச் செய்த முத்திரைகளின் இரகசியத்தை சரியானபடி வெளிப்படுத்துவதற்கு தேவனிடமிருந்து நேரிடையாக அனுப்பப்பட்ட ஒரு தீர்க்கதரிசி அவசியம். கடைசி நாட்களில் தீர்க்கதரிசி தோன்றுவார் என்று மல். 4வது அதி வாக்களிக்கிறது. சபையில் தீர்க்கதரிசன வரம் பெற்றவர்கள் இருக்கலாம். ஆனால் தீர்க்கதரிசி என்பவரோ முன்குறிக்கப்பட்டு ஒரு குறிப்பிட்ட காலத்திற்கென நியமிக்கப்பட்டவர். சபையில் ஒருவர் தீர்க்கதரிசனம் உரைத்தால் சபை அதை ஏற்றுக்கொள்ளும் முன்பு இரண்டு அல்லது மூன்று நபர்கள் அதை சரியா, தவறா என்று நிதானிக்க வேண்டும். 1கொரி.14:29. ஆனால் தெரிந்துக் கொள்ளப்பட்ட அக்காலத்துக்குரிய தீர்க்கதரிசி தேவனுடைய வார்த்தையாக திகழுகிறார். தேவன் அவர் மூலம் பிரதிப்பலிக்கிறார்.

*222. இப்பொழுது ஏழாம் முத்திரை (வெளி.8:1) திறக்கப்பட்டபோது அமைதல் ஏன்?*
When He was on earth, they wanted to know when he would come, He said, even the Son Himself don't know when it's going to happen. See, God has this all to Himself. It is a secret. He kept it a secret nobody know nothing about it, even the angels did not understand it, he did not reveal it. That is the reason under our seventh mystery when the seventh seal was opened, there was silence. (***Christ is the mystery of God revealed***, page 17, dated 20-7-1963.)

223. இயேசு பூமியில் இருந்தபோது, அவருடைய சீஷர்கள் அவருடைய வருகை எப்பொழுது இருக்கும் என அறிய விரும்பினார்கள். இது எப்பொழுது நடக்கும் என குமாரனும் அறியார் என்று கூறினார். தேவன் அது குறித்து அனைத்தையும் தமக்குள் கொண்டிருக்கிறார். இது ஒரு இரகசியமாக இருக்கிறது. அதை அவர் ஒரு இரகசியமாக வைத்திருக்கிறார். ஆதலால் அதை குறித்து யாரும் அறியார்கள். பரலோகத்திலுள்ள தூதர்களும்

அதை குறித்து அறியார்கள். அவர்கள் புரிந்து கொள்ளவும் முடியாது. தேவன் அதை வெளிப்படுத்தமுடியவில்லை. ஆதலால் தான் ஏழாவது முத்திரை திறக்கப்பட்ட போது, ஏழாவது முத்திரையின் கீழ் அமைதல் காணப்பட்டது. இது குறித்து நீங்கள் தமிழில் ***கிறிஸ்து தேவனுடைய பரம இரகசியத்தின் வெளிப்படுத்தலாயிருக்கிறார்*** என்ற செய்தியில் பக்கம் 25-ல் 1-3 பத்திகளில் தியானிக்கலாம். தமிழில் சரியான மொழிப்பெயர்ப்பு இல்லாததால் நான் அதை எடுத்து எழுதவில்லை.

224. பாருங்கள் இது குறித்து தேவனுடைய வார்த்தை என்ன கூறுகிறது? அந்த நாளையும் (that day) அந்த நாழிகையையும் (that hour) என் பிதா (Father) ஒருவர் தவிர மற்றொருவரும் அறியார். பரலோகத்தில் உள்ள தூதர்களும் அறியார்கள். (மத்.24:36) நீங்கள் நினையாத வேளையிலே மனுஷகுமாரன் வருவார். (மத்24:44) அந்த நாளையும், நாழிகையையும் குமாரனும் அறியார். (மாற்.13:32) பாருங்கள் இயேசு தம்முடைய வருகையை குறித்து குமாரனும் அறியார், தேவ தூதர்களும் அறியார்கள், பிதா ஒருவர் தவிர மற்றொருவரும் அறியார் என்கிறார். ஆனால் சென்னை, பொழிச்சலூர் பாஸ்டர் ஒருவர் தான் கர்த்தருடைய வருகையை அறிந்திருப்பதாகவும், ஆனால் அந்த நாளையும், நாழிகையையும் வெளிப்படுத்தக்கூடாது என கர்த்தர் இவருக்கு கட்டளையிட்டதாகவும் கூறுகிறார். அப்படியானால் இவர் யார்? கள்ளகபடமுள்ள வேலையாளே, சாத்தான், ஒளியின் தூதனுடைய வேஷத்தை தரித்தவர். இவரையும் நம்பி ஒரு சிறு கூட்டம் ஜனங்கள் இருக்கத்தானே செய்கிறார்கள். அது தான் பரிதாபமாக இருக்கிறது. சிலர் தங்களை தேவனால் ஏற்படுத்தப்பட்ட சுவிசேஷகன் என அழைத்துக்கொண்டு, இவர் பின் சுற்றி திரிகிறது என்ன?, இவரோடு ஐக்கியம் வைத்திருப்பது என்ன? இவரோடு ஐக்கியம் வைத்திருப்பவர்களும் தாங்கள் யார் என்பதை வெளிப்படுத்துகிறார்கள். இனம் இனத்தை தானே சேரும். ***சென்னை, பல்லாவரம் பொழிச்சலூர் பகுதிகளில் காணப்படும், இக்காலத்துக்குரிய செய்திகளில் உள்ள சபைகள் என தங்களை அழைத்துக் கொள்ளும் சபைகளை நம்பி பலர் மோசம் போய்க் கொண்டிருக்கிறார்கள். இந்த பகுதிகளில் ஒரு சபையும் உறுபடியாக இல்லை. எல்லாமே கள்ள சபைகளாகவே காணப்படுகின்றன. உண்மையான சபையை எங்கும் காணமுடியவில்லை.***

225. ஏழு இடிகள் முழங்குகின்றன. அப்பொழுது பரலோகத்தால் அதை எழுத முடியவில்லை. அங்கே ஒன்றும் சம்பவியாததால், பரலோகத்தால் அதை அறிய முடியவில்லை. யாரும் அதை அறியமுடியாது. தூதர்களும் அறியாதவாறு இரகசியமாக வைக்கப்பட்டிருக்கிறது. ஏன்? சாத்தான் மாத்திரம்இதை அறந்திருந்தால் அதிக கேடு விளைவித்திருப்பான். அவன் அறியாத ஒரு காரியம் அங்கே இருக்கிறது. இப்பொழுது அவன் எந்த ஒரு காரியத்தையும் வியாக்கியானம் செய்து சுய அர்த்தம் கொடுக்கமுடியும். இன்று கோவை ராஜா சுயவியாக்கியானம் கொடுத்து வருவதை நீங்கள் கண்டிருக்கிறீர்கள். அது அவர் யார் என்பதை வெளிப்படுத்துகிறது. அவ்வாறே ஆவியின் எந்த ஒரு வரத்தையும் பெற்றது போன்று ஆள்மாறாட்டம் செய்யமுடியும். ஆனால் இதை மாத்திரம் அவன் அறியவே முடியாது. ஏனென்றால் அது வேதத்தில் எழுதப்படவேயில்லை. அதுபரிபூரண இரகசியம்.

226. தேவதூதர்கள் யாவரும் வாயடைத்துக் கொண்டிருக்கின்றனர். அவர்கள் சற்றேனும் அசைந்தால் கூட இரகசியத்தை வெளியிட நேரிடும். ஆகவே தான் அவர்கள் ஒன்றும் பேசாமல், ஒவ்வொன்றும் நின்று போனது. (*ஏழாவது முத்திரை*, பக்கம் 946, பத்தி 252-254, புதிய பதிப்பு).

***227. ஊதப்பட்ட எக்காளம் அனைத்துமே ஆறாம் முத்திரையின் கீழ் முழங்கின. ஏனென்றால் ஏழாம் முத்திரையில் அமைதல் உண்டாயிற்று. அது யாருக்குமே தெரியவில்லை. அது தான் கிறிஸ்து வரப்போகும் நிமிடம் அல்லது மணிநேரம். அப்படித்தான் அவர் எனக்கு வெளிப்படுத்தி கொடுத்தார். (எக்காளப் பண்டிகை, பக்கம் 35, பத்தி 2, நாள் 19-9-1964.)***

***228. நாம் வானத்தை நோக்கி பார்க்கிறவர்களாய், கூர்நுனி கோபுரத்தில் தலைக்கல் வருகையை! அவருடைய வருகையை எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறோம். சபை விரைவில் உயிர்த்தெழவேண்டும். நாம் ஆயத்தமாகவேண்டும். (வழிநடத்தும் தன்மை, பக்கம் 34, பத்தி 144, நாள் 7-12-1965.)***

229. We are looking for His glorious second coming to receive us unto Himself. (Easter Seal, Page 3, para 1, date 10-4-1965) நாம் அவருடைய மகிமையின் இரண்டாம் வருகைக்காக நம்மை அவரோடு இணைத்துக் கொள்ளும் வேளைக்காக எதிர்நோக்கிக்கொண்டிருக்கிறோம் என தீர்க்கதரிசி இந்த செய்தியில் கூறுகிறார். தமிழ் மொழிப்பெயர்ப்பில் ***ஈஸ்டர் முத்திரை*** என்ற செய்தியில் இந்த பகுதிகள் மொழிப்பெயர்க்கப்படவேயில்லை. ஏறக்குறைய நான்கு பத்திகள் மொழிப்பெயர்ப்பு செய்யப்படாமல் விட்டுவிடப்பட்டுள்ளது. WBGNS இது வரை எந்த ஒரு செய்தியையாவது பூரணமாக மொழிப்பெயர்த்து வெளியிட்டுள்ளதா? நான் முன்னே எழுதியுள்ளபடி ஏதோ செய்தி மொழிப்பெயர்ப்பு என்ற ரூபத்தில் பிழைப்பு நடந்து கொண்டு வருகிறது. இதுவும் ஒரு வெட்கக்கேடு.

230. இக்காலத்துக்குரிய செய்தி இவ்வண்ணமாக இருக்க, ஏழாவது முத்திரை சம்பவம் நடந்து விட்டது, கர்த்தர் 28-2-1963-ல் வந்து விட்டார், தலைக்கல் வந்துவிட்டது என்ற மாறுபாடான உபதேசங்களை உபதேசித்து வரும் ***இந்த கோவை ராஜா யார்? அவர் ஒரு கள்ள போதகனே, வஞ்சகனே! ஆனாலும் அவர் ஆடுகள் அவர் பின் செல்லும் அதை யாரும் தடுக்க முடியாது.***

231. ***ஏழாம் முத்திரை இன்னும் திறக்கப்படவில்லை அது உங்களுக்கு தெரியும் . அது அவருடைய வருகை. (எக்காளப் பண்டிகை, பக்கம் 41, பத்தி 1, நாள் 19-7-1964)***

## ஏழு தூதர்கள் கூட்டம் குறித்து என்ன?

232. வானத்திலிருந்து இறங்கி வந்த அந்த வேறொரு பலமுள்ள தூதன் சிங்கம் கெர்ச்சிக்கிறது போல மகா சத்தமாய் ஆர்பரித்தான். வெளி.10:3
அவன் ஆர்பரித்தபோது ஏழு இடிகளும் சத்தமிட்டு முழங்கின. வெளி.10:3 இது அந்த ஏழு இடிகளும் தங்கள் சத்தங்களை முழங்கின என இருக்கவேண்டும்.

அந்த ஏழு இடிகளும் தங்கள் சத்தங்களை முழங்கினபோது யோவான் எழுதவேண்டுமென்றிருந்தான். வெளி.10:6.
அப்பொழுது ஏழு இடிமுழக்கங்கள் சொன்னவைகளை எழுதாமல் முத்திரைப் போடு என்று வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாயிற்று. வெளி. 10:4.

233 ***அந்த புத்தகம் எவ்வாறு முத்திரை போடப்பட்டது?***
***புத்தகத்தின் புறம்பாக முத்திரிக்கப்பட்டிருக்கிறது என்றும், அவை (முத்தரிக்கப்பட்ட இரகசியங்கள்) வேதத்திலே எழுதப்பட்டிருக்காத காரியங்களாக இருக்குமெனவும் நான் எப்பொழுதும் நினைப்பேன். ஆனால் அவர் அவ்விதமாக செய்யமாட்டார் என்று விளங்க வைக்கப்பட்டது. அவை வேதத்திலே எழுதப்பட்டிருக்கும் காரியங்கள் அல்ல .. அவை வேதத்திலே மறைத்து வைக்கப்பட்டிருக்கும் காரியங்களாக இருக்கின்றன. ஆகவே ஒருவன் இத்துடன் ஒரு வார்த்தையை கூட்டினாலும் அல்லது எதையாவது எடுத்துப்போட்டாலும். ஆகவே இந்த ஏழு சபையின் காலங்களாக வேதத்திலேயே இருக்கும் இரகசியமாக அவை இருக்கின்றன. (ஏற்றகாலத்தில் ஆவிக்குரிய ஆகாரம் பத்தி 83, நாள் 18-7-1965)***

234. அந்த புத்தகம் சுருட்டப்பட்டு இங்கு ஒன்றும் அங்கு ஒன்றுமாக முத்தரிக்கப்பட்டு ஏழு முத்திரைகள் கொண்ட புத்தகமாக திகழ்கிறது. இது ஒரு மீட்பின் புத்தகம். உள்ளும் புறம்பும் எழுதப்பட்டு ஏழு முத்திரைகளால் முத்தரிக்கப்பட்டிருக்கின்ற ஒரு புத்தகம். Written with in and on the backside, sealed with seven seals

235. ***அந்த ஏழு இடிகளும் தங்கள் சத்தங்களை முழங்கின. அந்த சத்தத்தின் முழக்கம் யாருடையது?***
மகிமையின் தேவன் முழங்குகிறார். சங்.29:3. தேவனுடைய சத்தம் இடிமுழக்கம் போன்றது. (*எ.மு* பக்கம் 143, பழைய பதிப்பு)

236. பலத்த இடிமுழக்கம் தேவனுடைய சத்தம். *எ.மு.* பக்கம் 142, பழைய பதிப்பு. இடிமுழக்கம் போன்ற சத்தம் தேவனுடையது. பிதாவே உமது நாமத்தை மகிமைப்படுத்தும் என்றார். அப்பொழுது : மகிமைப் படுத்தினேன், இன்னமும் மகிமைப்படுத்துவேன் என்கிற சத்தம் வானத்திலிருந்து உண்டாயிற்று. அங்கே நின்றுகொண்டிருந்து அதைக் கேட்ட ஜனங்கள்: இடிமுழக்கங்கள் உண்டாயிற்று என்றார்கள். வேறு சிலர் : தேவ தூதன் அவரோடே பேசினான் என்றார்கள். யோ.12:28,29.

***237. இப்பொழுது இந்த ஏழ இடிமுழக்கங்களுக்கும், இந்த ஏழு தூதர்களின் கூட்டத்துக்கும் உள்ள சம்பந்தம் என்ன? அந்த ஏழு தூதர்களும், ஏழு இடிமுழக்கங்களை தங்கள் கரங்களில் பிடித்திருந்தார்கள். (எ.மு. பக்கம் 19, பழைய பதிப்பு)***

***அந்த ஏழு தூதர்கள் அந்த ஏழு இடிமுழக்கங்கள்சொன்னதை வெளிப்படுத்தி தருவார்கள். (எ.மு. பக்கம்19, பழையபதிப்பு).***
***ஆக இந்த ஏழு இடிமுழக்கங்களின் இரகசியங்களை அந்த ஏழு தூதர்கள் கொண்டிருந்தார்கள். அவர்கள் அதை ஏழாம் சபைக்கால தூதனுக்கு வெளிப்படுத்தி தரவேண்டும்.***
***அந்த ஏழு தூதர்களும் அந்த ஏழு சபைக்கால தூதர்கள் இல்லை. மாறாக அவர்கள் தேவதூதர்கள்.***

***238. இத்தூதர்களை குறித்து இக்காலத்துக்குரிய செய்தியின் விளக்கம் என்ன?***
அத்தூதர்கள் கூட்டத்தில் வலது பக்கத்திலிருந்த தூதன் தன் மார்பை பின் தள்ளிக் கொண்டு, அவனுடைய சிறகுகள்? (His wings) .. மற்றவர்களிலும் அவர் சற்று விசேஷமானவராக இருந்தார். *(இடைவெளியில் நிற்றல்,* பத்தி 82)
அங்கே மற்றவர்களிலிருந்தும் சற்று விசேஷமாக காணப்பட்டவரது பக்கத்திலுள்ள தூதனை பாருங்கள். அத்தூதனுடைய முனைப்பான செட்டைகளை பாருங்கள். (pointed wings) ***இடைவெளியில் நிற்றல்,*** பத்தி 82-ன் தொடர் 34வது பக்கம் 12வது வரி).
இதிலிருந்து அவர்கள் தேவ தூதர்களே (heavenly angels) அன்றி இப்பூமிக்குரிய தூதர்கள் அல்ல என தெரிகிறது. ***அந்த தூதர்கள் கூட்டத்தில் ஏழாம் சபைக் கால தூதன் இல்லை. ஏனென்றால் அவன் பூமிக்குரிய தூதன்.***

***239. இப்பொழுது ஏழு முத்திரைகளால் முத்தரிக்கப்பட்ட புத்தகம், வெளி.10-ல் கூறப்பட்டுள்ள ஏழு இடி முழக்கங்கள் முழங்கும் சமயத்தில் வெளிப்படும். (எ.மு. பக்கம் 75, பழைய பதிப்பு)***
***இப்பொழுது கவனியுங்கள் ஒவ்வொரு முத்திரையையும் ஒவ்வொரு இடிமுழக்கத்துடன் திறக்கப்பட்டது.***
***ஏழு முத்திரைகள் - ஏழு இடிமுழக்கங்கள்.***
***முத்திரை என்பது இடிமுழக்கம் (ஐயன்மீர் இதுவா சமயம், பக்கம் 68, பத்தி 1)***
***ஏழு நாட்கள் - 18-3-1963 முதல் 24-3-1963 வரை***
***ஏழு முத்திரைகளின் இரகசியம் - முத்திரைகள் 1 - 7 வரை.***
***ஏழு தூதர்களிடமிருந்து***
***ஏழாம் சபைக்கால தூதன் பெற்று***
***ஏழாவது சபைக்கு வெளிப்பபடுத்தினான்.***
***ஐந்து - கிருபை (அதாவது ஐந்து ஏழுகளை கவனியுங்கள்.)***
***ஏழு - பூரணம். ஆக இந்த சபை பாக்கியமுள்ள சபை.***
***ஆக ஒவ்வொரு முத்திரையும் ஒவ்வொரு இடிமுழக்கத்துடன் திறக்கப்பட்டது. (ஐயன்மீர் இதுவா சமயம்? பக்கம் 67,68, 69ஐ தியானியுங்கள்) ஆக அந்த ஏழு தூதர்களும், ஏழு இடிமுழக்கங்களை தங்கள் கரங்களில் பிடித்திருந்தார்கள். அந்த ஏழு இடிமுழக்கங்கள் கூறினவைகளை ஏழாம் கால சபை தூதனுக்கு வெளிப்படுத்தி கொடுத்தார்கள்.***

240. கர்த்தருடைய வருகை எவ்விதத்திலும் இதுவரை வரவில்லை என்பதை குறித்து நான் ஆகஸ்டு, 2000 ஒரு செய்தித்தொகுப்பு எழுதியிருந்தேன். அதையும் இங்கு திரும்ப எழுதுகிறேன். அதுவும் உங்கள் ஆத்துமாவுக்கு பிரயோஜனமாயிருக்குமென கிறிஸ்துவுக்குள் நம்புகிறேன்.

241. இயேசு: ஒருவனும் உங்களை வஞ்சியாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள். மத் 24:4. அப்போஸ்தலர்கள்: நீங்கள் ஒருவராலும் வஞ்சிக்கப்படாதீர்கள். 1யோ.3:7. எவ்விதத்திலும் ஒருவரும் உங்களை மோசம் போக்காதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள். 2தெச.2:3. ஏழாம் சபை தூதன்: சத்துரு நம்மை வஞ்சிக்கும் இந்நாட்கள் போன்று இதுவரை எக்காலத்திலும் இருந்ததில்லை. இது பிசாசின் தந்திரமும், வஞ்சகமும் நிறைந்த நாட்களாகும். இந்நாட்களில் கிறிஸ்தவர்கள், முற்காலத்தில் வாழ்ந்த கிறிஸ்தவர்களைக் காட்டிலும் அதிக கவனமாயிருக்க வேண்டியது அவசியம். தற்காலத்தில் பிசாசுகளின் வஞ்சகம் கிறிஸ்தவர் அல்லாதோர் தங்களை கிறிஸ்தவர் என்று நம்பும்படி செய்யும். (*சாத்தானின் ஏதேன்.* பக்கம் 7, கடைசி பத்தி. பக்கம் 8, பத்தி 2. செய்தி நாள் 29-8-1965) அவ்வண்ணமாகவே இக்கடைசிக்கால செய்தியில் அல்லாதோர் தாங்கள் செய்தியில் உள்ளவர்கள் என்று பிசாசின் வஞ்சகம் நம்பும்படி செய்யும்.

242. ஏழாம் சபைக்கால தூதனும், தீர்க்கதரிசியுமாகிய வில்லியம் மாரியன் பிரன்காம் 30-12-1962-ல் ***ஐயன்மீர் இதுவா சமயம்?*** என்ற செய்தியை பிரசங்கிக்கும் போது, எட்டு நாட்களுக்கு முன்பு (22-12-1962) தான் ஏழு தூதர்கள் கூட்டம் குறித்து ஒரு தரிசனம் கண்டதாகக் கூறினார். இதை பக்கம் 39 முதல் 43 வரை வாசிக்கலாம். பின்பு இந்த தரிசனம் 28-2-1963-ல் சகோ.பிரன்காம், சகோ, பிரட் சோத்மேன்வுடன் சூரிய அஸ்தமனம் சிகரத்திற்கு ***வேட்டைக்கு சென்ற போது*** அங்கு நிறைவேறியதாக கூறுகிறார். இதை நீங்கள் 25-7-1965-ல் பிரசங்கித்த ***மலையின் மேலுள்ள கவர்ச்சி என்ன***? என்ற செய்தியில் பத்தி 135 முதல் 152 வரை வாசிக்கலாம்.

243. ***நித்தியத்திலிருந்து வந்த ஏழு தூதர்களின் கூட்டம். (ஐயா, இது தான் முடிவின் அடையாளமா***? பத்தி 389) நோக்கம் என்ன? இதை அறிய வெளி.10.3, 4 வசனங்களை தியானிப்போம்.

அ) பலமுள்ள வேறொரு தூதன் சிங்கம் கெர்ச்சிக்கிறது போல மகாசத்தமாய் ஆர்ப்பரித்தான்.

ஆ) அவன் ஆர்ப்பரித்த போது ஏழு இடிகளும் தங்கள் சத்தங்களை முழங்கின.

இ) அந்த ஏழு இடிகளும் தங்கள் சத்தங்களை முழங்கின போது யோவான் எழுத வேண்டுமென்றிருந்தான்.

ஈ) அப்பொழுது ஏழு இடிமுழக்கங்கள் சொன்னவைகளை எழுதாமல் முத்திரை போடு என்று வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாயிற்று.

உ) அந்த ஏழு இடிகளும் தங்கள் சத்தத்தை முழங்கின. அந்த சத்தத்தின் முழக்கம் யாருடையது?

ஊ) மகிமையுள்ள தேவன் முழங்குகிறார். சங்.29:3. பலத்த இடிமுழக்கம் தேவனுடைய சத்தம் (*ஏ.மு.* பழைய பதிப்பு பக்கம் 142) தேவனுடைய சத்தம் இடிமுழக்கம் போன்றதாகும். (*ஏ.மு.* பக்கம் 143)

எ) ஏழு இடிமுழக்கங்களுக்கும் ஏழு தூதர்களின் கூட்டத்திற்கும் உள்ள சம்பந்தம் என்ன?

***ஏழு இடிமுழக்கங்களை அந்த ஏழு தூதர்களும் தங்கள் கைகளில் பிடித்திருந்தார்கள். இவர்கள் அந்த ஏழு இடிமுழக்கங்கள் சொன்னதை வெளிப்படுத்தித் தருவார்கள். (ஏ.மு. பக்கம் 19) பாருங்கள் 28-2-1963 அன்று சூரிய அஸ்தமனம் சிகரத்தில் தீர்க்கதரிசி கண்ட ஏழு தூதர்கள், அந்த ஏழு இடிமுழக்கங்கள் முழங்கின இரகசியத்தை உடையவர்களாயிருக்கிறார்கள். அவர்கள் தான் அந்த இரகசியத்தை தீர்க்கதரிசிக்கு வெளிப்படுத்திக் கொடுக்க வேண்டும். ஆக ஏழு தூதர்களின் கூட்டமே தீர்க்கதரிசிக்கு ஏழு இடிமுழக்கங்கள் என்ன சொன்னது என்பதின் இரசகியத்தை வெளிப்படுத்திக் கொடுப்பதற்காகவேயன்றி அது கர்த்தருடைய வருகை அல்ல. ஒரு மேகமாக அவர் இறங்கி வருவதில்லை. மாறாக அவர் மேகங்களுடனே வருகிறார். (He cometh with clouds) அவர் வானத்திலிருந்து இறங்கி வருகிறார். ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவஎக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கி வருகிறார். (The Lord Himself shall descend from heaven with a shout, with the voice of the archangel, and with the trump of God) தூதர்களை கொண்டு ஒரு மேகத்தை உருவாக்கி அவர் எடுத்துக்கொள்ளப்படுதலில் இறங்குவார் என்பதற்கு வேதத்தில் ஆதாரங்கள், இக்காலத்துக்குரிய செய்தியில் ஆதாரங்கள் எங்கும் கிடையாது. இரண்டிலும் ஆதாரங்கள் இல்லாத உபதேசம் பிசாசினுடையது. அது தான் கோவை ராஜாவினுடையது. புத்தியுள்ளவன் நன்கு யோசிக்ககடவன். ஏழு தூதர்களால் உண்டான ஒரு மேகவளையம் எப்படி கர்த்தருடைய வருகையாக முடியும்? அந்த மேகம் ஒரு அடையாளமேயன்றி மற்றப்படி அல்ல. அடையாளத்தை வருகையென சித்தரிக்கும் இந்த தாறுமாறாக்கப்பட்ட கூட்டத்தைவிட்டு வெளியே வாருங்கள்.***

***244. ஏழு முத்திரைகளால் முத்தரிக்கப்பட்ட புத்தகம், வெளி.10-ம் அதில் கூறப்பட்டுள்ள ஏழு இடிமுழக்கங்கள் முழங்கும் சமயத்தில் வெளிப்படும். (ஏ.மு. பக்கம் 75) ஒரு இடிமுழக்கம் உண்டானது. அது தேவனுடைய சத்தம் என்பதை யோவான் உணர்ந்தான். அவன் கண்ட காட்சியின் அர்த்தத்தை அவனால் புரிந்து கொள்ள இயலவில்லை. அவன் கண்டது, தேவன் சபைகளுக்கு ஒரு குறிப்பிட்ட காலம் வரைக்கும் அனுப்பிய காட்சிகளாகும். அதன் அர்த்தத்தை வெளிப்படுத்த வேண்டிய தருணம் வரும்போது, அவர் அதை வெளிப்படுத்துவார். கடைசி சபை கால தூதன் செய்தி முழங்கும் போது இந்த இரகசியங்கள் அனைத்தும் வெளியரங்கமாகும். (ஏ.மு.பக்கம் 146-147). முதலாம் முத்திரை திறக்கப்பட்ட போது இடிமுழக்கம் உண்டாயிற்று. முத்திரை என்பது இடிமுழக்கம். புத்தகத்தின் உள்ளிருக்கிற முத்திரைகளில் முதலாம் முத்திரை ஒரு இடிமுழக்கத்துடன் திறக்கப்பட்டது. (ஐயன்மீர், இதுவா சமயம், பக்கம் 67, 68, 69 - ஐயா, இதுதான் முடிவின் அடையாளமா? பத்தி 349, 355, செய்தி நாள் 30-12-1962)***

***245. முத்திரைகளின் இரகசியங்களை நான் அறிந்திருக்கவில்லை. அந்த ஏழு தூதர்களும் வெளியாக்கப்படவிருக்கும் ஏழு செய்திகளாக நான் அதை உங்களுக்கு அளிக்க வேண்டும் என்று கருதி அதற்கென்று என்னை இங்கு கொண்டு வந்தனர். (ஏ.மு. பழைய பதிப்பு, பக்கம் 501)***

***246. இதிலிருந்து நாம் அறிவதென்ன? ஏழு இடிமுழக்கங்கள் ஏழு முத்திரைகளாகும். ஏழு இடிமுழக்கங்களின் இரகசியத்தை அந்த ஏழு தூதர்களும் கொண்டிருந்தார்கள். அவர்கள் அதை ஏழாம் சபை கால தூதனுக்கு வெளிப்படுத்திக் கொடுத்தார்கள். கூர்நுனி கோபுர அமைப்பில் வந்த தூதர்கள் அந்த கூர் நுனி கோபுரத்திற்குள்***

*என்னை ஏற்றுக் கொண்டனர். இந்த கட்டிடத்தின் உயரம் அளவிற்கு என்னை தூக்கிச் சென்றது. (ஐயா இதுதான் முடிவின் அடையாளமா? பத்தி 380). தேவ இரகசியங்களை அவர்கள் மாத்திரமே அறிந்திருந்தனர். அந்த கூர்நுனி கோபுரத்திற்குள் அடங்கியிருக்கிற ஏழு முத்திரைகளின் இரகசியங்களை வெளிப்படுத்த வந்த தூதர்கள் தாம் அவர்கள். (ஏ.மு. பக்கம் 518) அந்நாட்களில் 18-3-1963 முதல் 24-3-1983 வரை ஏழு நாட்களில் ஏழு முத்திரைகளின் இரகசியத்தை அந்த ஏழு தூதர்களிடமிருந்து ஏழாம் சபை கால தூதன் பெற்று சபைக்கு வெளிப்படுத்தினார்.*

*247.* ஏழு முத்திரைகளால் முத்தரிக்கப்பட்ட அந்த புத்தகத்தை திறக்கவும், அந்த முத்திரைகளை உடைக்கவும் ஆட்டுக்குட்டியானவர் ஒருவரே தகுதியுடையவர். பாருங்கள் வானத்திலாவது, பூமியிலாவது, பூமியின் கீழாவது ஒருவனும் அந்த புத்தகத்தை திறக்கவும், அதை பார்க்கவும் கூடாதிருந்தது. ஒருவனும் அந்த புத்தகத்தை திறந்து வாசிக்கவும் அதை பார்க்கவும் பாத்திரவானாக காணப்படவில்லை. ஏனென்றால் இது மனுஷகுமாரனுடைய ஊழியம். ஆதலால் தான் ஏழு தூதர்களின் கூட்டம் மனுஷகுமாரனை வெளி.1:13, 14 க்கு ஒப்பாக அவருடைய சிரசும், மயிரும் வெண்பஞ்சைப் போலவும் உறைந்த மழையைப் போலவும் வெண்மையாகக் காணும்படி சபை காலத்திற்கு வெளிப்படுத்தியது. வெளி.10:1க்கு ஒப்பாக அவரை ஒரு பலமுள்ள தூதனாக வெளிப்படுத்தவில்லை. *இங்கு மனுஷகுமாரன், அங்கு உடன்படிக்கையின் தூதன். ஆனால் இருவருமே கிறிஸ்து தான். இங்கு நியாயாதிபதியாக ஆனால் அங்கு தூதனாக காட்சியளிக்கிறார். நசரேயனாகிய இயேசுவை தேவன் பரிசுத்த ஆவியினாலும், வல்லமையினாலும் அபிஷேகம் பண்ணினார். அவரை மரத்திலே தூக்கி கொலை செய்தார்கள். மூன்றாம் நாளிலே தேவன் அவரை எழுப்பினார். அவர் மரித்தோரிலிருந்து எழுந்தபின்பு, அவரே உயிரோடிருக்கிறவர்களுக்கும், மரித்தோர்களுக்கும் தேவனால் நியாயாதிபதியாக ஏற்படுத்தப்பட்டார். இப்பொழுது அவருடைய, கர்த்தரின் வருகை சமீபமாயிருக்கிறது. இதோ நியாயாதிபதி வாசற்படியில் நிற்கிறார். ஆதலால் மனுஷகுமாரன் தம்மை நியாயாதிபதியாக வெளிப்படுத்தினார். அப்.10:38-42, யாக்.5:8,9. அங்கு வெளி.10:1,6 பலமுள்ள வேறொரு தூதனாக கிறிஸ்து தம்மை வெளிப்படுத்துகிறார். இனி காலம் செல்லாது என்ற அறிவிப்பை கொண்டுவந்துள்ளார்.*

248. சூரிய அஸ்தமனம் சிகரத்தில் நிகழ்ந்த இந்த சம்பவத்தை தீர்க்கதரிசி வெளி.10:1-7-ல் வாக்களிக்கப்பட்டுள்ள வார்த்தையை தேவன் நிறைவேற்றுதலாகும். வெளி.10:1-7 உரைக்கும் மறைக்கப்பட்ட இரகசியம் கடைசி சபை காலத்திற்கு அளிக்கப்படும் கடைசி செய்தி என்றும் மேலும் லூக்.17:30 மனுஷகுமாரன் வெளிப்படும் நாளில் நிறைவேறுதலாகும் என்கிறார். இது சாயங்கால நேரத்தில் சாயங்கால வெளிச்சம் உண்டாகும் என்று சகரி.14:7-ல் பரலோகத்தின் தேவன் வாக்களித்ததின் நிறைவேறுதலாகும் என்கிறார்.

249. **டூசான் நகரில் உள்ள பெரிய வானிலை ஆராய்ச்சி கூடங்களில் உயரத்தில் இருந்து அதை புகைப்படம் எடுத்திருக்கிறார்கள். அவ்வளவு உயரத்தில் வானத்தில் 30 மைல் உயரத்தில் மூடு பனியோ. காற்றோ, ஈரப்பசையோ கிடையாது. என்ன ஆச்சரியம்! உயர வானத்தில் அடையாளங்கள் காணப்படும். மேலும் இந்த காரியங்கள் நிகழும் போது பல்வேறு இடங்களில் பூகம்பங்கள் ஏற்படும். *அப்பொழுது மனுஷகுமாரன் அடையாளம் வானத்தில் காணப்படும்.* அந்த நாளிலே லூக்கா 17 மனுஷகுமாரன் தம்மை மறுபடியும் வெளிப்படுத்துவார். அவர் தாமே வெளிப்படுத்தப்பட்டிருப்பார் .. ஓ, சகோதரர்களே. ஆவிக்குரிய காரியங்களைப் பற்றி அறிவில்லாதிராதிருங்கள். பாருங்கள், வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள். அவைகளால் உங்களுக்கு நித்திய ஜீவன். உண்டென்று எண்ணுகிறீர்களே, வார்த்தையைக் குறித்து சாட்சி கொடுக்கிறவைகளும் இவைகளே. சத்தியத்தைக் குறித்தும், தேவன் இந்த மணி வேளையில் செய்கிற காரியங்களைக் குறித்தும் சாட்சிக் கொடுக்கிறவைகள் இவைகளே. *(தேவ சித்தத்திற்குப் புறம்பாக அவருக்கொரு சேவை செய்தல்* பக்கம் 52, பத்தி 167 செய்தி நாள் 18-7-1965)**

250. ***சத்தியம் ஒன்று வெளிப்படும்போது அது அடையாளங்களினால் உறுதிப்படுகிறது.*** (நான்காம் *முத்திரை,* பக்கம் 485, பத்தி 59) ***ஏழு தூதர்களால் உருவான மேகவளையம் வானத்தில் மனுஷகுமாரனுடைய அடையாளம்.***

251. அந்த *வெள்ளை* எத்தனை பேர், நாம் வெளிப்படுத்தல் முதலாம் அதிகாரத்தில் பேசின விதமாக அவருடைய தலையின் மேல் இருந்த தலை அங்கியை கண்டீர்கள்? பாருங்கள் சகல அதிகாரத்தையும் உடைய பிரதான தேவன்! வேறே சத்தம் இல்லை, வேறே தேவன் இல்லை. வேறு ஒன்றும் இல்லை. *தேவத்துவம் சரீரபிரகாரமாக அவருக்குள் வாசமாயிருக்கிறது. தூதர்களே அவருடைய தலை அங்கி.* ஆமென்.

252. *சூரிய அஸ்தமனம் மலையில் நிகழ்ந்தது என்ன?* தேவன் தம்முடைய வார்த்தையை உறுதிப்படுத்துகிறார். இந்த சந்தடி எல்லாம் அதை குறித்து தான். கவனியுங்கள். அது வெளிப்படுத்தல் 10:1-7 முடிய வாக்களிக்கப்பட்டுள்ள வார்த்தையே தேவன் நிறைவேற்றுதலாம். *ஏழாம் தூதனுடைய சத்தத்தின் நாட்களிலே அவன் எக்காளம் ஊதப்போகிறபோது தேவ இரகசியம் நிறைவேறும்.* வெளிப்படுத்தல் 10:1-7 உரைக்கும் மறைக்கப்பட்ட இரகசியம், கடைசி சபைக் காலத்திற்கு அளிக்கப்படும் கடைசி செய்தி, இந்த காலத்தில் அப்படியே நிறைவேறுகிறது. லூக் 17:30 *மனுஷகுமாரன் வெளிப்படும் நாளில்* .

***253. அன்றொருநாள் அங்கு நின்று கொண்டு, அந்த படத்தை வலதுப்பக்கம் திருப்பினபோது, ஏழு சபையின் காலங்களில் இயேசு காணப்பட்டவிதமாக அது இருந்தது. - தலையில் வெள்ளை தலை அங்கியை (ரூபை) அணிந்து, சகல அதிகாரம் கொண்ட தேவனாக, அவர் அல்பாவும் ஒமேகாவும் ஆதியும் அந்தமுமாயிருக்கிறார். அவரே எல்லா நித்தியத்திற்கும் பிரதானமான நீதிபதியாயிருந்து அங்கு நின்று கொண்டு அந்த மணி நேரத்திற்கான செய்தியை உறுதிப்படுத்துகிறார். (மலையின் மேலுள்ள கவர்ச்சி என்ன? பத்திகள் 148, 149, 142, நாள் 25-7-1965) பாருங்கள் அவர் பலமுள்ள வேறொரு தூதனாக இங்கு காட்சியளிக்கவில்லை. ஏழு சபை காலங்களில் இயேசு காணப்பட்டவிதமாக, தலையில் வெள்ளை தலை அங்கியை அணிந்து பிரதான***

***நியாயாதிபதியாக காணப்பட்டார். மாறாக ஒரு பலமுள்ள தூதனாக அல்ல. ஆதலால் அந்த அதிசயமான மேகவளையத்தோடு வெளி.10:1 ஐ ஒப்பீடக்கூடாது. இரு சம்பவங்களும் வித்தியாசமானது. ஒன்றுக்கொன்று வேறானது. ஆதலால் இந்த சம்பவத்தை வெளி.10:1யோடு சம்பந்தப்படுத்துவது பிசாசு. கோவை ராஜா பிசாசே.***

***254. இந்த ஏழு தூதர்கள் கூட்டம் குறித்து தீர்க்கதரிசி தனது செய்திகளில் எங்காவது இது ஏழாவது முத்திரையின் அரைமணி நேர அமைதல் நிறைவேறுதல் என்றோ அல்லது அது கர்த்தருடைய வருகை என்றோ அல்லது வருகையின் ஒரு பாகம் என்றோ அல்லது வெளி.10:1-ல் கூறப்பட்டுள்ள வேறொரு பலமுள்ள தூதனின் தோற்றமென்றோ கூறவில்லை. செய்தி கூறாத ஒன்றை கூறுகிறவன் பிசாசு. கோவை ராஜா ஒரு பிசாசு என்று நூறு சதவிதம் உறுதியாக என்னால் கூறமுடியும்.***

255. லூக். 17:30 இது கர்த்தருடைய வருகைக்கு அதாவது எடுத்துக்கொள்ளப்படுதலுக்கு முன்பாக நடக்கும் சம்பவம். லூக். 17:30 கர்த்தருடைய வருகை அல்ல. இது குறித்து கீழ்கண்ட செய்திகளில் இருந்து நீங்கள் தெளிவு பெறலாம். சோதோமின் நாட்களில் நடந்தது போல, மனுஷகுமாரன் வருகையிலும் நடக்கும். மறுபடியாக தேவனுடைய ஆவி மாமிச சரீரத்தில் இறங்கும். .. ***தேவன் தமது வருகைக்கு முன்பாக*** மறுபடியும் மாம்ச சரீரத்தில் வெளிப்படுவார் என்று இயேசு வாக்களித்துள்ளார். அது பரிசுத்த ஆவி. தேவன் ஒருவரே, தம்மை வெளிப்படுத்தி மறுபடியுமாக லோத்தையும் ஆபிரகாமையும் வெவ்வேறாக பிரிக்கிறார். *(தேவனுடைய வார்த்தை **அவிசுவாசத்தினின்று முழுவதுமாக பிரிந்து வரும்படி அழைக்கிறது.*** பக்கம் 18 பத்தி 3 செய்தி நாள் 21-1-1964.) லோத் மாம்ச பிரகாரமான விசுவாசிக்கு அடையாளமாயிருக்கிறான். ஆபிரகாம் ஆவிக்குரிய உண்மையான விசுவாசிக்கு அடையாளமாயிருக்கிறான்.

256. இயேசுவானவர், அவர் வரும்போது அவர் ஒரு தீர்க்கதரிசியாக இருக்கவேண்டியதாயிருந்தது. அதுசரி, இன்றைக்கே, ***இயேசுவானவர் மறுபடியும் வருகிறதற்கு முன்னே,*** இயேசு கிறிஸ்துவின் முழுமையான வெளிப்பாடானது மாம்சத்திலே வெளிப்பட வேண்டியதாயிருக்கிறது. *(தற்கால நிகழ்ச்சிகள் தீர்க்கதரிசனத்தின் மூலமாய் தெளிவாக்கப்படுகின்றன.* பக்கம் 63 பத்தி 233, செய்தி நாள் 6-12-1965).

257. லூக்.17:30 மனுஷகுமாரன் வெளிப்படும் நாள் ஊழியம் ஏழாம் சபைக்கால தூதன் மூலம் நிறைவேறுகிறது. மனுஷகுமாரன் வெளிப்படும் அதே நாளில் (வெளி.10:1-7) ஏழாம் தூதனின் செய்தி முத்திரைகளை திறக்கும். ஏழாம் தூதன் மனுஷகுமாரன் அல்ல. ஆனால் அந்த தூதன் மனுஷகுமாரனை வெளிப்படுத்துகிறார் .. ஏழாம் தூதன் மனுஷகுமாரன் அல்ல. ஆனால் அவர் மக்களுக்கு மனுஷகுமாரன் யார் என்பதை வெளிப்படுத்துகிறார். (***கடைசி காலத்தில் ஆவியின் அபிஷேகம் பெற்றுள்ளவர்கள்.*** பக்கம் 91 பத்தி 260 செய்தி நாள். 25-7-1965.)

258. மனுஷகுமாரன் வெளிப்படும் நாளிலும் அப்படியே நடக்கும். லூக்.17:28-30. வெளிப்படுவது என்றால் என்ன? இந்த நாளில் இயேசு எவ்விதம் இருக்கிறார் என்பதை மக்களுக்கு உணர்த்துவதே. இந்த நாளைக்குரிய வார்த்தையானது பரிசுத்த ஆவியின் வல்லமையினால் வெளியரங்கமாக்கப்பட்டு இயேசுவை மறுபடியமாக நம்மத்தியில் வாழச் செய்கிறது. (***எடுத்துக் கொள்ளப்படுதல்*** பக்கம் 38, பத்தி 1, செய்தி நாள். 4-12-1965) இந்த லூக் 17:30ஐ குறித்து தான் தீர்க்கதரிசி 19-2-1965-ல் தான் பிரசங்கித்த இந்த வேதவாக்கியம் இன்றைய தினம் நிறைவேறிற்று என்ற செய்தியில் 227வது பத்தியில் கூறுகிறார்.

259. அவர் மூன்று நாமங்களில் வருகிறார்: மனுஷகுமாரன் - தீர்க்கதரிசி : தேவகுமாரன் - ஆவி : தாவீதின் குமாரன் - ஆயிரம் வருடம் அரசாட்சி. ஆனால் இதற்கிடையில், அவருடைய சொந்த வார்த்தையின்படி, மனுஷகுமாரன் வெளிப்படும் நாளில், எவ்விதம் தம்மை வெளிப்படுத்துவார்? தேவகுமாரனாக அல்ல, மனுஷகுமாரனாக, வேறு வகையில் தம்மை வெளிப்படுத்துவார். அது என்ன செய்கிறது? மல்கியா 4 ஐ உண்மையாக்குகிறது. .. மல்கியா 4-ல் கூறியுள்ளதை நிறைவேற்ற மறுபடியும் மனுஷகுமாரனாக வெளிப்படுவார். அவர் வாக்களித்துள்ள கடைசி சபை மணவாட்டி மரத்தை வெளியே இழுத்துக்கொள்ள அவ்விதம் செய்வார். கடைசி காலத்தில் வெளிச்சம் உண்டாகும். மரித்தோர் உயிர்த்தெழுதல் இருக்கும். அவர் அதை உறுதிப்படுத்துவார். அது உண்மை. அவர் அதை நிருபிப்பார். சபையின் எடுத்துக்கொள்ளப்படுதல் நிகழும். அது எப்படி முடியும்? எனக்குத் தெரியாது. ஆனால் அவர் அதை நிருபிப்பார். (***அவருடைய வார்த்தையை நிருபித்தல்*** பக்கம் 81. பத்தி 221, பக்கம் 85, பத்தி 232 செய்தி நாள் 16-08-1964)

*260. எடுத்துக்கொள்ளப்படுதல் 1965 வரை நடைபெறவில்லை. தீர்க்கத்தரிசி கூட கர்த்தருடைய வருகையை எடுத்துக்கொள்ளப்படுதலை எதிர்நோக்கிக் கொண்டு இருந்தார் என்பதை கீழ்க்கண்ட செய்திகள் மூலமாக அறிந்து கொள்ளலாம்.*

***அ) வாக்குதத்தம் பண்ணப்பட்ட குமாரனை பெற்றுக்கொள்வதற்கென, தேவன் ஆபிரகாம், சாராள் சரீரத்தை மாற்ற வேண்டியதாயிருந்தது. நாமும் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிற இந்த சரீரங்களில் நமக்கென இன்று வாக்குத்தத்தம் பண்ணப்பட்டுள்ள குமாரனை பெற முடியாது. இந்த சரீரங்கள் பாவமுள்ளது. சாராள் பெற்றிருந்த அந்த பழைய சரீரம் ஒரு குமாரனை பெறுவதற்காக மாற வேண்டியதாயிருந்தது. அதுபோன்று நம்முடைய சரீரமும் குமாரனை பெற்றுக் கொள்ள அதேவிதமாக மாறவேண்டும். (கேள்வி பதில் 362 - ஊழுனு 221 பத்தி 245 - 250 நாள் 30-8-1964)***

***ஆ) சபை முழுவதும் சரியாயிருக்கும் வரை கிறிஸ்து வரமுடியாது. அவர் நமக்காக காத்துக்கொண்டிருக்கிறார். நாம் முடிவில் வந்துவிட்டோம் என நம்புகிறேன். (இதை அறியாமல் இருக்கிறாய். பக்கம் 70 பத்தி 4, செய்தி நாள் 15-8-1965)***

*இ) கிறிஸ்துவின் சரீரமாகிய சபையை ஆழ்ந்த கருத்துக்களுக்கும், உயரிய நோக்கங்களுக்கும் வழிநடத்த நாங்கள் முயன்று வருகிறோம். அவருடைய வருகை சமீபமாயுள்ளது என்று நாங்கள் இன்னும் அதிகமாக*

*விசுவாசிக்கிறோம் .. இப்பொழுது நாம் நம்முடைய சந்ததியில் கர்த்தருடைய வருகையை எதிர்நோக்கி கொண்டிருக்கிறோம். நம்முடைய சந்ததியில் நான் எழுப்புதலை எதிர்பார்க்கவில்லை கர்த்தருடைய வருகையை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன். (கிறிஸ்துவின் மணவாட்டியின் காணக்கூடாத இணைப்பு பக்கம் 9, பத்தி 2, செய்தி நாள் 25-11-1965) நாம் நம்முடைய சந்ததியில் பெரிய எழுப்புதலை எதிர்பார்க்கவில்லை, பெரிய பெரிய வெளிப்பாடுகளை எதிர்பார்க்கவில்லை. வாலிபர்கள் மத்தியில் ஒரு எழுப்புதலை எதிர்பார்க்கவில்லை. வாலிபர்களின் பங்கை ஊழியத்தில் பெரிதாக எதிர்பார்க்கவில்லை. வாலிபர்கள் செய்தியை எடுத்து செல்ல எதிர்பார்க்கவில்லை. மாறாக கர்த்தருடைய வருகையை எதிர்நோக்கிகொண்டிருக்கிறோம். மூடனே, செய்தி இவ்வாறு இருக்க நீ யாரிடம் உன் உபதேசத்தை கொண்டுவந்து காதுகுத்த பார்க்கிறாய்? அப்பாலே போ சாத்தானே! மாறுபாடுள்ளவனே, நீயும் உன் கூட்டாளியும். உனக்கு ஏன் வாலிபர்கள் மீது அதிக நாட்டம் என எனக்கு தெரியும். இதை ஊட்டி சகோ.லாரன்ஸ் இடமிருந்து அறிந்து கொண்டேன்.*

ஈ) There is not another thing that I know to happen but the RAPTURE, the coming of the Lord Jesus Christ. It is all ready. (***Does God changes His mind***? Page 15, Para 124 dated 27-4-1965)

உ) லூக். 17-ம் அதி. 30-ம் வசனத்தில் சோதோம் கொமோராவின் அழிவுக்கு முன்பாக அவர் செய்தது போலவே, கடைசி நாட்களிலும் மனுஷகுமாரன் தம்மை வெளிப்படுத்துவார். .. லோத்தின் நாட்களில் நடந்தது போலவே மனுஷகுமாரன் வெளிப்படும் நாளிலும் நடக்கும் என்றார். கவனியுங்கள். மனுஷகுமாரன் ஆபிரகாமின் குழுவுக்கு ஒரு மனிதனாக, மாம்சரூபத்தில் தீர்க்கதரிசியாக, துணிகளில் அழுக்குப்படிந்த ஒரு சாதாரண மனிதனாக வெளிப்பட்டார்.

*261. கடைசி நாட்களில் மறுபடியுமாக மனுஷகுமாரன் அதேவிதமான குழுவுக்கு, ஆபிரகாமின் ராஜரீக சந்ததிக்கு, அக்கினி விழுவதற்கு முன்பு வெளிப்படுவார். அதற்கு பின்பு சபையானது சாட்சிகள் எவரையுமே பெறவில்லை. ஆபிரகாமும் அவனை சேர்ந்தவர்களும் பெறவில்லை. அதன் பின்பு அவர்கள் எதிர்பார்த்திருந்த வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட குமாரன் நேரடியாக கொண்டுவரப்பட்டான். சபையும் அவ்வாரே வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட குமாரனை எதிர்நோக்கியுள்ளது. இந்த ஊழியத்தின் நாட்களுக்குப் பின்பு அவர் வருவார். அவர் வானங்களில் வெளிப்படுவார். (நான் கேள்விப்பட்டேன் இப்பொழுதோ காண்கிறேன். பக்கம் 37 பத்தி 112, 113. செய்தி நாள் 27-11-1965)*

262. *அடுத்தபடியாக நடக்கயிருப்பது* :

அ) சபை எடுத்துக்கொள்ளப்படுதல்

ஆ) மோசேயும் எலியாவும் திரும்ப வருதல்

இ) மணவாட்டியும் மணவாளனும் பூமியில் ஆயிரம் வருடகாலம் அரசாட்சி செய்தல்.

ஈ) வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்பு

உ) பாவம் முழுவதுமாக அழிக்கப்படுதல்

(*கேள்வி பதில்* 339 COD 221, பத்தி 147, நாள் 30-8-1964)

*263. எடுத்துக்கொள்ளப்படுதல் எப்படி நடக்கும்?*

அ) கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கி வருவார். அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள். பின்பு உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டு போக, மேகங்கள் மேல் அவர்களோடே கூடஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனே கூட இருப்போம் 1தெச.4:13-17.

**ஆ) கர்த்தர் பிரசன்னமாகும் முன்பு மூன்று காரியங்கள் நிகழவேண்டும். அவையாவன, ஆரவாரம், பிரதான தூதனுடைய சத்தம், தேவ எக்காளம். *அவர் இறங்கி வரும்போது இவை மூன்றையும் அவரே செய்கிறார்.* ஆரவாரம் என்பது செய்தியாகும். ஜனங்களை ஒன்று கூட்டுவதற்கென்ற அளிக்கப்படும் செய்தியாகும். அப்பொழுது தீவட்டிகளை சுத்தப்படுத்தும் சமயம் ஆகும். எழுந்து உன் தீவட்டிகளை சரிபடுத்து - இது ஏழாம் ஜாமத்தில் உரைக்கப்பட்டது. இது தீவட்டியை சரிப்படுத்தும் நேரம். இது மல்கியா 4-ம் அதிகாரத்தின் நேரம். இது லூக் 17-ம் அதிகாரத்தின் நேரம். இரண்டாவதாக உயிரோடெழுப்பும் சத்தம். யோ.11:38-44-ல் லாசருவை கல்லறையை விட்டு வெளியே வரும்படி அழைத்த அதே சத்தம் அதாவது கிறிஸ்துக்குள் மரித்தவர்களை உயிரோடெழுப்பும் சத்தம். மூன்றாவதாக எக்காளம். எக்காளம் ஊதப்பட்டு, ஜனங்கள் விருந்துக்கு அழைக்கப்படுகின்றனர். அதுதான் ஆட்டுக்குட்டியானவர் மணவாட்டியுடன் ஆகாயத்தில் நடத்தும் விருந்தாகும். *முதலாவதாக* மணவாட்டியை ஒன்று சேர்க்க அழைக்கப்படும் செய்தி. *இரண்டாவதாக* முன்காலங்களில் நித்திரை அடைந்துள்ள மணவாட்டியை உயிரேடெழுப்புதல். *கடைசியாக* நிகழ்வது எக்காளம். ஆகாயத்தில் நடக்கும் விருந்துக்காக உயிரோடெழும்பின மணவாட்டியும், உயிரோடுள்ள மணவாட்டியும் ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்படுதல். (*ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்படுதல்* - பத்திகள் 3-5. செய்தி நாள் 4-12-1965)**

இ) **ஆண்டவரே, ஒருநாள் வானத்தில் இருந்து ஒரு சத்தம் உண்டாகும். அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் உயிரோடெழுந்திருப்பார்கள் அதாவது முன்பிருந்த சபை காலங்களின் பரிசுத்தவான்கள் உயிரோடெழுந்து தங்கள் கல்லறைகளை விட்டு வெளியே வருவார்கள். அப்பொழுது உயிரோடிருக்கும் நாமும் அவர்களுடன் அணிவகுத்து ஆகாயத்துக்குள் செல்லுவோம். அழிவுள்ள சரீரங்கள் அவருடைய மகிமையின் சரீரத்திற்கு ஒப்பாக மறுருபப்படும். எடுத்துக் கொள்ளப்படுதலாவது நம் முன்னிற்கும் இந்நாட்களின் பரலோகத்தை நோக்கி புறப்படும் அக்காட்சி எத்தகைய பவனியாய் இருக்கும்? வரப்போகும் அந்த எடுத்துக்கொள்ளப்படுதலின் நேரத்திற்காக நாம் ஆவலுடன் எதிர் நோக்கியிருக்கிறோம். (*ஆகாயத்தில் எடுத்துக் கொள்ளப்படுதல்* பக்கம் 54 பத்தி 2,3 செய்தி நாள் 4-12-1965).**

ஈ) வானத்தில் பறந்துகொண்டிருக்கும் அந்த தட்டுகள் - அவைகள் பறக்கும் தட்டுகள் என்று அழைக்கின்றனர். .. அவர்கள் (பறக்கும் தட்டில் வருகிறவர்கள்) எவ்விதம் காணாமல் போய் விடுகின்றனர். .. அவர்கள் நமது கண்களுக்குத் தென்படாமல் மறைந்து விடுகின்றனர். அப்படித்தான் எடுத்துக்கொள்ளப்படுதலும் இருக்கும். அவைகளில் ஒன்று கீழே இறங்கி வரும். பூமிக்குரிய இந்த சரீரம் வானத்துக்குரிய சரீரத்தை தரித்துக்கொள்ளும். அப்பொழுது தோல், மயிர், எலும்புகள் இங்கு விடப்படும். அது ஒரு நொடிப்பொழுதில் மறுரூபமாகும். அது விண்வெளியிலிருந்து கீழே இறங்கி வந்து அவர்களை கொண்டு செல்லும். *(கிறிஸ்து தமது சொந்த வார்த்தையில் வெளிப்படுகிறார்.* பக்கம் 29 பத்தி 68. செய்தி நாள் 22-8-1965)

*264. நாம் உயிர்த்தெழும் போது நடப்பது யாவை?*

அ) முதலாவது நடப்பது என்னவென்றால், உயிரோடிருப்பவர்கள் இங்கிருப்பார்கள். முதலாவதாக உயிர்த்தெழுதல். நித்திரை அடைந்தவர்களை தட்டியெழுப்பும் நேரம். இப்பொழுது பூமியின் தூளில் நித்திரை செய்து கொண்டிருப்பவர்கள் - பாவத்தில் நித்திரை செய்து கொண்டிருப்பவர்கள் அல்ல, அவர்கள் தொடர்ந்து நித்திரை செய்து கொண்டிருப்பார்கள். இன்னும் 1000 ஆண்டு காலம் வரைக்கும் அவர்கள் தொடர்ந்து நித்திரையில் இருந்து எழும்புவதில்லை. ஆனால் கிறிஸ்துவுக்குள் மரித்து பூமியின் தூளில் நித்திரை செய்து கொண்டிருப்பவர்கள் முதலில் நித்திரையிலிருந்து எழுப்பப்படுவார்கள். அவர்களின் இந்த அழிவுள்ள சரீரங்கள் கர்த்தருடைய எடுத்துக்கொள்ளப்படும் கிருபையினால் அழியாமையைத் தரித்துக்கொள்ளும்.

ஆ) அதன் பிறகு நாம் எல்லோரும் ஒன்று கூடுவோம். அவர்கள் ஒன்று கூடத் தொடங்கும் போது உயிரோடிருக்கிற நாம் மறுரூபப்படுவோம். இந்த அழிவுள்ள சரீரங்கள் மரணத்தை காண்பதில்லை ஆனால் சடுதியாக, நம்மை வேகமாக அடித்துக்கொண்டு செல்வது போன்று ஒன்று உண்டாகும் அப்பொழுது நீங்கள் மறுரூபமடைவீர்கள்.

இ) நீங்கள் ஆபிரகாமைப்போல் வயோதிபனிலிருந்து வாலிபனாகவும், வயோதிப ஸ்திரியிலிருந்து வாலிப ஸ்திரியாகவும் மாறிவிடுவீர்கள். இந்த சடுதியான மாற்றம் என்ன? சற்று கழிந்து நீங்கள் சிந்தனையைப் போல் பிரயாணம் செய்வீர்கள்.

ஈ) அப்பொழுது நீங்கள் ஏற்கனவே உயிர்த்தெழுந்தவர்களை காணமுடியும்.

உ) அதன்பிறகு நாம் அவர்களுடன் ஒன்று சேர்ந்து, அவர்களோடே கூட எடுத்துக்கொள்ளப்பட்டு கர்த்தரை ஆகாயத்தில் சந்திப்போம் (*கேள்வி பதில்* 240 COD 2:19 பக்கம் 27 பத்தி 58)

ஊ) இதை ஞாபகம் கொள்ளுங்கள். ஈசாக்கு தன் கூடாரத்தை விட்டுப் புறப்பட்டு வந்து பிற்பகலில் வயலில் தியானித்துக் கொண்டிருந்தான். ஆமென். ரெபேக்காள் வருவதை அவன் கண்டபோது.. அவன் அவளைக் கண்டதில்லை அவனும் அவளைக் காண்டதில்லை. அது முதற்பார்வையிலே அன்பு. அவள் அவன் மேல் அன்பு கொண்டாள். அவனும் அவள் மேல் அன்பு கொண்டான். அவள் திரையிட்டு முகத்தை மறைத்தாள். ஆமென்.

265. கவனியுங்கள், அவள் அவனைக் கண்டபோது, அவள் இருதயம் மகிழ்ச்சியினால் பொங்கினது. அவள் யாரை விவாகம் செய்துகொள்ளப்போகிறாள் என்று அறிந்திருக்கவேயில்லை. ஆனால் விசுவாசத்தினால் புறப்பட்டு சென்றாள். ஆமென். அவன் அவளை வீட்டுக்கு அழைத்துச்சென்று, விவாகம் செய்து கொண்டு, தன் தகப்பனுக்கு இருந்த சர்வத்துக்கும் சுதந்தரவாளியானான். ஆமென். ஓ, பரிபூரணமாய் உள்ளது. மிகவும் பரிபூரணமாய் உள்ளது. (*கே.ப.* 363 COD 2:21, பத்தி 256, 257, நாள் 30-8-1964)

***266. And – and – remember, Jesus will leave the Kingdom, and we'll not meet Him in Glory, we're to meet Him in the air, between heavens and earth, where it's expanded to redeem us. And he met Rebekah in the middle, between her home and his home. Amen. சாத்தான் இந்த முக்கியமான பகுதியை தமிழ் மொழிப்பெயர்ப்பு பத்தி 257யிலிருந்து மறைத்து விட்டான். நாம் மணவாளனை மகிமையில் சந்திப்பதில்லை. நாம்அவரை பூமிக்கும் வானத்திற்கும் இடைவெளியில் சந்திப்போம். பூமி நமது இல்லம் . பரலோகம் அவரது இல்லம். ஆக இந்த இரண்டுக்கும் இடைப்பட்ட பகுதியில் நாம் அவரை சந்திப்போம்.***

267. சம்பவங்கள் இப்படியிருக்க இந்த கள்ளகபடமுள்ள வேலையாள் ஏழு தூதர்கள் கூட்டம் தான் கர்த்தருடைய வருகை, அது தான் அரைமணிநேரஅமைதல், அது தான் தலைக்கல் வருகை என்று பிரசங்கித்து வருவதை உங்களால் எப்படி சகிக்க முடிகிறது? உங்களால் சகிக்க முடிகிறது, ஏனென்றால் நீங்கள் தேவனுடைய வித்து அல்ல. மாறாக சர்ப்பத்தின் வித்து.

**268. ஏழு முத்திரைகளும் வெளிப்பட்டு முடிந்துவிட்டன. அந்த ஏழு வெளிப்பட்ட சத்தியங்கள் - அவைகளில் ஒன்றை நாம் தெரிந்து கொள்ள அவர் அனுமதிக்கவில்லை. ஏழாவது முத்திரையை அவர் அனுமதிக்கவில்லை அவர் அந்த அறையில் நின்று கொண்டு, அவைகள் ஒவ்வொன்றையும் வெளிப்படுத்தினார். என் வாழ் நாளிலே பரிசுத்த ஆவியின் ஏவுதலால் நான் எதையாகிலும் பிரசங்கித்திருந்தால் அது இது தான். ஏழு எப்பொழுதுமே பரம இரகசியம் . அந்த ஏழாவதை கவனியுங்கள். அதுவே முடிவு. அது கர்த்தருடைய வருகை. பரலோகம் அமைதலாக இருந்தது. ஒருவருமே அசையவில்லை. ஏனெனில் இயேசு நான் எப்பொழுது திரும்பி வருவேன் என்று பரலோகத்தில் உள்ள ஒரு தூதனும் அறியான். அது எந்த நேரம் என்று யாருக்குமே தெரியாது. தேவன் ஒருவர் மாத்திரமே அதை தம் சிந்தனையில் இரகசியமாக வைத்திருக்கிறார் என்றார். *(இப்பொழுது காவலில் உள்ள ஆத்துமாக்கள்,* பக்கம் 38,39 நாள். 10-11-10963.)**

***269. அவர் நம்மிடமிருந்து ஏழாம் முத்திரையின் இரகசியத்தை மறைத்துவிட்டார். அவர் அதை வெளிப்படுத்தவில்லை. ஒவ்வொரு நாளும் அங்கு நின்று கொண்டு ரகசியங்களை சொல்லிக் கொண்டே வந்தார். ஆனால் இது ஒன்றை மாத்திரம் அவர் கூறவில்லை. பரலோகத்தில் அமைதல் உண்டாயிற்று என்று சொன்னார். யாருமே அறியவில்லை. அது கர்த்தருடைய வருகை. (இப்பொழுது காவலில் உள்ள ஆத்துமாக்கள், பக்கம் 55, நாள் 10-11-1963).***

## இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் இருபாகங்கள் உண்டு. ஒன்று இரகசிய வருகை, மற்றொன்று பகிரங்க வருகை என்பது முரண்பாட்டின் விதை

270. முதலாவது 28-02-1963-ல் ஏழு தூதர்களை கொண்டு உருவாகிய அதிசய மேகவளையம் தலைக்கல் வருகையல்ல, பலமுள்ள வேறொரு தூதனின் வருகையல்ல. இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையும் அல்ல என்பதை வேதவாக்கியங்களை கொண்டும், இக்காலத்துக்குரிய செய்தியை கொண்டும் தியானித்தோம்.

271. இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் இரு பாகங்கள் உண்டு. ஒன்று இரகசிய வருகை. மற்றொன்று பகிரங்கவருகை என்பதும் கள்ளகபடமுள்ள வேலையாளின் உபதேசம். பேலியாள் மகனின் லௌகிக ஞானம். இந்த போதனைக்கு தேவனுடைய வார்த்தையில், இக்காலத்துக்குரிய செய்தியில் எங்கும் ஆதாரங்கள் கிடையாது. இது தன்னை ஒரு பொருட்டாக எண்ணிக்கொள்ளும் மேட்டிமை கண்ணனுடைய வெளிப்பாடு. இது மேட்டிமையான மேடு மாத்திரமே ஏற்றுக்கொள்ளும் ஒரு வெளிப்பாடு.

### *கிறிஸ்துவின் இரண்டாம் வருகை என்ற இரகசிய வருகை*

272. இயேசு கிறிஸ்து மூன்று முறை வருகிறார். முதலாவது தம்முடைய மணவாட்டியை மீட்டுக்கொள்ள. அடுத்து தம்முடைய மணவாட்டியை எடுத்துக்கொள்ள. மூன்றாவது தம்முடைய மணவாட்டியுடன் ஆயிரம் வருடம் ஆளுகை செய்ய வருகிறார். இது வேதபூர்வமானது. இது செய்தியை ஆதாரமாக கொண்டது. ஆனால் தலைப்பில் மேற்கண்ட போதனைக்கு ஆதாரங்கள் எங்கும் கிடையாது. ஆதலால் தான் இதை நான் முரண்பாட்டின் விதை என அழைக்கிறேன்.

273. கர்த்தர் தம்முடைய மணவாட்டியை பெற்றுக்கொள்ள வரும் இரண்டாம் வருகையை நாம் 1தெச.4:16-18 வசனங்களில் வாசிக்கிறோம். நம்முடைய குடியிருப்பு பரலோகத்தில் இருக்கிறது. அங்கே இருந்து கர்த்தராயிருக்கிற இயேசு கிறிஸ்து என்னும் இரட்சகர் வர காத்துக்கொண்டிருக்கிறோம். அவர் நம்முடைய அற்பமான சரிரத்தை தம்முடைய மகிமையான சரிரத்திற்கு ஒப்பாக மறுரூபப்படுத்துவார். பிலி. 3:20, 21. பிரியமானவர்களே, இப்பொழுது தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம், இனி எவ்விதமாயிருப்போமென்று இன்னமும் வெளிப்படவில்லை. ஆகிலும் அவர் வெளிப்படும்போது அவர் இருக்கிற வண்ணமாகவே நாமும் அவரை தரிசிப்பதினால் அவருக்கு ஒப்பாயிருப்போம் என்று அறிந்திருக்கிறோம். 1யோ.3:2.

274. ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறது போல, கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்பிக்கப்படுவார்கள். அவனவன் தன்தன் வரிசையிலே உயிர்பிக்கப்படுவான். முதற்பலனானவர் கிறிஸ்து. பின்பு அவர் வருகையில் அவருடையவர்கள் உயிர்பிக்கப்படுவார்கள். 1கொரி.15:22 நாம் எல்லாரும் நித்திரையடைவதில்லை; ஆகிலும் கடைசி எக்காளம் தொனிக்கும் போது, ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைபொழுதிலே, நாமெல்லாரும் மறுரூபமாக்கப்படுவோம். எக்காளம் தொனிக்கும், அப்பொழுது மரித்தோர் அழிவில்லாதவர்களாய் எழுந்திருப்பார்கள்; நாமும் மறுரூபமாக்கப்படுவோம். அழிவுள்ளதாகிய இது அழியாமையையும், சாவுக்கேதுவாகிய இது சாவாமையையும் தரித்துக்கொள்ளவேண்டும். அழிவுள்ளதாகிய இது அழியாமையையும், சாவுக்கேதுவாகிய இது சாவாமையையும் தரித்துக்கொள்ளும்போது, மரணம் ஜெயமாக விழுங்கப்பட்டது என்று எழுதியிருக்கிற வார்த்தை நிறைவேறும். 1கொரி. 15:51-54.

275. மின்னல் கிழக்கிலிருந்து தோன்றி, மேற்கு வரைக்கும் பிரகாசிக்கிறது போல, மனுஷகுமாரன் வருகையும் இருக்கும். மத்.24:27. இந்த வேளை குறித்து; நான் திருடனை போல் உன் மேல் வருவேன். நான் உன்மேல் வரும் வேளையை அறியாதிருப்பாய் என்கிறார். வெளி.3:3. அவர் வரும் வேளையை சிலர் கணக்கிட்டு, யூகித்து சொன்னதுண்டு. ஆனால் அனைவரும் ஏமாற்றத்தையே சந்தித்தனர்.

276. அவர் எப்பொழுது வருவார் என்பதை அறிந்திருந்தும் ஆயத்தமாயிராமல் கைவிடப்படுவதை பார்க்கிலும், அவருடைய வருகைக்கு தன்னை ஆயத்தமாக எப்பொழுதும் காத்துக்கொள்வதே உத்தமம். அவர், நீங்கள் நினையாத நாழிகையிலே மனுஷகுமாரன் வருவார், ஆதலால் நீங்களும் ஆயத்தமாயிருங்கள் என்கிறார். மத்.24:44

277. மேலும் மணவாளனுக்கு எதிர்கொண்டு போக புறப்பட்டவர்கள் ஐந்து பேர் புத்தியுள்ளவர்கள், ஐந்து புத்தியில்லாதவர்கள் என காண்கிறோம். மத்.25:1. இந்நிலையில் நீங்கள் யாராக இருக்கிறீர்கள் என்பதை நீங்களே நிதானித்து பார்த்துக்கொள்ளுங்கள். இதுதான் கிறிஸ்து தம்முடைய மணவாட்டிக்காக வரயிருக்கும் அவரது இரண்டாம் வருகை குறித்ததான சில காரியங்கள். இதில் பாகம் ஒன்று, பாகம் இரண்டு என்று எதுவும் கிடையாது. ஒரே சமயம் தான், ஒரே காரியம் தான், ஒரே நிகழ்ச்சி தான், ஒரே பாகம் தான். கர்த்தருடைய வருகையில் அவருடைய மணவாட்டியோடு சம்பந்தப்பட்ட இரண்டாம் வருகை மணவாட்டி ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்படும் இரகசிய வருகை ஆகும்.

### *கிறிஸ்துவின் பகிரங்க வருகை. வெளி.1:7*

278. அடுத்து கிறிஸ்து தம்முடைய சரீரமாகிய சபை எடுத்துக்கொள்ளப்பட்ட பின்பு பூமிக்கு வருகிறார். அப்பொழுது தம்முடைய பரிசுத்தவான்களோடு பூமிக்கு வருகிறார். இந்த முறை கிறிஸ்து மகிமையோடே திரும்ப வந்து உயிருள்ளோரையும், மரித்தோரையும் நியாயந்தீர்ப்பார். இது குறித்து சகரியா தீர்க்கதரிசி என் தேவனாகிய கர்த்தர் வருவார்; தேவரீரோடே எல்லா பரிசுத்தவான்களும் வருவார்கள் என்கிறான். சகரி.14:5. அப்போஸ்தலனாகிய யூதா, இதோ எல்லாருக்கும் நியாயத்தீர்ப்பு கொடுக்கிறதற்கும், அவர்களில் அவபக்தியுள்ளவர்கள் யாவரும் செய்து வந்த சகல அவபக்தியான கிரியைகளினிமித்தமும், தமக்கு விரோதமாய் அவபக்தியுள்ள பாவிகள் பேசின கடின வார்த்தைகள் எல்லாவற்றினிமித்தமும் அவர்களை கண்டிக்கிறதற்கும், ஆயிரமாயிரமான தமது பரிசுத்தவான்களோடு கூட கர்த்தர் வருகிறார் என ஆதாமுக்கு ஏழாம் தலைமுறையாகிய ஏனோக் முன்னறிவித்ததாக எழுதுகிறான். யூதா: 14,15.

279. மேலும் இது குறித்து மத்தேயு: மனுஷகுமாரன் தமது மகிமை பொருந்தினவராய், சகல பரிசுத்த தூதர்களோடும் கூட வரும் போது, தமது மகிமையுள்ள சிங்காசனத்தின் மேல் வீற்றிருப்பார். அப்பொழுது சகல ஜனங்களும் அவருக்கு முன்பாக சேர்க்கப்படுவார்கள். மேய்ப்பனானவன் வெள்ளாடுகளிலிருந்து தன் செம்மறியாடுகளை பிரிப்பது போன்று அவர்களை பிரித்து, செம்மறியாடுகளை தமது வலது பக்கத்திலும், வெள்ளாடுகளை தமது இடது பக்கத்திலும் நிறுத்துவார். அப்பொழுது ராஜா தமது வலது பக்கத்தில் நிற்பவர்களை பார்த்து: வாருங்கள், என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, உலகம் உண்டானது முதல் உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற ராஜ்யத்தை சுதந்தரித்துக்கொள்ளுங்கள் என்பார். இடது பக்கத்தில் நிற்பவர்களை பார்த்து: சபிக்கப்பட்டவர்களே, என்னை விட்டு பிசாசுக்காகவும், அவன் தூதர்களுக்காகவும் ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற நித்திய அக்கினியிலே போங்கள் என்பார். தியானியுங்கள் மத்.25:31-46 வசனங்கள். இங்கு மேய்ப்பன் வெள்ளாடுகளிலிருந்து செம்மறியாடுகளை பிரிக்கிறார்.

280. இது மகா உபத்திரவ காலத்திற்குப் பிறகு நடக்கும் ஒரு சம்பவம். சபை மகா உபத்திரவக் காலத்திற்கு போவதில்லை. (***இயேசு கிறிஸ்துவை பற்றிய வெளிப்படுத்துதல்***, பக்கம் 86, பத்தி 313.) கிறிஸ்துவின் வருகையில் இரகசிய வருகை ஒரு பாகம், இந்த பகிரங்க வருகை மற்றொரு பாகம் என்ற கோவை ராஜாவின் உபதேசம் மாறுபாடுடையது. அது ஒரு வஞ்சிப்பாகும். இரு வருகையும் வித்தியாசமானது. இரு வருகையும் வித்தியாசமான நோக்கங்களை கொண்டது. வெவ்வேறு சமயங்களை கொண்டது. இரகசிய வருகையில் கிறிஸ்து தம்முடைய மணவாட்டிக்காக வருகிறார். பகிரங்க வருகையில் கிறிஸ்து தம்முடைய யூத ஜனங்களுக்காக வருகிறார்.

281. அடுத்து கர்த்தருடைய பகிரங்கவருகையை வித்தியாசமமானது. அதற்கும் எடுத்துக்கொள்ளப்படுதலுக்கும் எந்தவித சம்மந்தமும் கிடையாது. கர்த்தருடைய பகிரங்க வருகை உபத்திரவ காலத்திற்கு பிறகு நடக்கும் ஒரு சம்பவம். உபத்திரவ காலத்திற்குள் சபை போவது இல்லை. புறஜாதி சபை எடுத்துக்கொள்ளப்பட்ட பின்பு தான் இந்த சம்பவம் நடைபெறும். இந்த சம்பவத்தின் போது கிறிஸ்துவை மேசியாவாக ஏற்றுக்கொள்ளாத யூதர்கள், மற்றும் புறஜாதிகளும் அழுது புலம்புவார்கள். அவர்கள் அப்பொழுது எடுத்துக்கொள்ளப்படுதலில் எடுத்துக்கொள்ளப்படாமல் கைவிடப்பட்டிருப்பார்கள். தங்கள் விளக்குகளில் எண்ணெய் பெற்றுக்கொள்ள மறுத்த அந்த சபையாகிய நித்திரை செய்த புத்தியில்லாத கன்னிகைகள் அழுது புலம்புவார்கள். இதுகுறித்து நீங்கள் ***இயேசுகிறிஸ்துவை பற்றிய வெளிப்படுத்துதல்***, பாகம் -1, பக்கம் 84முதல் 87 வரை தியானிக்கலாம்.

**282. ஆக எடுத்துக்கொள்ளப்படுதல் ∴ இரகசியவருகை மணவாட்டியை தம்முடன் இருக்க எடுத்துக்கொள்ள வருகிறார். ஆனால் பகிரங்க வருகையில் எல்லாருக்கும் நியாயத்தீர்ப்பு கொடுக்க வருகிறார். அப்பொழுது அவரை புறக்கணித்தவர்கள் புலம்புவார்கள். இதோ, மேகங்களுடனே வருகிறார்! கண்கள் யாவும் அவரை காணும், அவரை குத்தினவர்களும் அவரை காண்பார்கள்; பூமியின் கோத்திரத்தாரெல்லாம் அவரை பார்த்து புலம்புவார்கள். அப்படியே ஆகும். ஆமென். வெளி.1:7. ஆக கர்த்தருடைய இரு வருகையும் வித்தியாசமான நோக்கங்கொண்டது. ஒன்று மணவாட்டி எடுத்துக்கொள்ள. அடுத்தது உலகத்தை நியாயந்தீர்க்க. ஆக இரு வருகையும் வித்தியாசமான காலக்கட்டங்களை கொண்டது. மணவாட்டி எடுத்துக்கொள்ள லவோதிக்கேயா சபை முடிவில் வருகிறார். மக்களை நியாயந்தீர்க்க யுக, உலக முடிவில் வருகிறார். இந்த இரு சம்பவத்தையும் இணைப்பது பிசாசு. சர்ப்பமானது தன்னுடைய தந்திரத்தினாலே உங்களை வஞ்சியாதபடிக்கு பார்த்துக்கொள்ளுங்கள்.**

## முடிவாக ஏழாவது முத்திரை குறித்து

283. அ) தேவகிருபையினால் முத்திரிக்கப்பட்டிருந்த ஆறு முத்திரைகளின் கீழ் அடங்கியிருந்த இரகசியங்களையும் நாம் அறிந்து கொண்டோம். ஆனால் பொது ஜனங்களுக்கு ஏழாம் முத்திரையின் இரகசியம் வெளிப்படக்கூடாது என்பதையும் நாம் புரிந்து கொண்டோம். (***ஏழாவது முத்திரை,*** பத்தி 397)

ஆ) அது இன்னும் முற்றிலுமான ஒரு இரகசியமாயுள்ளது. அது வெளிப்படக்கூடிய நேரம் இன்னும் வரவில்லை. ஆகவே. இதுவரை நாம் அறிந்துகொண்டிருக்கிறோம். மற்றவை இயேசு தம்முடைய மணவாட்டிக்காக பூமிக்கு மறுபடியும் தோன்றும் நேரத்தில் வெளிப்படும். அச்சமயம் என்னென்ன நேரிடுமோ, அது அப்பொழுது புலப்படும். அதுவரை நாம் எல்லாரும் ஜெபசிந்தையுடையவர்களாய் நல்ல கிறிஸ்தவ ஜீவியம் செய்து அவருடைய வருகையை எதிர்நோக்கிக்கொண்டிருப்போமாக. (***ஏழாவது முத்திரை*** பத்தி 399)

இ) இது ஒரு மகத்தான் இரகசியமாயிருப்பதால் யோவான் அதை எழுத தேவன் அனுமதிக்கவில்லை. அவை முழங்கின.. அது திறக்கப்படும் என வாக்குத்தத்தம் செய்துள்ளார். ஆனால் இதுவரை அது திறக்கப்படவில்லை. (***ஏழாம் முத்திரை***, பத்தி 400)

ஈ) அது வெளிப்படவேண்டிய அந்த நாளிலும், அந்த நேரத்திலும், அது திண்ணமாக வெளிப்படும். எனவே நாம் செய்யவேண்டியது என்னவெனில் தேவனுக்கு முன்பாக பயபக்தியுடன் இருந்து, அவருக்கு சேவை செய்து, கிறிஸ்தவ ஜீவியம் செய்வதற்கு அவசியமான யாவற்றையும் கடைப்பிடித்திடுவோம். ஆனால் அந்த நேரம் வரும் வரை, ஏழாம் முத்திரை பொது ஜனங்களுக்கு திறக்கப்படாது. (***ஏழாவது முத்திரை***, பத்தி 393)

உ) *அவர் மீட்டுக்கொண்டவர்களை பெற்றுக்கொள்ளவே அவர் வருகிறார். அதுவே அவருடைய பணி, அதை அவர் செய்தார். அதை பெற்றுக்கொள்ள அவர் வந்துள்ளார். ஓ! என்னே தருணம்! அதை நிருபித்துக்கொண்டிருக்கிறார். ஏழாம் முத்திரை அதை நிருபித்துவிட்டது.* (இப்பொழுது காவலில் உள்ள ஆத்துமாக்கள், *பக்கம் 42, பத்தி 4, நாள் 10-11-1963).* ***ஆம் பிரியமானவர்களே, ஏழாம் முத்திரைதான் கர்த்தர், அவர் மீட்டுக்கொண்டவர்களை பெற்றுக்கொள்ள வரும் நாள். அதுதான் எடுத்துக்கொள்ளப்படுதல். ஏழாம் முத்திரை திறக்கப்பட்டுவிட்டது என்றால் கர்த்தர் வந்துவிட்டார், எடுத்துக்கொள்ளப்படுதல் நடந்துவிட்டது என்றாகிவிடும். ஒருவன் ஏழாம் முத்திரை திறக்கப்பட்டுவிட்டது என்று கூறினால் அவன் எடுத்துக்கொள்ளப்படுதலில் கைவிடப்பட்ட புத்தியில்லாத கன்னிகை என்று பொருள்.***

**முடிவாக காரியத்தின் கடைத்தொகையைக் கேட்போமாக:**

284. அ) ஏழாம் முத்திரை இன்னும் திறக்கப்படவில்லை. அது உங்களுக்கு தெரியும்; அது அவருடைய வருகை ( *எக்காளப் பண்டிகை*, பக்கம் 41, பத்தி 1, நாள் 19-7-1964)
ஆ) அரைமணிநேரம் அமைதல் வெளி.8:1. இது ஏழு தூதர்களின் கூட்டத்தோடு சம்பந்தப்பட்டதல்ல. இயேசு இவ்வுலகில் வாழ்ந்தபோது அவர் மறுபடியும் எப்பொழுது வருவார் என்று அவரை கேட்டனர். என்ன நிகழப் போகிறது என்று குமாரனும் அறியார் என்று அவர் பதிலளித்தார். பாருங்கள், இவை அனைத்தையும் அவர் தமக்குள்ளே கொண்டிருந்தார். அது ஒரு இரகசியமாயிருந்தது. அதன் காரணமாகத்தான் பரலோகத்தில் அரைமணிநேரஅமைதல் உண்டாயிற்று. அவர் எப்படி வருவாரென்றோ, எப்பொழுது வருவாரென்றோ அவர் இதுவரை வெளிப்படுத்தாத காரியமாய் உள்ளது. (கிறிஸ்து தேவனுடைய பரம இரகசியத்தின் வெளிப்படுதலாயிருக்கிறார்., பக்கம் 25, பத்தி 3,4, நாள் 28-7-1963)
**இ) தலைக்கல் இன்னும் வரவில்லை. ஏனென்றால் மணவாட்டி சபை இன்னம் பூரணப்படவில்லை. கிறிஸ்துவின் சரீரம் இன்னும் பரிபூரணமாகவில்லை. அது எத்தனை பேருக்கு தெரியும்? மனிதனும் ஸ்திரீயும் ஒருவராயிருக்கின்றனர். கிறிஸ்து ஒரே சரீரமாயிருக்கிறார் - வார்த்தை மணவாட்டி அந்த சரீரத்தின் மற்ற பாகமாய் இருக்கிறாள். இவர்கள் இருவரும் ஒன்றாக இணைந்து, ஆதாம் தொடக்கத்தில் இருந்தது போல் ஒரே சரீரத்தை உருவாக்குகின்றனர். (மணவாட்டியை தெரிந்து கொள்ளுதல். பக்கம் - 42, தொடக்க பத்தி, நாள் 29-4-1965). நாம் வானத்தை நோக்கினவர்களாய், நாம் கூறியதுபோல் கூர்நுனிக்கோபுரத்தின் தலைக்கல்லின் வருகையை! - அவருடைய வருகையை எதிர்நோக்கியிருக்கிறோம். சபை விரைவில் உயிர்த்தெழவேண்டும். நாம் ஆயத்தமாகவேண்டும். (வழி நடத்தும் தன்மை, பத்தி 144, நாள் 7-12-1965). நீங்கள் ஏழாம் சபைக்கால தூதன் என்று விசுவாசிக்கும் சகோ.பிரன்காம் தலைக்கல் வரவில்லை. தலைக்கல் வருகை கர்த்தருடைய வருகை என்கிறார். ஆனால் இந்த பேலியாளின் மகன் 1963-ல் தலைக்கல் வந்துவிட்டது என்கிறார். நீங்கள் யாருக்கு செவிகொடுக்கப்போகிறீர்கள்? வார்த்தையினால் உறுதிசெய்யப்பட்ட ஒரு தீர்க்கதரிசிக்கா? அல்லது வார்த்தையினால் உறுதி செய்யப்பட்ட ஒரு பிசாசுக்கா? சபை முழுவதும் சரியாயிருக்கும் வரைக்கும் கிறிஸ்து வரமுடியாது. அவர் நமக்காக காத்துக்கொண்டிருக்கிறார். நாம் முடிவில் வந்துவிட்டோம் என நம்புகிறேன். (இதை அறியாமல் இருக்கிறாய், பக்கம் 70, பத்தி 4, நாள் 15-8-1965). நாம் வாழ்ந்து கொண்டிருக்கிற இந்த சரீரங்கள் நமக்கென இன்று வாக்குத்தத்தம் பண்ணப்பட்டுள்ள குமாரனை பெற முடியாது, இந்த சரீரங்கள் பாவமுள்ளவை... ஏவாள் பெற்றிருந்த அந்த பழைய சரீரம், ஒரு குமாரனை பெறுவதற்காக மாறவேண்டியதாயிருந்தது. அந்த சரீரத்தினால் அதை செய்ய முடியவில்லை. அதுபோன்று நம்முடைய இந்த சரீரமும் அதை செய்ய முடியாது. குமாரனை பெற்றுக்கொள்ள இதுவும் அதே விதமாக மாறவேண்டும். (கே.ப 362, பத்தி 246 - 250).**
ஈ) தலைக்கல் சரீரத்துடன் இணைதல் எடுத்துக்கொள்ளப்படுதல் ஆகும். தலைக்கல் வந்து சரீரத்துடன் இணைந்துவிட்டால் எடுத்துக் கொள்ளப்படுதல் நடைபெற்றிருக்கவேண்டும்.
உ) ஏழு தூதர்களின் கூட்டம் வானத்தில் மனுஷகுமாரனுடைய அடையாளம். வெளி.1:14. இது பலமுள்ள வேறொரு தூதனுடைய வருகை அல்ல. வெளி. 10:1.
ஊ) பலமுள்ள வேறொரு தூதனின் காட்சி இனி காலம் செல்லாது என்ற செய்தியை கொண்டு வந்த உடன்படிக்கையின் தூதன். இந்த தூதனுடைய காட்சிக்கும், கர்த்தருடைய இரண்டாம் வருகைக்கும் சம்பந்தம் எதுவும் இல்லை. காட்சி வேறு, வருகை வேறு.
எ) கிறிஸ்துவின் பகிரங்க வருகை வெளி. 1:7. இது நடைபெறுவது மகா உபத்திரகாலத்திற்கு பிறகு. அப்பொழுது மணவட்டடி மகிமையில் இருப்பாள். மகா உபத்திரவ காலத்திற்குள் சபை போவது கிடையாது. இயேசு கிறிஸ்துவை பற்றிய வெளிப்படுத்துதல், முதல் பாகம், பக்கம் 84-87 வரை, பத்திகள் 304, 317 வரை தியானியுங்கள். கர்த்தருடைய இரகசிய வருகை வேறு. பகிரங்க வருகை வேறு. இவை இரண்டும் கர்த்தருடைய வருகையின் இரண்டு பாகங்கள் அல்ல.
ஏ) 1தெச. 4:16 பிரதான தூதன், செய்தியை குளறுபடி செய்யும் கோவை ராஜாவின் உபதேசத்தின்படி மிகாவேல் தூதன் அல்ல, மாறாக அது காபிரியேல் தேவதூதன்.

***285. ஆவியானவர் நம்மோடு இடைப்பட்டு அதிசய மேகவளையம் அரைமணிநேர அமைதல் அல்ல, அது தலைக்கல் வருகை அல்ல, அது பலமுள்ள வேறொரு தூதனுடைய வருகையல்ல, அது கர்த்தருடைய வருகையல்ல என வேதவாக்கியங்களை கொண்டும், இக்காலத்துக்குரிய செய்தியைக் கொண்டும் மிகத் தெளிவாக இங்கு திருஷ்டாந்தப்படுத்திகொடுத்த பின்பும் ஒருவன் சர்ப்பமாகிய கோவை ராஜாவின் பேய்த்தனத்துக்கடுத்த உபதேசங்களில் சிக்குண்டு, அவனுக்கு இவைகள் மறைபொருளாயிருக்குமானால், அது கெட்டுப்போகிறவர்களுக்கே மறைபொருளாயிருக்கும்.***

*286.. சாத்தானின் ஏதேன் என்ற செய்தியை நீங்கள் தியானிப்பீர்களானால் இந்நாட்களுக்குரிய கொடிதான வஞ்சிப்பு குறித்து தெளிவு பெறலாம்.*
அ) சத்துரு நம்மை வஞ்சிக்கும் இந்நாட்கள் போன்று இதுவரை எக்காலத்தும் இருந்ததில்லை.
ஆ) இவை பிசாசின் தந்திரமும் வஞ்சகமும் நிறைந்த நாட்களாம்.
இ) தற்காலத்தில் பிசாசின் வஞ்சகம் கிறிஸ்தவர் அல்லாதோர் தங்களை கிறிஸ்தவர்கள் எனவும் இக்காலத்துக்குரிய செய்தியை விசுவாசியாதவர்கள் விசுவாசிக்கிறவர்கள் போலவும் நம்ப செய்கிறது.
ஈ) பிசாசு தன்னால் முடிந்தவரை தன் வஞ்சகமான கண்ணிகளை எங்கும் வைத்திருக்கிறான். முக்கியமாக சூளைமேட்டிலும், பல்லாவரத்திலும், பொழிச்சலூரிலும் வைத்திருக்கிறான். அவன் ஒரு வஞ்சகன்.
உ) நாம் வாழும் இந்நாட்கள் எவ்விதம் இருக்குமென இயேசு மத்.24-ல் கூறியுள்ளார். இதுவரை வாழ்நாளில் கண்டிராத மிகவும் வஞ்சகமான நாட்கள். கூடுமானால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களும் வஞ்சிக்கப்படதக்கதான நாட்களாம் இவை.
ஊ) சாத்தான் சுயநல உணர்ச்சி படைத்தவன். அவன் அநேக பொய்களை கூறி மக்களை ஏமாற்றுகிறவன். உங்கள் பொய்களின் ஊற்று கோவை ராஜா இதைதானே செய்கிறார்.

எ) தவறான வழியில் நீங்கள் செல்லவேண்டும் என்று அவன் எல்லா திட்டங்களையும் வகுத்துக்கொண்டு வருகிறான். 85 சதவீதம் சா்வே மற்றும் 38 சதவீதம் சா்வே, வாலிபா்கள் ஊழியத் திட்டம் இவைகள் அனைத்தும் இவனுடையதே. இவனுடைய சுயநலத்துக்கடுத்ததே. ஏமாளிகள் இருக்கும்வரை இவா் பிழைப்பும் நடந்துகொண்டு தான் இருக்கும்.

*ஏ) தேவனுடைய சத்துரு தந்திரமாக உங்கள் வீட்டுக்குள் பிரவேசித்து, உங்களுக்கு இக்காலத்துக்குரிய செய்திக்கு தவறான வியாக்கியானம் கொடுப்பான். கா்த்தருடைய வருகை வந்துவிட்டது, தலைக்கல் வந்துவிட்டது, மரித்தோா் உயிா்த்தெழுதல் நடந்துகொண்டிருக்கிறது என்பான். ஏவாளுக்கு வேத வாக்கியங்களை எடுத்துரைத்தது போன்று தற்காலத்திலும் சாத்தான் பக்தியுள்ளவனாக வேதத்திலிருந்து, இக்காலத்துக்குரிய செய்தியிலிருந்து வாக்கியங்களை எடுத்துரைக்கிறவனாக இருக்கிறான். ஆனால் அவன் செய்வது என்னவெனில் வேதவாக்கியங்களிலிருந்து, இக்காலத்துக்குரிய செய்தியிலிருந்து ஒன்றை மாத்திரம் அவன் விட்டு விட்டு, அங்கு ஒரு இடைவெளியை உண்டாக்கி, அந்த இடைவெளியில் தன் விஷத்தை புகுத்துவான். இது தான் வாயில் பொய், கழுத்தில் டை, கைகளில் பை ஆகியவற்றுடன் சென்னையில் பவணி செய்து வலம் வரும் கோவை ராஜாவின் பணி.*

ஐ) வேசிக்கு ஏமாற்றம் இல்லை, மது அருந்துகிறவனுக்கு ஏமாற்றம் இல்லை, சூதாடுகிறவனுக்கு ஏமாற்றம் இல்லை. திருடனுக்கு ஏமாற்றம் இல்லை. ஆனால் தான் செய்வது சரி என்று எவன் ஒருவன் சூளை மேட்டாரை போன்று எண்ணிக்கொள்ளுகிறானோ அந்த மனுஷனுக்கு தான் சாத்தான் ஏமாற்றத்தை உண்டு பண்ணுகிறான்.

*ஒ) ஒருவன் தேவனுடைய வாா்த்தையை இக்காலத்துக்குரிய செய்தியை ஜனங்களுடைய இருதயத்தில் நிலைநிற்க முனையாமல், அதற்கு பதிலாக தன்னை ஜனங்கள் மத்தியில் நிலைநிறுத்துக்கொள்ள முயல்வானாகில் அவனே சாத்தான். இதை தானே உங்கள் மத்தியில் பந்தா கேஸ், ஆட்டுத்தோலை போா்த்திய ஓநாய் கோவை ராஜா செய்துகொண்டு வருகிறாா்.*

**ஓ) ஒருவன் தான் சென்று வரும் சபையின் ஆவியை பெற்றவனாயிருந்து அல்லது தன்னுடைய போதகனின் ஆவியை பெற்றவனாயிருந்து, அல்லது உலகத்தின் ஆவியை பெற்றவனாயிருந்து தான் பரிசுத்த ஆவியை பெற்றிருக்கிறேன் என தன்னைத் தானே ஏமாற்றிக்கொள்வது தான் இக்காலத்தில் ஒரு பெரிய வஞ்சகம்.**

287. நம்மை கோவை ராஜாவின் பற்களுக்கு இரையாக ஒப்புக்கொடாதிருக்கிற கா்த்தருக்கு ஸ்தோத்திரம். வேடனுடைய கன்னிக்கு தப்பிய குருவியை போல நம்முடைய ஆத்துமா தப்பிற்று, கண்ணி தெறித்தது, நாம் தப்பினோம் - கோவை ராஜாவின், வஞ்சகனின் கண்ணிக்கு தப்பினோம். அல்லேலூயா! கா்த்தருக்கு ஸ்தோத்திரம்! சென்னை சுற்றி வலம்வரும், வீடுவீடாக வாசற்படி ஏறி இறங்கும், மந்தையை தப்பிவிடாத கொடிதான ஓநாய் கோவை ராஜாவை உங்கள் பட்டிணத்தை விட்டு விரட்டுங்கள், ஓட ஓட விரட்டுங்கள். அவரது எரிகோ கோட்டையை, அடைக்கல மேட்டை தகா்த்து எறியுங்கள். சாத்தானை எதிா்த்து நில்லுங்கள். அப்பொழுது அவன் ஓடிபோவான் என வேதம் கூறுகிறது.

*288. கா்த்தா் நாம் எதிா் நோக்கிக் கொண்டு, ஆயத்தமாக இருக்கும் எடுத்துக்கொள்ளப்படுதலுக்குரிய விசுவாசத்தை நம்முடைய இருதயத்தில் தொடங்கி அதை நாம் காத்துக்கொள்ளவும், அவருடைய வருகையில் நாம் எடுத்துக் கொள்ளப்படவும் அருள் புரிவாராக. ஆமென். காலமாகிய திரைக்குப்பின்னால் என்ன இருக்கிறது என்பதைக் வாஞ்சையோடு கேட்டு, உணரக்கூடிய காதையும், இருதயத்தையும் பெற்ற நீங்கள் பாக்கியவான்கள். கா்த்தா் உங்களை ஆசீா்வதிப்பாராக. ஆமென்.*

மே - ஆகஸ்ட், 2005

கிறிஸ்துவின் அன்பில்
*சகோ.காலேப் யோசுவா*